
சந்தன
மரத்துக் குயில்!
ஜெய்சக்தி

முதற்பதிப்பு: டிசம்பர், 2012
உரிமை: ஆசிரியருக்கு ©

SANDANA MARATHU KUIL

By: **Jaisakthi**

First Edition: **Dec, 2012**

No. of Pages: 304

Paper used: 11.6 White

விலை ரூ. 135/–

TAMILTHEN PATHIPAGAM
Old No:26, New No:23
Raja Annamalai Road,
Saibaba Colony,
Coimbatore - 641 011.
Ph:0422 - 4202731.
Cell: 98422 32646.

Laser Typeset By : TamilThen Pathipagam.

Printed at : MAHA OFFSET, CHENNAI

# சந்தன மரத்துக் குயில்!

## அத்தியாயம் - 1

"எல்லாமே அழகா இருக்கு!" என்று சந்தோஷக் கூச்சலிட்டான் சோமு.

"ஆமாடா, எல்லாம் அழகாத்தான் இருக்கு. ஆனா பர்சும் கனமா இருக்கணும் தெரியுமா?" என்று புன்னகைத்தான் சகோதரன் வெற்றிவேல்.

இரண்டு பேரும் பேசிக் கொண்டு திரும்புவதற்குள்ளாக இளையவன் இடம் பெயர்ந்து விட்டான்.

"டேய், டேய், கண்ணன் எங்கடா? கண்ணன் எங்கே?" என்று படபடத்தான் வெற்றிவேல்.

"எங்கேயும் போயிருக்க மாட்டாண்ணா. இங்கேதான் இருப்பான்" என்றான் மூத்த சகோதரன்.

"டேய், உனக்குப் புரியலைடா. இது பெரிய மால். இதுக்குள்ள நாம எங்கேன்னு கண்டுபிடிக்கறது?" என்று கலவரப் பட்டுப் போய் விட்டான் வெற்றிவேல்.

"நோ ப்ராப்ளம் அண்ணா, அவன் எங்கே இருப்பான்னு தெரியாதா?. கழுதை கெட்டா குட்டிச்சுவரு, அங்க பாருங்க. அந்த ஸ்வீட் கடையில போய் நின்னுகிட்டு இருக்கான்" என்று சிரித்தான் சோமு.

வெற்றிவேலுக்கும் புன்னகை மலர்ந்தது. "இப்ப தான்டா ரெண்டு பல்லும் சொத்தைன்னு சரி பண்ணினோம். மறுபடியும் போய் ஸ்வீட் கடையில நிக்கறானே" என்று முணு முணுத்துக் கொண்டான்.

ஆனாலும், ஒரு ஸ்வீட் கடையின் முன்னால் நின்று கொண்டு சோகமாக பார்த்துக் கொண்டிருக்கிற சகோதரனைப் பார்த்து அவன் மனம் இளகியது.

யார் பார்த்தாலும் வெற்றி வேலுக்கு இப்படி ஒரு சகோதரனா என்று ஆச்சரியப்படத்தான் வேண்டும். ஏனென்றால் அத்தனை வயது வித்தியாசம். அநேகமாக இளையவனுக்குப் பனிரெண்டு வயது இருக்கும்

அவனுக்கும் சற்று பெரியவனாக இருந்தவனுக்கு இன்னுமொரு நான்கு ஐந்து வயது அதிகமாக இருக்கும். ஆனால் வெற்றிவேலோ இருபத்தைந்தில் இருந்தான் என்பது பார்த்தாலே தெரிந்தது.

தோற்றத்திலும் அவனுக்கும் அவர்களுக்கும் பெரிய வித்தியாசம். அவனிடத்திலே ஒரு வளமை தெரிந்தது. சொஃபிஸ்டிகேஷன் என்பார்களே அது போல ஒரு மெருகு இருந்தது. ஆனால் இந்த இரண்டு பையன் களிடமும் அந்த மெருகு இருக்கவில்லை.

பஞ்சத்தில் அடிபட்டவர்கள் போல் இல்லையென்றாலும் கூட இவர்கள் இருவரிடத்திலும் சமீப காலத்தில்தான் ஏதோ மாறுதல் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது போல ஒரு தோற்றம் தெரிந்தது.

பிறவியிலேயே உயர்ந்த வளமான இடத்தில் வளர்ந்தவர்கள் போல் இல்லை. சாதாரண தோற்றத்தில் தான் இருந்தார்கள். ஆனால், அந்த மாலிலே அத்தனை



கூட்டத்திலே போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருப்பவர்கள் யாரும் இந்த வித்தியாசத்தைப் பற்றிக் கவலைப் படவில்லை. வெற்றிவேலும் அந்த வித்தியா சத்தைப் பற்றி கவலைப்பட்டவனாக இருக்கவில்லை. இளையவனிடத்திலே போய் நின்றான். "என்னடா ஸ்வீட் வேணுமா?" என்று கேட்டான்.

"ஆமாண்ணா" என்றான்.

தலையில் அடித்துக் கொண்டு "என்ன வேணுமோ வாங்கிக்க. ஆனா ரெண்டு ரெண்டு பீஸ்தான் வாங்கணும்" என்றான்.

"போண்ணா நீ," என்று அவன் சிணுங்கிக் கொண்டே ஆனால் கிடைத்த வாய்ப்பை விடுவேனா என்பது போல எந்த ஸ்வீட் வேண்டுமோ வாங்கிக் கொண்டான். எந்தெந்த வகையில் வேண்டுமோ வாங்கிக் கொண்டான்.

சோமு அமைதியாகவே நின்றான்.

"ஏண்டா, உனக்கு ஒன்றும் வேண்டாமா?".

அவன் சகோதரனைப் பார்த்து கண்ணைச் சிமிட்டினான். "விடுண்ணா, நீதான் ரெண்டு பீஸ் சொல்லியிருக்கியில்லே, ஒரு பீஸை லவுட்டிடுவோம்ல" என்றான்.

"டேய், இந்த மாதிரி லாங்வேஜ்ல பேசாதேன்னு எத்தனை முறை சொல்லியிருக்கேன்" என்று தலையில் அடித்துக் கொண்டான்.

"அய்யே, அந்த சுகமே உனக்குப் புரியலை. லவட்டி அப்படின்னா என்னன்னு தெரியுமா?"

"நீ தெளிவுரை பொழிப்புரை ஆரம்பிச்சராதடா" என்றான் வெற்றிவேல்.

''அண்ணா, எதையும் தெரிஞ்சுக்கணும்ண்ணா. 'களவும் கற்று மற' அப்படின்னு சொல்லியிருக்காங்க'' என்றான்.

''களவும் கற்று மறக்கச் சொல்லியிருக்காங்கடா. அப்படியே வச்சு அளக்கச் சொல்லலை'' என்றான்.

''இது ஜோக்கு'' என்று நின்று சிரித்தான் சோமு.

வெற்றிவேலுக்கு தன்னுடைய கம்பீரத்தையும் மீறி சிரிப்பு வந்தது. ஆனால், ''இந்தப் பயலுக முன்னால் சிரித்தால் இவனுக இதையே சலுகையாக எடுத்துக் கொண்டு மேலும் வால்தனம் செய்வார்கள்'' என்று எண்ணி ''ஒகே, ஒகே, போதும் நிறுத்து'' என்று செல்லமாக மிரட்டி விட்டு இரண்டு பேரையும் கையை பிடித்து இழுக்காத குறையாக இழுத்துக் கொண்டு நடந்தான்.

''அண்ணா, நீ ரெண்டு பீஸ் தானே சொன்னே. பத்து வெரைட்டி வாங்கியிருக்கான் கிட்டத்தட்ட இருபது பீஸ் வாங்கியிருக்கான்'' என்றான் சோமு.

வெற்றிவேலுக்கும் கோபம் தான். ஆனால் பனிரெண்டு வயதுப் பையனிடம் போய் என்னத்தை கோபம் காட்டுவது என்று எண்ணிக் கொண்டவனாக கொஞ்சம் முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக் கொண்டு ''இதோ பாரு, கண்ணா கொஞ்சம் புரிஞ்சுக்கோ. இப்பத்தானே ரெண்டு சொத்தைப் பல்லுக்கு போய் ட்ரீட் மெண்ட் எடுத்தே. அந்த டாக்டர் எவ்வளவு நேரம் கொடை கொடைன்னு கொடைஞ்சாரு. தேவையா இது உனக்கு? சொன்னா கேட்கமாட்டியா நீ?'' என்று ஸ்வீட்டை சாப்பிட்டால் எப்படியெல்லாம் பல் பாதிக்கப்படும் என்று லேசாக விளக்கினான்.

''அண்ணா இது நூத்தி ஒண்ணாவது தடவை சொல்றண்ணா'' என்றான் கண்ணன்.



''நூத்தி ஒரு தடவை சொல்லியும் உனக்கு ஏறலைடா மண்டையில'' என்றான் சோமு.

''ஆமா நம்ப மண்டை ஸ்ட்ராங்கான மண்டை. அதுக்குள்ளே நல்ல விஷயம் மட்டும்தான் ஏறும்'' என்று பெருமை அடித்துக் கொண்டான் கண்ணன்.

''போதும், போதும், அளக்காதே'' என்று மறுபடியும் கடுப்பானான் வெற்றிவேல். ''வேண்டாம்டா பேசாம விட்ரு. நீ இப்படிப் பண்ணினேன்னா அடுத்த தடவையெல்லாம் அண்ணா மாலுக்கெல்லாம் கூட்டிட்டு வரமாட்டாரு''

கண்ணன் கப் பென்று வாயை மூடிக்கொண்டான்.

''அப்பா, கண்ண பிரானே. இனிமேல் எந்தக் கடைக்கும் முன்னாடி போய் நின்னு அதை வாங்கறேன் இதை வாங்கறேன்னு சொல்ல கூடாது'' என்றான்.

அவன் ஏக்கத்துடன் சகோதரனைப் பார்த்தான். ''என்னண்ணா நீ? ஷு வாங்கித் தரேன்னு சொல்லித்தானே கூட்டிட்டு வந்தே? டீ ஷர்ட் வாங்கித் தரேன்னு சொன்னியே?''.

''ஆமா, கொண்டு வந்த பணம் தீர்ந்து போச்சேடா. நானும் வாங்கிடணும்னுதான் வந்தேன். அதுக்குள்ளே செலவாயிடுச்சே'' என்றான் வெற்றிவேல்.

சோமு அண்ணனை சந்தேகமாகப் பார்த்தான். ''உன்னிடமாவது பணம் இல்லாமல் போவதாவது?'' என்ற கேள்வி அவனுடைய கண்களில் தொக்கி நின்றது வெற்றி வேலுவுக்கும் புரிந்தது. ஆனால், உறுதியாக இருந்தான்.

எப்பொழுது கேட்டாலும் என்ன வேண்டுமானாலும் கிடைக்கும் என்ற எண்ணத்தை இந்தக் குழந்தைகளிடம்

புகுத்தினால் பிற்காலத்தில் அவர்கள் கஷ்டப்பட வேண்டியது வரும் என்பதில் அவன் தெளிவாக இருந்தான்.

முகத்தை மிகவும் கஷ்டப்பட்டு சீரியஸாக வைத்துக் கொண்டு சோமுவிடம் சொன்னான். "நிஜமாத்தான். நான் ஏ டி எம் கார்டுல எடுத்துட்டு வந்தது குறைவுதான். மாசக் கடைசி ஆயிடுச்சில்லே. இந்த மாசம் முடியாது. அடுத்த மாசம் வாங்கித் தரேன்" என்றான்.

"ஸ்கூலுக்குப் போறதுக்கு வேணுமேண்ணா" என்று புலம்பினான் கண்ணன்.

"ஸ்கூலுக்கு இப்ப லீவுதானே? ஆஃப் இயர்லி லீவு தானே? முடியட்டும். ஜனவரி வந்தவுடனே வாங்கித்தரேன். ஓகே வா?"

"அது வரைக்கும் நான் பொறுத்திருக்கணுமா?" என்றான்.

"ஆமாடா. நியூ இயர்னா கன்ஸெஷனெல்லாம் கிடைக்கும். வேண்ணா நீ ரெண்டு பேர் கூட வாங்கிக்கலாம்" என்றான் சோமு.

வெற்றிவேல் நின்று முறைத்தான். "ஏண்டா, நீ அவனுக்கு அறிவுரை சொல்லுவேன்னு பார்த்தா நீயும் சேர்த்து எனக்கு வேட்டு வக்கிறியா?" என்றான்.

"சரி வேண்டாம். அவனுக்கு ஒரு செட் ஷூ, எனக்கு ஒரு செட் ஷூ" என்றான். அப்போதும் வெற்றிவேலுக்குத் தன்னை மீறி சிரிப்பு வந்தது.

"விவரம்டா நீ" என்று புன்னகைத்து விட்டு நடந்தார்கள்.



சற்று தூரம் போயிருப்பார்கள். திரும்பிப் பார்த்தால் மறுபடியும் கண்ணனைக் காணவில்லை. "எங்கேடா போனான்?" என்றான் வெற்றிவேல்.

"அங்க பாருங்க! கரடி பொம்மை போல ஒருத்தர் வேஷம் போட்டிருக்கார். இந்தப் பக்கம் யானை நிக்குது. இதெல்லாம் பார்க்கறதுக்கு நின்னுட்டான்"

குழந்தைகளைக் கவருவதற்காகவே இதுபோன்ற ஏற்பாடுகளை இப்பொழுதுதான் கல்யாண வீடுகளில் செய்ய ஆரம்பித்து விட்டார்களே. அதனால் இப்பொழுது இவ்வளவு பெரிய மாலில் அதுவும் இந்த மாதிரி சீஸன் நேரத்தில் செய்வது ஆச்சரியமில்லை. என்பதால் வெற்றி வேல் சற்று நேரம் பொறுமையாக இருந்தான்.

"சரிடா, போய் கூட்டிட்டு வந்துடு" என்றான்.

சோமு வேகமாகப் போய் கண்ணனை அழைத்துக் கொண்டு வந்தான். "சரி இனிமேல் இங்கிருந்தா சரி வராதுடா" என்று முணங்கிக் கொண்டே இரண்டு சிறுவர் களையும் இழுத்துக் கொண்டு வேகமாகக் கிளம்பினான் வெற்றிவேல்.

அதே சமயத்தில் "ஏய் ரெஜினா, சொன்னா கேளுடி" என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தாள் சாருசித்ரா.

"நான் சொல்றதை நீ கேளு. இத பாரு. இந்த ஆர்டிபிஷியல் செட் எவ்வளவு அழகா இருக்குன்னு கழுத்துல வச்சுப் பாருடி" என்றாள் அஞ்சனா.

"ஐய்யய்யோ, எங்க வீட்ல இதுக்கெல்லாம் ஒத்துக்க மாட்டாங்கடி. எங்க ஃபேமிலி ஆர்த்தடாக்ஸ் ஃபேமிலிடி".

"என்னடி ஆர்த்தடாக்ஸ் ஃபேமிலி. டி.வி.ல பார்க் கலையா? மாமிங்கல்லாம் அழகழகா போட்டுட்டு வராங்க.

உங்க அம்மா கூட அன்னைக்கு சொல்லிட்டிருந்தாங்க. இப்பவெல்லாம் இதே நல்லா இருக்கே? எதுக்கு தங்கத்துல வாங்கணும்னு சொல்லிட்டிருந்தாங்க'' என்றாள்.

''ஏண்டி உன்னோட கற்பனை ரீலெல்லாம் எதுக்கு விடறே? என்றாள்.

''நான் ரீல் விடலைடி. நிஜமா போன வாரம் உங்க வீட்ல வந்து உட்கார்ந்திருந்தேன்ல. நீ கூட எங்கயோ போயிட்டு வந்தியே?'' என்றாள்.

சாருசித்ரா யோசித்துப் பார்த்தாள். ''ஆமாம், அந்த ஆர்ஃபனேஜ் போயிட்டு வரப்ப நீ அம்மா கூட பேசிட்டிருந்தியே?''.

''ஆமாடி, உங்க அம்மா நிஜமாவே மாடர்னா நிறைய விஷயங்கள் சொன்னாங்க. சொல்லிட்டு கூடவே என்ன தெரியுமா சொன்னாங்க? ஏனோ எங்க சாரு இதுக்கெல்லாம் ஆசைப்படறது இல்லை. அவ ரொம்ப சிம்பிளா இருந்துக்கறா அப்படின்னாங்க. கொஞ்சம் குறைப்பட்டுக்கிட்ட மாதிரிதான் தெரிஞ்சது'' என்றாள்.

சாருசித்ரா அவளை முறைத்தாள். ''பாருடி பின்னே ஆரம்பிச்சுட்டா'' என்றாள் பக்கத்திலேயிருந்த இன்னொரு தோழியைப் பார்த்து.

அந்த இன்னொரு தோழி ரெஜினாவைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''என்னடி? இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்து சிரிச்சுக்கறீங்க. என்னமோ திட்டம் போட்டுட்டு வந்திருக்கீங்க? என்றாள்.



''இல்லடி, அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லை'' என்றாள் மேரி.

''ஒரு கூட்டணியா வந்திருக்கீங்கடி. அஞ்சு, ரெஜினா மேரி, நசீமா, ரோகிணின்னு நாலு பேரும் சேர்ந்துட்டு என்னோட அமௌண்டை இன்னைக்கு காலி பண்றன்னு முடிவு பண்ணிட்டீங்களா.?''

அவர்கள் மறுபடியும் சிரித்தார்கள். ''இங்க பாரு உன்னோட அமௌண்டை எங்களுக்காகவா கேட்கறோம். ஆயிரம் ரூபாய் வச்சிருக்கே. அதுக்கு ஆர்டிபிஷியல் செட் வாங்கிக்கடி அழகா இருக்கும். ரெண்டு மூணு செட்டா வாங்கிக்கன்னா இதுல என்னடி தப்பு? உனக்கு நல்லது சொன்னா புரியலையா?'' என்றாள்.

''புரியுதுடி, அழகாத்தான் இருக்கு. ஆனா என் நிறத்துக்கு சூட் ஆகுமா? நீங்களே சொல்லுங்க?'' என்றாள்.

''இதோ பாருடி, நிறம் நிறம்னே பேசினே பல்லைக் கழட்டிடுவேன்'' என்றாள் நசீமா.

''பல் டாக்டருக்கு படிச்சிருக்கியாடி?'' என்றாள் ரெஜினா.

''பல் டாக்டருக்கு படிச்சாத் தான் பல்லைக் கழட்டணுமா? ஓங்கி ஒரு குத்து விட்டா பல்லு தானா விழுந்துடும். கராத்தே கத்துகிட்டு இருக்கேன்'' என்றாள் ரெஜினா.

''ஐயய்யோ, இவ செஞ்சாலும் செய்வாடி'' என்றார்கள்.

ஒரு வழியாக பேசிப் பேசி இரண்டு மூன்று நிறங்களிலே அழகழகான மாலைகளோடு கூடிய செயற்கை ஆபரணங்கள் மூன்று செட் வாங்கிக் கொண்டு நகர்ந்தார்கள். ''ஏண்டி உங்களுக்கெல்லாம் வாங்கலையா?'' என்றாள்.

"நாங்க எல்லாரும் போன வாரமே வந்து வேணுங்கற அளவுக்கு வாங்கியாச்சு. இங்கே ரொம்ப நல்லாயிருக்கு. கம்பேரட்டிவா சீப்பா இருக்குன்னுதான் உன்னைக் கூட்டிட்டு வந்தோம். இப்பத் தான் இந்த மால் ஆரம்பிச்சிருக்காங்க. இனி போகப் போகப்பாரு. இனி விலை ஏத்திடுவாங்க" என்றாள் அஞ்சு.

"ஆமாடி" என்றாள் ரோகிணி.

அதற்குள்ளாக மேரியின் பார்வை வேறு ஒரு பக்கம் திரும்பியது. "என்னடி?" என்றாள். "அங்க பாருடி, ஒரு ஆளு சூப்பரா இருக்காப்ல" என்றாள்.

"ச்சீ, அதையெல்லாம் போய்ப் பார்த்துட்டு. திரும்பி வாடி" என்று கடிந்து கொண்டாள் சாருசித்ரா.

"இந்த சாமியாரை கூட்டிட்டு வந்தது தப்பாப் போச்சுடி" என்றாள் ரெஜினா.

"இல்லைடி, இந்த மாதிரியெல்லாம் கமெண்ட் அடிக்கறது,, தேவை இல்லாம போய் வழியறது, இதெல்லாம் அவளுக்கு பிடிக்காது. அவ சொல்றது கரெக்ட் தாண்டி. நம்மளோட டிக்னிட்டியை நாம தான் காப்பாத்திக்கணும்" என்றாள் ரோகிணி.

"அப்படிச் சொல்லுடி" என்றாள் சாருசித்ரா.

"அதெல்லாம் காரணம் இல்லைடி. இவளுக்கு காம்ப்ளெக்ஸ். இவ மாநிறமா இருக்கறால்ல அதனால இவளைப் பார்த்து யாரும் பேச மாட்டாங்க பழக மாட்டாங்கன்னு. இவ லெட்சணமா இருக்கா, இவ கண்ணு எவ்வளவு அழகா இருக்கு இவ மூக்கு எவ்வளவு எடுப்பா இருக்கு, சிரிச்சா எப்படி களையா இருக்கா, இதெல்லாம்



எத்தனை தடவை இவளுக்கு சொல்லியாச்சு. இவளுக்கு புரிய மாட்டேங்குது" என்றாள் நசீமா.

"என்னமோ சொல்லிட்டு இருங்கடி. நான் அதைப் பத்தியெல்லாம் கேட்கலை. நான் இப்ப புக் ஷாப் போறேன். நீங்க வரீங்களா இல்லையா?" என்றாள்.

"நாங்க வரலைடிம்மா. நீயே போ. புக் ஷாப்பைப் புரட்டி எடுத்து அங்க ஒரு பத்து புக்காவது வாங்குவியா? பைசா இருக்கா பைசா?" என்றாள் நசீமா.

"இல்லைன்னா என்னடி? அவசரத்துக்கு இருநூறு ரூபா கொடுங்கன்னா ஆளுக்கு இருநூறு ரூபா கொடுக்க மாட்டீங்க?" என்றாள்.

"ஐயய்யே, அடி மடியிலே கையை வச்சுட்டாடி" என்று தலையிலே கை வைத்துக் கொண்டாற்போல நடித்தாள் அஞ்சு.

"ஆமாடி, விவரம். ஆளுக்கு இருநூறு ரூபாயாம். நாம நாலு பேர். என்ன ஆச்சு? எண்ணூறு ரூபாய்க்கு புக் வாங்கப் போறாடி. உங்க அம்மாகிட்ட போய் யாரு பதில் சொல்றது நாங்க வரமாட்டோம் நீயே போய்க்கோ" என்றார்கள்.

அவள் கோபமாக முறைத்து விட்டு ஆனால் நிற்காமல் நடந்தாள். திரும்பி திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தாள்.

ஒரே ஒரு செயற்கை மாலை மட்டும் அவள் கையிலே இருந்தது. மற்றவை யெல்லாம் அவர்கள் கையிலே மாட்டிக் கொள்ள இந்த செயற்கை மாலையை மட்டும் எடுத்து எடுத்துப் பார்த்துக் கொண்டு வந்தவள் அது கை நழுவி விழவும் குனிந்து எடுத்தாள்.

அந்த மாலையைக் கையிலே எடுத்துக் கொண்டு நிமிர்கிற நேரத்தில் அந்த இளைஞனின் மேல் மோதிக் கொண்டாள். சரியாக நச்சென்று அவன் மார்பின் மேலே மோதி நிமிர்ந்தாள். இரண்டு பேரும் ஒரு நிமிடம் நிலை தடுமாறி பிறகு தான் நிற்க வேண்டி வந்தது.

அவன் வாய்க்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டான். அவள் திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள். அந்தக் கண்களில் தெரிந்த வெறுப்பு அவளை நிலைகுலையச் செய்தது. ''ஓ சாரி! சாரி!'' என்றாள் அவசரமாக.

''வந்துடுவீங்களே நாடகம் நடத்த!'' என்று அவன் வெறுப்பை உமிழ்ந்து விட்டு அவ்விடத்தில் இருந்து நகர்ந்து சென்றான்.

அடிபட்டவள் போல அவன் போன திசையை பார்த்துக் கொண்டு நின்றாள்.

## அத்தியாயம்-2

உலகமே தலைகீழாக மாறி விட்டாற்போல இருந்தது. தோழிகள் ஐந்து பேரும் சுற்றி அமர்ந்திருக்க நடுநாயகமாக அமர்ந்திருந்தாள் சாருசித்ரா.

ஏதோ அணையைத் திறந்து விட்ட மாதிரி அவள் கண் களில் இருந்து கண்ணீர் பொல பொலவென்று கொட்டியது. ''பேசாம இவ கண்ணுல வர்ற தண்ணியைப் பிடிச்சு வச்சாலே நாம அந்த டேம், இந்த டேம், அந்த ஸ்டேட் இந்த ஸ்டேட்னு சண்டை போடாம இருக்கலாம்டி'' என்றாள் ரெஜினா மேரி.

''ஏண்டி, எருதுக்குத் திண்டாடம் காக்கைக்குக் கொண்டாட்டமா?'' என்று முறைத்தாள் அஞ்சு.



''பின்னே என்னடி செய்யச் சொல்றே? எவ்வளவு நேரமா இவளுக்கு ஆறுதல் சொல்லிட்டிருக்கோம். இது ஒரு பெரிய விஷயமாட்ட உட்கார்ந்து அழுதுட்டு இருக்கா'' என்றாள் நசீமா.

''உங்களுக்கு என்னடி? சொல்லுவீங்க. என் கஷ்டம் எனக்குத்தானே தெரியும்?'' என்றாள் சாரு.

''என்னடி உனக்கு கஷ்டம்? எத்தனை பேரை ரோட்ல பார்க்கிறோம். அது மாதிரிப் பார்த்தே. அவன் என்னமோ கமெண்ட் அடிச்சுட்டுப் போனான். பிடிக்கலைன்னா விட்ரு. இனி நாம அவனை சந்திக்கப் போறோமா? அவனோட பேசப் போறமா?'' என்று தத்துவம் பேசினாள் ரோகிணி.

''அப்படியெல்லாம் சொல்ல முடியாதுடி. உலகம் உருண்டை. கண்டிப்பா நாம மறுபடியும் சந்திச்சாலும் சந்திப்போம்'' என்றாள் அஞ்சு.

நசீமா அவளை முறைத்தாள். ''ஏய், அவளைக் கூல் பண்ணணும்னு நான் எவ்வளவு முயற்சி பண்ணிட்டிருக் கேன். நீ என்னடி ஏத்தி விட்டுட்டே இருக்கே?'' என்றாள்.

''ஓகே... ஓகே.'' என்று வாயைப் பொத்திக் கொண்டாற்போல நடித்தாள் அஞ்சு.

''ஏண்டி, நீங்களெல்லாம் நிறமா இருக்கீங்க. அதனால இப்படிப் பேசறீங்க'' என்றாள் ரோகிணி.

''நீ என்னடி ஒத்துக்கு மத்தாளமா?. ஏற்கனவே அவ சிங்க்காயிருக்கா?'' என்று மறுபடியும் முறைத்தாள் நசீமா.

''ஏன்? அவ சொல்றதுல என்ன தப்பு?'' என்று முணுமுணுத்தாள் சாரு.

''சாரு, ப்ளீஸ். நான் உன்னை ரொம்ப புத்திசாலின்னு நினைச்சுட்டிருக்கேன். நீ அறிவு ஜீவின்னு நினைச் சுட்டிருக்கேன் நீ ஏண்டி இப்படியெல்லாம் பண்ணிட்டு இருக்கே?'' என்றாள் நசீமா.

''இல்லை நசீமா, உனக்குத் தெரியாது. அந்த ஆள் பார்த்த பார்வையில் எவ்வளவு வெறுப்பு தெரியுமா? ஐய்யோ, இப்ப நினைச்சாலும் எனக்கு உடம்பு நடுங்குது'' என்றாள்.

''எதுக்கு நினைக்கிறே? உனக்கு என்ன அவன் மாமனா, மச்சானா, முறை மாப்பிள்ளையா இல்லை அண்ணனா, தம்பியா, எதுக்காக நீ அந்த ஆளை மறுபடியும் நினைக் கணும்?'' என்றாள்.

''இல்லைடி, அப்படி சில பார்வைகள் இருக்கு. முதுகுத்தண்டு சில்லிட்டுப் போற மாதிரி ஒரு பார்வை. அந்த ஆளுக்கு ஏன் அப்படி நம்ம மேல வெறுப்பு?'' என்றாள்.

''ஹலோ, ஹலோ, நம்ம மேல இல்லை. உன் மேலே மட்டும்தான்'' என்றாள் ரெஜினா மேரி.

''சரி, அப்படித்தான் வச்சுக்கோ. என் மேலே ஏன் அந்த ஆளுக்கு அவ்வளவு வெறுப்பு இருக்கணும்? நீ சொன்ன மாதிரி அவன் எனக்கு மாமனா மச்சானா, என்னமோ வேணும்னு நான் அவன் மேல விழுந்த மாதிரியும். அதனால அவனுக்கு பெரிய பாதிப்பு ஏற்பட்ட மாதிரியும் பெரிய ஷோ காட்டிட்டுப் போறான்'' என்றாள் சாரு.

மற்றவர்கள் நால்வரும் ஒரு நிமிடம் மௌனமாக அமர்ந்து கொண்டார்கள்.

அவளுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. ரோகிணிதான் மெதுவாக ஆரம்பித்தாள். ''விடு சாரு.



இவங்களெல்லாம் சொல்ற மாதிரி நாம அந்த ஆளை சந்திக்கப் போறதில்லைன்னு வச்சுக்கலாம். கடவுள் நமக்கெல்லாம் அப்படியெல்லாம் ஒரு நிலைமை வைக்க மாட்டாரு. ஏதோ எரிச்சல்ல வந்திருப்பாரு. கூட யாரோ ரெண்டு குழந்தைங்க இருந்ததுன்னு சொன்னியே''

''குழந்தைங்களெல்லாம் ஒண்ணும் இல்லை. பெரிய பசங்கதான்''

''ஓகே, அவங்க ஏதாவது டிஸ்டர்ப் பண்ணிட்டு வந்திருப் பாங்க. அந்த எரிச்சலை உன் மேல காட்டியிருப்பாரு''

''இல்லை, என் முகத்தைப் பார்த்துத்தான் காட்டினாரு'' என்றாள் மறுபடியும் சாரு.

ரஜினா மேரி கடுப்பாகி எழுந்து நின்றாள். ''இதோ பாருடி, இனிமே ஒரு தடவை நீ புலம்பினேன்னு வச்சுக்கோ. உன்னை இங்கேயே விட்டுட்டுப் போயிடுவோம்'' என்றாள்.

''போயிடுவீங்களாடி,'' என்று சாரு சுற்றிலும் இருப்பவர்களைப் பார்க்க அவர்கள் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

''இல்லடி செல்லம், அப்படியெல்லாம் உன்னை விட்டுட்டு நாங்க போவோமா'' என்று கன்னத்தை வழித்தாள் அஞ்சு.

சாருசித்ராவின் முகத்தில் லேசாக புன்னகை மலர்ந்தது.

''அப்பாடா சிரிச்சுட்டாடி'' என்று மற்றவர்களும் புன்னகைத்தார்கள். ''இல்லை....'' என்று அவள் ஆரம்பிக்க.

"இனிமே இல்லையும் இல்லை. ஆமாவும் இல்லை. பேசாம இந்த ஐஸ் கிரீமை சாப்பிடு" என்று ஐஸ்கிரீம் கோனை நீட்டினாள் நசீமா.

இவர்கள் நால்வரும் பேசிக் கொண்டிருக்கையிலே அவள் போய் ஐஸ்கிரீம் வாங்கிக் கொண்டு வந்தாள். சாருவுக்கு ஐஸ் கிரீம் பிடிக்கும். வாங்கிக்கொண்டாள்.

கையிலே வைத்துக் கொண்டு யோசித்தாள். 'அத்தனை முறை தான் மன்னிப்புக் கேட்டும் அவர் எதற்காக அப்படி முறைத்தார். அந்தக் கண்களில் ஏன் அப்படி வெறுப்பு?' என்று அவளுக்குக் கவலையாக இருந்தது.

"இல்லடி, யாருக்குமே அப்படி ஒரு வெறுப்பு இருக்கக் கூடாதுடி. அது என்மேல இருந்த வெறுப்பு மாதிரி எனக்கு தெரியலை" என்றாள்.

"அப்புறம் என்ன, நல்லதாப் போச்சு விடு, உன் மேல இருந்துதான் என்ன ஆகப்போகுது? விட்டுட்டு வேற பேசுடி" என்றாள் ரெஜினா மேரி.

"உனக்குப் புரியலையா?" என்றாள்.

"என்ன எனக்குப் புரியணும்?" என்றாள் ரெஜினா மேரி கடுப்பாக.

"இல்லடி, அவர் மேல எனக்கு பரிதாபம் வருது" என்றாள்.

"போச்சுடா," என்று தலையிலே கையை வைத்துக் கொண்டாள் நசீமா.

"மொதல்ல வருத்தம். இப்பப் பரிதாபமா? என்னவோ ஆயிடுச்சுடி. அந்த ஆள் என்ன பார்க்கறதுக்கு நல்லா இருப்பானா?" என்றாள்.



சாரு தலையாட்டினாள்.

"ம்... நல்ல நடுத்தர உயரத்திற்கும் மேல நல்ல கம்பீரமாக இருந்தாரு. முகம் நல்ல களையா இருந்தது. ஆனால் அந்த முகத்தில் எப்படி இப்படி ஒரு உணர்ச்சி வரலாம். பொருந்தலைடி" என்றாள்.

"சரி, பொருத்தம் பார்த்து உனக்கு என்ன ஆகப்போகுது? அந்த முகத்துக்கும் உணர்ச்சிக்கும் மேட்ச் பாக்கறியா நீ?" என்று மறுபடியும் கடுப்பானாள் ரெஜினா மேரி.

அவள் கொஞ்சம் கோபக்காரி. "ஏய் கொள்ளுப் பட்டாசு. நிறுத்து. சும்மா என்னமோ அவளை மிரட்டிட்டே இருக்கே?" என்றாள் அஞ்சு.

"சரிடி நான் மிரட்டலை. நீங்களே சொல்லுங்க. இத்தோட அந்த ஆளைப் பத்தி பேசறதை நிறுத்தச் சொல்லுங்க. இதுதான் கடைசி சென்டன்ஸா இருக்கணும்" என்றாள்.

"ஏன்? அப்படியெல்லாம் கண்டிஷன் போட முடியாது. எங்களுக்கும் பேச்சுரிமை இருக்கு நாங்க பேசுவோம்" என்றாள் ரோகிணி.

இது அடிக்கடி நடக்கற விஷயம்தான். அவர்களுக்குள்ளேயே குழுவாக பிரித்துக் கொண்டு சண்டை போடுவார்கள். இவர்கள் இப்படி சண்டை போடுகிறார்களே என்று யாராவது பஞ்சாயத்துக்கு வந்தால் அவர்கள் தொலைந்தார்கள்.

ஒரே குழுவாக சேர்ந்து கொண்டு வரிந்து கட்டிக் கொண்டு அவர்களிடம் சண்டைக்குப் போய் விடுவார்கள்.

கல்லூரிகளிலே இந்தத் தோழிகளுக்குள்ளே நடக்கிற போலிச் சண்டைகள் மிகவும் பிரசித்தம்.

அதுவும் நசிமாவும் ரோகிணியும் எப்போதும் ஒரு பக்கமாக நின்று கொள்வார்கள். அஞ்சுவும், ரெஜினா மேரியும் ஒரு பக்கம் நின்று கொள்வார்கள். பெரும்பாலும் சாரு தான் தன்னுடைய அறிவுப் பூர்வமான வாதங்களினால் முற்றுப் புள்ளி வைப்பாள்.

இப்பொழுது அவளுக்கே பிரச்சினை என்பதால் இவர்கள் நான்கு பேரும் வரிந்து கட்டிக் கொண்டு நிற்க ஆரம்பிக்கும் பொழுதே அவர்களுக்குள்ளே லேசாக கவலை தோன்றியது.இன்றைக்கு யார் பஞ்சாயத்து செய்யப் போகிறார்கள் என்று.

சாரு, அஞ்சு, ரெஜினா மேரி, நசிமா, ரோகிணி என்று இந்த ஐந்து பெண்களும் பள்ளி நாட்களில் இருந்தே தோழிகள். இப்பொழுது எல்லோரும் ஒரே கல்லூரியில் தான் படிக்கிறார்கள். கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படிப்பை முடிக்கிற தருணத்தில் இருக்கிறார்கள்.

அடுத்த ஆண்டு மேல் பட்டப் படிப்புக்கு போக வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள். ஐந்து பேரும் ஐந்து விதமான படிப்பைத்தான் படித்துக் கொண்டிருந்தார்கள் என்றாலும் வகுப்பு நேரம் தவிர மற்ற நேரங்களில் ஒன்றாகத்தான் இருப்பார்கள். ஐவர் குழு என்று அந்தக் கல்லூரியிலே அவர்களுக்கு பட்டப் பெயர் இருந்தது. எல்லோரும் ரசித்துக் கொள்வார்கள். அந்த ஐந்து பேரிலும் நசிமா நல்ல நிறம். ரெஜினா மேரி அதற்கு அடுத்த படியாக இருந்தாள் என்றால் அஞ்சு நடுத்தர நிறத்தில்



இருந்தாள். ரோகிணியும், சாரு சித்ராவும் சற்றே நிறத்தில் குறைவானவர்களாக இருந்தார்கள்.

ஆனால், சாரு அதைப் பற்றி எப்பொழுதும் பெரிதாகக் கவலைப்பட்டதில்லை. சொல்லப்போனால் அவள் விளக்கம் வேறு சொல்வாள். “ரொம்ப வெள்ளையா இருக்கிங்கன்னு அலட்டிக்காதிங்கடி. உங்களுக்கு ஸ்கின் ஸ்ட்ராங்கா இருக்காது. கறுப்பா இருக்கறவங்களுக்குத்தான் ஸ்கின் ஸ்ட்ராங்கா இருக்கும் தெரியுமா? இதெல்லாம் மெலனின்னோட வேலை. நம்ம நாட்ல திரும்பத் திரும்ப இதையே சொல்லி சொல்லி மூளையை சலவை பண்ணிக்கிட்டிருக்காங்க. உலகம் எங்கிருந்து ஆரம்பிச்சசு தெரியுமா? ஒரு கறுப்புப் பொண்கிட்டே இருந்துதான்” என்பாள்.

உடனே நசிமா, “சொல்லு. சொல்லு. சமாதானம் பண்ணிக்க வேறு என்ன பண்றது” என்பாள் சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு.

“நான் ஒண்ணும் சமாதானம் பண்ணிக்கறதுக்காக சொல்லலை. உண்மையிலே அப்படித்தான்” என்று சொல்வாள் சாரு.

சாரு நிறைய புத்தகங்களைப் படிப்பாள். ஆங்கில இலக்கியம், தமிழ் இலக்கியம் இரண்டும் நிறையப் படிப்பாள். அதனால் இதுமாதிரிப் பிரச்சினைகள் வரும் பொழுது அவள்தான் நடுவராக இருப்பாள்.

இப்பொழுதும் அவர்களுக்கிடையே வந்த பிரச்சினைக்கு இயற்கையாகவே நடுவர் பணி செய்ய ஆரம்பித்து விட்டாள். “ஒகேடி, இன்னைக்கு எனக்கு டைம் சரியில்லை” என்றாள்

"இப்பவும் எனக்கு அவரோட எக்ஸ்பிரஷன் கவலை ஏற்படுத்துது. இவ்வளவு தீவிரமான வெறுப்பு யாருக்குமே இருக்கக் கூடாதுடி. அது அவங்களையே பாதிச்சிடும்'' என்றாள் சாரு சித்ரா ஆழ்ந்த பாவனையுடன்.

மற்ற நால்வரும் சிரித்தார்கள். ''ஆரம்பிச்சுட்டாடி, ஒண்ணு பண்ணுவோமா. இந்த மால் முழுக்க தேடி அந்த ஆளைக் கண்டுபிடித்து இப்படி இருக்கறது உனக்கே நல்லது இல்லை. பெட்டர் சேஞ்ச் யுவர் ஆட்டிட்யூட்னு சொல்லிட்டுப் போகலாமா?'' என்றாள் நசீமா.

சாருசித்ரா அதை உண்மை போல் எடுத்துக் கொண்டு "செய்யலாமாடி? செஞ்சா கூட நல்லதுதான்'' என்றாள்.

"ஆமாம், உன் ஒருத்தியை மட்டும் அவரு திட்டினாரு. இனி ஐந்து பேரையும் சேர்த்து ஏதாவது கேவலமா கேட்பாரு. இதே வேலையா இருக்கீங்களா அப்படின்னு கேட்டா அதை வாங்கிட்டு வேற நாம போகணுமா?'' என்றாள்.

"ஆமாடி, அப்படியும் ஆகலாம்'' என்றாள் சாரு சித்ரா சின்னக் குழந்தையைப் போல. மற்றவர்கள் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

"நான் நினைக்கிறேன். அந்த ஆளு'' என்று ஆரம்பித்து ''கொஞ்சம் சிகப்பா இருந்தாரோ'' என்று கேட்டாள் அஞ்சு.

"ரொம்ப சிவப்பு இல்லை. மாநிறத்துக்கும் கொஞ்சம் மேலே'' என்றாள் சாருசித்ரா. ''இவ்வளவு மேலே. இல்லைன்னா இவ்வளவு மேலே'' என்று அளவு குறித்துக் காட்டினாள் ரோகிணி பெரு விரலையும் ஆள் காட்டி விரலுக்கும் இடையிலே உயரம் கற்பித்துக் கொண்டு.



சாருசித்ராவின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. ''இப்ப என்னடி சொல்ல வர்றே?'' என்றாள்.

''இல்லை, ஒரு வேளை நம்ம கறுப்பு நிறத்தைப் பார்த்து அவருக்குப் பிடிக்கலையோ?'' என்றாள்.

சாருசித்ராவுக்கும் அந்தக் கவலை உள்ளூர இருந்தது. இதுநாள் வரையிலும் தன்னுடைய நிறத்தைப் பற்றி யார் எதை சொன்னாலும் அவள் கவலைப்பட மாட்டாள்.

இன்றைக்கு அந்தப் பார்வையில் இருந்த வெறுப்பு அவளை என்னவோ செய்தது. தன் நிறத்தால் ஏற்பட்ட வெறுப்போ என்று அவளுக்கு ஒரு எண்ணம் தோன்றியது.

தோழியர்களிடம் அந்த ஆளு என்று ஆரம்பித்தவுடனே. ஐந்து பேரும் எழுந்து நின்று கோரஸாக சொன்னார்கள். ''இனிமே அந்த ஆளுன்னு ஆரம்பிச்சே, நடக்கறதே வேறே'' என்று.

சாருசித்ரா கப்பென்று வாயை மூடிக் கொண்டாள். ''சரிடி, ஐஸ் கிரீம் சாப்பிடலாம்'' என்று ஆர்வமாக அவர்கள் ஐஸ்கிரிமை சாப்பிட ஆரம்பித்தார்கள்.

''போன வாரம் எங்க அம்மா வீட்லயே ஐஸ்கிரீம் செஞ்சாங்க'' என்றாள் நசீமா.

''அப்ப எங்களை கூப்பிட்டிருக்கலாம்டி'' என்றார்கள்.

''கூப்பிட்டிருப்பேன். ஒரு வேளை நல்லா வராம இருந்ததுன்னு வச்சுக்கோங்களேன். கண்டிப்பா உங்களை கூப்பிட்டிருப்பேன்'' என்றாள்.

மற்றவர்கள் அவளை முறைத்தார்கள்.

''ரொம்ப நல்லா பண்ணியிருந்தாங்களா. அதனாலதான் உங்களை எதுக்கு சிரமப்படுத்தணும்னு கூப்பிடலை. நானே சாப்பிட்டேன்'' என்றாள்.

அஞ்சு கிட்டத்தட்ட அவளை அடிக்கப் போனாள். "அம்மா கிட்டே சொல்லி மறுபடியும் அந்த ஐஸ்கிரீம் பண்ணச் சொல்லி இந்த ஞாயிற்றுக்கிழமை எங்களை கூப்பிடறே. இல்லை.....?" என்றாள்.

"கூப்பிடலாம், ரெஜினா மேரியை வேண்ணா விட்டுடலாமா? ஏன்னா அவள் சர்ச்சுக்குப் போகணுமே," என்றாள்.

"அதெல்லாம் நீ கவலைப்படாதே. நீ எடுத்து ஃப்ரிஜ்ல வை. மூனு மணிக்கு வந்து சாப்பிட்டுக்கறேன்" என்றாள் ரெஜினா மேரி.

"அப்படியா, மூனு மணிக்கு ஞாயிற்றுக்கிழமை சந்திச்சுடலாமா?" என்று அவர்கள் திட்டம் போட்டார்கள்.

"ஏதாவது சினிமாவுக்குப் போகலாமாடி?" என்றாள் ரெஜினா.

"நான் வரலைடி. இந்த தடவை எனக்கு பிராக்டிக்கல் முடிஞ்சாச்சு. நிறைய ரெக்கார்ட் ஒர்க் கொடுத்திருக்காங்க. முடிக்கலைன்னா மேடம் கோபிச்சுக்குவாங்க" என்றாள் அஞ்சு.

"ஐய்யே, மேடம் கோபத்துக்கெல்லாம் ரொம்ப பயப் படற மாதிரி" என்று மற்றவர்கள் கிண்டல் செய்தார்கள்.

"இல்லடி. லாஸ்ட் இயர் ஆச்சுல்ல. அவங்க ரொம்ப ஸ்ட்ரிக்ட். அவங்க கிட்டேயெல்லாம் விளையாட்டு காட்ட முடியாது. கெமிஸ்ட்ரி மேடம் கை வச்சாங்க வச்சதுதான்" என்றாள்.

"அப்படின்னா சரிடி, மார்க்கையும் பார்க்கலாம். ஏன்னா மார்க்கைப் பொறுத்துதான் எங்க வீட்லயெல்லாம் மேல



படிக்கறது அப்படின்னு சொல்லிட்டாங்க" என்றாள் ரோகிணி கவலையுடன்.

"ஆமா பின்னே, நீ என்னமோ காலேஜுக்கு சும்மா என்ஜாய் பண்ற மாதிரி வந்திட்டிருந்தே. சும்மா இருப்பாங்களா? உங்க அப்பா எவ்வளவு கஷ்டப் பட்டு சம்பாதிச்சு கொடுக்கிறாரு" என்றாள் ரெஜினா மேரி.

பேச்சு இந்தப் புறமாக திரும்பியது. அவர்கள் குடும்ப விஷயங்களைப் பேசிக் கொண்டார்கள்.

கலகலவென சிரித்துக் கொண்டார்கள். அப்படி இப்படியாக அந்த மாலை விட்டு வெளியே வரும் பொழுது கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் முடிந்து விட்டிருந்தது.

இந்த இரண்டு மணி நேரமும் சாருசித்ராவுக்கு அந்த முகத்தை மறக்க முடியவில்லை. ஏனோ விஸ்வரூபம் எடுத்தாற்போல அவள் முன் வந்து ஆட்டம் காட்டிக் கொண்டே இருந்தது.. அதற்கு ஏற்றாற்போல இரண்டு மணி நேரம் கழித்து அவர்கள் வெளியே வந்து காரில் ஏறும் பொழுது எதேச்சையாகத் திரும்பிப் பார்த்தாள்.

அந்தப் பக்கமாக இருந்து அதே மனிதன் கார் ஸ்டார்ட் செய்வதைப் பார்த்தாள்.

இப்பொழுதும் அவன் பார்வை அலட்சியமாக பார்த்து விட்டு திரும்பிக் கொண்டது. மற்ற நால்வருக்கும் அவனைத் தெரியாததால் அவளுக்கு மட்டுமே புரிந்தது.

இப்பொழுதும் அந்தக் கண்களில் அதே வெறுப்பு மண்டிக் கிடந்தாற் போல இருந்தது. அது மட்டும் இல்லாமல் அந்த வெறுப்புப் பார்வை தன்னை மட்டுமே குறி வைத்துத் தாக்கியது போல அவளுக்கு தோன்றியது.

அவள் திகைத்துப் போனவளாகத்தான் நின்றாள்.

## அத்தியாயம்- 8

உலகமே ரம்மியமாக தெரிந்தது சாருசித்ராவுக்கு.

மூன்று ஆண்டுகள்! போனதே தெரியவில்லை சாருவுக்கு!

அதிகாலை தங்கள் வீட்டு சிட்அவுட்டில் வந்து அமர்ந்து கொண்டிருந்தாள். தோட்டம் முன்னைப் போல இல்லை என்றாலும் அந்த செம்பருத்திச் செடிகள் எல்லாம் அப்படியேதான் இருந்தன.

அவர்களது பங்களாவின் முன்னால் இருந்த இடத்தில் ஓரங்களில் இருந்த தென்னை மரங்களும் அழகாகவே பராமரிக்கப்பட்டு இருந்தது. ஒரு பெருமூச்சு விட்டாள்.

அவள் கோவையில் நிரந்தரமாகத் தங்கி மூன்று ஆண்டுகள் ஓடியிருந்தது.

மூன்றாம் ஆண்டு படிப்பை முடித்து விட்டு எம்.பி.ஏ. படிப்பதற்காக சென்னைக்குச் சென்று விட்டாள். அது ஒரு பெயர் பெற்ற கல்லூரி. அங்கே அவளுக்கு இடம் கிடைத்ததே பெரிய விஷயம் என்பதால் பெற்றோர்களும், வெளியூருக்கு அனுப்ப விருப்பம் இல்லாவிடினும், மகளின் விருப்பத்துக்காக அனுப்பி வைத்தார்கள்.

இந்த மூன்றாண்டுக் காலம் சென்னையில் அவளுக்கு எத்தனையோ விஷயங்களை கற்றுக் கொடுத்திருந்தது.

வெளியுலகத்தைப் பார்த்து விட்டாள். வெளியுலகத்தில் இருக்கிற தேவையற்ற சங்கதிகளையும் பார்த்து அதில் இருந்து எப்படி ஒதுங்கிக் கொள்வது என்பதையும் கற்றுக் கொண்டிருந்தாள்.



முழுமையாக இல்லையென்றாலும் அவ்வப்போது விடுமுறை கிடைக்கும் போது கோவைக்கு வந்து விட்டுச் செல்லுவாள். ஆனால், எப்போது வந்தாலும் இரண்டு மூன்று நாட்கள் என்பதால் ஒரு நாள் முழுவதும் ஓய்வு, இரண்டு நாட்கள் பெற்றோர்களுடன் அளவளாவுதல், உறவினர்கள் வந்தால் அவர்களிடம் பேசுதல் என்று நேரம் ஓடி விடும்.

ஒரே ஒரு முறை தான் வந்து பத்து நாட்கள் தங்கியிருந் தாள். முன்னைப் போல தோழிகளிடம் கூட இப்பொழுது தொடர்பு இல்லை.

ரெஜினா மேரி மட்டும் அவ்வப்போது பேசுவாள். இப்போது கோயம்புத்தூருக்கே நிரந்தரமாக வந்து விட்டோம் என்று தெரிந்தால் மீண்டும் அவர்களெல்லாம் தொடர்பு கொள்வார்கள் என்று எண்ணிக் கொண்டாள்.

அம்மா அவளிடம் கொடுத்திருந்த காஃபியை அனுபவித்துப் பருகினாள்.

பள்ளி நாட்களில் தோழியர்களோடு சுற்றிய நிமிடங்கள், செய்த கலாட்டாக்கள் என்று ஒவ்வொன்றாக அவளுக்கு நினைவுக்கு வர சிரித்துக் கொண்டாள். இத்தனைக்கும் நடுவிலே அவளுக்கு அந்த வெறுப்பான பார்வையும் கூட மின்னி மறைந்து போனது நினைவுக் குள்ளே!

அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. எத்தனை அனுபவங் களைப் பார்த்தாயிற்று! எம்.பி.ஏ. படிக்கும் பொழுது இரண்டு முறை வெளிநாடு கூட சென்று விட்டு வந்துவிட்டாள். டெல்லி, பாம்பே என்று கருத்தரங்குகளில்

தன்னுடைய ஆய்வுகளை சப்மிட் செய்ய வேண்டுமென்று போய் விட்டு வந்தாள்.

உலக அனுபவம் இப்பொழுது ஒரளவுக்கு இருந்தது என்றே சொல்ல வேண்டும். இத்தனைக்கும் மீறி ஏன் அந்த வெறுப்பான பார்வை தனக்கு நினைவுக்கு வருகிறது என்பது மட்டும் அவளுக்கு புரியவில்லை.

அந்தப் பார்வையில் இருந்த ஏதோ ஒன்று இப்போதும் சில நேரங்களில் அவளைக் குடையும். ஆனால் என்ன? பட்டென்று வெளியே வந்துவிடுவாள். அன்றைக்கு உட்கார்ந்தது பொல பொல வென்று கண்ணீர் வடித்த சாருசித்ரா அல்ல இவள். இவள் மெச்சூர்ட். பக்குவம் வாய்ந்த படிப்பறிவு உள்ள, தன்னை உணர்ந்த, நிமிர்ந்து நிற்கிற என்று நிறைய அடைமொழிகளை தனக்கு முன்னாலே வைத்துக் கொண்டிருக்கிற படித்த பெண்.

அதனால் இப்பொழுது ஒரு முறை அந்த ஆளைப் பார்க்க நேர்ந்தாலும் இவளும் பதில் கொடுத்துவிடுவாள்.

சட்டென்று தலையை சிலுப்பிக் கொண்டாள் ''சாரு சித்ரா, இது என்ன சிந்தனை? இப்படியே எத்தனை நாளைக்கு இதை நினைத்துக் கொண்டிருப்பது?'' என்று ஒரு புறத்தில் தூக்கிப் போட்டு விட்டு சிட்அவுட்டில் இருந்த நீள சோஃபாவின் ஒரு புறத்தில் கிடந்த செய்தித் தாளை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள்.

செய்திகளை வாசித்து முடித்து விட்டுத் தன்னுடைய அறைக்குப் போன பொழுது அம்மா அங்கே வந்தாள். ''என்னடி எப்ப வேலைக்கு ஜாய்ன் பண்ணனும்?'' என்று கேட்டாள்.



''அம்மா, ஒன் வீக் டைம் கேட்டிருக்கேம்மா. ஒன் வீக் உங்களோடெல்லாம் இருந்துட்டு அப்புறமா ஜாய்ன் பண்ணிக்கலாம்னு இருக்கேன்'' என்றாள்.

சாருசித்ராவுக்கு இப்பொழுது கோவையிலேயே ஒரு நல்ல கம்பெனியில் வேலை கிடைத்திருந்தது.

அவள் நினைத்தது போலவே தேவைப்பட்டால் இடையிலே வெளிநாடு கூட போய்விட்டு வருகிற வாய்ப்புள்ள ஒரு பெரிய கம்பெனி. அதனால் அவளும் மகிழ்ச்சியில்தான் இருந்தாள்.

அம்மா புஷ்பலதாவும் அப்பா கைலாசமும் அவளுக்குக் கோவையில் வேலை கிடைத்தது குறித்து மிகவும் மகிழ்ச்சியோடு இருந்தார்கள். ''பரவாயில்லைடி, உனக்கு இங்க வேலை கிடைச்சதால எனக்கு மனசு நிம்மதியாச்சு'' என்றாள் புஷ்பலதா.

''ஆமாம்மா, எனக்கும் ஒரு வகையில சந்தோஷம்தான். என்ன இருந்தாலும்மா கோயம்புத்தூர் கோயம்புத்தூர் தான்'' என்றாள்.

''ஏண்டி, சென்னை பெரிய ஊர்ங்கறே, அங்கே நிறைய அனுபவமெல்லாம் கிடைச்சதுங்கறே'' என்று கேட்டாள்.

''இல்லம்மா, இந்த வெதரும், இந்த சிறுவாணித் தண்ணியும், இங்கிருக்கிற மக்கள் மாதிரியும் எங்கேயும் வராது'' என்றாள்.

கொஞ்ச நேரம் தாயிடம் தன்னுடையசென்னை அனுபவங்களைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தாள்.

''திடீர்ன்னு புயல், மழை அடிக்கும்மா. அங்கங்கே மரங்கள் விழும். ஒரே கலாட்டாவா இருக்கும். அப்புறம்

பார்த்தின்னா அடுத்த நாள் எல்லாம் காஞ்சுடும். ரெண்டு நாள் வெயில் அடிச்சா இந்த ஊரிலயா புயல் அப்படின்னு இருக்கும்'' என்றாள்.

அம்மா சுவாரஸ்யமாக கேட்டுக் கொண்டிருந்தாள். ''இந்த வந்துக்கினு போய்க்கினு அதெல்லாம் உனக்கு தொத்திக்கலையாடி?'' என்றாள் புஷ்பலதா.

''அது வந்துக்கினு தான் இருக்கும். நாம தான் அது தொத்திக்காம பார்த்துக்கணும்'' என்றாள் மகள்.

''ஏண்டி, பஸ்லெல்லாம் எப்படீடி போய் சமாளிச்சே? ரொம்பக் கூட்டம்னு சொல்லுவாங்களே? என்றாள்.

''ஆமாம்மா, அதுலயும் இந்த கடற்கரை ஓரம் பஸ்லெல்லாம் ஏறிட்டா மீன் நாத்தம்தான். தூக்கிதான் போடுவாங்க. ஆனால், அதுவும் ஒரு அனுபவம்னு எடுத்துக்க வேண்டியதுதாம்மா'' என்றாள்.

''என்னடி? நீ சொல்றதைப் பார்த்தா சென்னையில் நல்ல விஷயங்களே இல்லையா?'' என்று கேட்டார் அம்மா.

''யாரும்மா சொன்னா? பெரிய தொழில் நகரமா வளர்ந்துட்டு இருக்கு. சினிபீல்ட் அங்கதான் பெரிய அளவில இருக்கு. யார் யார் எதெதைத் தேடிப் போறாங்களோ அது அது அங்கங்க கிடைக்கும்மா. சென்னையைப் பொறுத்த வரைக்கும் ஒரு பெரிய விசேஷம் என்ன தெரியுமா. அங்க குடிசையிலே இருக்கறவங்களும் அவங்க அளவுக்கு ஏத்த மாதிரி ஒரு வாழ்க்கை வாழலாம். பெரிய அளவில வசதி இருக்கறவங்களும் அவங்க அளவுக்கு ஏத்த மாதிரி ஒரு வாழ்க்கை வாழலாம்'' என்றாள்.

புஷ்பலதா மெதுவாக தான் கேட்க விரும்பிய கேள்வியை ஆரம்பிக்கலாம் என்று நினைக்கும் பொழுது



கைலாசம் உள்ளே வந்தார். ''என்ன காலங்காத்தால அம்மாவும் மகளும் ஆலோசனையில் இருக்கீங்க?'' என்றார்.

''அப்பா, சென்னையைப் பத்தி அம்மா பேட்டி எடுத்துட்டிருக்காங்க'' என்றாள் மகள். ''கூட்டிட்டு வேண்ணாப் போயிடுவோமா? ஒரு ஒரு வாரம் போயிட்டு வரலாமே?'' என்றார் அப்பா.

''ஆமாம்பா, நான் சென்னையில் இருக்கும் பொழுது நீங்க வந்திருக்கலாம்''

''எங்கேம்மா, நீதான் உங்க காலேஜ் ஹாஸ்டல்லே இருந்தியே?''

''அப்படி இல்லைப்பா. எங்க காலேஜ்ல கெஸ்ட் அவுஸ் இருக்கு. தேவைப்பட்டா பேரண்ட்ஸ் வந்தா கூட தங்கலாம்'' என்றாள்.

''அதை நீ சொல்லலையே?'' என்றார் அப்பா.

''இப்ப கூட என்னப்பா? ஜூனியர்ஸ் இருக்காங்க. யாராவது ஒருத்தருடைய கெஸ்டா நாம போய் தங்கலாம். போகலாம்னு சொல்லுங்க. எப்ப வேண்ணாலும் போகலாம்?'' என்றாள்.

''போகணும்மா. ஒரு பத்து நாள் உங்கூட சென்னைக்கு வந்து இருந்து சுத்திப் பார்த்துட்டு வரணும்'' என்றார் அப்பா.

''சரிப்பா'' என்றாள்.

புஷ்பலதாவும் கைலாசமும் ஒருவரை ஒருவர் பார்த்து கண்ணைக் காட்டிக் கொண்டார்கள். சாருசித்ரா அதைக் கவனித்தவள் ''என்ன ஏதோ விஷயம் இருக்கற மாதிரி இருக்கே?'' என்றாள்.

"ஆமாம்மா," என்று அப்பா மகளின் அறையில் இருந்த கட்டிலின் மீது உட்கார்ந்தார். மகள் எதிரிலே சேரில் அமர்ந்து கொண்டாள்.

அந்தப் புறமாக இருந்த இன்னொரு சேரில் அம்மா அமர்ந்து கொண்டாள்.

"பெரிய பீடிகையா இருக்கேப்பா" என்று சிரித்தாள் சாருசித்ரா.

"இல்லைம்மா. வேலை கிடைச்சாச்சு. அதுவும் கோயம்புத்தூர்லே கிடைச்சாச்சு. உனக்கும் இருபத்திரண்டு முடியுது. அதுதான் அடுத்து கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணலாமான்னு யோசிக்கிறோம்" என்றார் கைலாசம்.

இரண்டு பேரையும் அதிர்ச்சியாகப் பார்த்தாள் சாரு சித்ரா.

"என்னடி அப்படிப் பார்க்கறே? அடுத்தது அது தானே. நேரங்காலத்துல கல்யாணம் பண்ணிக் கொடுத் துட்டா நாங்க கொஞ்சம் நிம்மதியா இருப்போம்" என்றாள் புஷ்பலதா.

"ஏம்மா, என்னை அனுப்பினா உனக்கு நிம்மதியா?" என்றாள்.

"அப்படி இல்லைடி, இத்தனை நாளா உன்னைப் பிரிஞ்சு தான் இருந்தோம். அதுக்காக உன்னைக் கூடவே வச்சுக்க முடியுமா?" என்றாள் அம்மா.

"அதானே உனக்கு மகன் இருக்கான். மருமகள் வந்துடுவா. அதனால என்னை அனுப்பிவிட்றலாம்னு பார்க்கறே?"



"அவனுக்குந்தாண்டி பண்ணனும். ஆனால் முதல்ல உனக்கு பண்ணிட்டா நல்லதுன்னு பார்க்கறோம்" என்றாள்.

சாருசித்ரா அம்மாவையும் அப்பாவையும் பார்த்துக் கெஞ்சுவது போல சொன்னாள். "அப்பா, மூணு வருஷம் உங்களையெல்லாம் பிரிஞ்சு இருந்துட்டேம்ப்பா. ஒரு வருஷமாவது இங்கிருந்து வேலைக்குப் போறேன்பா. உங்களோட இருக்கேம்ப்பா" என்றாள்.

அவர்கள் முகத்தில் மகிழ்ச்சி பரவியது. "எங்களுக்கும் அதாண்டா ஆசை. அப்புறம் இருபத்திமூணு தாண்டிட்டா அப்புறம் இருபத்திநாலு அப்படின்னு போயிட்டே இருக்கும். இப்ப இருந்தே பார்க்கறோமே" என்றாள் அம்மா.

அப்பா "இல்லைடா, ஏதாவது நல்லபடியா அமைஞ்ச துன்னா முடிவெடுத்துக்கலாம். ஏன்னா பார்த்தா நாளைக்கே அமையும்னு சொல்ல முடியாது. ஆறு மாசம் ஆகலாம். ஒரு வருஷம் ஆகலாம். ரெண்டு மாசத்துலே கூட அமையலாம். அப்படி அமைஞ்சா கூட கல்யாணம் ஆறு மாசம் கழிச்சு வச்சுக்கிறோம்னு சொல்லிக்கலாம்மா" என்றார்.

சாரு சித்ராவுக்கு வேறு வழி இருக்க வில்லை. "சரிப்பா, நான் என்ன சொல்றது. ஆனா, ஒரே ஒரு கண்டிஷன்?" என்றாள்.

"என்னம்மா?" என்றார்கள்.

"ஒரு மூணு மாசம் கழிச்சாவது பார்க்க ஆரம்பிங்க"

"அது வேண்ணா செய்யலாம்மா. மூணு மாசம் என்ன? நாலு மாசம் கழிச்சுக் கூட பார்க்கறோம். ஆனா, பார்க்க ஆரம்பிச்சடறோம். அதுக்கு நீ பர்மிஷன் கொடுக்கணும்" என்றார்.

''அப்பா, நாலு மாசம் கழிச்சுத்தான் பார்க்க ஆரம்பிக் கனும். யு அன்டர்ஸ்டாண்ட்.'' என்றாள்.

''அதுக்கப்புறம் கல்யாணத்துக்கு ஆறு மாசம் டைம் வாங்குங்க. சப்போஸ் ஏதாவது அமைஞ்சதுன்னா. கூட அட்லீஸ்ட் நான் உங்களோட ஒரு வருஷம் இருந்துடு வேன்ல'' என்றாள்.

''சரிம்மா, முடிஞ்சவரைக்கும் உள்ளூர்லேயே பார்க்கறோம்மா'' என்றார்.

''ஆமாம்பா, இந்த வேலையும் நல்ல வேலை'' என்றாள் மகள்.

''சரிம்மா, உன் ஃபியூச்சரையும் நாங்க பார்ப்போ மில்லே'' என்றார்.

கைலாசம் தான் சொல்ல வந்த விஷயம் முடிந்தவுடன் மனைவியிடம் திரும்பி ''இப்பத்தான் வந்திருக்காப்ல. காலையில அவளுக்கு நல்ல டிஃபன் கொடுக்கறதுக்குப் பாரு'' என்றார்.

''அதெல்லாம் ரெடி பண்ணியாச்சு'' என்று சொன்ன புஷ்பலதா.

''வா! வா! உனக்கு என்ன இட்டம் வேணும்னு கேளு. செஞ்சு தரேன். என்ன பத்து நிமிஷம் ஆகுமா? பதினைந்து நிமிஷம் ஆகுமா?'' என்று மகளிடம் கேட்டுக் கொண்டிருந் தாள்.

கைலாசம் திருப்தியான ஒரு புன்னகையுடன் வெளியே வந்தார்.

ஒரே மகள் ஒரே மகன் என்று அளவான குடும்பம். மகன் இப்பொழுது வெளிநாட்டில் இருந்தான். சாரு



சித்ராவை விட மூன்று வயது பெரியவன். ''இன்னும் ஒரு ரெண்டு வருஷமாவது வெளி நாட்டில் வேலை பார்த்துட்டு அப்புறம் கல்யாணம் பண்ணிக்கிறேன்'' என்று பிடிவாதமாக இருந்தான்.

அவனும் தான் தங்கைக்கு திருமணம் செய்து வைத்து விடலாம் என்று ஆலோசனை சொல்லிக் கொண்டிருந் தான். ஒரு மாதம் பேசி முடித்துத்தான் இந்தப் பேச்சையே ஆரம்பித்திருந்தார்கள். சாருசித்ராவிடம் இவர்கள் ஏற்கனவே இரண்டாம் ஆண்டு ஆரம்பத்திலேயே இந்தப் பேச்சை ஆரம்பித்திருந்தார்கள். அப்பொழுது அவள் அதற்கு ஒரேயடியாக முற்றுப் புள்ளி வைத்திருந்தாள்.

கல்லூரியில் உடன் படிக்கும் தோழி ஒருத்தி சென்னைக் காரி. அவள் அடிக்கடி சொல்லுவாள். ''இந்த அரேஞ்ச்ட் மேரேஜ்ல என்னடி இருக்கு. யாரோ ஒரு ஆளைக் காட்டி இந்த ஆளை உனக்குப் பிடிக்குதான்னு கேட்பாங்க. ஜஸ்ட் ஒரு அப்பியரன்ஸ் பார்த்து நாம சரின்னு சொல்லிடணும். அவங்களுடைய இன்னன்டவுட் நம்மளுக்கு என்ன தெரியும். குணங்கள் என்ன தெரியும்? போய் கழுத்துல தாலி வாங்கிட்டு அய்யோ தேவுடான்னு அவன் காலைத் தொட்டுட்டு இருக்கணும். ஐ டோண்ட் லைக் இட்'' என்பாள்.

சாருசித்ரா சிரிப்பாள், ''இன்னும் எங்க ஊரு பக்கம் இந்தப் பழக்கம் எல்லாம் இருக்கு. ஆனா நீங்க சொல்ற மாதிரி ஒரே நாள்ல கூட்டிட்டு வந்தெல்லாம் நிறுத்த மாட்டாங்க. தீர விசாரிப்பாங்க. பையன் எப்படி குடும்பம் எப்படி என்றெல்லாம் விசாரிச்சுட்டுத்தான் பண்ணுவாங்க.

இப்பெல்லாம் கொஞ்ச நாள் பழகக்கூட விடறாங்க'' என்றாள் சாருசித்ரா.

''அப்படியா? ம்ஹூம் கோயம்புத்தூர் இவ்வளவு முன்னேறிடுச்சா?'' என்று கேலி செய்தாள்.

''கோயம்புத்தூர் எப்பவுமே நாகரிகமான ஊர்தான். தெரிஞ்சுக்கோ'' என்பாள் சாருசித்ரா. இப்பொழுது அது நினைவுக்கு வர புன்னகைத்தாள்.

''ஒரு மூணு மாசம் நீங்க சொல்ற பையன்கிட்டே பழகிட்டுத்தான் முடிவெடுப்பேன் அப்படின்னு சொன்னார். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் எவ்வளவு அதிர்ச்சியா இருக்கும்'' என்று நினைத்தாள்.

சிரிப்பு வந்தது!

அதற்கெல்லாம் வாய்ப்பு கிடைக்குமா என்று தெரிய வில்லை. ஆனால், இப்பொழுதெல்லாம் ஃபோனில் பேசிக் கொள்கிறார்கள். ஒன்றிரண்டு முறை வெளியே போகக் கூட செய்கிறார்கள். அதற்கு மட்டுமாவது வாய்ப்புக் கிடைக்குமோ என்னவோ என்று எண்ணிக் கொண்டாள்.

உடனே மனது ''இதுக்குத்தான் கல்யாணப் பேச்சே எடுக்கக்கூடாதுங்கறது. உடனே இந்த விஷயத்தில் புத்தி போயிடுச்சு. ம்ஹூம் மனமே. நான் சொல்றதைக் கேளு! இப்போதைக்கு வேலையில ஜாய்ன் பண்ணி நல்ல பேரு எடுக்கணும். தட் இஸ் மோர் இம்பார்ட்டன்ட்'' என்று அவள் மனதுக்கு சொல்லிக் கொண்டாள்.

ஆனால், திருமணம் அவள் வீட்டுக் கதவை விரைவில் தட்டப் போகிறது. அதற்குப் பிறகு ஒரு பெரிய போராட்டம்



அவளது வாழ்க்கையில் காத்துக் கொண்டிருக்கிறது என்பது அப்போதைக்கு அவளுக்கு தெரியவில்லை.

## அத்தியாயம் - 4

''ஏங்க இவளைப் பாருங்க, நேரங்காலத்துக்கு வந்து சாப்பிட மாட்டேங்கறா. டிஃபனுக்கு எவ்வளவு நேரமா கூப்பிட்டுட்டு இருக்கேன். மணி ஒன்பது ஆகுது. இன்னும் இவ வரமாட்டேங்கறா!'' என்று சொல்லிக் கொண்டிருந் தாள் புஷ்பலதா. கைலாசம் சிரித்தார்.

''மக இல்லைன்னா வெறிச்சோடிக் கிடக்குதுங்கறே. மக வந்துட்டா ரெண்டு பேரும் மல்லுக்கட்டிட்டே இருக்கீங்க. இதுல என்னைக் கூப்பிடாதப்பா. நீ என் அருமை மனைவி. அவ என்னோட அருமை மகள். செல்லப் பொண்ணு. நான் யாருக்குன்னு பேசுவேன். அதனால நீங்க ரெண்டு பேருமே பேசி முடிவெடுத்துக்கோங்க!'' என்றார்.

''என்னப்பா, அம்மா பாராட்டுப் பத்திரம் வாசிக்கிறாங் களா?'' என்று உள்ளே வந்தாள் சாருசித்ரா.

''ஏய், சாரு வாயேண்டி. உனக்குப் பிடிச்ச மாதிரி டிஃபன். பூரி பண்ணியிருக்கேண்டி. ரெடியா வச்சிருக்கேன். நீ வந்தேன்னா நான் சூடா போட்டு எடுத்துக் கொடுப்பேன்'' என்றாள் அம்மா.

அம்மாவை வாஞ்சையாகப் பார்த்தாள். ''அப்பா, நான் ஒரு தியரி சொல்றேன். கேளுங்க'' என்றாள்.

''ஏம்மா, இன்னைக்கு வேறு யாரும் கிடைக்கலையா?'' என்றார் கைலாசம்.

''போங்கப்பா நீங்களும் சேர்ந்துட்டு!. ஒரே வாரம்! அதுக்கப்புறம் காலையில வாட்சைப் பார்த்துட்டே நான்

பறப்படணும். எட்டரை மணிங்கறப்ப என் வண்டியை எடுத்தாகணும். அப்ப நான் எத்தனை மணிக்கு எழுந்திருச்சு...! எப்படிக் கிளம்பி... நீங்களே யோசிச்சுப் பாருங்க. சாயங் காலம் வரும்போது அப்படியே டயர்டா வரப் போறேன். அப்படி ஒரு லைஃப். அங்கே டைம் பார்த்துத்தான் வேலை செய்யணும்.அப்படியிருக்கப்போ நான் இந்த வாரம் முழுக்க டைமே பார்க்கப் போறது இல்லை. ரிலாக்ஸ்டா இருக்கப் போறேன். அப்படி இருந்தாத்தானேப்பா ஓய்வு கிடைக்கும். என் தியரி கரெக்ட்தானே?'' என்றாள் மகள்.

அப்பா சிரித்தார். ''ரொம்ப கரெக்ட்ம்மா. அதான் இங்கிலீஷ்காரன் என்ன பண்ணுவானாம். என் நண்பர் ஒருத்தர் சொன்னாரு. அமெரிக்காவிலெல்லாம் வெள்ளிக் கிழமை சாயங்காலம் வரைக்கும் வேலை செய்வாங்களாம். ரெண்டு நாள்னா ரெண்டு நாள். சனி ஞாயிறு எங்காவது போயிடுவாங்களாம். எங்கேயாவது டெண்ட் அடிச்சாவது தங்கிட்டு டு டேஸ் ஃபுல் என்ஜாய்மெண்ட் அப்புறம் திங்கட்கிழமை மறுபடியும் வேலை. அப்படி அவங்க சிஸ்டமேட்டிக்கா இருக்காங்கம்மா''

''ஆமாம்பா, அதே தான் நானும் சொல்றேன். ஒர்க் வைல் யு ஒர்க். பிளே வைல் யு ப்ளே. இதெல்லாம் அம்மாவுக்கு புரியாது''

''புரியும்டி, புரியும். நானும் ஒண்ணும் சும்மா இல்லை. அந்தக் காலத்துலேயே டிகிரி தெரியுமா?'' என்றாள் புஷ்பா.

கைலாசம் மனைவியைப் பார்த்து விட்டுப் பெருமையாக சிரித்தார். ''பார்த்தியாம்மா?'' என்றார்.

''ஆமாம்பா, அப்படி இருந்தும் ஏம்பா புரியமாட் டேங்குது?'' என்றாள்.



''ஏய், வாயடிச்சுட்டே இருந்தின்னா அடிதான். வா நீ'' என்று அம்மா பூரி கிழங்கு வைக்கப் போனாள்.

''சும்மா சொல்லக் கூடாதும்மா. என்னதான் ஹோட்டல்லே பூரி சாப்பிட்டாலும் இந்த டேஸ்ட் வரவே வராது'' என்று ரசித்து ருசித்து மூன்று பூரிகளை விழுங்கி வைத்தாள் சாரு சித்ரா.

''ஏய், மூணு போதுமாடி? இன்னும் ஒண்ணே ஒண்ணு வச்சுக்கோ.'' என்றாள் அம்மா.

''சரிம்மா, உன்னோட ஆசைக்காக ஒண்ணு'' என்று இன்னொரு பூரியையும் வாங்கிக் கொண்டாள்.

''போதும்மா, என்னைக்காவது ஒரு நாளைக்கு இப்படி சாப்பிடலாம். ரொம்ப ஆயிலா சாப்பிட்டோம்னாஆகாது''

''போதும்டி. இப்ப நீங்க சின்னப் பிள்ளைங்க. இப்பத் தான் நல்லா சாப்பிடணும். நல்லா வேலை செய்யணும். இன்னொரு தியரி இருக்கு தெரியுமா?'' என்றாள் அம்மா.

சிரித்தபடியே அம்மாவைப் பார்த்தாள். ''என்னம்மா கவுண்ட்டரா?''

''அப்படித்தான் வச்சுக்கோயேன். இந்த வயசுல எல்லாம் எவ்வளவு வேண்ணா சாப்பிடலாம். ஆனா ஒர்க் அவுட் பண்ணிடு'' என்றாள் புஷ்பலதா.

''ஆமாம்மா, இது யாரோ பிரபல நடிகர் சொல்ற மாதிரி இருக்கு. பத்தியம் எல்லாம் தேவை இல்லை. ஆனா கரைச் சிடணும்''

இரண்டு பேரும் பேசிக்கொண்டிருக்கையிலேயே ''வாங்க, வாங்க'' என்று அப்பா யாரையோ வரவேற்கிற குரல் கேட்டது.

"வந்துட்டேன் தம்பி!" என்ற ஒரு முதியவரின் குரலும் கேட்டது.

"ஹேய், கலைஞானம் சித்தப்பா! கலைஞானம் சித்தப்பா!" என்று அம்மா ஆர்வமாகப் போனாள். இவளுக்கும் கூட கலைஞானம் தாத்தாவை மிகவும் பிடிக்கும்.

தூரத்து உறவினர்!

இவள் கல்லூரி விடுமுறைகளில் வரும்பொழுது என்றைக் காவது ஒருநாள் பார்ப்பாள். அடிக்கடி அம்மாவை வந்து பார்த்துப் போவார். அம்மா வழி சொந்தங்களில் அம்மா விடம் மிகவும் பிரியமானவர் என்று அம்மா சொல்லுவார்.

இத்தனைக்கும் சித்தப்பா என்றால் ஒன்று விட்ட,, ஒன்று விட்ட, என்று கொஞ்சம் தூரத்து சொந்தம்தான். இருந் தாலும் நெருங்கிய சொந்தக்காரர்களை விட கலைஞானம் சித்தப்பா தன்னிடம் பிரியமாக இருப்பதாக அம்மா சொல்லி அவள் கேட்பதுண்டு.

அதே பிரியத்துடன் அவளிடமும் பழகுவார். அவளும் உற்சாகமாக "தாத்தா! வாங்க, வாங்க,!" என்று வரவேற்கப் போனாள்.

"நீ கோயம்புத்தூர் வந்துட்டியாடா, ராஜா! அதைக் கேள்விப்பட்டுத் தான் சந்தோஷமா வந்தேன். இனிமே இங்கதான் இருக்கப் போறியாடா?"

"ஆமா, தாத்தா, எனக்கு இங்கேயே வேலை கிடைச் சிருச்சு. நான் லைக் பண்ணின மாதிரி நல்ல வேலையா கிடைச்சிடுச்சு. அதனால இங்கேயே இருக்கப் போறேன்!" என்றாள்.



"எத்தனை நாளைக்கு இருப்பே. கல்யாணம் வரைக்கும் இருப்பே!" என்றார் தாத்தா.

"போங்க தாத்தா! எல்லாரும் எங்களை மாதிரிப் பொண்ணுங்களைப் பார்த்தாலே உடனே கல்யாணம்னு பேச ஆரம்பிச்சிடுவீங்களா?"

"தாத்தா! வாழ்க்கையோட லட்சியம் கல்யாணம் என்ப தெல்லாம் அந்தக் காலம் தாத்தா. இந்தக் காலத்துல எங்களுக்கும் லட்சியம் இருக்குது. கல்யாணம் ஒன் ஆஃப் தி மேட்டர்ஸ் ஆஃப்தி லைஃப்" என்றாள்.

"சரிம்மா! சரிம்மா!" என்று சிரித்துக் கொண்டே உள்ளே வந்தார்.

"தாத்தா, நெய் முறுக்கு சாப்பிடறீங்களா?" என்று உபசரித்தாள் பேத்தி.

"நெய் முறுக்கு சாப்பிடற வயசெல்லாம் போச்சு. சரி, இருந்தாலும் நீ சொல்றே? சின்னதா ஒண்ணு கொண்டு வா!" என்று சொல்லி அமர்ந்தார்.

"புஷ்பா, உன்னோட நல்ல காஃபியைக் கொடுக்கறது?" என்றார்.

"இதோ சித்தப்பா, போட்டுட்டு வரேன்" என்று அவள் நகர்ந்தாள்.

சாருசித்ரா உற்சாகமாக நெய் முறுக்கைக் கொண்டு வந்து வைத்து விட்டுக் கூடவே தாத்தாவுக்கு சாப்பிடுவதற்கு ஏதுவாக மெதுவாக இருந்த அந்த மெது பக்கோடாவையும் ஒரு தட்டிலே கொண்டு வந்து கொடுத்தாள்.

"தாத்தா இந்தப் பக்கோடா நல்ல சாஃப்டா இருக்கும். சாப்பிடறதுக்கு நல்லா இருக்கும். நீங்க கஷ்டப்பட்டு சாப்பிட வேண்டியது இல்லை" என்றாள்.

''எனக்கு பல்லு இருக்கும்மா'' என்றார்.

''இருந்தாலும் ஹார்டா இருந்தா கஷ்டமா இருக்குமில்லே. இது நல்ல டேஸ்ட் தாத்தா. சாப்பிடுங்க'' என்று சொல்லி விட்டு அவளும் அருகிலே அமர்ந்தாள்.

''ஏம்மா'' என்று அவர் ஏதோ சொல்ல ஆரம்பிக்கும் பொழுது எதிர்த்த வீட்டு பங்களாவில் இருக்கும் குழந்தை ஓடி வந்தாள். இரண்டரை வயதுக் குழந்தை.

ப்ரியா என்று பெயர் வைத்திருந்தார்கள். உற்சாகமாக ஓடி வந்த குழந்தை இந்த வீட்டு பங்களாவின் நிலைப் படியை தாண்டி உள்ளே வரும்பொழுது பொத்தென்று விழுந்து விட்டாள்.

விழுந்தவள் இந்தப் பக்கம் அந்தப் பக்கமும் பார்த்தாள். உடனே சாருசித்ரா ''ஹாய், ப்ரியா குட்டி விழுந்துட்டா. எங்கே? டப்புன்னு எழுந்திருச்சு நிப்பாளாம்!'' என்றாள்.

அந்தப் பெண் மெதுவாக உதட்டைப் பிதுக்கிக் கொண்டு அழுகையை ஆரம்பித்தவள் சாருசித்ரா சொன்னதைக் கேட்டு ''ஆமா!'' என்று எழுந்து நின்று விட்டாள்.

சாருசித்ரா மெல்ல தாத்தாவிடம் ''தாத்தா! நாம ரொம்ப அமர்க்களம் பண்ணினாத்தான் அவங்க அதுக்கு மேல அழுவாங்க. இது ஒண்ணுமே இல்லைங்கற மாதிரி நாம நடத்திட்டோம்னா சரியாயிடும். அவளைப் பாருங்க அவ சிரிச்சுடுவா!'' என்று சொல்லிக் கொண்டே அருகில் போய் ''ஹை, பிரியா குட்டி! எப்படி சிரிப்பே? காட்டு!'' என்றாள்.

உடனே அவள் கலகலவென்று சிரித்தாள்.

''இப்படித்தான் சிரிக்கணும்.ஓடிவா!'' என்று இவள் அள்ளிக் கொண்டு வந்து தாத்தாவின் அருகிலே அமர்ந்து கொண்டாள்.



இவள் அந்தக் குழந்தையை கையாண்ட விதத்தை தாத்தா கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார். அவள் உள்ளத்திலே ஏதேதோ சிந்தனைகள் தோன்றின போலும்.

சட்டென்று திரும்பி தாத்தாவைப் பார்த்த சாருசித்ரா அவளுக்குள் பல நாளாக உறுத்திக் கொண்டிருந்த கேள்வியைக் கேட்டே விட்டாள்.

''தாத்தா! ஒரு நேரம் பார்த்தா நீங்க ரொம்ப சந்தோஷமா இருக்க மாதிரி இருக்கு. ஒரு நேரம் பார்த்தா ஏதோ வருத்தம் இல்லே தாத்தா'' என்றாள்.

கலைஞானம் ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டு ''எனக்கும் உன்னை மாதிரி ஒரு அருமையான மக இருந் தாம்மா. அவ இப்ப இல்லை. அவ நினைப்பு வந்துடுது''

''ஓஹோ!'' என்று அவள் சற்று அமைதியானாள்.

''அவளோட பையனே பெரியவன் ஆயிட்டான். கல்யாண வயசுல இருக்கான். அது வேற விஷயம். ஆனா என்ன இருந்தாலும் அவள் போனது எனக்கு ஒரு பெரிய ஷாக்தாம்மா. அவ இருந்திருந்தா கதையே வேறே'' என்று சற்று வருத்தமாக சொல்லிக் கொண்டார்.

''அண்ணி இல்லைன்னா என்ன? நான்தான் இருக்கேனே உங்களுக்கு மகளாட்டம்!'' என்று சொல்லிக் கொண்டே வந்தாள் புஷ்பலதா.

''இருக்கீங்கம்மா! நீங்களெல்லாம் இருக்கீங்க. இருந் தாலும் அவ நினைப்பு வந்துடுது'' என்றார்.

அதற்குள்ளாக கைலாசம் அங்கே வந்தவர் சற்று நேரம் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். பிறகு கொஞ்சம் வெளியே போக வேண்டியதிருக்கு. நான் போயிட்டு வந்தர்றேன்'' என்று கிளம்பினார்.

சாருசித்ராவும் "தாத்தா! நான் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துக்கலாம்னு பார்க்கறேன்" என்றாள்.

"போடா, போய் ரெஸ்ட் எடுத்துக்கோ!" என்றார்.

"ஆமாம் தாத்தா. அடுத்த வாரத்தில் இருந்து வேலைக்கு போகப் போறேன். அதனால அஞ்சாறு நாளைக்கு நினைச்சப்ப தூங்கி நினைச்சப்ப சாப்பிட்டு அப்படி இருக்கப் போறேன்"

"செய்ம்மா செய்!" என்று சிரித்தார்.

அவளும் தன்னுடைய அறைக்குப் போய் விட்டாள்.

கலைஞானம் புஷ்பலதாவிடம் "இப்படி உட்கா ரேன்ம்மா!" என்றார்.

அவள் எதிரிலே அமர்ந்தாள்.

திரும்பத் திரும்ப புஷ்பலதாவினுடைய முகத்தைப் பார்த்தார். தலையைக் குனிந்து கொண்டார்.

"என்ன சித்தப்பா? ஏதோ சொல்லணும்னு நினைக்கறீங்க போல இருக்கு!" என்றாள்.

"ஆமாம்மா, நிஜமாவே உங்கிட்ட சீரியஸா ஒரு விஷயம் பேசலாம்னு நினைக்கிறேன். ஆனா நீ எப்படி எடுத்துப்பேன்னு எனக்கு தெரியலை" என்றார்.

உடனே புஷ்பலதா வாயில் கையை வைத்து காட்டி விட்டு "சாரு தூங்கிட்டு இருக்கா. நாம அப்படிப் பேசலாம் வாங்க!" என்று வெளியே இருந்த தோட்டத்துப் பக்கம் போனார்கள். அவர்கள் வீட்டுக்கு முன்னால் இருந்த பெரிய இடத்திலே இருந்த ஒரு மாமரத்தின் கீழே இரண்டு பேரும் சேரை போட்டுக் கொண்டு அமர்ந்தார்கள்.



அதே நேரத்தில் தன்னுடைய அறையில் இருந்து எட்டிப் பார்த்த சாருசித்ரா இவர்கள் இரண்டு பேரும் கையை ஆட்டி ஆட்டி ஏதோ விவாதம் செய்து கொள்ளுவதைப் பார்த்து விட்டு புன்னகைத்துக் கொண்டாள்.

'சித்தப்பாவும் மகளும் என்னத்தை அப்படிப் பேசறாங் களோ!' என்று எண்ணிக்கொண்டு தன்னுடைய படுக்கை யிலே படுத்து விட்டாள்.

அவர்கள் மும்முரமாக அங்கே பேசிக் கொண்டிருந் தார்கள்.

"சித்தப்பா, எனக்கு என்னமோ பயமா இருக்கு!" என்றாள்.

"இல்லைம்மா, நீ நல்லா யோசிச்சுப் பாரு எவ்வளவு சொத்து கிடக்குது. அது எதுக்கு யாருக்கோ போகணும்?" என்றார் கலைஞானம்.

"சொத்து மட்டுமே வாழ்க்கை ஆயிடுமா சித்தப்பா? மத்ததையும் பார்க்கணும் இல்லே?" என்றாள் புஷ்பலதா.

"மத்ததெல்லாம் கண்டிப்பா பார்க்கறதுக்கு உம் மகளால முடியும்மா. பார்த்தியில்லே? கொஞ்ச நேரத்துக்கு முன்னே அந்தக் குழந்தை தொப்புன்னு விழுந்தது. வேற யாராவது இருந்தா அந்தக் குழந்தையை அழ விட்டுட்டு அப்புறம் சமாதானம் பண்ணியிருப்பாங்க. உம் பொண்ணு எவ்வளவு அழகா ஹேண்டில் பண்ணினா பார்த்தியா. அதைப் பார்த்த உடனே தான் எனக்கு நம்ம நினைப்பு கரெக்ட்தான். இவதான் சரியான ஆளு அப்படின்னு தோணுது!" என்றார்.

புஷ்பலதா நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

"ஏம்மா, நான் எல்லாப் பிரச்சினையையும் சொல்லிக் கேட்கறேன். இப்ப நீங்களே ஏதோ ஒரு மாப்பிள்ளையைப் பார்க்கறீங்கன்னு வை. அந்த மாப்பிள்ளை நிலவரம் என்ன ஏதுன்னு தெரியாம உள்ற போய் மாட்டினா எப்படி இருக்கும் நீ யோசிச்சு பாரு!"

அதை நினைக்கும் போதே புஷ்பலதாவுக்கு வயிற்றைப் பிசைந்தது.

"ஆமா, சித்தப்பா இன்னைக்கு உலகத்துல வெளியே பார்த்தா பெரிய பந்தாவா இருக்கு. உள்ளே போனா எல்லாமே சொத்தை அப்படிங்கற மாதிரி யெல்லாம் ஆயிடறது. என் ஃப்ரெண்டோட ஒரு பொண்ணுக்குக் கூட அப்படி ஆச்சு. அதனால தான் நானும் ரொம்ப பயந்து போய்த்தான் இருக்கேன். நல்ல மாப்பிள்ளையா பிடிக்கணுமே அப்படின்னு" என்றாள்.

"நீ வந்து இவனைப் பத்தி ஏதாவது குறை சொல்ல முடியுமா? எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாது அவ்வளவு ஒரு உத்தமன். ஆனா இந்த ஒரு பிரச்சினைதான்" என்றார்.

புஷ்பலதா "இது ஒண்ணு போதாதா?" என்றாள்.

"ஆமா, ஆனா ஒண்ணு! பெரிய பிரச்சினைதான்ம்மா ஆனா அதை மட்டும் எப்படியாவது தீர்த்துட்டா...!" என்று இரண்டு பேருக்கும் வாக்கு வாதம் சற்று நேரம் நடந்தது.

அதற்குப் பிறகு புஷ்பலதா ஒரு வழியாக "சரிங்க, சித்தப்பா நான் அவருகிட்டயும் பேசறேன்" என்றாள்.

"நான் அவருகிட்ட பேசியாச்சு. அவருகிட்ட சம்மதம் வாங்கிட்டுத்தான் உன் கிட்ட பேசறேன்" என்றவுடன் புஷ்பலதா அதிர்ந்து போனாள்.



"சரின்னு சொன்னாரா அவரு?" என்றாள்.

"உனக்கு சரின்னா சரின்னு சொன்னாரு. நான் உனக்குத்தானே சித்தப்பா? மகள் உன் மகளாச்சே? புஷ்பலதாவுக்கு சரின்னா எனக்கும் சரிதான் அப்படின்னு சொல்லிட்டாரு"

"அப்படின்னா அப்ப நாம சாரு கிட்ட எல்லாத்தையும்..." என்று இழுக்க...

"வேண்டவே வேண்டாம் அந்தத் தப்பை மட்டும் செய்யவே கூடாது. சாருவுக்கு புதுசா அங்க போய் தெரியணும். ஆனா அவள் எல்லாத்தையும் சமாளிச்சிருவா. உனக்கு உன் பொண்ணைப் பத்தித் தெரியலை. எனக்கு உன் பொண்ணைப் பத்தித் தெரியும்" என்றார்.

புஷ்பலதா சிரித்தாள்.

"ஆமாம்மா நீ ஒரு தாயாய் இருந்து பார்க்கறே?. அவளை ஒரு சின்னக் குழந்தையாத்தான் பார்த்திட்டிருக்கே. ஆனா, படிப்புல எவ்வளவு கெட்டிக்காரியா இருக்கா! விஷயங்களையும் எப்படி அவ ஹேண்டில் பண்றா அப்படிங்கறதை நானும் உங்க அப்பாவும் புரிஞ்சுட்டுஇருக்கோம். ரொம்ப போல்ட்ம்மா உன் பொண்ணு" என்றார் கலைஞானம்.

"அது என்னமோ நிஜம்தான். வந்த பிரச்சினையை ஒரு கை பார்த்துருவா. ஆனா தானா எந்தப் பிரச்சினைக்கும் போகமாட்டா. அதெல்லாம் சரிதான் சித்தப்பா! வாழ்க்கையாச்சே!" என்றாள் புஷ்பலதா.

"அம்மா! நான் உங்கிட்டே கையேந்தி பிச்சை கேட்கிறேன்னு நினைக்கக்கூடாதா?" என்றார் கலைஞானம்.

புஷ்பலதா அதிர்ந்து போனாள்.

கோயம்புத்தாரின் மிகப் பெரிய கோடீஸ்வரர்களில் ஒருவர் தன்னிடம் கையேந்தி நிற்பதா என்று எண்ணினாள்.

உடனே ''ஐயய்யோ! என்ன சித்தப்பா நீங்க! சரிங்க சித்தப்பா, நீங்க கவலைப் படாதிங்க நான் பார்த்துக் கறேன்''என்றாள்.

அதற்குப் பிறகு இரண்டு மூன்று நாட்களிலேயே தன் மகளிடம் சொன்னாள்.

''இதோ பாருடி, அடுத்த வாரம் உன்னைப் பொண்ணு பார்க்க வரப் போறாங்க!'' என்றாள்.

''பொண்ணு பார்க்கவா? யாரு?!'' என்றாள்.

''கலைஞானம் தாத்தாவோட பேரன். பெரிய கோடீஸ்வரங்க தெரியுமா?'' என்றாள்.

''கோடீஸ்வரங்கன்றதெல்லாம் அந்தப் பக்கம் இருக்கட்டும். மாப்பிள்ளை எனக்குப் பிடிக்கணும். அதான் முக்கியம்'' என்றாள் மகள்.

சாரு இன்னொரு நிபந்தனையும் போட்டாள்! புஷ்பலதா அதற்கும் ஒத்துக் கொண்டார்.

''சரிடி, பையன் வரப் போறான்ல. நீயே பாரு!'' என்றாள்.

வந்தவனைப் பார்த்ததும் சாருசித்ரா திகைத்துப் போய் விட்டாள்.

★ ★ ★



## அத்தியாயம் - 5

மூன்று மாதங்கள் கழிந்ததற்குப் பிறகுதான் பெண் பார்க்கும் படலம் என்று முடிவாக சொல்லி விட்டாள் சாருசித்ரா.

கலைஞானம் தாத்தாவுக்கு அதிலே ஏமாற்றம் தான். இருந்தாலும் பெண் பார்ப்பதற்கு ஒத்துக் கொண்டாளே என்கிற அளவிலே அவர் ஏற்றுக் கொண்டார்.

அந்த மூன்று மாதங்கள் முடிந்து இப்பொழுதுதான் பெண்பார்க்க வந்திருந்தார்கள்.

கலைஞானம் தாத்தா இடையிலே இரண்டு மூன்று முறை வந்திருந்தாலும் கூட அம்மாவிடம் தான் ஏதோ பேசிக் கொண்டிருப்பாரே ஒழிய இவளிடம் அமர்ந்து பேசவில்லை.

பேசினால் ஒரு ஐந்து நிமிடம் பத்து நிமிடம் என்று நலம் விசாரித்து விட்டு நகர்ந்தார். இவளுக்கும் உட்கார்ந்து அரட்டை அடிப்பதற்கு இப்பொழுது நேரமே இருக்க வில்லை.

அவள் புதிதாகச் சென்றிருந்த அலுவலகத்தைப் பற்றி புரிந்து கொள்ள வேண்டியிருந்தது. தன்னை நிரூபித்துக் கொள்ளவும் வேண்டியிருந்தது. அதனால் அவளுடைய வேலை நேரத்திற்குள்ளாக எவ்வளவு சிறப்பாக அவளால் செய்ய முடியுமோ அவ்வளவு சிறப்பாக செய்து இப்பொழுது அலுவலகத்திலும் கூட நல்ல பெயர் வாங்கி விட்டாள்.

''எதுக்கும் சாரு மேடத்தை ஒரு தடவை கேட்டுக்குங்க'' என்று எம்.டியே எல்லா விஷயங்களுக்கும் சொல்கிற அளவுக்கு அவள் இப்பொழுது வந்துவிட்டாள்.

மூன்றாம் மாதத்தில் ஒரு நாள் எம்.டி அவளை அழைத்தார். எம்.டி தீனதயாளன் அவர்கள் ஐம்பதுகளின் பிற்பகுதியில் இருந்தார்.

''சாரு மேடம்! உட்காருங்க'' என்றார்.

''பரவாயில்லை சார்!'' என்றாள்.

''இல்லையில்லை, உட்காருங்க!'' என்றார்.

அவள் நன்றி சொல்லி விட்டு எதிரிலே இருந்த சேரிலே அமர்ந்தாள்.

''மேடம், நீங்க கொடுத்த ஐடியாவால இந்த ஒரு கன்சைன்மென்ட் எக்ஸ்போர்ட்ல நமக்குப் பெரிய லாபம் வந்திருக்கு. இதுவரைக்கும் இந்த அலுவலகத்தில் இல்லாத ஒரு பழக்கம். அதுவும் நீங்க கொடுத்த ஐடியா தான். அறிமுகப்படுத்தியிருக்கிறேன். இதுக்கு ஒரு இன்சென்டிவ் தரேன். ஒன் டைம் இன்சென்டிவ்தான்'' என்றார்.

அவள் ''பரவாயில்லை சார்! நான் என் கடமையைத் தானே செய்தேன். எங்களுக்கு ஊதியம் கொடுக்கறீங்க. அதுக்கு மேல வரக்கூடிய லாப நஷ்டங்கள் உங்களோடது. இதுவே நஷ்டமா இருந்தா எங்கிட்ட ஷேர் பண்ணியிருப்பீங்களா?'' என்றாள்.

அவர் கடகடவென்று சிரித்தார். ''ரொம்ப எச்சரிக்கையாத்தான் பேசறம்மா'' என்றார்.

''இல்லை சார்,'' என்று அவளும் சிரித்து விட்டாள்.

''அப்படியெல்லாம் நஷ்டமாகிற அளவுக்கெல்லாம் இதுவரைக்கும் நமக்கு இல்லை. இருந்தாலும் உன்னோட ஐடியாஸ் ரொம்ப லேட்டஸ்ட்டா இருக்கறதனால நிறைய



நாம அச்சீவ் பண்ணி இருக்கோம். அதுக்கு உனக்கு ஏதாவது செய்யலைன்னா என் மனசு ஒத்துக்காதும்மா. நீ இதை ஏத்துக்கத்தான் வேணும்'' என்றார் அவர்.

''சரிங்க சார்! உங்க இஷ்டம்!'' என்றாள்.

உடனே அவர் ஐம்பதாயிரம் ரூபாய்க்கு ஒரு செக்கை நீட்டினார்.

அவள் அதை கையிலே வாங்கிப் பார்த்து விட்டு ''சார், இது கொஞ்சம் அதிகமில்லையோ?'' என்றாள்.

''ஏம்மா உன்னோட ஒன் மந்த் சாலரியை விட ஒரு டென் தவுஸன்ட் அதிகம் அவ்வளவுதானே?. வச்சுக் கோம்மா. நீ கல்யாணம் ஆகப் போற பொண்ணு. உனக்குப் பிடிக்கறதை வாங்கிக்கோ!'' என்றார்.

''தாங்க்யூ சார்!'' என்று எழுந்து வந்தாள்.

அந்த உற்சாகத்தில் அன்றைக்கு வீட்டுக்கு வந்தாள். அந்த உற்சாகத்தைப் பார்த்து விட்டு அம்மா மெதுவாக ''என்னடி? அச்சீவ் பண்ணனும்னு நெனைச்சே. அச்சீவ் பண்ணிட்டே யில்லே, சரி, இனி பொண்ணு பார்க்க வரச் சொல்ல லாமா?'' என்று கேட்டாள்.

சாருவே கலீரென்று சிரித்து விட்டாள்.

''அம்மா, நீ பயங்கரமான ஆளு!'' என்றாள்.

''ஏண்டி'' என்றாள் அம்மா சிரிப்புடன்.

''இல்லை. நேரம் பார்த்து கதவைத் தட்றே. சரி நான் இன்னைக்கு நான் ரொம்ப நல்ல மூட்ல இருக்கேன். கிராண்டட்!'' என்றாள்.

அம்மாவின் முகமும் உடனே மலர்ச்சியானது.

''ஏங்க, இவ பொண்ணு பார்க்கறதுக்கு ஒத்துக்கிட்டா!'' என்று சத்தம் போட்டாள்.

''என்னம்மா இது, ஏதோ பரீட்சையில பாஸாயிட்டேன் மாதிரி!'' என்று சிரித்தாள் மகள்.

''இல்லடி. இது நல்ல வரன். விட்ற வேண்டாம்னு பார்க்கறேன். அதுவும் கலைஞானம் தாத்தா. தெரிஞ்சவங்க நாளைக்கு எதுன்னாலும் ஒரு கேள்வி கேட்க முடியும்'' என்றாள்.

''போறதுக்கு முன்னாலயே கேள்வி கேட்கறதைப் பத்தியெல்லாம் சொல்லிக்கிட்டிருக்கியா நீ?'' என்றபடியே வந்தார் கைலாசம்.

''இல்லைங்க. தாத்தா அவ்வளவு தூரம் சொல்றாரு. அவளோட நல்ல வாழ்க்கைக்கு நான் பொறுப்புன் னெல்லாம் சொல்றாரு. அப்புறம் நாளைக்கு எதுவும் பிரச்சினை, பிரச்சினை வராதுன்னு நினைச்சுப்போம். பிரச்சினை வந்தா கூட நீங்க அன்னைக்கு சொன்னீங்களே அப்படின்னு கேட்கலாமில்லே?'' என்றாள் புஷ்பலதா.

கைலாசம் சிரித்தார்.

''தாய் மனசும்மா! சேஃப் கார்ட் பண்ணிக்கணும்னு பார்க்கறா!'' என்றார்.

அவளும் நெகிழ்ந்து போனாள்.

அந்த நெகிழ்ச்சியில்தான் அவள் ஒத்துக் கொண்டாள்.

''அம்மா! ஆனா ஒரு கண்டிஷன்!'' என்றாள்

''என்னம்மா?'' என்றார் அப்பா.

''உடனே கல்யாணமெல்லாம் பேசக்கூடாது. ஒரு வேளை எனக்கு மாப்பிள்ளை பிடிச்சதுன்னா சிக்ஸ் மந்த்ஸ்



கழிச்சுதான் மேரேஜ். ஐ வாண்ட் டு என்ஜாய் லைஃப் திஸ் வே ஃபார் சம் டைம்'' என்றாள்.

''சரிம்மா சரி!'' என்று இரண்டு பேரும் ஒத்துக் கொண்டார்கள்.

''சரி, நான் கலைஞானம் தாத்தாவை வரச் சொல்லட்டா,'' என்று கேட்டாள் புஷ்பலதா.

''வரச் சொல்லு, ம், இன்னொரு கண்டிஷன்'' என்றாள் அவள்.

''என்னம்மா?'' என்றாள் அவள் மறுபடியும்.

''மாப்பிள்ளையை முன்னாடி வச்சுகிட்டு மாப்பிள்ளை பிடிச்சிருக்கான்னெல்லாம் கேட்கக் கூடாது. புரியுதா, மாப்பிள்ளை வந்துட்டுப் போனதுக்கப்புறம் எனக்கு ஒரு ஒன் வீக் டைம் தரணும். அப்புறம் நல்லா அனலைஸ் பண்ணிட்டுத்தான் என்னோட சம்மதத்தைச் சொல்லுவேன்'' என்றாள்.

புஷ்பலதா உடனே கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு கணவரைப் பார்த்து சிரித்தார்.

''ஏங்க, இவளைப் பார்த்தீங்களா? நான் அந்தக் காலத்துல பி.ஏ. முடிச்சிருந்தேன்தான். பெரிய படிச்ச பொண்ணுன்னுதான் எங்க ஃபேமிலில பேரு. ஆனா என்னைக் கூட ரெண்டு நாள் கழிச்சு பேருக்குத்தான் புடிச்சிருக்கான்னு கேட்டாங்க.நான் பிடிக்கலைன்னு சொன்னாலும் இந்த மாப்பிள்ளை நல்ல மாப்பிள்ளை தான்னுதான் தலையில கட்டியிருப்பாங்க. இவளுக் கெல்லாம் பார்த்தீங்களா?'' என்றாள்.

கைலாசம் சிரித்தார்.

''நாங்க சொல்லிட்டோமில்லே பார்த்த உடனே பிடிச்சிருச்சுருச்சுன்னு. அதனால எங்கே நீ வேண்டாம்னு சொல்லிடுவியோன்னு பயத்துல புரொஸீட் பண்ணிட்டு மெதுவாக உன்னைக் கேட்டிருப்பாங்க!'' என்றார் கைலாசம்.

''ஐயே போதுமே! ரொமான்ஸாக்கும்?'' என்றாள்.

''இரும்மா! கொஞ்ச நேரம் அப்பாவை பேச விடேம்மா! இதெல்லாம் அந்தக் காலத்துல எப்படியிருந்திருக்கும்? கொஞ்சம் நானும் சாம்பிள் பார்த்துப்பேனில்லே?'' என்றாள் மகள்.

இரண்டு பேரும் பார்வையை பரிமாறிக் கொண்டார்கள்.

அந்தப் பார்வைப் பரிமாற்றம் கூட இவளுக்கு இனிமையாக இருந்தது. இன்னமும் அன்னியோன்யமாக இருக்கிற அப்பா, அம்மா!

சண்டை வரும். சண்டை வந்தால் கசகசவென்று சத்தம் போட்டுப் பார்த்ததே கிடையாது.

திடீரென்று இரண்டு பேரும் இரண்டு நாட்கள் முகத்தைத் தூக்கிக் கொண்டு அலைந்து கொண்டிருப்பார்கள்.

மூன்றாவது நாள் மெதுவாக பேச ஆரம்பிப்பார்கள். நான்காவது நாள் பழைய நிலைமை திரும்பி விடும்.

குழந்தைகளுக்கு அது புரியக் கூட செய்யாது. இப்பொழுது வேண்டுமானால் கொஞ்சம் கொஞ்சம் புரிகிறது. அதை நினைத்துக் கொண்டு சாருசித்ரா சிரித்துக் கொண்டாள்.

''அப்பா மாப்பிள்ளை என்னப்பா பண்றாரு?'' என்று கேட்டாள்.



''பரவாயில்லையே இப்பவாவது கேட்கறியே?'' என்றாள் புஷ்பலதா.

''ஆமாம்மா, அந்த ஸ்டேஜ் வரும்போதுதானே கேட்கணும்?'' என்றாள்.

''பெரிய எக்ஸ்போர்ட் கம்பெனி வச்சு நடத்தறாரு. ரொம்ப கெட்டிக்காரர்ம்மா. இருபத்தெட்டு வயசுங்கறாங்க. இப்ப உனக்கு ஒரு இருபத்து மூணு நடக்குது. ஃபோர் ஆர் ஃபைவ் இயர்ஸ் டிஃபரன்ஸ். ரொம்ப ரைட் டிஃபரன்ஸ்னு நான் நினைக்கிறேன்'' என்றார் அப்பா.

அவள் ஒன்றும் சொல்ல வில்லை.

''கெட்டிக்காரர்ம்மா! நீ இவரை லேசா நினைச்சுக்காதே! நம்ம கலைஞானம் தாத்தாவையும்தான். கோயம்புத்தூர்ல ஒன் ஆஃப் த பெஸ்ட் க்ரோரியன்ஸ்மா அவரு. ரெண்டு மூணு மில்லு. இப்ப மில்லெல்லாம் கொஞ்சம் டல்லா இருக்கு. இருந்தாலும் வேற வகையில எக்ஸ்போர்ட்ஸ்ல ரொம்ப கான்சன்ட்ரேட் பண்ணி பெரிய அளவில பண்ணிட்டு இருக்காரும்மா!'' என்றார்.

''ஓஹோ!'' என்றாள் அவள்.

''ஆனா ஒரே ஒரு விஷயம்,'' என்று மனைவியைப் பார்த்தார்.

மனைவி கண்ணைக் காட்டினாள். ''இல்லை, புஷ்பா சொல்லிடறதுதான் நல்லது!'' என்றார் அவர்.

''சொல்லுங்கப்பா!'' என்றாள் இவள்.

''வேற ஒண்ணும் இல்லைம்மா. இந்த கலைஞானம் தாத்தாவோட மகள் வயித்துப் பேரன் இவரு-அவருக்கு மகன் கிடையாது. இவருதான் எல்லாத்துக்கும் வாரிசு.

ஆனால் இவரோட சித்தி பசங்க ரெண்டு பேரைத் தன்னோட பொறுப்புல இவரு வளர்க்கறாரு. யார் பொறுப்புலன்னா மாப்பிள்ளை பொறுப்புல'' என்று குழந்தைக்கு சொல்லுவது போல விளக்கினார் கைலாசம்.

''ஓஹோ!'' என்றாள் இவள்.

''அது கலைஞானம் தாத்தாவுக்கு அவ்வளவா பிடிக்கறது இல்லை!'' என்று தொடர்ந்தாள் புஷ்பலதா.

ஆமா, மாப்பிள்ளை கிட்டே அதைப் பத்தி நீ எந்த எதிர்ப்பு தெரிவிச்சாலும் அவருக்கு பிடிக்காது. அதனால அதை நீ டாலரேட் தான் பண்ணிக்கணும்!'' என்றாள்.

''ஓஹோ!'' என்று உள் வாங்கிக் கொண்டாள் சாரு.

''இது ஒண்ணுதாம்மா எனக்குத் தெரிஞ்சு அங்கே இருக்கிற பிரச்சினை. தாத்தாவுக்குப் பிடிக்காத விஷயம். ஆனால் மாப்பிள்ளைக்குப் பிடிச்சவிஷயம். இதை நீ பார்த்து டாக்கிள் பண்ணிக்கிட்டு போய்க்கணும்!'' என்றார் அப்பா.

''சரிங்கப்பா, நான் பார்த்துக்கறேன்!'' என்றாள் சாருசித்ரா.

உடனே அப்பாவுக்கும் அம்மாவுக்கும் முகம் மலர்ந்தது.

அதைப் பார்த்த உடனே மகள் எச்சரிக்கையாக மறுபடியும் சொன்னாள். ''அப்பா! ரெண்டு பேரும் என்னமோ நான் சரின்னு சொல்லிட்ட மாதிரி முடிவு பண்ணிக்காதீங்க. இந்த மாப்பிள்ளை பிடிச்சிருந்தா, இந்த அலையன்ஸ் ஓர்க் அவுட் ஆனா நான் இந்த விஷயத்தை ஹேண்டில் பண்ணிக்கிறேன்'' என்றாள்.

''அம்மா, நீ எம்.பி.ஏங்கறதை கரெக்டா காட்டிட றேம்மா!'' என்றார் கைலாசம்.



''ஆமாப்பா, என்னென்ன வரப் போகுதுன்னு தெளிவாப் பார்த்து முன் கூட்டியே திட்டம் போட்டுட்டாத்தானே நல்லது?''

இவ்வளவு தூரம் பேசிவிட்டுத்தான் இந்தப் பெண் பார்க்கும் படலத்துக்கு ஒத்துக் கொண்டிருந்தாள்.

ஆனால் வந்திருந்த மாப்பிள்ளையைப் பார்த்த உடனே கொஞ்சம் திகைத்துத் தான் போனாள்.

இந்த மூன்று மாதப் பழக்கத்தில் பழைய தோழிகளை யெல்லாம் தொடர்பு கொண்டாள். நசீமாவும், ரோகிணியும் திருமணமாகிப் போய் விட்டார்கள்.

நசீமா கல்யாணம் செய்து கொண்டு பாம்பே போய் விட்டாள். ரோகிணி சேலத்தில் இருந்தாள்.

ரெஜினா மேரியும், அஞ்சுவும்தான் உள்ளூரில் இருந் தார்கள். இவள் தொடர்புக்கு வந்தவுடனே அவர்களும் மிக மகிழ்ச்சியாகத் தொடர்பு கொண்டார்கள்.

இந்தப் பெண் பார்க்கும் படலத்திற்கு அவர்களும் வந்திருந்தார்கள்.

ரெஜினாவுக்கும் திருமணமாகியிருந்தது. அஞ்சுவுக்கு திருமணம் முடிவாகியிருந்தது. மீண்டும் தோழிகள் சந்தித்துக் கொண்டு அளவளாவிக் கொண்டு அந்த மகிழ்ச்சி யோடு இருந்த நிலையில் பெண் பார்க்கும் படலத்திற்கு துவக்கப் புள்ளியாக கார் வந்து நின்றது. காரில் இருந்து தாத்தா முதலில் இறங்கினார்.

பாட்டி அதைத் தொடர்ந்து இறங்கினார்.

பின்னாலே இறங்கிய அந்த இளைஞனின் முதுகுப் புறத்தை மட்டும்தான் இவளால் தன்னுடைய அறையில் இருந்துபார்க்க முடிந்தது.

சட்டென்று உள்ளே வந்து அமர்ந்து கொண்டான். ஜன்னல் வழியாக பார்ப்பது தெரிந்து அவன் திரும்பிப் பார்த்து... ''வேண்டாம்..! உடனே அவர்கள் அண்ணலும் நோக்கினாள்! அவளும் நோக்கினாள்!'' என்று ஆரம்பித்து விடுவார்கள் என்று எண்ணிக் கொண்டவளாக மீண்டும் தன்னுடைய படுக்கையில் திரும்பி அமர்ந்து கொண்டாள்.

''ஏய், மாப்பிள்ளை வந்தாச்சு! இன்னொரு தடவை லைட்டா டச்சப் பண்ணிக்கலாமா?'' என்றாள் அஞ்சு.

''போதும்டி, இது போதும், மினிமம் மேக்கப் தான் நல்லது. ஓவர் மேக்கப் இருக்கக் கூடாது. வீட்ல என்ன? எப்பவும் மேக்கப் போட்டுட்டேவா இருக்கோம்,. நாம எப்படி இருக்கிறோமோ அப்படியே அவங்க பார்க் கட்டும்டி'' என்றாள் சாரு.

''ஏண்டி, மூணு வருஷம் சென்னையில போய் இருந்தே? அப்பக் கூட மாற மாட்டியா? இப்படியேதான் இருப்பியா?'' என்றாள்.

''இங்க பார், அடிப்படைக் குணம் மாறாது. சென்னைக்கு நான் போனது படிக்க. அறிவை வளர்த்துக்க. அவ்வளவு தான்!'' என்றாள் சாரு.

''சரிடி, நான் போய் அம்மாவுக்கு ஹெல்ப் பண்ணிட்டு வரேன்'' என்று ஓடினாள் ரெஜினா மேரி.

புஷ்பலதா அங்கே பரிதவித்துக் கொண்டிருந்தாள்.

உறவுக்காரர்களும் இரண்டு மூன்று பேர் வந்திருந்தார்கள்.

ரெஜினா மேரி சட்டென்று அங்கே வந்திருந்தவர் களுக்குக் கொடுக்க வேண்டிய டிஃபன் வகையறாக்களை சிறிய சிறிய தட்டுக்களில் எடுத்து வைத்து அடுக்கினாள்.



உறவுக்காரப் பெண்ணொருத்தி ''காஃபி போடட்டுமா? டீ போடட்டுமா?'' என்று வந்து கேட்டாள்.

''இரும்மா, முதல்ல அவங்க வரட்டும். அப்புறம் அவங் களுக்கு யாருக்கு என்ன பிடிக்குதோ அதைப் போட்டு வோம்'' என்றாள் புஷ்பலதா.

''சரிக்கா, நீ எதுக்கு டென்ஷனாகிறே?'' என்றாள் உறவுக்காரப் பெண்மணி.

''இல்லை, பயமாயிருக்கு. இந்த இடம் தகைஞ்சுட்டா பரவாயில்லை'' என்றுபுஷ்பலதா தடுமாற அந்த உறவுக் காரப் பெண்மணி சிரித்தாள்.

''அக்கா, சாருசித்ரா முகத்தைப் பார்த்தாலே வர மாப்பிள்ளைக்கு பிடிச்சுப் போகும். எவ்வளவு திருத்தமா இருக்கா?. மாநிறத்துக்கு மேல இருக்கா. இதுக்கு மேல என்ன?'' என்றாள்.

''சரி, அதெல்லாம் கரெக்ட்தான்'' என்று தேற்றிக் கொண்ட புஷ்பலதா தயாராகிக் கொண்டாள்.

அதே நேரத்தில் சாருசித்ராவும் அழைக்கப்பட்டாள்.

சாருசித்ரா வெளியே வந்தாள். ''சாரு! நீயே இந்த டிஃபனெல்லாம் கொண்டு போறியா?'' என்றாள்.

''அம்மா, என்னம்மா இது? இந்தப் பழைய காலத்து டிரெடிஷன் எல்லாம். அப்புறம் படத்துல வர மாதிரி பாட் டெல்லாம் பாடச் சொல்லுவீங்க'' என்றாள் சாருசித்ரா.

''இல்லடி, ஏதாவது கொண்டு போ. சும்மா போறதுக்கு ஏதாவது கையில தட்டை வச்சுட்டுப் போறது நல்லாயிருக்கு மில்லே?'' என்றாள்.

"மொதல்ல அறிமுகப்படுத்துங்க. அப்புறம் எடுத்துட்டுப் போறேன்" என்றாள் சாருசித்ரா. அதே போல அவள் ஹாலுக்கு வரவும் தாத்தா, "வாம்மா! வாம்மா! உட்காரு. இங்கே பக்கத்துல உட்காரு" என்றார்.

அப்போதும் கூட அவள் அவனை நிமிர்ந்து பார்க்க வில்லை.

கொஞ்சம் தயக்கத்துடன் போய் அமர்ந்தாள். அலுவலகத்தில் பல ஆண்களுடன் பழகியிருந்தாலும். இந்த ஒரு எண்ணப் போக்கோடு பழகியவள் இல்லை என்பதால் சட்டென்று அவனை நிமிர்ந்து பார்க்க அவளுடைய மனம் இடங்கொடுக்க வில்லை.

தாத்தாவின் அருகில் போய் அமர்ந்து கொண்டாள்.

எதிர்சோஃபாவில்தான் மாப்பிள்ளை அமர்ந்து கொண்டிருந்தான் என்பது நன்றாகத் தெரிந்தது.

"பார்த்துக்கம்மா, இதுதான் என் பேரன் மிஸ்டர் வெற்றிவேல்!" என்று அறிமுகப்படுத்தினார் தாத்தா.

அவள் மெல்ல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

வெற்றி வேல் முகத்தில் எந்த விதமான உணர்ச்சியும் காட்டாமல் வணக்கம் என்று கை கூப்பினான்.

சாருலதா தன்னை அறியாமல் கை கூப்பினாள். ஒரு நிமிடம் அவன் அறியாமல் அவனைக் கூர்ந்து பார்த்தாள்.

சட்டென்று புரிந்தது.

'பல நாட்களுக்கு முன்பாக மாலில் பார்த்தோமே அந்த மனிதர் அல்லவா இவர். கூட இரண்டு பையன்களோடு வந்திருந்தாரே, என்ற எண்ணம் தோன்றியது.



சற்றே திகைத்துப் போனாள்!

அவனுக்கு அடையாளம் தெரிந்ததோ என்னவோ லேசான ஒரு மின்னல் கண்ணில்வந்து போனது.

இப்பொழுது ஒரே ஒரு வித்தியாசம் இருந்தது. இப்போது உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் இறுக்கமாக அமர்ந்து கொண்டிருந்தான் வெற்றிவேல்.

அவனும் கொஞ்சம் திகைத்துத்தான் போய் அமர்ந்திருந் தான்!

## அத்தியாயம் - 6

ரெஜினா மேரியும் அஞ்சுவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பெண் பார்க்கும் படலம் முடிவடைந்தது. வெற்றிவேல் குடும்பத்தினர் கூட கிளம்பிப் போய் விட்டார்கள்.

ரெஜினாவும் அஞ்சுவும் சற்று நேரம் இருந்து விட்டுக் கிளம்பலாம் என்று இருந்தார்கள்.

"புறப்படுகிற நேரத்தில் புஷ்பலதாதான் சொந்தக்காரங்க ளெல்லாம் அவசரமா கிளம்பிப் போயிட்டாங்க. நீங்களாவது இரண்டு பேர் கொஞ்ச நேரம் இருக்கக் கூடாதா?" என்று அன்புடன் கேட்டுக் கொண்டாள்.

அதனால்தான் அவர்களும் சற்று நேரம் இருந்தார்கள்.

அம்மாவும் அப்பாவும் அந்தப் பக்கம் போனதற்குப் பிறகு அஞ்சு மெல்ல சாருசித்ராவிடம் "ஏன் சாரு? இவரை எங்கோ பார்த்த மாதிரி இருக்கில்லே.?," என்றாள்.

சாருவுக்கு பழைய ஞாபகம் வந்தது.

அஞ்சுவைப் பார்த்து புன்னகைத்தாள்.

"பார்த்திருப்போம்!" என்றாள்.

"எங்கேடி?" என்று கேட்கக் கேட்க அவளுக்கு நினைவு வந்துவிட்டது.

"ஓ! ஒரு தடவை மாலில் பார்த்தோமே? பார்த்ததுக்கு அப்புறம் கூட அவர் ஏதோ ரொம்ப ஹார்ஷா என்னமோ சொல்லிட்டாரு இல்லை? என்னமோ கோபமா பார்த் தாரோ?" என்று நினைவுபடுத்திக் கொள்ள முயன்றாள்.

ரெஜினாவுக்கு முழுமையாக நினைவு வந்து விட்டது. "ஆமாடி, நீ கூட அழுன்னு அழுன்னு அழுதியே?" என்றாள்.

சாருசித்ரா சிரித்தாள்.

"அது அந்த ஏஜ்டி. அது என்னமோ அவரு கோபமா பார்த்துட்டுப்போன மாதிரி இருந்தது. அதனால அழுதேன்" என்றாள்.

"இப்பவானா அழமாட்டியில்லே?" என்று சிரித்தார்கள் தோழிகள்.

"இப்பவா நேரா போய் ஏன்யா இப்படிப் பார்க் கறேன்னு கேட்க மாட்டேன்?".

"அது இருக்கட்டும். இப்ப நேரா உன்னைப் பொண்ணு பார்க்கறதுக்கே வந்துட்டாரே! இனிமேல் என்ன பண்றது?" என்று கேலியில் இறங்கினார்கள் இருவரும்.

"அதான் ஒரு வாரம் டைம் கேட்டிருக்கேனே? யோசிச்சு முடிவு பண்ணிக்கலாம்" என்றாள் சாருசித்ரா.

ரெஜினாவும் அஞ்சுவும் ஒருவரை ஒருவர் கலவரமாகப் பார்த்துக் கொண்டார்கள்.



"ஏய், அந்த விஷயத்தையெல்லாம் நினைச்சுக்கிட்டு வேண்டாம்னு சொல்லிடாதேடி. அது அப்ப!. நாம சின்னக் குழந்தைங்க. ஒரு விவரம் இல்லாத வயசு. அவருக்கும் அந்த ஏஜ்ல பக்குவம் இருந்திருக்காது. இப்பப் பாரு எவ்வளவு அழுத்தமா உட்கார்ந்திட்டிருக்காரு மனுஷன்.நல்ல பர்சனா லிட்டி. குடும்பமும் நல்ல குடும்பமா இருக்கு. எல்லா விதத் திலயும் இது நல்ல அலையன்ஸா இருக்கு. நீ எதையாவது சொல்லித் தட்டி விட்டுடாதடி" என்றாள் ரெஜினா,

அதற்குள்ளாக அஞ்சு "ஏய்! ரெண்டு பேரும் தனியா பேசினீங்களே? அப்ப என்ன சென்னாரு?" என்று கேட்டாள்.

சாருசித்ரா "அதை எதுக்குடி கேட்கறீங்க?" என்றாள்.

"ஏன்? ஏதாவது ரொமாண்டிக்கா பேசினாரா? அப்படின்னா வேண்டாம்பா!" என்றாள் ரெஜினா.

"அப்படியெல்லாம் ஒண்ணும் பேசலை." என்று சொல்லி விட்டு மீண்டும் தன்னோடு தனியாக அவன் பேசிய கட்டத்தை நினைவு கூர்ந்தாள்.

தாத்தாவிடம் "பொண்ணுகிட்ட தனியா பேசணும்!" என்று முணுமுணுப்பாக சொன்னான் போலும்.

கலைஞானம் கைலாசத்தை தனியாக அழைத்துக் கொண்டு போய் "பேசணுங்கறானேப்பா?" என்றார்.

"அதனால என்ன? பேசட்டும் பேசட்டும். இந்தக் காலத்துல பிள்ளைங்க பசங்க பழகிக்கறாங்களா இல்லையா. எல்லாம் வெளிய போகுதுக. வருதுக, வேலை செய்யுதுக அதனால என்ன பேசட்டும்!" என்றார்.

கலைஞானம் கூட இதை எதிர்பார்க்கவில்லை.

சாருசித்ராவிடம் புஷ்பலதா ''ஏய், உன்கிட்ட பேசணுங் கறாங்டி!'' என்றாள்.

எங்கே அவள் முடியாது என்று சொல்லி விடுவாளோ என்று அவளுக்குப் பயம்.

''அப்படியா?'' என்று ஒரு நிமிடம் யோசித்த சாருசித்ரா ''சரிம்மா பேசலாம். ஒண்ணும் பிரச்சினை இல்லை'' என்றாள்.

''ஏண்டி, அந்த ரூமுக்குப் போயிடறீங்களா?'' என்று கை காட்டினாள். முன்னாலே கைலாசத்தினுடைய அலுவலக அறையைப் போல ஒரு அறை இருந்தது.

அங்கே எதிர் எதிராக அமர்ந்து பேசிக் கொள்ள வசதியாக சோஃபா இருந்தது.

இவள் உள்ளே போய் நின்று கொண்டிருக்க சற்றுக் கழித்து அவன் உள்ளே வந்தான்.

''கொஞ்சம் பேசணும்'' என்றான்.

அவள் எதிரிலே அமருங்கள் என்பது போல கையை நீட்டிக் காட்டினான்.

அவன் அமர்ந்து கொண்டான். அவளும் எதிரே அமர்ந்து கொண்டாள்.

அங்கே வருகிற போது அவனுடைய கம்பீர நடையை அவளுடைய கண்கள் கணக்கெடுத்துக் கொண்டு விட்டது.

முகம் மட்டும் ஏன் இப்படி இறுக்கமாக இருக்கிறது? தொழில் சாம்ராஜ்யத்தை ஆளுகிறவர்கள் எல்லாம் இப்படித்தான் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொள்வார்



களோ என்று எண்ணிக் கொண்டாள். ஆனால் அவளுடைய எம்.டி தயாளன் மிகவும் சாந்தமாக இருக்கிறாரே. அவர் முகத்தில் எப்பொழுதும் ஒரு அமைதி இருக்கிறது என்று எண்ணிக் கொண்டு இவளும் எதிரிலே அமர்ந்தாள்.

''எங்க ஃபேமிலி பேக்கிரவுண்ட் பத்தியெல்லாம் தாத்தா சொல்லியிருப்பாருன்னு நினைக்கிறேன்'' என்றான்.

''அதெல்லாம் அம்மா அப்பா கேட்டிருப்பாங்க. அவங் களுக்குத் திருப்தியா இருந்தா சரிதான்!'' என்றாள் இவள்.

''ம், தாத்தா சௌகரியமா ஒரு விஷயத்தை மறைச்சிருப் பாரு!'' என்றான்.

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

ஒருகணம் இருவரது பார்வையும் மோதிக் கொண்டது.

அவள்தான் கொஞ்சம் திணறிப் போனாள்.

அவன் எந்த விதமான திணறலும் இல்லாமல் அவளிடம் தொடர்ந்தான்.

''எங்க சித்தி பசங்க ரெண்டு பேரும் என் பொறுப்பில் இருக்காங்க. ஒரு வேளை நீங்க வந்தாலும் அவங்க நம்ம வீட்ல தான் இருப்பாங்க. தாத்தாவுக்கு அவங்களைப் பிடிக்காது. எனக்குன்னு ஒரு வைஃப் வந்தா அவங்களை வெளியில அனுப்பிடணும் அப்படின்னு திட்டம் போட்டிருக்கறாரு. நான் அவங்களுக்காக பொறுப்பேத் துட்டிருக்கேன். அதில இருந்து நான் எக்காரணத்தைக் கொண்டும் பின்வாங்க முடியாது''

''ஓ!'' என்றாள் அவள்.

''அதுல எதுவும் ஆட்சேபணை இருக்குமா அப்படிங் கறதைப் பத்தி யோசிச்சுக்கலாம்'' என்றான்.

அவன் நீ வா போ என்று ஒருமையிலும் இல்லாமல் வாங்க போங்க என்பது போலும் இல்லாமல் பட்டும் படாமல் பேசுவதைக் கண்டு அவளுக்கு சிரிப்பாக இருந்தது.

அதற்கு "பரவாயில்லை. அதிலெல்லாம் நான் தலையிட மாட்டேன் இன் கேஸ் நான் அங்கே வந்தால்...!" என்றாள்.

அவன் முகத்தில் லேசாக ஒரு புன்னகை வெளியேவரத் துடித்தது. ஆனால் அவன் அதன் தலையை அமுத்தி உள்ளே இழுத்துக் கொண்டு விட்டான்.

கஷ்டப்பட்டு அவன் சிரிப்பை அடக்கிக் கொண்டது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. 'சிரிப்பதற்கு என்ன, இவ்வளவு ஏன் கஷ்டப்பட்டு இறுக்கமாக வைத்துக் கொள்ள வேண்டும்?" என்று எண்ணினாள்.

"இல்லை, இது நாளைக்கு ஒரு பிரச்சினையா வந்துரக் கூடாது. மற்றபடி எனக்கு எந்த எதிர்பார்ப்பும் இல்லை. இன்ஃபாக்ட் எனக்குத் திருமண பந்தத்திலே ஒரு பெரிய இன்ட்ரஸ்ட் இல்லை. ஆனா பெரியவங்க எல்லாரும் ரொம்ப விருப்பப் படறாங்க" என்றான்.

அவள் உடனே பெருமூச்சு விட்டு விட்டு "எனக்கும் அப்படித்தான். பெரிய அளவில இன்ட்ரஸ்ட் இல்லை. பெரியவங்க எல்லாரும்..." என்று இழுத்தாள்.

அவன் வியப்பாக அவளைப் பார்த்தான். அவள் அலட்சியமாகச் சொன்ன விதம் பார்த்து அவன் புருவம் ஒரு முறை ஏறி இறங்கியது.

"ஆமா, ஐ வாண்ட் டு அச்சீவ் சம்திங், ம் எனக்கும் ஒரு நிபந்தனை இருக்கு!" என்றாள்.



"சொல்லலாம்" என்றான் அவன்.

"நான் வேலைக்குத் தொடர்ந்து போகணும். என்னால வீட்ல ஃபுல்லா இருக்க முடியாது" என்றாள்.

"இல்லையே, அந்தக் கன்சர்னுக்குப் போக முடியுமான்னு தெரியலை" என்றான்.

"இல்லை, நான் ஒன் இயர் அக்ரிமெண்ட் போட்டிருக்கேன். போய்த்தான் ஆகணும்" என்றாள்.

"அது பார்த்துக்கலாம். அது ஒண்ணும் பிரச்சினை இல்லை. அங்கே போகலாம். இல்லேன்னா நம்ம கன்சர்னுக்கே வந்துடலாம்.நமக்கே எம்பிஏ ஆட்கள் தேவை இருக்கு" என்றான்.

"அது... அது... எப்படி?" என்று அவள் இழுக்க "இன்னும் சிக்ஸ் மந்த்ஸ் டைம் இருக்கு அதுக்குள்ள நைன் மந்த்ஸ் ஆயிடும். மிஸ்டர் தீனதயாளன் கிட்ட நான் பேசறேன்". கிட்டத்தட்ட முடிவாகி விட்டதைப் போல அவன் பேசுவதைப் பார்த்து அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

மெல்லத் தலையைக் குனிந்து விட்டு மறுபடியும் தலையை நிமிர்த்து அவனைப்பார்த்து விட்டு "நான் இன்னும் முடிவு சொல்லலை!" என்றாள்.

"முடிவு சொன்னதுக்கு அப்புறம்தான் இதெல்லாம். இப்ப நடந்த பேச்செல்லாம்." என்றான்.

எழுந்து "அப்ப சரி. மறுபடியும் சந்திக்கலாம்" என்று அறை வாசல் வரை போனவன் திரும்பி "எனக்கு ஓகே தான்!" என்று சொல்லி விட்டுப் போய்விட்டான்.

எனக்கு ஓகே தான் என்று அவன் சொன்ன அந்த வார்த்தைகள் அவளுக்குள் ஜில்லென்று இறங்கினாற் போல உணர்ந்தாள். ஆனாலும் கோபமும் பொத்துக் கொண்டு வந்தது. 'என்ன பெரிய அழுத்தமா பேசிட்டுப் போறது' என்று முணுமுணுத்துக் கொண்டாள்.

தோழிகளிடம் இப்பொழுது அதைப் பகிர்ந்து கொண்ட பொழுது அவர்கள் மேலுக்குச் சிரித்தாலும் அவளுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ரெஜினா தான் "ஏண்டி ரொம்ப ஸ்டிஃப்பா இருப் பாரோ? நீ எதைப் பார்த்தாலும் சிரிப்பே. இப்படி இருந்தா எப்படிடி?" என்றாள்.

உடனே அஞ்சு "ஏய், இப்படி இருக்கிற ஆளுதாண்டி ரொம்பவே வழிவாங்க பின்னாடி. அதெல்லாம் இவ பார்த்து சரி பண்ணிக்கலாம்.அதுக்குத்தான் ஓகேன்னு சொல்லிட்டு போயிட்டாரே!" என்றாள்.

"ஏண்டி, அதைக் கொஞ்சம் நளினமா சொல்லியிருக்கலா மில்லே. அந்த ஆளு!" என்றாள் ரெஜினா.

"ஏய், அந்த ஆளு கிந்த ஆளுன்னெல்லாம் சொல்லாதே. இவளுக்குக் கோபம் வந்துடப் போகுது!" என்று கேலி செய்தாள் அஞ்சு.

"இதப் பாருங்கடி. ஒன் வீக் டைம் எடுத்துட்டுத்தான் நான் சொல்வேன்.அதென்ன அப்படி, நான் ஓகேன்னா நீ ஒக்கேன்னு சொல்லணுங்கற மாதிரி அதிகாரம் பண்ணிட்டுப் போறது" என்றாள் சாருசித்ரா பொய்க் கோபத்துடன்.

"சரிடி. பிளஸ் பாயிண்ட்ஸெல்லாம் யோசிச்சுக்கோ" என்று அஞ்சு வரிசைப்படுத்தினாள். "பர்சனாலிட்டியா



இருக்காரு. நல்ல சொத்து இருக்கு. ரொம்ப கெட்டிக் காரர்ன்னு எல்லாரும் பேசிக்கிறாங்கடி. தாத்தா ஆரம்பிச்ச மில்லெல்லாம் போக இவரும் வேற ஒரு பெரிய கம்பெனி ரன் பண்ணிட்டிருக்காருன்னு சொன்னாங்க. உன்னோட எம்பிஏ-வுக்கும் அங்கே நிறைய வாய்ப்பு இருக்கு. யோசிச் சுக்கோ" என்றார்கள்.

சொல்லிவிட்டு அஞ்சு மெதுவான குரலில் சொல்லுவது போல "ஏய், சூப்பர் பர்சனாலிட்டிடி. நீங்க ரெண்டு பேரும் நின்னு பேசிட்டு இருக்கறதைப் பார்க்கவே அவ்வளவு பொருத்தமா இருந்தது. கோட்டை விட்டுடாதடி"என்றாள்.

"போடி, பெரிய பர்சனாலிட்டி! எப்பப் பாரு பர்சனா லிட்டி பர்சனாலிட்டின்னுட்டு" என்றாள் சாருசித்ரா.

"அதுவும் வேணும்டி!" என்றாள் ரெஜினா மேரி.

"என்ன ஆனாலும் சரிடி, ஒன் வீக் டைம்!" என்று மறுபடியும் அறிவிப்புச் செய்தாள் சாரு சித்ரா.

"சரி, நாங்க கிளம்பறோம். நேரம் ஆயிடுச்சு!" என்று இருவரும் கிளம்பினார்கள்.

அவர்கள் இரண்டு பேரும் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை இவளுக்கு போன் செய்தார்கள்.

சாருசித்ரா வேண்டும் என்றே "ஒன் வீக் டைம் இருக் கில்லே! சொல்லிக்கறேன்!" என்று சொல்லிக் கொண்டிருந் தாள். ஆனால், அவன் வந்து விட்டுப் போன அன்றைக்கே அவளுடைய மனம் ஒரு முடிவு எடுத்திருந்தது.

இப்பொழுதும் அந்த வெறுப்பான பார்வை உள்ளே ஒளிந்து கொண்டிருக்கிறதோ? இதுவரைக்கும் மறைத்துக்

கொள்ளத்தான் அவர் கற்றுக் கொண்டிருக்கிறாரோ?'' என்று தோன்றியது.

அன்றிரவு படுக்கையில் படுத்துக் கொண்டு புரண்டு கொண்டிருந்தாள்.

சற்றுக் கழித்து எழுந்து ஜன்னலைத் திறந்தாள்.

வெளியே நிலா வெளிச்சம்!

பனி போல படர்ந்திருந்தது!

பார்ப்பதற்கு மிக அழகாக இருந்தது.

இன்னும் ஓரிரண்டு நாட்களில் பௌர்ணமி போலும்!

அவள் அந்த நிலாவை ரசித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள்.

ஏனோ எல்லாமே ரம்மியமாக இருப்பது போல அவளுக்குத் தோன்றியது. ஆனால் ஆழ்மனது சொன்னது இவனோடு வாழ்க்கை நடத்துவது அவ்வளவு எளிதாக இருக்கப் போவதில்லை என்று.

சட்டென்று அவளுக்குள்அது தோன்றியது.

பிடிபட்டது!

கல்லூரியின் மூன்றாம் ஆண்டில் இருக்கிற காலத்தில் தானே அவனைப் பார்த்தது!

இந்த மூன்று ஆண்டுகளாக அவன் உருவம் தன் மனத்தில் இருந்து மறையவே இல்லை. அவ்வப் பொழுது தோன்றித் தோன்றி அவளை அவஸ்தைப்படுத்திக் கொண்டு தானே இருந்தது? இப்பொழுது முழுமையாகப் புரிந்தது!

அப்பொழுதே அவன் உருவம் தன் மனத்தில் பதிந்திருக்கிறது. இந்தப் புதியவனை முன் பின் பழக்கம் இல்லாதவனை தான் நேசிக்கிறோம் என்பது அவளுக்கு புரிந்தது.



அதிர்ந்து போனாள். திகைத்துப் போனாள். ஆனால், தன் மனத்துக்குள் இருக்கிறவனை இயற்கை எப்படிக் கொண்டு வந்து எதிரே நிறுத்தி இருக்கிறது?.

அப்படியானால் வாழ்க்கை அவளுக்கு ஏதோ சவால் வைக்கிறது. அது இயற்கையாக இருக்கட்டும், கடவுளாக இருக்கட்டும், ஏன் அவனாகவே இருக்கட்டுமே அந்த சவாலை ஏற்றுக் கொள்வது என்று அவள் முடிவு செய்தாள்.

இதயம் நிறைந்த காதலுடனும் அன்புடனும் அவள் அந்த திருமணத்திற்கு சம்மதம் வழங்கினாள்.

அந்தக் காதலும் அன்பும் அந்தப் பக்கம் இல்லை என்பதை முழுமையாகப் புரிந்து கொண்டே தன் சம்மதத்தை வழங்கினாள்.

## அத்தியாயம் - 7

ஏதற்கோ வெளியே வேலையாக வந்தாள் சாருசித்ரா.

அவள்கண்கள் அப்படி அகல விரிந்தன! அப்படி ஒரு காட்சியை அவள் கண்டாள்!

அவள் சகோதரன் ஸ்ரீநாத் வாயிலைத் தாண்டி மெல்ல அடி எடுத்து வைத்துக் கொண்டிருந்தான்.

''ஏய்! அண்ணா!'' என்று அவள் குரல் கொடுக்க ஆரம்பிக்க அவன் அங்கிருந்து ஒற்றை விரலை வாயில் வைத்து 'சத்தம் போடாதே' என்று சைகை காட்டினான்.

பிறகு அவள் அருகில் வந்து ''கார்ல வந்து இறங்கினா கூட தெரிஞ்சு போகும் அப்படின்னு நான் சைலண்டா சர்ப்ரைஸ் கொடுக்கணும்னு வந்திருக்கேன்'' என்றான்.

"சரிண்ணா! சரிண்ணா! ஏண்ணா ஒரு ஃபோன் பண்ணி சொல்லியிருக்கலாமில்லே?" என்றாள்.

"சொல்லியிருக்கலாம். இப்பப் பாரு மூச்சு முட்ட சந்தோஷப்படறீங்களே! இப்படி ஒரு சந்தோஷம் கொடுக்கலாம் அப்படின்னுதான் சஸ்பென்ஸா வந்தேன்"

அதற்குள் குரல் கேட்டு வெளியே வந்த அம்மாவும் அப்பாவும் "டேய் ஸ்ரீ!" என்று தங்கள் மகிழ்ச்சியை ஒட்டு மொத்தமாக வெளிப்படுத்தினார்கள்.

"அம்மா!" என்று ஓடிப் போய் கட்டிக் கொண்டான் ஸ்ரீ.

அப்பாவையும் அதே போல கட்டிக் கொண்டான்.

"ஏய்!, உனக்கு கல்யாணமா. ம் சின்னப் பிள்ளையா பாவாடை சட்டை போட்டு என் பின்னாடி சுத்திட்டு இருப்பே. அப்புறம் சுடிதார். இப்பக் கல்யாணம் பண்ணநிக்கறியா?" என்று அவன் தங்கையைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டான்.

"போண்ணா! நான் தான் இன்னும் ஒரு வருஷம் ரெண்டு வருஷம் போகட்டும்னு சொன்னேன். நீங்க எல்லாரும் சேர்ந்து கூடி சதி பண்ணி முடிவு பண்ணிட்டீங்க. அப்புறம் என்ன பண்றதாம்?" என்றாள் அவள் புகார் சொல்வது போல.

ஸ்ரீ சட்டென்று அவள் எதிரிலே நின்றான்.

"ஏய், ஆர் யூ ஹாப்பி? உனக்கு ஒண்ணும் வருத்தம் இல்லையே?" என்றான் தீவிரமான முக பாவத்தோடு.

"இல்லையில்லை, அப்படியெல்லாம் இல்லை" என்று அண்ணனைப் பார்த்து சமாதானப்படுத்தினாள்.



தன் முகம் லேசாக வாடினாலும் அவனுடைய முகம் வாடி விடும் என்பது அவளுக்குத் தெரியும். இருந்தாலும் இருவருக்கும் அடிக்கடி செல்லச் சண்டைகள் நடைபெறும். ஆனால் தன்னை ஒரு பாதுகாவலனாகவே அவன் கருதிக் கொள்கிறான் என்பதும் தனக்கு ஒரு சின்ன கீறல் விழுந்தாலும் கூட அவன் தாங்கமாட்டான் என்பதும் அவளுக்குத் தெரிந்ததுதான்.

இப்பொழுது ஆர்ப்பாட்டமாக அன்பை வெளிப்படுத்துவதில்லை என்றாலும் கூட, தன் மேல் ஆழ்ந்த அன்பு வைத்திருக்கிறான் சகோதரன் என்பது புரிய அவள் வாஞ்சையாக பார்த்துக் கொண்டு நின்றாள்.

ஒரு சூட்கேஸை கையிலே இருந்து இறக்கி வைத்த ஸ்ரீநாத் தோட்டக்காரனை அழைத்தான். "அண்ணே! வெளியே கார் நிக்குது. உள்ளே பெட்டி இருக்கு. ரெண்டு பெட்டி. எடுத்துட்டு வந்துடுங்க" என்று சொன்னான்.

அனுப்பி விட்டுத் திரும்பி தங்கையினுடைய இரு கன்னங்களையும் பிடித்து கிள்ளினான். "ஏய், ஐ ஆம் வெரி ஹாப்பி. ஐ ஆம் வெரி ஹாப்பி. மாப்பிள்ளை என்ன சூப்பரா இருக்காரு. போட்டோ வந்துச்சு. பார்த்தேன். வீடியோ கிளிப்பிங்ஸ் கூட வந்தது. பெரிய எக்ஸ்போர்ட்ஸ் இன்டஸ்ட்ரி வச்சு கலக்கறாராமா? நம்ம ஞானம் தாத்தாவுக்குப் பேரனாம். அம்மா கதை கதையா சொன்னாங்க. நீதான் எதையுமே சொல்லலை"

"நீ நேர்ல வரும்போது சொல்லிக்கலாம் அப்படின்னு தான்"

"அதான் டு மந்த்ஸ் லீவு போட்டுட்டு வந்தாச்சு! மேரேஜுக்கு முன்னாடி ஒரு மாசம் பின்னாடி ஒரு

மாசம்னு இங்கே இருந்து அருமைத் தங்கைக்கு என்னென்ன வேணுமோ எல்லாம் செஞ்சுட்டுத்தான் போறது'' என்றான்.

அவள் மனமும் முகமும் ஒருங்கே குளிர ''தாங்க்ஸ் அண்ணா'' என்றாள்.

''பின்னே, எனக்கு இருக்கிற ஒரே தங்கையை பல்லக்கில் ஏத்தி ராஜகுமாரனோட அனுப்பிட்டுத்தான் அய்யா ஓய்வேனாக்கும்'' என்றான்.

அவள் ஒரு பெருமூச்சு விட்டாள்.

''உனக்கென்னண்ணா, நீ அங்கிருந்து டு மந்த்ஸ் லீவு போட்டுட்டு வந்துட்டே. ஆனா எங்க ஆஃபீஸ்ல லீவு கிடைக்கிறது கஷ்டம்'' என்றாள்.

''இல்லையே, மாப்பிள்ளை வேற ஏதோ பிளான் சொன்னாரே''என்றான்.

அவள் அவனை வியப்பாகப் பார்த்தாள்.

''அப்படி ஒண்ணும் எங்கிட்டே சொல்லலையே?!'' என்றாள்.

''இல்லையே. ஒன் மந்த்க்கு முன்னாடி உன்னை நோட்டீஸ் கொடுக்கச் சொல்லிடறது அப்படின்னாரு''

''இல்லையே! இன்னும் ஒண்ணும் சொல்லலை''

''இதோ பாரு. உங்களுக்கே சொந்த கன்சர்ன் இருக்கு நீ எதுக்கு வெளியில போய் வேலை பார்க்கணும்'' என்று அவன் ஆரம்பிக்க.

''டேய், இதெல்லாம் அப்புறம் பேசிக்கலாம்டா, முதல்ல வந்து குளிச்சுட்டு டிரெஸ் மாத்திட்டு ஓடி வா, சாப்பிடு வியாம்!'' என்று அம்மா காஃபியோடு வந்தாள்.



''ஐய்யோ! உன் கைக்காஃபி சாப்பிட்டு எவ்வளவு நாளாச்சு!'' என்று ஆசையாக வாங்கிக் கொண்டான் மகன்.

வழக்கமாக அவளும் அவனும் முன்னாலே இருக்கிற சிட்அவுட்டிலே அமர்ந்து கொண்டு தோட்டத்தை பார்த்துக் கொண்டு காஃபி குடிப்பார்களே அதே போல இப்பொழுதும் போய் அமர்ந்து கொண்டான்.

அப்பா ஏதோ சொல்ல ஆரம்பிக்க, ''அப்பா, லெட் மி என்ஜாய். ஒரு அஞ்சு நிமிஷம் இந்தக் காஃபியை ரசிச்சு ருசிச்சுக் குடிச்சுட்டு அப்புறம் உங்ககிட்ட பேசறேன்'' என்றான்.

அதே போல குடித்து முடித்து விட்டு ''என்ன ஏற்பாடு செஞ்சிருக்கீங்க?'' என்று ஆரம்பித்தான்.

''டேய், முதல்ல குளிச்சுட்டு வாடா! சாப்பிட்டுட்டு அப்புறம் பேசலாம்!'' என்று அவரும் அதே பாடத்தைப் படித்தார்.

ஸ்ரீநாத் வந்த அந்த நிமிடத்தில் இருந்து திருமணத்திற் கான அனைத்து ஏற்பாடுகளையும் கையில் எடுத்துக் கொண்டு பார்க்க ஆரம்பித்தான்.

''அப்பா! நீங்க அலையவே வேண்டாம். இங்கயே இருந்துட்டு என்னென்ன செய்யணும்னு சொல்லுங்க. ஐ வில் டேக்கேர் ஆஃப் ஆல் அரேஞ்ச்மெண்ட்ஸ். நீங்க என்ன பண்றீங்க? கூப்பிட வேண்டியவங்களை போய் கூப்பிடற வேலையை மட்டும் முடிங்க!'' என்றான்.

''கிட்டத்தட்ட பாதி முடிச்சுட்டேன்ப்பா. இன்னும் கொஞ்சம்தான் இருக்கு!'' என்றார் அப்பா. ''இதோ பாருங்கப்பா! கல்யாணத்துக்கு டென் டேஸ் முன்னாடி

இதெல்லாம் முடிச்சிடணும். டென் டேஸாவது ரிலாக்ஸ்டா இருந்தாத்தான் மத்த ஏற்பாடெல்லாம் வசதியா பண்ண முடியும்'' என்றான் மகன்.

''சரிப்பா!'' என்று மகிழ்ச்சி அடைந்தார் கைலாசம்.

என்ன இருந்தாலும் பொறுப்பை ஒருவர் எடுத்துக் கொள்ளுவது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது என்று எண்ணிக் கொண்டார்.

புஷ்பலதாவும் மகனைப் பார்த்த உடனே பெருத்த அளவில் மகிழ்ச்சி அடைந்தாள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால், சாருசித்ராவுக்குத்தான் தர்ம சங்கடங்கள் ஏற்பட்டன. அண்ணனைத் திருப்தி படுத்துவதற்காகவாவது அவள் வெற்றிவேலுக்கு ஃபோன் செய்ய வேண்டி இருந்தது.

''என்ன உங்க ஆள்கிட்ட பேசறதே இல்லையா?'' என்று அவன் அன்று மாலை கேட்க.

''இல்லை, இனிமேல்தான் பேசணும்'' என்று சொல்லி விட்டு ஃபோனை எடுத்துக்கொண்டு ஒரு பக்கம் நகர்ந்தாள்.

''ஹலோ!'' என்று அவள் அவனிடம் பேச ஆரம்பித்தாள்.

''என்ன விஷயம்?'' என்றான் அவன்.

அவன் கேட்ட விதமே ஏதோ முகத்தில் அடித்தாற்போல இருந்தது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு ''அண்ணன் ஊர்லே இருந்து வந்திருக்கான். என்ன நீ? அவருகிட்ட பேசலையான்னு கேட்டுட்டே இருக்கான். அதான்'' என்றாள் அவள்.

''ஓஹோ! என்ன எப்படி இருக்கே?'' என்றான்.



''நல்லாயிருக்கேன்'' என்றவள் ''அண்ணன் உங்களைப் பார்க்கணும்னு சொன்னான்''என்றாள்.

''ஓ எஸ்! நோ ப்ராப்ளம்! அவரு வருவாரா? நான் எங்காவது வந்து மீட் பண்ணனுமா?'' என்றான்.

''எப்படின்னாலும் சரி!'' என்றவள் ''இருங்க, அண்ணன் கிட்ட கொடுக்கறேன்'' என்று அவனிடத்திலே கொடுத்தாள்.

''ஹலோ, மாப்பிள்ளை!'' என்று அவன் ஆரம்பித்தான்.

சாருசித்ரா ஆச்சரியமாகப் பார்த்தாள். 'என்ன இயல்பாகப் பேசுகிறான்' என்று.

அதை விட ஆச்சரியம் என்னவென்றால் ஸ்ரீநாத் நொடிக்கு ஒரு தரம் வாய் விட்டுச் சிரித்தான். ''அப்படிங் கறீங்க?'' என்று மறுபடியும் சிரித்தான்.

சாருசித்ராவுக்கு ஆச்சரியத்துக்கு மேல் ஆச்சரியம். கண்களை அகல விரித்துக்கொண்டு அண்ணனை ஆச்சரியமாக பார்த்தாள்.

அவன் ஐந்து நிமிடங்கள் பேசி முடித்து விட்டு பிறகு போனை ஆப் செய்து விட்டு. ''என்ன இந்தப் போடு போடறாரு மாப்பிள்ளை!'' என்றான்.

''என்னண்ணா?!'' என்றாள் அவள் ஆச்சரியமாக.

''பயங்கரமா ஜோக் அடிக்கறாரு!'' என்றான்.

அவளுக்கு நம்பவே முடியவில்லை. ''நிஜமா வாண்ணா?''என்றாள்.

''ஏய், உங்கிட்ட அப்படியெல்லாம் பேசறது இல்லையா?'' என்றான் அவன் ஆச்சரியமாக.

''தெரியலைண்ணா. எங்கிட்ட கொஞ்சம் ரிசர்வ்டா தான் பேசுவாரு'' என்றாள் வெட்கத்துடன்.

''ஓஹோ! அழுத்தமான ஆட்களைத்தான் நம்பவே முடியாதுடி. அப்புறம் பாரு கல்யாணத்துக்கு அப்புறம் உட்காருன்னா உட்காருவாரு. எழுந்திருன்னா எழுந்திருப் பாரு'' என்று சிரித்தான் ஸ்ரீ நாத். அவளும் சிரிப்பது போல காட்டிக் கொண்டாள்.

ஆனால் அவளுக்கு என்னமோ அவனை அப்படி யெல்லாம் உட்கார வைய் என்னும் பொழுது உட்கார வைத்து எழுந்திரு என்ற பொழுதெல்லாம் எழுந்திருக்க வைக்க முடியாது என்று ஆழ் மனது சொன்னது.

சில நேரங்களில் அவளுக்கு தனியாக இருக்கும்பொழுது எதற்காக இந்தக் கல்யாணத்துக்கு ஒத்துக் கொண்டோம் என்று கூடத் தோன்றும். ஆனால் உடனே அவளுடைய இன்னொரு மனது சொல்லும் 'நீதான் சொல்லிட்டியே உன் மனசுல அவர் மேல நாட்டம் இருக்குன்னு.இப்படி ஒரு நாட்டத்தை வச்சுகிட்டு இன்னொருத்தரைக் எப்படி கல்யாணம் பண்ணிக்க முடியும். இதுதான் சரி! நீ எப்படியோ வாழ்க்கையை சந்திச்சுத்தான் ஆகணும்'' என்று சொன்னது. ஆனாலும் ஒரு ஆறுதலான அன்பான ஒரு வெளிப்பாட்டிற்கு அவள் மனம் ஏங்கத் தான் செய்தது.

ஸ்ரீநாத் இப்படிக் கேட்டான் என்று சொன்னதற்குப் பிறகு தினம் ஒரு முறையாவது ஃபோன் வந்தது.

அன்று மாலை ஸ்ரீநாத் அவசர அவசரமாக அவளுடைய அறைக்கு வந்தான்.

''ஏய், மாப்பிள்ளை ஒரு அஸைன்மெண்ட் கொடுத்திருக் காரு!'' என்றான்.

''என்னது?'' என்றாள் அவள்.



''இல்லை. நாளைக்கே உங்க ஆஃபீஸ்ல ரெசிக்னேஷன் நோட்டீஸ் கொடுத்துடறதாம். அவரே உங்க எம்டிகிட்ட பேசிட்டாராம். தீனதயாளனுக்கு உன்னை ரிலீவ் பண்றதுல வருத்தம்தானாம். இருந்தாலும் வேற வழியில்லாம ஒத்துக் கிட்டாராம். அப்புறம் நாளைக்கு உன்னோட கன்சர்னுக்கு உன்னைக் கூட்டிட்டுப் போய்க் காட்டணுமாம்'' என்றான்.

சாருவுக்கு கோபமாக வந்தது. ''என்ன இது? என்னை எதுவுமே கேட்கலை?'' என்றாள்.

''இதோ பாரும்மா, உன் வாழ்க்கையையே அவரு கையில கொடுத்தாச்சு. இனி என்ன ஒன்னொண்ணுக்கும் உன்னைக் கேட்டுட்டே இருப்பாரா?'' என்றான் சகோதரன்.

சாருசித்ராவுக்கு அதற்கு மேல் பேசுவதற்கு ஒன்றும் இல்லாமல் போயிற்று.

அடுத்த நாள் சொன்னது போலவே அவர்களுடைய அலுவலகத்திற்குச் சென்றார்கள். உள்ளே நுழையும் போதே அவனுடைய பர்சனல் பி.ஏ. வாசலில் நின்று வரவேற்றாள்.

அன்று சாருசித்ரா ஒரு அழகான கைத்தறிப் புடவை அணிந்திருந்தாள். பின்னல் போட்டிருந்தாள்.

கட்டுப் பெட்டியாக தோற்றமளிக்காமல் ஆனால் ஏதோ ஒரு விதத்தில் நவீனமாக இருக்கிற மாதிரி அவள் தோற்றம் அமைந்திருந்தது.

அக்கறை எடுத்துத்தான் அலங்காரம் செய்து கொண்டாள். ஹாண்ட்லூம் நகைகள் என்று இப்பொழுது வந்திருக் கின்றனவே அதிலே பொருத்தமான நகைகள் வாங்கி அணிந்திருந்தாள். காதுக்கு மட்டும் தங்கக் கம்மல்,

கைகளில் மட்டும் மெல்லியதாக இரண்டு தங்க வளையல்கள் என்று வெகு கச்சிதமாக அலங்காரப் படுத்திக் கொண்டிருந்தாள்.

அவள் தன் அறையை விட்டு வெளியே வந்ததும் ஸ்ரீநாத் கூட விசில் அடித்தான்.

''ஓஹோ! மாப்பிள்ளை அப்படியே மயங்கி விழப் போறாரு!'' என்று கேலி செய்தான்.

''போண்ணா நீ!'' என்று அவள் சிணுங்கிக் கொண்டே சகோதரனோடு நடந்தாள்.

இப்போது அலுவலகத்திலும் அவர்கள் வந்தவுடனேயே தன்னுடைய இருக்கையை விட்டு எழுந்து வந்து அவர்களை வரவேற்றான் வெற்றிவேல்.

மெல்ல அவளை நோக்கி மையமாக ஒரு புன்னகை பூத்தவன் திரும்பி ஸ்ரீநாத்திடம் விரிவாகப் பேச ஆரம்பித்தான்.

ஐந்து நிமிடங்கள் பேசிய பிறகு ''நம்ம ஆஃபீஸைப் பார்த்தர்லாமா?'' என்று அழைத்துக் கொண்டு போனான். அவன் அழுத்தமாக அமர்ந்திருந்த விதம், இரண்டொரு டெலிபோன் அழைப்புக்களுக்கு அவன் பதிலளித்த விதம், அந்த கன கம்பீரம் இதையெல்லாம் பார்க்கும்பொழுது சாருசித்ராவின் உள்ளம் துள்ளியது.

கொஞ்சம் பரவசமாகத்தான் இருந்தது.

அவன் இருக்கிற அந்த அறைக்குள்ளே தான் இருக்கிறோம் என்பதே அவள் மனதுக்குள்ளே என்னென்னமோ உணர்வுகளை தோற்றுவித்துக் கொண்டிருந்தது. எழுந்திருந்து அந்த அறையை விட்டு வெளியேறும் போது, ஓரக் கண்ணால் அவனை முழுவதுமாக பார்த்தாள்.



எதற்காகவோ திரும்பிய அவன் அந்தப் பார்வையைக் கவனித்தானோ என்னவோ சட்டென்று அவள் பார்வையை கீழே தாழ்த்திக் கொண்டாள்.

ஒரு நிமிடம் விசித்திரமாக அவளைப் பார்த்து விட்டு திரும்பிக் கொண்டான். அவர்களுடைய அலுவலகம் முழுவதும் சுற்றிப் பார்த்து விட்டு பிரமித்துத்தான் போனாள். எல்லா இடத்திலும் அவன் பேசிய விதம் அவனை அவர்கள் எதிர்கொண்ட விதம், இதில் எல்லாவற்றிலும் வெறும் அலுவலக ரீதியாக மட்டும் அல்லாமல் அதை மீறி ஒரு உறவு தெரிந்தது.

சில குறிப்பிட்ட பெண்களிடம் மட்டும் அவளை அறிமுகப்படுத்தினா.ன். மற்றவர்களிடம் தலையசைத்து விட்டு நகர்ந்து விட்டான். அப்படிப் பேசிக்கொண்டு வரும்பொழுது ஏதோ ஒரு இடத்தில் ஒரு பிரச்சினையைப் பற்றி ஒரு பெண் அவனிடத்திலே வந்து சொல்ல ''இதை இப்படி செஞ்சா நல்லாயிருக்காது?'' என்று சொன்னவன்.

திரும்பி சாருவிடம் ''ஏன் சாரு, ஆம் ஐ ரைட்?'' என்றான்.

''சாரு!'' என்று அவன் முதல் முதலாக அழைக்கக் கேட்டவுடன் அவள் முகம் குப்பென்று சிவந்தது.

''ம்! செய்யலாம்'' என்றாள் அவள்.

''மேடமே சொல்லிட்டாங்கப்பா. புரொஸீட் பண்ண வேண்டியதுதான்!'' என்று அவன் கேலியாகச் சொல்ல அந்தப் பெண் குறும்பாக சிரித்துக் கொண்டே நகர்ந்தாள்.

ஏதோ கண்டும் காணாதது போல தன் இரண்டு பேண்ட் பாக்கெட்டுகளிலும் கையை விட்டுக் கொண்டு சிரிப்பை அடக்கிக் கொண்டான் ஸ்ரீநாத். அது மட்டும் அல்ல

அவர்கள் இரண்டு பேரும் ஒன்றாகப் போகும்படி விட்டுவிட்டு பின்னாலே ஒதுங்கிக் கொண்டான்.

"சாரு, எதுவும் நினைச்சுக்காதே உங்க அண்ணன் எதுவும் நினைச்சுக்கக்கூடாதில்லே? அதுக்காகத்தான் கொஞ்சம் உரிமை எடுத்துகிட்டேன்" என்றான் அவன்.

அவளுக்கு சப்பென்று ஆனது. முகம் வாடிப் போனது அதையும் ஒரு தடவை பார்த்தவன், "இந்த ஆஃபீஸே சாருசித்ராவுடைய வரவை எதிர்பார்த்துக் காத்துட்டு இருக்கு" என்றான்.

அவள் சட்டென்று சமாதானம் ஆனாள். அவளுடைய முகம் இப்படி வாடி மலர்வதைப் பார்த்து அவனுக்குள் ஆச்சரியம் தோன்றியது போலும்! லேசாகப் புன்னகைத்துக் கொண்டான்.

## அத்தியாயம் - 8

"என் கண்ணே பட்டுடும் போல இருக்கு!" என்று இரண்டு கன்னங்களையும் வழித்து எடுத்தார் அருள் நாயகி கலைஞானத்தின் மனைவி. வெற்றி வேலின் தாய் வழிப் பாட்டி.

சாருசித்ராவின் முகம் சிவந்தது. லேசான நாணத்துடன் அவள் நிற்பதைப் பார்த்து "உட்காரு தாயி!" என்றாள் அருள்நாயகி. அவள் அமர்வதற்கு முன்பாக "நீங்க?" என்றாள்.

"நானும் உட்கார்றேண்டா" என்று அருகிலே அமர்ந்தாள்.

திருமண மண்டபத்தில் இருந்தார்கள்!



மறுநாள் காலையில் திருமணம். அவர்கள் குடும்ப வழக்கப்படி முதல் நாள் மாலை நிச்சயதார்த்தம் வைத்துக் கொண்டார்கள்.

நிச்சயதார்த்தத்துக்கு அழைத்துப் போவதற்குத்தான் அருள்நாயகி அவளை பார்ப்பதற்கு வந்தாள்.

மணமகள் அறையில் தயாராக இருந்தாள் சாருசித்ரா. அப்பொழுதுதான் இப்படிச் சொன்னாள் அருள்நாயகி.

"அண்ணி, சூப்பருங்க அண்ணி, கலக்கறீங்க அண்ணி!" என்றான் சோமநாதன்.

"ஆமா, அண்ணனுக்கு ஏத்த ஜோடி அண்ணி நீங்க!" என்றான் கண்ணன்.

இரண்டு பேரும் நேராக உள்ளே வந்து விட்டார்கள். "டேய் சொல்லாமக் கொள்ளாமல் எதுக்குடா வர்றீங்க?" என்றாள் அருள்நாயகி.

"போங்க பாட்டி, அண்ணனுக்கு ஏத்த அண்ணி தானான்னு நாங்க பார்க்க வேண்டாமா. அன்னைக்கு ஏதோ அவசர அவசரமா போனீங்க வந்தீங்க எங்களுக்கு அண்ணியைக் காட்டவே இல்லை. இன்னிக்காவது நாங்க பார்க்கணும் அப்படின்னுதான் வந்தோம்" என்றான் சோமநாதன்.

"சரி, சரி, உங்க அண்ணனுக்குப் பொருத்தமா?" என்று கேட்டாள் அருள்நாயகி.

"சூப்பர்! அண்ணனோட பர்சனாலிட்டிக்கு ஏத்த பர்சனாலிட்டி இவங்க!" என்றார்கள் இரண்டு பேரும்.

அதற்குள்ளாக யாரோ கனைக்கும் சத்தம் கேட்கவே. "தாத்தா! தாத்தா வர்றாங்க!" என்று இரண்டு பேரும் பஞ்சாய்ப் பறந்து விட்டார்கள்.

அருள்நாயகி சிரித்துக் கொண்டே திரும்பினாள். "தெரியும்ல, சோமநாதன், கண்ணன் இரண்டு பேரைப் பத்தியும் உனக்கு சொல்லியிருப்பானே என் பேரன்" என்றாள்.

"ம்! சொன்னாங்க" என்றாள் சாருசித்ரா.

"தாத்தனைக் கண்டா பயம். தாத்தனுக்கு இவனுங் களைக் கண்டா ஒரு இதுன்னு வச்சுக்கோயேன். அதான் ஓடிட்டானுங்க. நல்ல பசங்க தான். ஆனா என்ன தேவை யில்லாத பாரத்தைத் தூக்கி தோள்ல போட்டுட்டா னேன்னு உங்க தாத்தனுக்குக் கோபம்" என்றாள் அருள்நாயகி.

என்ன சொல்வதென்று தெரியாமல் சாருசித்ரா மைய மாக புன்னகைத்து வைத்தாள். ஆனா "இந்தப் பசங்கன்னா அவனுக்கு உசுரு. இவனுங்களுக்கும் அவன் மேல பாசம். எம் மேலயும்தான் பாசம், தாத்தன் மேலயும்தான் பாசம். ஆனா என்ன பண்றது. சரி சரி இந்தக் கதையெல்லாம் எதுக்குப் பேசிட்டு! நல்ல மேக்கப்புத்தான். போகலாம் வா!" என்றவர் திரும்பி "ஏய், பானு இங்கே வா!" என்று உறவுக்காரப் பெண்ணை அழைத்தார்.

"நீ தானேடி அத்தை முறைக்காரி. வந்து கூட்டிட்டுப் போ!" என்று சொல்லி விட்டு அவர்கள் பின்னாலே போனாள்.

சாருசித்ராவுக்கு சோமநாதனும், கண்ணனும் இப்படித் தான் அறிமுகமானார்கள்.

கணவருக்கு மிகப் பிரியமான இந்த இரண்டு பேர்களையும் ஏன் அவர் அழைத்துக்கொண்டு வந்து



அறிமுகப்படுத்தவில்லை என்ற அவளுடைய கேள்விக்குப் பதில் அருள்நாயகியினுடைய பேச்சில் இயற்கையாகவே வெளிப்பட்டு விட்டது.

அவர்கள் இருவரும் அந்த வீட்டில் இருப்பது தாத்தாவுக்கு பிடிக்கவில்லை என்பது அவளுக்கும்தான் தெரிந்திருந்தது.

போகும் முன்பாகவே இப்படி ஒரு பிரச்சினை இருக் கிறதே என்று எண்ணிக் கொண்டாள். இன்னொன்றும் அவள் மனத்தை உறுத்திக் கொண்டே இருந்தது. திருமணம் பேசி இந்த ஆறு மாத காலத்தில் வெற்றிவேல் அப்படி ஒன்றும் அவளோடு இயல்பாகப் பேசவில்லை. நாளுக்கு ஒரு முறை போன் செய்தான். "எப்படி இருக்கீங்க?" என்ன என்று கேட்டால் அவன் சுருக்கமான பதில்களையே சொன்னான்.

அதைக் கவனித்த அவள் முதல் மாதத்திற்குப் பிறகு இப்படிப் பேசுவது பிடிக்கவில்லை போலும் என்றுஃபோன் செய்வதை நிறுத்தி விட்டாள்.

என்ன நினைத்தானோ என்னவோ தினம் ஒரு முறை போன் செய்து பேசுவான். அவளுடைய தோழிகள் சொல்லக் கேட்டிருக்கிறாள். இந்த சமயத்தில்தான் பேசிக் கொள்வது சுவாரசியமாக இருக்கும். மணிக் கணக்காகப் பேசுவார்கள் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் வெற்றிவேல் அப்படி அவளிடம் பேசவும் இல்லை. ஆனால் அப்படி பேசுவதற்கு முன் வராதபோது அவளுக்குத் தானாக மேலே விழுந்து பிடுங்க விருப்பம் இல்லை. நடப்பது நடக்கட்டும் என்று விட்டு விட்டாள்.

அவன் தான் சொன்னானே எனக்கு திருமணத்திலயே ஆர்வம் இல்லை. பெற்றோர்களுக்காகத்தான் செய்து கொள்ளுகிறேன் என்று நாமும் அப்படித்தான் என்று நாமும் வீம்பாக சொல்லியிருகிறோமே. அதையே அப்படியே மெயின்டெய்ன் செய்து கொள்ள வேண்டியதுதான் என்று எண்ணிக் கொள்வாள். இப்பொழுது கூட எங்காவது கண்ணில் படுவானா ஜாடை மாடையாக ஏதாவது பேசுவானா, மாதிரி ரகசிய சிரிப்புக்கள் இங்கு ஏதாவது இருக்குமா என்று அவளுடைய உள்ளம் ஏங்கியது.

அப்படியான எந்த வெளிப்பாடும் அவனிடத்தில் இருக்கவில்லை.

இன்று மாலை கூட ரிசப்ஷன் வைத்திருந்தார்கள். அந்த ரிஷப்சன் நடந்த போது அவனுடைய தொழில் முறை நண்பர்கள் அதிபர்கள் என்றெல்லாம் வந்திருந்தார்கள். உண்மையிலேயே சாரு சித்ராவுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

இவ்வளவு பெரிய குடும்பத்திலா தான் வாழ்க்கைப் படுகிறோம் என்று மலைப்பாகக் கூட இருந்தது. உடனே 'நீயும் ஒண்ணும் குறைஞ்சுடலை. உனக்கும் படிப்பு. அறிவு, தேவையான அளவுக்கு சொத்து இருக்கு' என்று தன்னைத் தானே உசுப்பிக் கொண்டாள். ஏனென்றால் இந்த மாதிரித் தாழ்வு மனப்பான்மை சார்ந்த எண்ணங்களை உள்ளே விட்டால் அது ஆளையே குறுக்கி விடும் என்பதை அவள் தன்னுடைய எம்பிஏ படிப்பில் தெரிந்து கொண்டுதான் இருந்தாள்.

எனவே அவன் அறிமுகப்படுத்துகிறவர்களை அவன் எந்தக் கம்பீரத்தோடு அறிமுகப்படுத்துகிறானோ அதே கம்பீரத்தோடு அவளும் எதிர் கொண்டாள்.



பேச வேண்டியவர்களிடம் பேசினாள். ஆனால், உள்ளூர அவளுக்கு புகைச்சலை ஏற்படுத்திய விஷயமும் இருந்தது.

மற்றவர்களிடம் அவன் கலகலப்பாக பேசினான். சிலபேரிடம் பேசும் பொழுது வாய் விட்டுக் கூடச் சிரித்தான். சிரிக்கும் போது எவ்வளவு அழகாக இருக்கிறது என்று அவள் ஓரக்கண்ணால் கூட பார்த்து ரசித்துக் கொண்டாள். ஒரு முறை அப்படிப் பார்த்துக் கொண்டு இருக்கும் பொழுது மெல்லத் திரும்பி அவளைக் கவனித்தவன் சட்டென்று அந்தச் சிரிப்பை நிறுத்திக் கொண்டான். அவளுக்கு கொஞ்சம் அச்சமாகப் போய்விட்டது.

எப்படித்தான் இவரோடு குடும்பம் நடத்தப் போகிறோமோ என்று இருந்தது. இப்பொழுது நிச்சயதார்த்தத்துக்கு அவளை அழைத்துப் போகிறார்கள்.

அவள் போய் அமர்ந்து கொண்டாள்.

நல்ல வேளையாக இன்று இரவு தங்குகிறோம் என்று அவளுடைய தோழிகள் எல்லாம் ஒத்துக் கொண்டார்கள். பலநாட்களுக்குப் பிறகு ரெஜினா, நசீமா, அஞ்சு, ரோகிணி எல்லோரும் சேர்ந்ததனால் பொழுது மிகவும் கலகலப்பாகப் போய் விட்டது.

அவள் உள்ளத்தில் இந்தக் கேள்விகளெல்லாம் இருந்ததனாலோ என்னமோ அவள் பெரும்பாலும் அமைதியாக இருந்து அவர்கள் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்தாள். எல்லோரும் அவர்களுடைய குடும்பப் பின்னணி, பிரச்சினைகள் எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டார்கள்.

பதினொரு மணி வரை பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அருள்நாயகி அங்கே வந்து "இதோ பாருங்க,

புள்ளைங்களா படுத்துத் தூங்குங்க. நீங்களெல்லாம் அவளோட ஃப்ரெண்ட்ஸ் தானே? எல்லாம் ரெண்டு மூணு நாள் இருந்துட்டுத்தான் போகணும். அதனால இன்னிக்கு ரெஸ்ட் எடுங்க. புள்ளை நேரத்துல தூங்கினாதான் காலையில நேரத்துல எழுந்திருக்க சரியா இருக்கும்'' என்று மிரட்டி விட்டுப் போனார். அதற்குப் பிறகு எல்லோரும் படுத்துக் கொண்டார்கள்.

அது பெரிய ஒரு மண்டபம்!

அவள் தங்கியிருந்த அறையும் பெரிதாக இருந்தது. தேவையான அளவுக்கு படுக்கை வசதிகள் எல்லாம் இருந்ததால் தோழிகளோடு அவளை விட்டு விட்டு மற்ற உறவினர்கள் எல்லாம் அடுத்தடுத்த அறைகளில் தங்கிக் கொண்டார்கள்.

அவளுடைய வசதிகளை தோழிகள் கவனித்துக் கொள்வார்கள் என்று அவர்களுக்கு நம்பிக்கை. தோழிகள் எல்லாம் கூட சீக்கிரமே உறங்கி விட்டார்கள். ஆனால் அவளுக்கு உறக்கம் வர வில்லை.

ஏதோ ஒன்று அவளுக்கு உறுத்தலாக இருந்தது! அருமை யான தோற்றம் உடைய கணவன், சொத்து உடைய கணவன் என்றெல்லாம் இருந்தாலும் ஏதோ ஒரு பிரச்சினையை தான் அங்கே எதிர்கொள்ளப் போகிறோம் என்று அவளுடைய உள்மனது எச்சரித்துக்கொண்டே இருந்தது.

உறக்கம் வரவில்லை.

ஒரு சாதாரணமான புடவைக்கு மாறியிருந்தாள். சாதாரணமான என்றால் அதுவும் பட்டுப்புடவைதான்.



நிச்சயத்துக்காகக் கட்டியிருந்த அந்த மிக உயர்ந்த பட்டுப்புடவையை களைந்து விட்டு சாதாரண பட்டுப் புடவைக்கு மாறியிருந்தாள்.

அப்படியே அந்த அறையின் பால்கனி ஓரமாக வந்து நின்று கொண்டிருந்தாள் மெல்ல அறையை விட்டு வெளியே வந்தாள்.

எங்கேயாவது மாாப்பிள்ளை கண்ணில் படக்கூடும் என்ற எதிர்பார்ப்பு இருந்ததோ என்னவோ!

அந்த நேரத்தில் அடுத்த அறைக்கு முன்னால் வராண் டாவில் படுக்கையைப் போட்டுக்கொண்டு இரண்டு நடுத்தர வயதுப் பெண்மணிகள் அமர்ந்து பேசிக் கொண்டிருந் தார்கள்.

இவள் அவர்களுக்கு இடையூறு செய்ய வேண்டாமே என்று திரும்பினாள். திரும்பியவள் அந்தச் சுவரோரமாக ஒதுங்கி நின்றாள். ஏனென்றால் இவளுடைய பெயர் அடிபட்டது.

''ஏன் இந்த அத்தை சாருசித்ரான்னு புள்ளையைப் பிடிச்சிருக்காங்களே! புள்ளை நல்லாத்தான் இருக்குது.....!'' என்று இழுத்தாள் ஒருத்தி.

''ஆமாமா, புள்ளை நல்லாத்தான் இருக்குது. சொத்தும் இருக்குதுங்கறாங்க ஆனா எனக்கென்னமோ..!'' என்று இழுக்கவும் சாருசித்ரா கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தாள். ''என்ன அத்தை, என்ன சொல்றே'' என்றாள் மற்றவள்.

''இல்லடி, அம்மணி, எனக்கு என்ன தோணுதுன்னா என்னமோ பிரச்சினை இருக்குது. ஏன் என்னுடைய கொழுந்தனார் புள்ளையை கல்யாணம் பண்ணிக்கங்கன்னு

ஜாடை மாடையா தூது விட்டோம். எங்க சொத்துக்கும் அவங்க சொத்துக்கும் சரியா இருக்கும் அப்படின்னு நினைச்சோம். ஆனா கடைசியில அவங்க அளவுக்கு சொத்து இல்லாத சாதாரணக் குடும்பம். இதைப் போய் இந்தக் கலைஞானம் தாத்தா புடிச்சிருக்காரு'' என்றாள் அங்கு பேசிய பெண்மணி.

''ஏன் செல்லம்மாக்கா அப்படிச் சொல்றீங்க?'' என்றாள் அம்மணி என்று அழைக்கப்பட்டவள்.

''ஆமா, அம்மணி இவ்வளவு சொத்துக்காரங்க இவங்க சொத்துக்குத் தகுந்த மாதிரிதானே பார்ப்பாங்க? இப்படிப் போய் ஒரு பிள்ளையை எடுக்கறாங்க'' என்றாள் செல்ல மக்கா.

''ஏன் அவங்களுக்கு என்ன குறைச்சல். நீங்க இப்ப இருக்கிற சொத்தை நினைச்சுக்காதீங்க. பையன் மாசத்துக்கு ரெண்டு லட்சம் சம்பாதிக்கிறானாம். அவங்க அண்ணன். அதனால இந்தப் புள்ளைக்கு இருக்கிற சொத்தையெல்லாம் கொடுத்துருவாங்க'' என்கிறார்கள்.

''என்ன இருந்தாலும் இவங்க அத்தனையும் வழிச்சுப் போட்டாலும் உரம் போடறதுக்கு ஆகாது அம்மணி!'' என்றாள் செல்லம்மா.

''சரி, செல்லம்மாத்தை அப்படி என்ன இருக்கோணும்னு நினைக்கிறே?'' என்று கேட்டாள் இவள்.

''என்னமோ இருக்குது அம்மணி. என்னன்னு தெரியலை.''

''ஒரு வேளை அந்த ரெண்டு பசங்க இருக்கானுங்களே. அதைச் சொல்றியாக்கும்'' என்றாள் அம்மணி.



''பசங்க இருந்தா என்ன? அதெல்லாம் அவனுங்களுக்கு ஏதோ பார்த்து செஞ்சு விட்டுடுவான். சொத்திலயா பாகம் கொடுக்கப் போறாங்க? அவங்களுக்கு அதெல்லாம் கொடுக்க மாட்டாங்க. ஏதோ கொஞ்சம் படிக்க வச்சு ஏதோ வாழ்றதுக்கு தகுந்த மாதிரி கொடுத்தனுப்பிடுவான் வெற்றிவேலு''

''அதெல்லாம் குறை இல்லை. அதைத் தவிர வேற ஏதோ இருக்குது அம்மணி!'' என்றாள் செல்லம்மாக்கா.

''என்ன சொல்றீங்க அத்தை?'' என்றாள்.

''இல்லை, ஏதோ ஒரு வயசுப் பையன்னா வயசுப் பொண்ணுகிட்ட பேசுவாங்க பண்ணுவாங்க. அவனோட வசதிக்கு எப்படி எப்படியோ பேரு அடிபடணும். ஒரு பழக்கமும் இல்லைங்கறாங்க. ஆனா பையனுக்கு எந்தப் பொண்ணுகிட்டயும் பழக்கம் இல்லைங்கறாங்க. பொண்ணு விவகாரமா என்ன எழவோ தெரியலை ஆனா ஏதோ இந்தக் கலியாணமே அவங்க தாத்தன் பாட்டிக்காகத்தான் பண்ணிக்கிறான்னு பேசிக்கிறாங்க'' என்றாள் செல்லம் மாத்தை.

உடனே அந்த அம்மணி சொன்னாள்''போ அத்தை, உன் கொழுந்தன் பொண்ணை எடுக்கலைன்னு பொறாமை'' என்றாள்.

''சரி அப்படித்தான் இருக்கட்டும். விடு என்னொ?'' என்றாள்.

''சரி, நாம கொஞ்ச நேரம் தூங்கலாம்'' என்று இரண்டு பேரும் படுத்தார்கள்.

சாருசித்ராவுக்கு திக்கென்று ஆனது. இப்படி அடுத்த வர்கள் எல்லாம் பேசுகிற அளவுக்கு வெற்றிவேலிடம்

என்ன பிரச்சினை இருக்கிறது என்று அவளுக்குத் தோன்றியது. அவள் ஆழ்மனதுக்குள்ளே இருந்த அச்சம் மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டே போனது.

'என்னவோ இருக்கிறது, என்னவோ இருக்கிறது, என்கிறார்களே. அந்த என்னவோ என்னவாக இருக்கும். அதை நாம் எப்படி எதிர்கொள்ளப் போகிறோம்' என்ற கவலை அவளுக்கு தோன்றியது.

உடனே வழக்கமாக நிமிர்ந்து நிற்கிற அவளுடைய ஆழ்மனது சொன்னது. "என்னவாயிருந்தால் என்ன? நீ அவரை நேசிக்கிறது நிஜம். எப்படி இருந்தாலும் வெற்றி வேலை விட்டுட்டு இன்னொரு மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணியிருக்க மாட்டே. உன்னுடைய நேசம் அவனுக்குப் புரிந்திருந்தாலும் சரி புரியாவிட்டாலும் சரி, இதே வெற்றி வேல் உன்னை நேசிக்கும்படி செய்வதிலே தான் உன்னுடைய வெற்றி இருக்கிறது!" என்று அவளுடைய ஆழ்மனம் அவளுக்குச் சொன்னது.

அதே நேரத்தில் அவளுடைய அறிவு அவளுக்கு இன்னொன்றையும் சொன்னது. 'அது ஒன்றும் அவ்வளவு எளிதான காரியமாக இருக்கப் போவதில்லை. போராட்ட மாகத்தான் இருக்கப் போகிறது' என்று!

அமைதியாகப் போய் அவளுக்கென்று ஒதுக்கப் பட்டிருந்த படுக்கையில் சாய்ந்து கொண்டாள். வழக்கமாக திருமண நாளுக்கு முதல் நாள் எல்லாப் பெண்களும் அடுத்த நாளை ஆவலோடு எதிர்பார்ப்பார்கள் என்றால். எவ்வளவு படித்த பெண்ணாக இருந்த பொழுதும் சாரு சித்ரா ஒருவித கலக்கத்தோடுதான் தன்னுடைய திருமண நாளை எதிர் கொண்டாள்.



## அத்தியாயம் - 9

சாருசித்ராவின் கையில் ஒரு பால் டம்ளரை கொடுத்தார்கள்.

அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. 'இதெல்லாம் அந்தக் காலத்து சினிமாவில் காட்டுகிற காட்சிகள்! இன்னும் இதையெல்லாம் பிடிச்சுட்டு நாம தொங்கிட்டு இருக்கணுமா?' என்று முணுமுணுத்தாள்.

அஞ்சுவும், ரோகிணியும் களுக்கென்று சிரித்தார்கள். உறவுக்கார பெண்மணிகளிலும் அவளுடைய அத்தை மகள் மாமன் மகள்கள் என்று ஒன்று விட்ட உறவினர்களும் இவள் ஒத்த வயதுப் பெண்கள் அவளைச் சூழ்ந்து இருந்தார்கள்.

"இன்னைக்கு ஒரு நாள் தாண்டி ஹீரோயின்னு எல்லோரும் தாங்குவாங்க. என்ஜாய் பண்ணு. ஏண்டி வேண்டாம்னு சொல்றே," என்றாள் அவளுடைய அத்தை மகள் கீதா.

"போடி கீதா, உனக்கென்ன வேலை உன் கல்யாணத் தப்ப இப்படிதான் பண்ணினாங்களா?" என்று கேட்டாள் சாரு.

"இப்படித்தான் பண்ணினாங்களாவா? இதை விட தொல்லை பண்ணினாங்க எங்க பாட்டிங்க. இங்கே என்னமோ பரவாயில்லை. ஒரு கோடு போட்டு எல்லாத்தையும் கட் பண்ணிடறே" என்றாள் கீதா.

"சரி வா. யு கான்ட் அவாய்ட் ஆல் தீஸ் திங்ஸ்" என்று சொல்லிக் கொண்டே அவளை அழைத்துக் கொண்டு போய்

அந்த முதலிரவு அறையிலே உள்ளே விட்டு விட்டு வெளியே வந்தார்கள்.

அவள் உள்ளே நுழைந்ததும் கதவு அவளுக்குப் பின்னால் சாத்தப் பட்டது.

சுற்றும் முற்றும் பார்த்தாள். யாரும் அவளுடைய கண்ணில் படவில்லை. அந்தப் பெரிய அறையின் ஒரு ஜன்னத்தில் ஓரத்தில் வெற்றிவேல் வெளியே பார்த்தபடி நின்று கொண்டிருந்தான். அவன் பாராத வண்ணம் அவனைப் பார்த்தாள் சாருசித்ரா.

அந்தப் பட்டு வேட்டி பட்டுச் சட்டையில் மிகவும் பாந்தமாக இருந்தான்.

கண்ணிறைந்த கணவன்தான். அவளுக்கு குப்பென்று மகிழ்ச்சி பொங்கியது. அதே அளவுக்கு நாணமும் பொங்கியது. ஆனால் அத்தனையும் அவன் திரும்பி எந்த வித உணர்ச்சியும் இல்லாமல் அவளை ஒரு பார்வை பார்த்தவுடன் சட்டென்று வடிந்து போனது.

''வந்துட்டியா வா!'' என்று சொல்லிவிட்டு வந்தான்.

நேராக அவளை நோக்கி வந்தான்.

அவள் கொஞ்சம் திடுக்கிட்டுப் போய் திணறலோடு நின்று கொண்டிருந்தாள். அவன் போய்க் கதவைத் தாழிட்டு விட்டு 'இங்கே!' என்று கட்டிலைக் காட்டினான்.

அவள் போய் அமர்ந்தாள்!

அமர்ந்த உடனேயே அவளுக்குப் புரிந்து விட்டது. இது ஒரு யந்திரத்தனமான அணுகு முறை என்று. அவள் கொடுத்த பால் டம்ளரை வாங்கி பக்கத்தில் இருந்த டீப்பாயின் மேல் வைத்தான்.



தலையணை இரண்டு எடுத்துப் போட்டு சாய்ந்து அமர்ந்து கொண்டு அவளைப் பாராமல் வேறு எங்கோ பார்த்தான்.

அவள் என்ன பேசுவது என்று தெரியாமல் அமர்ந்து கொண்டிருந்தாள்.

பிறகு தலைவலிப்பது போல நடித்துக் கொண்டு தலையைப் பிடித்துக் கொண்டாள்.

''ஏன் சாரு?'' என்றான் அவன்.

''இல்லை; தலைவலிக்குது'' என்றாள் இவள்.

அவன் கேள்விக்குறியாக அவளைப்பார்த்தான். ''நேத்துல இருந்து ஒரே டென்ஷனாவே இருந்தது.மேக்கப் அது இதுன்னு மாத்தி மாத்தி குடைஞ்சு...!''என்று இழுத்தாள்.

''ஆமாமா! ரொம்ப சடங்கு சடங்குன்னு போட்டு இழுத்துட்டாங்க இல்லை. யு ஷுட் பி வெரி டயர்ட்'' என்றான்.

அவள் தலையாட்டினாள். ''சரி அப்ப இன்னிக்கு ரெஸ்ட் எடுத்துக்கலாமா?'' என்றான். அவள் வியப்பாக அவனைப் பார்த்தாள்.

''நீ ஏன் இப்படிச் செய்கிறாய் என்பது எனக்குப் புரிந்திருக்கிறது'' என்பது போல அவளைப் பார்த்தான்.

''சரி, நோ ப்ராப்ளம், யு டேக் ரெஸ்ட்'' என்றவன். அதற்காக கதவைத் திறந்துட்டு வெளியெல்லாம் போக முடியாது. ''இங்கே சோஃபாவில் படுக்கறதெல்லாம் முடியாது. நீ அந்தப் பக்கம். நான் இந்தப் பக்கம்.'' என்று அந்த பெரிய கட்டிலினுடைய இந்த ஓரத்திலே படுத்துக் கொண்டான்.

ஃபோர் பாஸ்டர் பெட்என்று சொல்லுவார்களே அது போல இது பெரிய படுக்கையாக இருந்தது. இன்னும் மூன்று நான்கு பேர் வேண்டுமானாலும் இந்தப் படுக்கையில் படுக்கலாம் போல. அந்தப் படுக்கையில் இவன் ஒரு ஓரத்திலும் அவள் ஒரு ஓரத்தில் படுத்துக் கொள்வது ஒன்றும் பெரிய கடினமான காரியமாக இருக்கவில்லை.

"நீ டிரஸ் சேஞ்ஜ் பண்ணனும்னா அங்க ஒரு சின்ன ரூம் இருக்கு. அங்கே போய் மாத்திக்கலாம்" என்று சொல்லி விட்டு படுத்துவிட்டான்.

அவள் அந்த அறைக்குப் போய் சாதாரணமான கைத்தறி புடவைக்கு மாறிக்கொண்டு வந்தாள்.

"குட் நைட்!" என்ற அவனுடைய குரல் கேட்கவும் இவளும் "குட் நைட்!" என்றுசொல்லி விட்டு படுத்துக் கொண்டாள்.

தன்னைக் குறித்தே அவளுக்கு அதிர்ச்சி தோன்றியது. திடீரென்று 'ஏன் தான் இதை தடுத்தோம். இத்தனைக்கும் அவன் மேல் தனக்கு அன்பு இருக்கிறது. நேசம் இருக்கிறது ஆனாலும் ஏன் இதை ஏற்றுக் கொள்ளவில்லை' என்று அவளுக்குள் ஒரு சந்தேகம் வந்தது.

உடனே அதற்குப் பதிலும் கிடைத்தது. தனக்கு இருக்கிற நேசம் அவனுக்கு இல்லை. அவன் தன்னைத் தொட்டால் ஏதோ ஒரு அரேஞ்ச்ட் மேரேஜில் நடப்பது போலத்தான் இருக்கும். எடுத்த உடனே முழுமையாக பழகாத ஒரு ஆண்மகன் தன்னைத் தொட்டு தெரிந்து கொள்ளுவதை அவள் அப்போதைக்கு விரும்பவில்லை என்று தோன்றியது.



சற்று நேரம் அமைதியாக படுத்து விட்டு திரும்பிப் பார்த்தாள்.

அவன் அவளுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு படுத்திருந்தான். அவன் உறங்க வில்லை என்பது இவளுக்குத் தெளிவாகத் தெரிகிறது. ஆனால் ஆழ்ந்து உறங்குகிறவன் போல அவன் சீராக மூச்சு விட்டுக் கொண்டு படுத்திருந்தான். அதைப் பார்த்த உடனே அவளுக்கு இன்னும் ஆச்சரியமாகப் போய்விட்டது.

ஆண்களுக்கு என்ன? எந்தச் சூழ்நிலை வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் சமாளிப்பார்கள். பெண்கள் தான் கிடந்து தவிக்க வேண்டும் என்று கோபமாக எண்ணிக் கொண்டு மறுபடியும் திரும்பிப் படுத்துக் கொண்டு விட்டாள்.

மறுநாள் காலை எழுந்து தலையைக் குளித்து விட்டு வெளியே வந்தாள்.

உறவுக்காரர்கள் எல்லாம் நிறைந்து இருந்தார்கள். அவள் அடுக்களையை நோக்கிப் போன போது அருள்நாயகி எதிரே வந்தாள்.

"என்னம்மா வேணும்? காஃபியா, நான் கொண்டு வந்து தரச் சொல்றேன். இன்னும் ரெண்டு மூணு நாளைக்கு ரெஸ்ட் எடு. அவனை கவனிச்சா போதும்" என்று சொல்லி விட்டு "ஏய், ராக்காயி காஃபி கொண்டு வந்து கொடு" என்று குரல் கொடுத்தார்.

அவள் சற்று நேரம் அவனிடமிருந்து விலகி அங்கே இங்கே போய்விட்டு வரலாம் என்றால் அதற்கும் அருள்நாயகி பூட்டு போட்டுவிட்டார்.

கோபமாக வந்தது. திரும்பவும் அறைக்கே வந்தாள். அதற்குள்ளாக அவன் எழுந்து வாஷ் பேஸின் முன்னால் நின்று பல் துலக்கிக் கொண்டிருந்தான்.

''குட் மார்னிங்!'' என்றான்.

அவளும் ''குட் மார்னிங்!'' என்றாள்.

''இன்னைக்கு நான் இந்த வீடெல்லாம் சுத்திக் காட்டறேன். எல்லாரையும் அறிமுகப்படுத்தறேன்'' என்றான்.

''ம்!'' என்று அவள் தலையாட்டினாள்.

''கல்யாணம் எல்லாம் திருப்தியா இருந்ததா? பிடிச்சதா?'' என்று கேட்டான்.

''பிடிச்சது'' என்றாள்.

''சாதாரணமா இந்த மாதிரி சமயத்துல ஒரு ஹீரோ என்ன கேட்கணும்? என்னைப் பிடிச்சதான்னு கேட்கணுமா?'' என்று அவன் ஒரு கிண்டல் சிரிப்பை வெளியிட்டான்.

அவள் அதற்கு ஒன்றும் பேசவில்லை.

''அது சரி, ஏதோ கொஞ்சம் பிடிச்சுத்தானே கல்யாணத்துக்கு சரின்னே?''

அதற்கும் அவள் ஒன்றும் பேசவில்லை.

பொதுப்படையாக தன்னுடைய அலுவலகத்தைப் பற்றி சொல்ல ஆரம்பித்தான். இந்த டாப்பிக் சாருசித்ராவுக்கு மிகவும் பிடித்திருந்தது.

''ம்ஹூம் என்ன எக்ஸ்போர்ட் பண்றீங்க?'' என்றெல்லாம் கேட்டாள்.

''நாங்க என்னென்ன எக்ஸ்போர்ட் பண்றோம்னா...!'' என்று தொடங்கி அவனுடைய கம்பெனியில் இருந்து என்னென்ன பொருட்களை ஏற்றுமதி செய்கிறார்கள் என்று விவரமாக சொன்னான்.



சொல்லிவிட்டு ''இது மட்டும் இல்லை. நிறைய கன்ஸர்ன்ஸுக்கு ஏற்றுமதிக்கு நாம கைட் பண்றோம். அதைப் பத்தி நீ ஆஃபீஸுக்கு வந்தீன்னா புரியும்'' என்றான்.

அவளுக்கு பெருமகிழ்ச்சியாக இருந்தது.

தனக்கும் அவனுக்குமாக பேசிக்கொள்ளுவதற்கு போதுமான ஒரு விஷயம் இருக்கிறது என்று. ஆனால் இது கணவன் மனைவி பேசிக்கொள்ளுகிற விஷயமாக இல்லையே என்றும் தோன்றியது. ஏதோ ஒரு ஆரம்பம். அப்படித்தான் ஆரம்பிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

அதற்குள்ளாக அருள்நாயகி ''பேராண்டி உள்ளே வரலாமா?'' என்று குரல் கொடுத்துக் கொண்டு வந்தாள்.

''வா ஆத்தா, நீ! ஜோக்கெல்லாம் அடிச்சுக்கிட்டு!'' என்றான் வெற்றிவேல்.

அவன் இயல்பாக அப்படிப் பேசுவதை பார்த்து இவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

''ஆத்தா, நீ இந்த ரூமுக்கு வர்றதுக்கு என்ன? வரலாமான்னெல்லாம் கேட்டுக்கிட்டு?'' என்றரன்.

''இல்லடா பயலே! புதுசா கல்யாணம் ஆயிருக்குது. நீங்க ஏதோ பேசிட்டு கிடப்பீங்க. நான் ஒரு கூறுகெட்ட கிழவி. நினைச்ச நேரத்துல உள்ள நுழைஞ்சன்னா?'' என்றார்.

அவன் சிரித்தான். ''நீயா கூறுகெட்ட கிழவி?!'' என்று.

''சரிடா, என்னை கேலி பண்றது இருக்கட்டும்'' என்றவள் ''ராக்காயி, வா, காபியைக் குடு'' என்றாள்.

''இந்தாடா சாமி!'' என்று தானே காஃபி டம்ளரை வாங்கி சாருசித்ராவிடம் கொடுத்தார்.

சாரு சித்ரா சட்டென்று எழுந்து நின்று கொண்டிருந்தாள். ''அம்மணி நான் நடமாடிட்டே கிடப்பேன். ஒவ்வொருக்காவும் இப்படி எழுந்திருச்சு உட்கார்ந்து எழுந்திருச்சு... உட்கார்ந்து என்னத்துக்கு ஆகறது? உட்காரு, உட்காரு'' என்றாள்.

சாருசித்ராவுக்கு சிரிப்பாக வந்தது.

தன்னுடைய பாட்டி பேசுவதைப் பார்த்து அவனும் லேசாக புன்னகைத்தான்.

''அம்ச்சி. நீ இப்படிப் பேசி புள்ளையை மிரட்டிப் போடாதே''

''ஏண்டா, உன்னைக் கல்யாணம் பண்றதுக்கு அவ செரின்னு சொன்னப்பவே அவளோட தைரியம் என்னன்னு தெரிஞ்சு போச்சு. நானெல்லாம் மிரட்டினாக்க அவ பயந்துடப்போறாளாக்கும்?'' என்றாள் அருள்நாயகி.

சாருசித்ரா 'களுக்'கென்று சிரித்தாள்.

அவள் அப்படி சிரித்தவுடனே பார்வை பரிமாறிக் கொண்டார்கள்.

''பாரம்ச்சி. இப்ப வந்த புள்ளை எல்லாம் என்னைக் கிண்டல் பண்ற அளவுக்கு பண்ணிட்டே நீ?'' என்றான்.

''ஆமாடா பின்னே? உனக்கு சிக்னல் கொடுத்தாத்தான் உன்ற கூட பொழப்பு ஓட்ட முடியும். நீ என்ன லேசு பட்ட ஆளா? காங்கேயத்துக் காளை. உனக்கு இப்பத்தானே மூக்கணாங் கயிறு போட்டிருக்கு. அதைப் புடிச்ச அப்புறம் பாரு தெரியும்'' என்றார் பாட்டி.



சாரு சித்ரா மறுபடியும் களுக்கென்று சிரித்தாள்.

அவள் அப்படிச் சிரிப்பதைப் பார்த்து அவனுக்கும் கூட சிரிப்பு வந்தது போலும்.

''காஃபி கொடுக்கறியா, என்னங்கறே?'' என்றான்.

உடனே அவனுக்கு காஃபியை கொடுத்த ராக்காயி சிரிப்பை அடக்கிக் கொண்டு நின்றவள் ''அடுப்புக் கிட்டே எனக்கு வேலை இருக்குதுங்க'' என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டாள்.

இவர்கள் பேசிக் கொள்ளுகிற அந்த கொங்கு பாஷை அவளுக்கு மிகவும் சுவாரசியமாக இருந்தது.

அவளும் கோயம்புத்தூரில் வளர்ந்தவள்தான். ஆனாலும் அவளுடைய தந்தை அரசு அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். அம்மாவும் ஓரளவுக்கு படித்தவர் என்பதால் கிராமங்களுக்குப் போனால் மட்டும் தான் அவள் கொங்கு பாஷையை ரசிக்க நேரும்.

இப்போது இவர்களுடைய வீடு கோயம்புத்தூரில் இருந்து கிட்டத்தட்ட பத்து மைல் தொலைவிலே இருந்தது. பெரிய தோட்டத்துக்கு நடுவிலே இருந்த வீடு. அதனால் கிராமச் சூழ்நிலை தான் அங்கே இருந்தது என்று சொல்ல வேண்டும்.

தினமும் காரை எடுத்துக் கொண்டு கிளம்பி விடுவான் வெற்றிவேல் என்றெல்லாம் சொல்லக் கேட்டிருந்தாள்.

''அம்மணி, ரெண்டு பேருக்கும் சொல்லிப் போடறேன். சந்தோஷமா இருக்கோணும். ஒரு குறையும் இல்லாம அவன் உன்னை பார்த்துக்கோணும். அவனுக்கு ஒரு குறையும் இல்லாம நீ பார்த்துக்கோணும். அதைத் தான்

பார்த்துட்டு நானும் என்ற வூட்டுக்காரரும் சந்தோஷப் படணும். எங்களுக்கு இனி என்ன இருக்கு?'' என்றாள் அருள்நாயகி.

''இது நல்லா இருக்குதே! நீங்க ரெண்டு பேரும் உட்கார்ந்து பார்த்துட்டு இருக்கீங்கங்கறதுக்காக நாங்க டூயட் பாடிட்டு இருக்க முடியுமா?'' என்றான் வெற்றிவேல்.

''அடே, டூயட் பாட வேண்டாமடா! எங்களுக்குத் தெரியும்டா. ஒரு புருஷன் பொண்டாட்டி சந்தோஷமா இருக்காங்களா இல்லையான்னு பார்த்தாலே தெரியும். அது கூட தெரியாமயா இத்தனை நாளு இத்தனை வயசு ஓட்டியிருப்போம்!'' என்றாள் அருள்நாயகி.

அப்படிச் சொல்லும் போதே அதிலே ஏதோ ஒரு செய்தி இருப்பதாகப் பட்டது.

திடுக்கிட்டுப் போன சாருசித்ரா திரும்பி வெற்றி வேலைப் பார்த்தாள்.

வெற்றி வேல் அலட்டிக் கொள்ளாமல் ''இப்ப எங்க சந்தோஷத்தை எப்படி நிரூபிக்கணும் சொல்லு?'' என்றான்.

''எப்படி ஒரு பத்துப் பதினொரு மாசத்துக்குள்ளே ஒரு பேரனோ பேத்தியையோ என்ற கையில் கொடுத்துடு. அதான் வேணும்'' என்றார்.

''இது நல்லா இருக்குதே. ஏற்கனவே நாட்டுல பாப்பு லேஷன் ஜாஸ்தியா இருக்குதே. இப்ப என்னா? உனக்கு என்ன வேணும்? ரெட்டைக் குழந்தையா கொடுத்தர்லாம். ஆணும் பெண்ணும்'' என்று சிரித்தான் வெற்றிவேல்.

அவன் அப்படி சிரிப்பதைப் பார்த்தவுடன் அவள் திகைத்துப் போனாள்.



சட்டென்று பாட்டியும் பேரனும் குழந்தை லெவலுக்கு போய்விட்டார்களே என்று நினைத்தவுடனேயே அவள் முகம் குங்குமமாக சிவந்து போயிற்று.

அப்படி தன் முகம் அவன் முன்னால் சிவப்பது பிடிக்க வில்லை. ஆனால் அவளால் ஒன்றும் செய்யமுடியவில்லை. சட்டென்று முகத்தை மறைத்துக் கொள்வது போல இடது பக்கம் திருப்பிக் கொண்டாள்.

அருள்நாயகிக்கு மிகவும் மகிழ்ச்சியாகப் போய்விட்டது. இதைத்தானே அவர் எதிர்பார்த்தார். அதனால் ''பார்த்தி யாடா! புள்ளே வெட்கப்படையில எவ்வளவு அழகா இருக்குடா, எனக்கே இப்படி இருக்குது!'' என்று கன்னத்தைத் தடவி விட்டு விட்டு அவர்களுக்குத் தனிமை கொடுத்து விலகுவது போல ''சரி எனக்கு ஜோலி இருக்குது! நான் போறேன்!'' என்று கிளம்பினார்.

அவள் தன் வெட்கச் சிவப்பை அடக்கிக் கொண்டு நின்றாள்.

பாட்டி போய் ஒரு நிமிடம் ஆகியிருக்கும். திரும்பிப் பார்த்தாள். ஒரு வேளை அவன் நின்று தன்னை குறுகுறுவென்று பார்த்துக் கொண்டிருக்கிறானோ என்று எதிர்பார்ப்போடு அவள் திரும்பிப் பார்த்தாள்.

அவன் சுவடே காணவில்லை.

குளியலறையிலிருந்து தண்ணீர் விழும் சத்தம் கேட்டது. ஒரு பெருமூச்சோடு மறுபடியும் இருக்கையிலே அமர்ந்து கொண்டாள் சாருசித்ரா.

## அத்தியாயம் - 10

மூன்று நாட்கள் ஓடிவிட்டது!

மூன்று நாட்களும் சாருசித்ரா எதையோ ஒன்றைச் சொல்லி சமாளித்தாள்.

முதல் நாள் தலைவலி. அடுத்த நாள் களைப்பு. அடுத்த நாள் மீண்டும் களைப்பு. இப்படியே ஓட்டி விடலாம் என்று அவள் எண்ணிக்கொண்டாள்.

பகல் நேரங்கள் படு அவஸ்தையாக இருந்தது. ஒரு வாரம் அலுவலகத்துக்குச் செல்ல வேண்டாம் என்று தாத்தாவும் பாட்டியும் வெற்றிவேலுக்கு சொல்லி விட்டார்கள். அதனால் வெற்றி வேல் அலுவலகத்துக்குச் செல்லவில்லை. ஆனால், கலைஞானம் தாத்தா சற்று நேரம் போய் விட்டு வந்தார். எக்ஸ்போர்ட் அலுவலகத்துக்கு சோமநாதன் போய்விட்டு வந்தான். அங்கே இருந்து செல்ஃபோனிலேயே தகவல்கள் வாங்கிக்கொண்டு சோமநாதன் ஆஃபீஸை நடத்திக் கொண்டிருந்தான்.

இவர்கள் ஒரு முறை சாருசித்ராவின் வீட்டுக்குப் போய்விட்டு வந்தார்கள்.

அழைப்பு, மறு அழைப்பு என்று உறவினர்கள் எல்லாம் கூட்டமாக அவர்களோடு வந்து போய்க் கொண்டிருந் தார்கள். ஆனால் எங்கே போனாலும் சரி உறவினர்கள் எல்லாம் வெகு கவனமாக அவர்கள் இருவரையும் அருகருகே அமர்த்தி அழகு பார்த்தார்கள்.

அப்படி அமரும் பொழுது அவன் வேண்டும் என்றே அமர்ந்தானோ இல்லையோ தெரியாது. கொஞ்சம் நெருங்கித்தான் அமர்ந்தான். அவளுக்கு அது சற்று கூச்சமாக இருந்தது.



மெல்ல அவள் காதுக்கருகில் குனிந்து "தாத்தா பாட்டி கவனிச்சிட்டே இருக்காங்க. அதனால நான் இதெல்லாம் பண்ணத்தான் வேண்டியிருக்கு. யு ஹேவ் டு டாலரேட்" என்றான்.

அவள் தலையைக் குனிந்தபடியே தலையை அசைத்தாள். அப்போதும் அவள் முகம் சிவந்தது.

தன் அவஸ்தையை உணர்ந்து ஒரு பார்வையை அவன் வீசினான் என்பது அப்பொழுது அவளுக்கு புரிந்தது.

நான்காம் நாள் இரவு அவள் உறவினர்கள் எல்லோரு டனும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தாள். இப்பொழுது ஓரளவுக்கு கலைஞானம் தாத்தாவுடைய உறவினர்களை அவள் அறிமுகப்படுத்திக் கொண்டிருந்தாள். கலகலப்பாகப் பேசவும் ஆரம்பித்திருந்தாள்.

கட்டு செட்டாக வளராததனாலும் அலுவலகத்தில் பணி செய்கிற அனுபவம் இருந்ததாலும் அவள் இயல்பாகவே எல்லோருடனும் பழகினாள்.

நான்காம் நாள் அடுக்களைக்குச் சென்று சற்று உதவி கூட செய்தாள்.

மிக நெருங்கிய உறவினர்கள் மட்டும் ஒரு பத்து இருபது பேர் தங்கியிருந்தார்கள். அவர்களும் அன்று மாலை அவரவர்கள் ஊருக்குச் செல்வதாக ஏற்பாடு. கலைஞானம் தாத்தாவும் அருள்நாயகிப் பாட்டியும் எல்லோரையும் வழி அனுப்பினார்கள்.

எல்லாரும் சென்றதற்குப் பிறகு வீடே வெறிச்சோடிக் கிடக்கிற மாதிரி இருந்தது.

வெற்றிவேல் தாத்தாவிடம் "தாத்தா! எல்லாரும் போயாச்சு இல்லை? நான் கொஞ்சம் ஆஃபீஸுக்கு போயிட்டு வர்றேன். மூணு நாளா போகலை" என்றான்.

"அதான் உன் அருமைத் தம்பி பார்த்துக்கறானே?" என்றார் கலைஞானம்.

"தாத்தா, அவன் சொன்னபடி செஞ்சுட்டுத்தான் இருக்கான். இருந்தாலும் சில முக்கியமான விஷயங்களுக்கு நான் போய்த்தான் ஆகணும். முக்கிமான ரெண்டு மூணு கையெழுத்து போட வேண்டி இருக்குது!" என்று சொல்லி விட்டு ஒரு ஐந்து மணி வாக்கில் அவளிடம் வந்து "நான் கொஞ்சம் ஆபீஸுக்கு போயிட்டு வந்துடறேன். எவ்வளவு சீக்கிரம் வர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வந்துடறேன்!" என்றான்

அவள் "சரி!" என்று தலையாட்டினாள்.

அவன் கிளம்பியதற்குப் பிறகு அவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

வீட்டை விட்டு வெளியே வந்து பார்த்தாள்.

அவர்கள் வீட்டுக்கு முன்னாலும் பின்னாலும் ஒரு பெரிய தோட்டம் இருந்தது. மிகவும் பிடித்த பகுதியாயிற்றே அதனால் தோட்டத்தை எல்லாம் சுற்றிப் பார்த்து வர கிளம்பினாள். "அண்ணி, பூச்சி பொட்டு இருக்கும். நானும் வரேன்!" என்று சோமநாதன் வந்து கூட சேர்ந்து கொண்டான்.

"சோமு, நீங்க எப்ப வந்தீங்க?" என்றாள்.

"அண்ணா! ஃபோன் செஞ்சு என்னை வரச் சொல்லிட் டாங்க. என்னென்ன சொல்லணுமோ அண்ணனுக்கு



சொல்லிட்டு வந்துட்டேன். அப்பா மூணு நாளு ஆஃபீஸ் வேலைக்கே திண்டாடி தெருவுல நின்னுட்டேன். அண்ணன் எப்படித்தான் இத்தனையும் சமாளிக்கிறாங் களோ?!" என்றான்.

அவள் புன்னகைத்தாள்.

"ஏன் அண்ணி, இந்தத் தோட்டத்துக்குள்ளே கொஞ்சம் வாக்கிங் போகலாமா?" என்றான்.

"சரி!" என்று போனார்கள்.

"ஐந்து மணிக்கு மேல் ஆச்சு அண்ணி. வயல்பக்கம் போக வேண்டாம். நம்ம வீட்டைச் சுத்தி இருக்கிற தோட்டமே சுத்தமா இருக்கும். நடக்கறதுக்கு ஏதுவா இருக்கும்" என்று நடந்தார்கள்.

விதவிதமான ரோஜாச் செடிகள் இருந்தன. ஒரு பக்கத்திலே மல்லிகைச் செடி இருந்தது. தலைக்கு வைத்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் பிச்சிப்பூ செடி இருந்தது. அவள் உடனே "பொண்ணுங்களே இல்லாத வீட்ல எதுக்கு இத்தனை செடிகள் வச்சிருக்கீங்க?" என்று கேட்டாள்.

"எல்லாம் பாட்டியோட வேலை. ஒரு வருஷத்துக்கு முன்னாடியே இருந்தே இதெல்லாம் ஆரம்பிச்சுட்டாங்க. வரப் போற பொண்ணுக்கு தினமும் பூ இருக்கணுமாம். சாமி கும்பிடறதுக்கு பூ இருக்கணுமாம். பாருங்க, இந்தப் பக்கம்" என்று காட்டினான்.

அங்கே வேறு விதமான வகை வகையான செடிகள்! செம்பருத்திச் செடி, அரளிச் செடி என்று இருந்தது.

"ரொம்ப அழகான தோட்டம். அண்ணனே இன்ட்ரஸ்ட் எடுத்து மெயின்டெய்ன் பண்றது தெரியுமா?"

அவள் திரும்பி ஆச்சரியமாகப் பார்த்தாள். "உங்க அண்ணனுக்கு கார்டனிங் தெரியுமா?" என்றாள்.

"ஆமா அவனவன் இந்த வீட்ல விதவிதமான பட்டாம் பூச்சி மாதிரி திரிவானுங்க. எங்க அண்ணன் இங்க நிஜப் பட்டாம் பூச்சி வளத்துட்டிருக்காரு" என்றான்.

"ஓஹோ!" என்றாள். அவள் முகத்தில் மகிழ்ச்சி பொங்குவதை அவன் அன்புடன் கவனித்தான்.

"பரவாயில்லை! ஏதோ ஒரு விஷயமாவது இருவருக்கும் ஒத்துப் போகிறது!" என்று அவள் எண்ணிக் கொண்டாள்.

"அண்ணா ரொம்ப ஹார்ட் ஒர்க்கிங் அண்ணி" என்றான் அவன்.

"எனக்கொரு சந்தேகம்!" என்றாள் அவள்.

"என்ன அண்ணி சந்தேகம்?" என்றான் அவன்.

"என்னைப் பத்தி இப்படியெல்லாம் சொல்லு அப்படின்னு உங்களை அனுப்பிச்சிருக்காரோ?!" என்றாள்.

அவன் கலகலவென்று சிரித்தான்.

"போங்க அண்ணி, எங்க அண்ணனுக்கு அதெல்லாம் பிடிக்கவே பிடிக்காது. தன்னைப் பத்தி யாராவது புகழ்ந்து சொன்னா கூட வெட்டி விட்டுட்டுப் போயிட்டே இருப் பாரு. ஆனா அவரைப் பத்தி நீங்க தெரிஞ்சுக்கணுமில்லே. அதுக்காக சொன்னேன்" என்றான்.

"கரெக்ட்! கரெக்ட்! என்றாள் ஆமோதிப்பவளாக.

"இந்த நேரத்துக்கு அண்ணன் நிறைய விஷயங்கள் சொல்லியிருப்பாரு. நான் இப்படியாக்கும்னு உங்ககிட்ட பேசியிருக்க மாட்டாரு அதுக்காக நான் சொன்னேன்"



"அது என்னமோ நிஜம் தான். தொழிலைப் பத்திதான் பேசினாரு!"

"தொழில் அவருக்கு உயிருங்க அண்ணி. இந்த எக்ஸ்போர்ட் கம்பெனி அவருக்கு ரொம்ப ரொம்ப உயிரு. தாத்தா பாட்டியை ரொம்ப பிடிக்கும். அதோட எனக்கும் என் தம்பிக்கும் ஒரு மூலையில கொஞ்சம் இடம் கொடுத்திருக்காரு" என்றான்.

"ஹலோ! அப்படியெல்லாம் இல்லை. உங்க அண்ணன் கல்யாணத்துல போட்ட ஒரே ஒரு கண்டிஷன் என்ன தெரியுமா?" என்றாள் அவள்.

அவன் ஆர்வமாக அவளைப் பார்க்க,

"என் லைஃப் டைம்முக்கு என் தம்பிங்க என் கூடத் தான் இருப்பாங்க. அவங்களையும் நீ பார்த்துக்கணும். உன் பொறுப்புன்னாரு" என்றாள்,

சோமநாதன் நின்றான். அவளைத் திரும்பிப் பார்த்தான், "நிஜமாவா அண்ணி சொல்றீங்க?" என்றான்.

"ஆமாங்க சோமு!" என்றாள் அவள்.

அவன் கண்கள் கலங்கி விட்டன.

"எங்க வாழ்க்கையிலே எங்களுக்குக் கிடைச்ச பொக் கிஷம் எங்க அண்ணன் தான் அண்ணி. ஆனா நாங்க அவருக்கு சுமையாயிட்டோம்!" என்றான்.

"ஹலோ, அப்படியெல்லாம் இல்லை. அவரு ஒரு வகையில மிரட்டுறதுல சந்தோஷப்படறாருன்னு நினைச்சுக் கோங்க" என்றாள்.

அவன் திரும்பி அவளை ஆச்சரியமாக பார்க்க

அவள் குறும்பாக சிரித்துக் கொண்டு "சில பேருக்கு யாரையாவது மிரட்டிட்டே இருக்கணும். ஆபீஸ்ல இருந்து இங்க வந்தா மிரட்டறதுக்கு ஆளு வேணுமில்லே. அதுக்கு நீங்க ரெண்டு பேரு கிடைச்சிருக்கீங்க. அதனால நீங்கதான் அவருக்கு ஹெல்ப் பண்ணியிருக்கீங்க!" என்றாள்.

அவன் புன்னகைத்தான்.

அண்ணி தன்னைத் தேற்றுவது புரிந்தது. "அண்ணன் ரொம்ப லக்கி அண்ணி!" என்றான்.

"ஏன்!?" என்று அவள் பார்க்க "இவ்வளவு பிரில்லியண்டா ஒரு வைஃப் கிடைச்சிருக்கீங்களே?" என்றான்.

"போதும்! அடுத்த புகழ் புராணம் என்னைப் பத்தியா? வேண்டாம் சோமு" என்று இப்படி கலகலப்பாக பேசிக் கொண்டே அவர்களது அறைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அதே நேரத்தில் அருள்நாயகியிடம் ஃபோனில் அவளைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தான் கணவன்.

"என்னது! சோமுவுடன் வாக்கிங் போயிருக்காளா?" என்று அந்தப் பக்கம் கேட்டான்.

"ஆமாம், அதை ஏன் கேட்கறே? நம்ம ரூம் ஜன்னல்லே இருந்து பார்த்தா ரெண்டு பேரும் ஒரே கதை அடிச்சிட்டு சிரிச்சிட்டு இருக்காங்க!" என்றாள் பாட்டி.

"அப்படியா!" என்றான் அவன் சந்தோஷமாக.

"நல்ல வேளை. தாத்தா வெளியில போயிருக்காரு இருந்தார்னா" என்று இழுக்க,

"விடு அம்ச்சி! அவரை சமாளிச்சுக்கலாம். சரி நான் எட்டு மணிக்கு வந்துடறேன்!" என்று சொல்லிவிட்டு ஃபோனை வைத்தான்.



அதே போல எட்டு மணிக்கு வந்தான்.

உணவு அருந்த அமரும் பொழுது சோமு, கண்ணன் இருவரையும் அழைத்து எதிரிலே அமர்த்திக் கொண்டான்.

அருள்நாயகி பாட்டி பரிமாற வந்த பொழுது அவள் எழுந்து பாட்டி "நீங்க உட்காருங்க, இனிமேல் பரிமாற்ற வேலையெல்லாம் என்னது" என்று சொன்னாள்.

கலைஞானம் தாத்தாவையும் அழைத்துக் கொண்டு வந்தாள். இந்தப் பையன்களோடு அமருவதில் அவருக்குப் பெரிதும் விருப்பமில்லை என்றாலும் வீட்டுக்கு வந்து புதுப்பெண் வந்து அழைக்கிறாளே என்று வந்தார்.

சமையல்காரப் பெண்களோடு உதவி புரிந்து கொண்டு அவள் எல்லோருக்கும் இதமாக பேசிக்கொண்டு பரிமாறுவதை அவன் கண்கள் உள்வாங்கிக் கொண்டிருந்தன.

நேரடியாகப் பார்க்கவில்லை என்றாலும் அவன் பார்வை தன் மேல் தான் இருக்கிறது என்பது அவளுக்குப் புரிந்தது.

சோமநாதனிடம் கண்ணனிடமும் அவள் கலகலப்பாக பேசுவது கலைஞானம் தாத்தாவுக்கு கொஞ்சம் பிடிக்கவில்லை. அவள் அவரையும் இடைஇடையே சேர்த்துக் கொண்டிருந்தாள்.

ஒன்பது மணி வாக்கில் தங்களுடைய அறைக்கு வந்தார்கள் இரண்டு பேரும்.

அறைக் கதவை லேசாக திறந்து தான் வைத்துக் கொண்டு அமர்ந்திருந்தார்கள். பத்து மணி வாக்கில் தான் அறைக் கதவை மூடுவார்கள்.

"எல்லாரும் இருக்காங்க. ஒன்பது மணிக்கே கதவைச் சாத்துவதா?" என்று அவள் தான் இரண்டு மூன்று நாட்களாக தடுத்து விட்டாள்.

உள்ளே வந்தவுடன் "ரொம்பத் தாங்க்ஸ்!" என்றான் அவன்.

"எதுக்கு?" என்றாள் அவள் ஆச்சரியமாக.

"இல்லை சோமு, கண்ணன் கிட்டயும் ஈஸியா பழகிட்டியே? ஐ லைக் இட்" என்றான்.

"ஹலோ, உங்களுக்குப் பிடிக்கணுங்கறதுக்காக இல்லை. அவங்க ரெண்டு பேரையும் எனக்கு பிடிச்சிருச்சு. ரொம்ப நல்லவங்க ரெண்டு பேரும் இயல்பா இருக்காங்க. ஆனா அவங்களுக்கு ஒரு காம்ப்ளக்ஸ் இருக்கு" என்றாள் ஏதோ ஆராய்ச்சி செய்பவள் போல.

அவன் படுக்கையிலே சாய்ந்தபடி "அப்படியா சொல்றே?" என்றான்.

"ஆமாம். அவங்க ஏதோ உங்க தோள்ல தொங்கற சுமை மாதிரி நினைச்சுக்கறாங்க. ரொம்ப விரட்டிடுவீங்களோ?" என்றாள்.

அவன் ஆச்சரியமாக அவளைப் பார்த்து "கொஞ்சம் கண்டிஷன்தான்"

"ஒரு வகையிலே அது நல்லதுதான். ஆனா அவங்களுக்கும் இந்த வீட்ல ஒரு பாதுகாப்பு உணர்வு வேண்டியிருக்கு!" என்றாள்.

"அப்படிங்கறே?!" என்றான் அவன்.

"ஆமா, இனிமே நான்தான் வந்துட்டேனே. உங்களுக்கும் அவங்களுக்கும் இடையிலே பாலம் மாதிரி இருப்பேன்" என்றாள்.

"தட்ஸ் ரியலி நைஸ்!" என்றவன் அன்று அலுவலகத்தின் நடந்த முக்கியமான விஷயங்களை சொன்னான்.



அவளும் சுவாரசியமாக கேட்டுக் கொண்டாள். ஒன்றிரண்டு ஆலோசனைகள் சொன்னாள்.

"இது நல்லா இருக்கே!" என்றான் அவன்

"என்ன என்னுடைய பிஏ க்கு வேலை வேண்டாமா?" என்று அவன் சிரித்தான்.

வரிசைப் பற்கள் தெரிய அவள் சிரித்த போது சற்று நேரம் அவளை ஆழ்ந்து பார்த்தான்.

அவள் முகம் சிவந்து போனது.

"அதென்ன முகம் அப்படி சிவந்து போகுது!" என்று அவன் ஆச்சரியப்பட்டான்.

"இப்படிப் பார்த்தா சிவக்காம இருக்குமா?" என்றாள் அவள்.

"ஹலோ, நான் மறுபடியும் ஒரு விஷயத்தை தெளிவு பண்ணிடறேன். ஐ ஆம் நாட் ரொமாண்டிக். அதுக்காக கணவன்ற டியூட்டியெல்லாம் விட்ற மாட்டேன்!" என்று சொல்லிக் கொண்டே அவன் விளக்கை அணைத்தான்.

"இது டியூட்டியா?" என்று அவள் முணுமுணுத்தாள்...

"ம் என்ன சொன்னே?" என்று அவன் கேட்க.

"ஒண்ணும் இல்லை" என்றாள்.

அவளுக்கு அன்றைக்கு சொல்லுவதற்கு எந்த விதமான வலியும் தோன்றவில்லை.

"இன்னைக்கு எந்த வலியும் வரலையா?" என்று சிரித்தான்.

"வாழ்க்கையைச் சந்திச்சுத்தான் ஆகணும் சாரு!" என்று வலக்கையால் அணைத்தான். அதற்கு மேலும் அவளால் தடுக்க முடியவில்லை.

## அத்தியாயம் - 11

வாழ்க்கை வேகம் எடுத்தது!

திருமணம் முடிந்து மூன்று மாதங்கள் ஓடியிருந்தது! வெற்றிவேல் சாருசித்ரா இரண்டு பேருக்குமே நேரம் போதாதது போல இருந்தது.

தினமும் அதிகாலையில் எழுந்து அவன் வாக்கிங் போய்விடுவான். அவள் சற்று நேரம் தோட்ட வேலை செய்து விட்டு அடுக்களைக்கு வருவாள். அங்கே அருள் நாயகி பாட்டியோடு சேர்ந்து வேலையாட்களை கொஞ்சம் கவனித்து விட்டு வேலைகளை ஒழுங்குபடுத்தி விட்டு திரும்ப வந்து புறப்படுவாள்.

ஒன்பதரை மணிக்கு இரண்டு பேருமாக காரிலே கிளம்புவார்கள்.

அலுவலகத்துக்குப் போய் விட்டால் அது வேறு உலகமாக இருந்தது.

அவளுக்கும் பிடித்த இடம் இப்போதைக்கு அலுவலகமாகத்தான் இருந்தது. அங்கே போனால் அவளுக்கு சுத்தமாக வெற்றிவேல் தன் கணவன் என்பது மறந்து போகும்.

அந்த நிறுவனத்தினுடைய முதலாளி என்பது போல்தான் அவன் நினைத்தான். அவளுக்கும் ஒரு டைரக்டர் என்று போஸ்ட் கொடுத்து அமர வைத்திருந்தான். தனி கேபின் இருந்தது.

அதனால் அடிக்கடி அவனுடைய அறையிலே வந்து அமர்ந்திருக்க வேண்டும் என்ற அளவுக்கு இல்லாமல் போனது.



முக்கியமான நேரங்களில் மட்டும் அவனே அவளுடைய அறைக்கு வருவான். இல்லை இவள் போய் அவனுடைய அறையிலே கேட்பாள்.

அங்கே பணியாற்றுகிற வேலையாட்களுக்கெல்லாம் ஒரு விஷயம் தெளிவாகத் தெரிந்தது. வெற்றிவேலுக்கு சரியான இணையாகத்தான் இந்தப் பெண் வாய்த்திருக்கிறாள். இவளும் கெட்டிக்காரிதான் என்பது புரிந்தது.

அதனால் முன்னைக் காட்டிலும் இப்பொழுது எச்சரிக்கையோடு இருந்தார்கள். வெற்றிவேலின் கண்ணுக்குத் தப்பிய பிரச்சினைகளைக் கூட அவள் கண்டு பிடித்து அவன் கவனத்திற்கு கொண்டு வந்து அதற்கான தீர்வுகளையும் கூட சொன்னாள். அதனால் வெற்றிவேல் அலுவலக வேலையை பொறுத்த வரைக்கும் உற்சாகமாகத் தான் இருந்தான்.

அன்றைக்கு முதல் நாள் இரவு சுவாரசியமான ஒரு சம்பவம் நடந்தது.

மாதக் கடைசியில் இரண்டு பேரும் புறப்பட்டு வீட்டுக் கருகே வருகையில் அவள் கேட்டாள். "ஒரு மாசமா இந்தக் கம்பெனில வேலை செஞ்சாச்சு. என்னோட கெப்பாசிட்டிக்கு என்ன சேலரி தரப்போறீங்க? என்று.

அவன் திடுக்கிட்டுப் போய் அவளை திரும்பிப் பார்த்தான்.

"ஏய் என்ன கேட்கறே நீ? நீ ஒன் ஆப் த பார்ட்னர்ஸ் தெரியுமா? என்றான்.

அவள் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. "இருக்கட்டும். இப்போ நீங்க என்ன சம்பளம் எடுத்துக்கறீங்க?" என்று கேட்டாள்.

அவன் சொன்னான்.

"சம்பளம் எடுத்துக்கறீங்கதானே? அப்ப எனக்கும் ஒரு சம்பளம் போடணும்" என்றாள்.

"அது சரிதான்"என்று தன்னுடைய சட்டைப் பையிலே இருந்து ஒரு கவரை எடுத்து நீட்டினான். "வீட்டுக்குப் போய் சர்ப்ரைஸா கொடுக்கலாம்னு நினைச்சுட்டு இருந்தேன்" என்றான்.

அவள் கொஞ்சம் வெட்கித்தான் போனாள்.

தன் கணவன் எல்லாவற்றிலும் சரியாகத்தான் நடந்து கொள்கிறான் என்று எண்ணிக் கொண்டாள்.

"நல்லா பாரு, நீ மொதல்ல வேலை செஞ்சுட்டு இருந்த கம்பெனியை விடக் கொஞ்சம் கூடுதலா போட்டிருக்கேன்" என்றான்.

அவள் சிரித்தாள், சிரித்துவிட்டு "சரி, இப்போ நான் வைஃபா என்ன பண்ணனும். அந்தக் கவரை திருப்பி உங்ககிட்டே கொடுத்துடணுமா?" என்று கேட்டாள்.

அவன் காரை ஓட்டுவதை ஒரு நிமிடம் நிறுத்தி விட்டு வண்டியை ஓரமாக ஒதுக்கிவிட்டு கலகலவென்று சிரித்தான். "என்ன சொன்னே?" என்றான்.

"இல்லை. நான் ஒன் ஆஃப் த டைரக்டர்ஸா ஒரு சாலரி டிமாண்ட் பண்ணினேன் கொடுத்துட்டீங்க. இப்ப வைஃபா என்ன பண்ணனும். அந்த சாலரியை உங்க கிட்ட ஹேண்ட் ஓவர் பண்ணனுமா?" என்று கேட்டாள்.

அவள் கொஞ்சம் சீரியஸாகத்தான் கேட்கிறாள் என்பது புரிய அவன் "உங்க வீட்ல என்ன பண்ணுவே?" என்று கேட்டான்.



"எங்க வீட்ல எங்க அப்பாகிட்ட ஃபர்ஸ்ட் மந்த் மட்டும் தான் கொடுத்தேன். அதுக்கப்புறம் நீயே வச்சுக்கம்மான்னு சொல்லிட்டாரு. நானா யாருக்காவது கிப்ட் வாங்கிக் கொடுத்துடுவேன்" என்றாள்.

"இங்கேயும் அப்படியே இருக்கலாம். தட் இஸ் யுவர் மணி. யு வர் ஹார்ட் இயர்ன்ட் மனி. நீ உழைச்சு சம்பாதிச்ச பணம். அது உனக்குத்தான் சொந்தம்"

"சரி ஃபர்ஸ்ட் மந்த் மட்டும் நீங்க வாங்கிக்கங்க" என்றாள் அவள்.

"சரி வீட்டுக்குப் போய் பேசலாம்!" என்றான்.

வீட்டுக்குப் போனதும் "தாத்தா பாட்டிக்கிட்ட குடுத்துக் கும்பிட்டுக்கோ"என்று சொன்னான்.

அவளும் மகிழ்ச்சியாக அந்தப் பணத்தைக் கொண்டு போய் தாத்தா பாட்டியிடம் கொடுத்து விட்டு அவர்கள் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டாள்.

அவர்கள் ரொம்பவும் மகிழ்ச்சியானார்கள்.

அந்த பணம் இருந்த கவரைப் பிரித்துப் பார்த்தார் தாத்தா. ஒரே ஒரு நூறு ரூபாய் நோட்டை மட்டும் சட்டைப் பையிலே வைத்துக் கொண்டார். அருள்நாயகி கையிலும் ஒரு நூறு ரூபாய் நோட்டை கொடுத்துவிட்டு "சந்தோஷமா செலவு பண்ணும்மா, இது உன்னோட பணம்" என்று அவள் கையிலே கொடுத்து விட்டார்.

"ஏங்க அதுக்குள்ள நீங்க எடுத்தாச்சா? பூஜை ரூம்ல வைக்க வேண்டாமா? என்றார் அருள் நாயகி.

"நான் பூஜை ரூம்ல வச்சுத்தான் எடுத்துட்டு வந்தேன் பாட்டி!" என்றாள் சாரு சித்ரா.

"அன்பான பொண்ணு!" என்று கன்னம் வழித்தாள் அருள்நாயகி.

"சரி, நீங்க ரெண்டு பேரும் எங்காவது போயிட்டு வாங்க!" என்று சொல்லிவிட்டு அவர்கள் அவர்கள் வேலையை பார்க்க போனார்கள்.

அவள் திரும்பிக் கணவனைப் பார்த்தாள்.

அவன் கண்ணைக் காட்டிவிட்டு அறைக்குப் போனான். "இன்னைக்குக் கொஞ்சம் டயர்டா இருக்கு. எங்காவது போகணும்னா போகலாம்" என்றான்.

"கோவிலுக்கு வேண்ணா போயிட்டு அப்படியே எங்க அம்மா வீட்டுக்குப் போயிட்டு வரலாமா?" என்றாள்.

'சரி' என்று அவன் கிளம்பினான்.

கோயிலில் அவனுக்குக் கிடைத்த மரியாதை அவளுக்கு வழக்கம் போல சுவாரசியமாக இருந்தது.

எப்போதுமே அதைப் பற்றி கேலி செய்வாள். அவன் சிரித்துக் கொள்வான். "எதுக்கு இந்த கும்பிடு போடறாங்க, நீங்க தட்ல போட்ட நூறு ரூபாய்க்காகத்தான்"

"சே, நீயே உன்னை கேவலப்படுத்திக்காதே. உன் வீட்டுக்காரனையும் கேவலப்படுத்தாதே. எங்க தாத்தா கோயம்புத்தூர்ல ஃபேமஸ் ஆன ஒரு மில் ஓனர் தெரியுமா?" என்றான்.

"அப்படிங்களா!" என்றாள் அவள் பவ்யமாக.

கோவிலைச் சுற்றி விட்டு வந்தார்கள். பிறகு அவளுடைய பெற்றோர்களை சந்திக்கப் புறப்பட்டார்கள்.

"கவர் எடுத்துக்கிட்டியா?" என்று கேட்டான்.



"ஏங்க?" என்றாள்.

"நம்ம வீட்டுக்கு வந்து ஃபர்ஸ்ட் மந்த் சேலரி வாங்கியிருக்கே. அவங்களுக்கு ஏதாவது கிஃப்ட் வாங்கிட்டுப் போக வேண்டாமா?" என்றான்.

'சரி' என்று புகழ் பெற்ற துணிக்கடைக்குள் நுழைந்தார்கள்.

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் துணிமணிகள் எடுத்துக் கொண்டு அதே போல அருள் நாயகிக்கும் கலைஞானம் தாத்தாவுக்கும் துணிமணிகள் எடுத்து விட்டு "உங்களுக்குப் பிடிச்சதை செலக்ட் பண்ணுங்க" என்றாள் அவள்.

"எனக்கா?!" என்றான் அவன்.

"ஆமா, பின்னே?" என்று அவள் சற்றே கோபமாகப் பார்க்க "ஐயய்யோ! பெரியவங்க ஆர்டர் போட்டுட்டீங்க. முறைச்சாவெல்லாம் எனக்குத் தாங்காதம்மா" என்று கேலி பேசி விட்டு அவனும் "கரெக்டா சொல்லு. என்ன எஸ்டிமேட்டில் எடுத்துக் கொள்ள?" என்றான்.

அவள் சொன்னாள்.

அவன் ஒரு நல்ல காஸ்ட்லியான டிரஸ் செட் எடுத்துக் கொண்டான்.

"தாங்க் யூ!" என்று சொல்லி விட்டு "உனக்கு எடுத்துக்கலையா? வேண்ணா நான் செலெக்ட் பண்றேன்" என்று அவளுக்கு அவனே ஒரு அழகான சுடிதார் செட் செலெக்ட் பண்ணினான். இரண்டு பேருக்கும் எடுத்து வைத்த உடனே அவனை அழைத்து "சோமுவுக்கும் கண்ணனுக்கும் எடுத்துடலாம்!" என்றாள்.

அவன் கண்ணில் மின்னல் தோன்றியது!

எப்பொழுதுமே சோமுவையும் கண்ணனையும் பற்றிக் குறிப்பிடும் பொழுது அவன் முகத்தில் ஒரு வாஞ்சையான மனோபாவம் தோன்றுவதை அவள் கவனித்திருந்தாள். அது குறித்து அவளுக்குப் பொறாமை கூட இருந்தது.

தன்னை பற்றி இன்னும் அவனுக்கு அந்த பாவம் வரவில்லை என்று தோன்றியது. அவனும் மகிழ்ச்சியாக "என்ன எஸ்டிமேட்?" என்றான்.

"நீங்களே டிசைட் பண்ணுங்க!" என்றாள்.

அவர்கள் இரண்டு பேருக்குமாக தனக்கு எடுத்ததை விட சற்று விலை குறைவாக எடுத்துக் கொண்டான்.

கவனித்துக் கொண்டிருந்த சாருசித்ரா மெல்லப் புன்னகைத்தாள். தனக்கு முக்கியத்துவம் கொடுக்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டு தான் கொஞ்சம் விலை உயர்வாக எடுத்துக் கொண்டாலும் அவர்களுக்கு சற்றுக் குறைவாகவே எடுத்திருக்கிறான் என்பதிலேயே அவளுடைய மனத்தை இவன் புரிந்து கொண்டான் என்பது இவளுக்கு தெரிந்தது.

ஆச்சரியமாக இருந்தது!

நிறைய விஷயங்களில் அவன் தன்னைப் புரிந்து கொள்கிறான். ஆனால், தன்னுடைய தோழியர்கள் சொல்லுவது போல இளகி, உருகி நெருங்கி நிற்பதாக அவன் எப்போதும் உணரவே இல்லை. அந்த ஒரு மலர்ச்சிக்காக மனம் ஏங்கித் தவித்தாள்.

எல்லாக் கணவனையும் போல, எல்லாக் கடமைகளையும் செய்தான். ஆனால், அதில் எல்லாம் அவள் எதிர்பார்க்கிற அந்தக் குழைவும், அந்த வெளிப்பாடும்



இல்லை என்பது ஒரு ஓரத்தில் அவளுக்குக் கவலையாகத் தான் இருந்தது.

"அப்புறம் வெளியே ஏதாவது சாப்பிடுவோமா?" என்றான்.

"சரி!" என்றாள் அவள்.

வீட்டுக்கு ஃபோன் செய்து "அம்ச்சி, நாங்க இங்க ஹோட்டல்ல சாப்பிட்டுட்டு வந்துடறோம். உங்களுக்கு ஏதாவது வாங்கிட்டு வரட்டுமா?" என்று கேட்டான்.

"இல்லை சாமி, நீங்க ரெண்டு பேரு மட்டும் போயிட்டு வாங்க. ம்... எங்க ரெண்டு பேருத்துக்கும் கடை சாப்பாடு சேராது. பயலுகளுக்கு வேண்ணா வாங்கிட்டு வரதுன்னா வா!" என்றார் அருள்நாயகி.

அவன் பாட்டி சொன்னதைப் புரிந்து கொண்ட அவளும் சிரித்துக் கொண்டாள். "இந்த ஃபோன் கன்வீனியன்ட். ரெண்டு பேர் என்ன பண்ணினாங்க தெரியுமா?"என்று இந்த மூன்று மாதங்களிலே அவர்கள் செய்கிற குறும்புகளை எல்லாம் பகிர்ந்து கொண்டாள்.

அவள் ரசித்துக் கேட்டு விட்டுச் சொன்னாள்.

"அது எப்படிங்க?" என்றாள்.

"எது?" என்று அவன் சொல்லி விட்டுத் திரும்ப ஹோட்டல் சர்வர் ஆர்டர் எடுத்துக் கொள்ள வந்தான். "சீக்கிரம் எடுத்துட்டு வாங்க. முதல்ல அதுவரைக்கும் சாப்பிட ஆளுக்கு ரெண்டு இட்லி கொண்டு வாங்க" என்று சொல்லி விட்டு அவன் தொடர்ந்தான்.

"எது எப்படிங்க," என்று கேட்டான்.

"சோமுவும் கண்ணனும் உங்க மேல உயிரே வச்சிருக்காங்க. நீங்களும் அவங்க மேல ரொம்பப் பாசமா இருக்கீங்க. ஆனா கொஞ்சம் பயப்படவும் செய்யறாங்களே?" என்றாள் அவள்.

"அது தெரியலை. நான் ஒண்ணும் அவங்களை பயப்படுத்தறது இல்லை. நீதான் பார்க்கறியே. ஆனா கொஞ்சம் பயம் இருக்கறதும் நல்லதுதான்" என்றான்

அவள் ஆச்சரியமாக அவனைப் பார்க்க "ஆமாடா, அப்படி இருந்தாத்தான் தப்பு வழிக்கு போறதுக்கு கொஞ்சம் பயம் வரும். ஏன்னா எல்லா வசதியும் கொடுத்திருக்கோம். கையிலே பணம் இருக்கு. தேவைகள் நிறைவா இருந்துச் சுன்னா பயம் விட்டுப் போயிடக்கூடாதுல்லே?" என்றான்.

"கரெக்ட்தான்!" என்றாள்.

"முதல்ல ஸ்வீட் சொல்லணுமில்லே? என்றாள். 'சரி' என்று ஸ்வீட் ஆர்டர் செய்தார்கள்.

அவரவர்ளுக்குப் பிடித்த ஸ்வீட்டை ஆர்டர் செய்து அமைதியாக உண்டார்கள். அப்பொழுது அவர்களுக்குத் தோன்றியது. இதுவே மனமொத்துத் திருமணம் செய்து கொண்ட கணவன் மனைவியாக இருந்தால் இந்த ஸ்வீட்ல கொஞ்சம் அந்த ஸ்வீட்ல கொஞ்சம் என்று எடுத்துக் கொள்வார்களல்லவா? இப்படிப் பொதுவாக இங்கே வந்திருக்க மாட்டார்களே. தனியாக ஒரு கேபின் தானே எடுத்து இருப்பார்கள்?" என்று எண்ணிக் கொண்டாள்.

அங்கேதான் ஏதோ ஒன்று அவளுக்கு இடித்தது. எதையாவது குறை சொல்ல முடியுமா என்றால் எதுவுமே குறை சொல்ல முடியவில்லை.



அவளுடைய தேவைகளை நிறைவேற்றினான். வீடு திருப்தியாக இருந்தது. உற்றார் உறவினர்கள் குடும்பம் எல்லாமே திருப்தியாக இருந்தது. ஆனால் அவள் எதிர் பார்த்த ஏதோ ஒன்று இன்னமும் குறைகிறது என்கிற எண்ணம் மட்டும் அவளுக்கு இருந்துகொண்டே இருந்தது. இதை என்னவென்று அவனிடம் கேட்க முடியும்?

அது தானாக இயல்பாகத்தான் வரவேண்டும். தன்னுடைய உள்ளத்து வெளிப்பாட்டைக் கூட அவள் சற்றே இழுத்துப் பிடித்துத்தான் வைத்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு பிடித்த ஐட்டமாக ஆர்டர் செய்தான்.

"எனக்கு ரவா ரோஸ்ட் பிடிக்கும்!" என்றாள்.

"சாப்பிடு!" என்றான்.

ஒரு நல்ல நண்பனைப் போல நடந்து கொண்டான். ஆனால், அதே சமயத்தில் அவனுடைய ஆழ்மனத்து உணர்வுகள் எதையும் அவளிடத்திலே திணிக்கவில்லை. எல்லாவற்றையும் மீறிய ஒரு இறுக்கம் அவனுக்கு இருந்தது என்பது அவளுக்கு புரிந்தது.

சாப்பிட்டு முடித்து விட்டு வீட்டுக்கு வந்தார்கள். கொஞ்ச நேரம் டி.வி. பார்த்தார்கள். அதற்குப் பிறகு அவள் நூலக அறைக்குச் சென்று ஏதோ ஒரு புத்தகம் எடுத்துக் கொண்டு வருகிறேன் என்று போனாள்.

புத்தகம் எடுத்துக் கொண்டு வந்து அவர்களது தனி அறைக்கு முன் அறையில் அமர்ந்து படித்துக் கொண்டிருந் தாள்.

திடீரென்று அவளுக்கு கிறுகிறுவென்று வயிறு புரட்டியது. குமட்டிக் கொண்டு வந்தது.

'ஓவ்!' என்று சத்தம் போட்டுக் கொண்டு ஓடிப் போய் வாஷ்பேஸினில் வாந்தி எடுத்தாள்.

சத்தம் கேட்டவுடனே உள்ளே படுக்கையில் படுத்துக் கொண்டு ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்த வெற்றிவேல் வெளியிலே பரபரப்பாக வந்தான்.

''ஏய் சாரு! என்னாச்சு? என்னாச்சு?'' என்று.

''ஓட்டல்ல சாப்பிட்டது எப்படியோ இருக்கு!'' என்றாள்.

அதற்குள்ளாக அவன் 'அம்ச்சி! அம்ச்சி!' என்று குரல் கொடுத்து விட்டான்.

''இல்லைங்க, டைஜின் போட்டா சரியாப் போகும் விடுங்க!'' என்றாள் அவள்.

''இல்லையில்லை. இரு, இரு, அம்ச்சி வந்து ஏதாவது கை வைத்தியம் பண்ணுவாங்க'' என்றான்.

அம்ச்சி ஓடி வந்தார். வந்து ''என்னம்மா என்னாச்சு? என்னாச்சு?'' என்றார்.

''பாட்டி, இன்னைக்கு அங்கே ஓட்டல்ல சாப்பிட்டது சேரலை'' என்றாள்.

''எத்தனை தடவை சொல்லியிருக்கேன் பாட்டின்னு கூப்பிடாதே. அம்ச்சின்னு கூப்பிடு'' என்று கடிந்து கொண்டே அவளுடைய நாடியைப் பிடித்துப் பார்த்தாள்.

உடனே அவளுடைய முகம் மலர்ந்தது.

''டேய்! வெற்றி!'' என்று மகிழ்ச்சியாகச் சிரித்தார்.

''என்னாச்சு?'' என்றான் அவன்.

''இது வேறயடா! இது நமக்கு மாதிரி வர மாதிரி அஜீரணக் கோளாறு இல்லை. நீ செய்த வைத்தியம்''



''நான் என்ன வைத்தியம் செஞ்சேன்?'' என்று அவன் பார்க்க.

''பேரனோ பேத்தியோ வரப் போறாங்கடா!'' என்று சத்தம் போட்டுக்கொண்டு உள்ளறைக்கு ஓடிப் போய் கொஞ்சம் சர்க்கரையைக் கொண்டு வந்து அவனுடைய வாயில் போட்டார். ''ஏனுங்கோ! செய்தியைக் கேளுங்கோ!'' என்று சத்தம் போட்டுக் கொண்டு நகர்ந்தார்.

முகம் சிவக்கத் தலையைக் குனிந்து கொண்டாள்.

குனிந்தவள் மெல்ல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

முதல் முதலாக இந்த மூன்று மாத வாழ்க்கையில் அவனுடைய பார்வையில் கனிவு தெரிந்தது.

''சாரு!'' என்றான் மகிழ்ச்சியாக.

''ம்...!'' என்றாள் அவள் மேலும் கீழும் தலையாட்டிக் கொண்டு.

''சொல்லவே இல்லை?!''

''கன்பார்ம் ஆயிட்டு...! என்று அவள் இழுக்க,

''அதெல்லாம் அம்ச்சி சொன்னா கரெக்டாத்தான் இருக்கும். அம்ச்சி எத்தனை பேருக்கு நாடி பிடிச்சு சொல்ற வங்க தெரியுமா?'' என்றவன் முதல் முறையாக சட்டென்று அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

அவளும் மகிழ்ச்சியோடு அவன் மார்பிலே முகம் புதைத்துக் கொண்டாள்.

அவர்களுக்கு பத்து நிமிடத்துக்கு மேல் தனிமை கொடுத்து விட்டு பத்து நிமிடம் கழித்து சத்தமாகப் பேசிக் கொண்டே வந்தார் அம்ச்சி.

அவர்கள் இரண்டு பேரும் விலகிக் கொண்டார்கள்.

அதற்குப் பின்பு வீடு ஒரே கலாட்டாவானது!

## அத்தியாயம்- 12

"மேடம், சார் கூப்பிடறாங்க!" என்று சொன்னார் உதவியாளர்.

"இதோ வந்துட்டேன்!" என்று தான் பார்த்துக் கொண்டிருந்த ஃபைல்களை ஒதுக்கி விட்டு எழுந்து வந்தாள்.

தள்ளு கதவை தள்ளி விட்டு உள்ளே வரும்பொழுது லேசாக டேபிளின் மேல் இடித்து விட்டாள்.

"பார்த்து! பார்த்து!" என்று அவன் பதறிப்போனான்.

அவள் தலையை நிமிர்ந்து அவனைப் பார்த்துவிட்டு முறுவலித்து விட்டு "இல்லையில்லை, கேர்ஃபுல்லா தான் வந்தேன்"

"அதானே!" என்று சிரித்துக்கொண்டான்.

அவள் உண்டாகி விட்டது தெரிந்த அந்த நாள் முதல் வேலைக்குப் போகவும் கூடாது என்று அம்ச்சி ஒரே பிடிவாதம். ஆனால் அவள் தான் "என்னால அப்படி யெல்லாம் இ ருக்க முடியாது அம்ச்சி. நான் கண்டிப்பா வேலைக்குப் போவேன். வீட்ல இருந்தா எனக்குப் பைத்தியம் பிடிச்சிடும். அது மட்டும் இல்லை. நம்ம கம்பெனி தானே அப்படி இடையில ஏதாவது தேவைன்னா கூட பர்மிஷன் போட்டுட்டு வந்துடறேன்" என்றாள்.

உடனே பேரனைப் பாரார்த்தார் அம்ச்சி. "இவன் அப்படி யெல்லாம் விட மாட்டானே?" என்று அவனைத் துணைக்கு அழைக்கிறாற்போல பார்த்தார்.



அவன் "ஏன் அம்ச்சி? வந்துட்டிருக்கட்டும். அவளுக்கு எப்ப முடியுதோ அப்ப வரட்டும். டைரக்டர் தானே டைமிங்ஸ் தேவையில்லை.நான்தான் ஃபுல்லா இருக்கேனே. எப்ப வேணா வரட்டும்?" என்றான்.

"அப்ப சரி!" என்று மகிழ்ச்சியானாள் அம்ச்சி.

"இருந்தாலும் நீ ரெண்டு மூணு நாளைக்காவது ரெஸ்ட் எடுத்துட்டு அப்புறம் போ அம்மணி!" என்றார்.

அம்ச்சியின் ஆசைக்காக அவள் மூன்று நாட்கள் ஓய்வெடுத்துக் கொண்டு கிளம்பினாள். அந்த மூன்று நாட்களில் முதல்நாள் அவளைப் பெற்றவர்கள் வந்து விட்டார்கள்.

"தங்கம்!" என்று மகிழ்ச்சியாக ஓடி வந்தாள் சாரு சித்ராவின் தாய் புஷ்பலதா.

"ரொம்ப சந்தோஷம். மாப்பிள்ளை!" என்று கைலாசம் மிகவும் மகிழ்ச்சியானார்.

இதற்கு இடையிலே செய்தி தெரிந்த ஸ்ரீநாத் வேறு இரண்டு மூன்று முறை ஃபோன் செய்து விட்டான்.

"வெரி குட், வெரி குட்!" என்று மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டான் சாருவுக்கு.

"ஏய் சாரு! எனக்கு இப்பவே அங்க ஓடி வரணும் போல இருக்கு" என்றான்.

"ஐயய்யோ! அப்படியெல்லாம் வந்துடாதண்ணா. டெலிவரி டைம்ல வந்தீன்னா கொஞ்ச நாள் இருந்து குழந்தையைப் பார்த்துட்டு கொஞ்சிட்டு இருந்துட்டுப் போகலாம்" என்றாள் சாரு.

"சரி வளைகாப்பெல்லாம் ஃபிக்ஸ் பண்ணும் போது என்னை கேட்டுட்டு ஃபிக்ஸ் பண்ணச் சொல்லுங்க. நான்

அதுக்குத் தகுந்த மாதிரி லீவு பிளான் பண்ணி ஒரு ஒன் வீக் நடுவுல வந்துட்டு வந்துடறேன்'' என்றான்.

எல்லாரையும் விட சோமநாதனும் கண்ணனும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். ''அண்ணி, அண்ணி,!'' என்று அவளைத் தாங்கினார்கள்.

இவர்கள் இப்பொழுது மாடியறையில் இருந்தார்கள். முன்பே நம் வீட்டில் இளம் வயதுப் பையன்கள் இருக்கிறார்கள். அதனால கீழே பெட்ரூம் வேண்டாம். மேலே தான் பெட்ரூம் இருக்க வேண்டும் என்று திருமணமாகி வந்த உடனேயே அவர்கள் மாடிப் பகுதிக்கு வந்து விட்டார்கள்.

ஏதோ எடுப்பதற்காக அவள் சற்று வேகமாக நடந்து வரும் பொழுது லேசாக தடுமாறினாற் போல் நின்றாள். எட்டிக் கைப்பிடியைப் பிடித்துக் கொண்டாள். ஆனால் அந்த நேரத்தில் ஹாலில் இருந்த சோமநாதனும் கண்ணனும் பதறி அடித்துக் கொண்டு ஓடிவந்து அவளுடைய கையைப் பிடித்துக் கொண்டார்கள்.

''அண்ணி, பார்த்து வாங்க அண்ணி. எதுக்கு இப்படி வேகமாக இறங்கறீங்க?'' என்று பதைத்துப் போனான்.

''சும்மா இரு. சோமு! என்னமோ ரெண்டு பேரும் போட்டு இப்படிப் படுத்தறீங்க?'' என்றாள்.

''இல்லை அண்ணி. எங்க அண்ணனுக்கு வர்ற வாரிசு அண்ணன் மாதிரி இருப்பானா உங்களை மாதிரி இருப்பானான்னு பார்க்கணும்னு ஆசையா இருக்கு. அவனைப் பூ மாதிரி வளர்ப்போம். அவனை நல்ல படியா பெத்துக் குடுக்க வேண்டியது உங்க கடமை. உங்களையும் தாங்கணும் அப்படின்னு அண்ணனும் ஆர்டர் போட்டிருக்காங்க'' என்றார்கள்.



''அது என்னவோ நம்பற மாதிரி இல்லை!'' என்று அவள் சிரிக்க இரண்டு பேரும் அசடு வழிய ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அவளைப் பாசமும் பரிவுமாக பார்த்துக் கொள்வதையும் விழுந்து விழுந்து தாங்குவதையும் கண்டு ஒரு புறம் அவளுக்கு சிரிப்பாக இருந்தது. இன்னொரு புறம் மகிழ்ச்சியாக இருந்தது.

காலையில் கணவனுடன் காரில் வந்து கொண்டிருந்தாள். ''நாங்க சித்தப்பா ஆகப் போறோம். நாங்க சித்தப்பா ஆகப் போறோம்னு ஊரு பூரா தண்டோரா போட்டுட்டு இருக்காங்க'' என்று சிரித்தான் வெற்றி வேல்.

எப்போதும் போல அவளுடைய சகோதரர்களைப் பற்றி பேசும் பொழுது முகம் மென்மையாவது போல இப்பொழுதும் அவனுடைய முகம் கனிந்து போனது.

இதையெல்லாம் யோசித்துக் கொண்டு அவனுடைய அறைக்குள் நுழைந்தாள் சாருசித்ரா.

''சாரு, இப்போ ஒரு க்ளையண்ட் வரப் போறாங்க. அவங்க ஒரு கன்சர்ன் நடத்திட்டு இருக்காங்க. அப்பப்ப நம்ம கிட்ட கைடன்ஸ் வாங்கிக்குவாங்க!'' என்றான்.

''சரிங்க!'' என்றாள். ''நீ இப்படி உட்காரு!'' என்றான்.

''எல்லா க்ளையண்ட் மீட்டிங்குக்கும் நான் வரணுமா?'' என்றான் அவன்.

''இல்லையில்லை. இந்தக் க்ளையண்ட் மீட்டிங்குக்கு நீ வரணும்!'' என்று சொல்லும் பொழுதே அவன் ஒரு விதமாக முகத்தை சுளித்தான்.

சற்று நேரத்தில் அவனுடைய உதவியாளர் வந்து ''மிஸஸ் ரத்தன் தாஸ் வந்துட்டாங்க!'' என்றார்.

"வரச்சொல்லுப்பா!" என்று சொல்லி விட்டு அவன் சாய்வாக அமர்ந்தான்.

மிஸஸ் ரத்தன் தாஸ் உள்ளே நுழைந்தாள்.

சாருசித்ரா திரும்பிப் பார்த்தவள் கொஞ்சம் அசந்து தான் போனாள். ஐம்பதுகளின் ஆரம்பத்தில் இருந்தார் அந்தப் பெண்மணி. ஆனால் சிக்கென்று உடை அணிந்து கொண்டு அழகான நடையுடன் தன் தோற்றப் பொலிவைக் கூடுதலாக ஆக்கிக் கொள்கிற மாதிரி சரியான மேக்கப் வைர கம்மல் என்று அசத்தினார் மிஸஸ் ரத்தன் தாஸ்.

லேட்டஸ்டாக வந்திருந்த மாலை. வைரத் தோடுகள். கொஞ்சமாக கற்கள் பதித்த வைரக் கற்கள் பதித்த பிரேஸ்லேட். நல்ல டிசைனில் ஒரு தங்கச் செயின், அதில் இருந்த டாலர்களில் நவரத்தினங்கள் பதித்திருந்தது என்று செல்வத்தின் உருவமாக வந்திருந்தார் திருமதி.ரத்தன் தாஸ்.

சாருசித்ரா மெய்மறந்து அந்தப் பெண்ணை ரசித்து விட்டு திரும்பிய பொழுது வெற்றிவேலின் கண்கள் அவளது முகத்தை வெறித்துக் கொண்டிருந்த மாதிரி தோன்றியது. சட்டென்று அதிலே சுணக்கம் ஏற்பட்ட மாதிரித் தோன்றியது.

உடனே சுதாரித்துக் கொண்டு அவனைப் பார்த்து புன்னகைத்தாள். அவனும் புன்னகைத்தான். "ஹலோ வெற்றிவேல். உங்க மிஸஸ் சூப்பரா இருக்காங்க. கல்யாணத்துல அன்னிக்கே பார்த்தேன். ஃபாதர் ஆயிட்டீங் கன்னு கேள்விப்பட்டேன். கங்ராஜுலேஷன்ஸ்" என்று சொல்லிக் கொண்டு எதிரிலே அமர்ந்தாள் அந்த மிஸஸ் ரத்தன்தாஸ்.

"தாங்க்யூ!" என்று சுருக்கமாக முடித்துக் கொண்டான்.



மேற்கொண்டு சொந்த விஷயங்களைப் பற்றிப் பேசு வதைத் தவிர்த்து விட்டு அவரிடத்திலே வியாபாரம் தொடர் பான விஷயங்களை மட்டுமே பேசினான் வெற்றிவேல்.

அவனுடைய கேள்விகளின் அளவுக்கு அவருடைய கேள்விகள் கூர்மையானவையாக இருந்தன. உலக விஷயம் தெரிந்தவராகத் தான் தெரிந்தார் அந்தப் பெண்மணி.

கிட்டத்தட்ட அரை மணி நேரத்திற்கு மேல் நீடித்த அந்த மீட்டிங்கில் ஒரு பார்வையாளராகத்தான் சாருசித்ரா அமர்ந்து கொண்டிருந்தார்.

முதல் முறையாக சந்தித்தது அவளுக்கும் புதிதாக இருந்தது. விஷயம் புரியவில்லை. எதற்கும் தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் கணவன் தன்னையும் அழைத்து அமர்த்தியிருக்கிறார் என்பது தெரிந்தது.

அரை மணி நேரம் மீட்டிங் முடிந்த உடனே "அப்பாடா முடிஞ்சுதா?" என்று நிமிர்ந்து அமர்ந்த மிஸஸ் ரத்தன்தாஸ் சாருசித்ராவைப் பார்த்து சிரித்தார்.

"ஆல்வேஸ் யுவர் ஹஸ்பண்ட் இஸ் டு த பாயிண்ட்!" என்றார்.

சாருசித்ரா மையமாகப் புன்னகைத்து வைத்தாள்.

"ஹலோ! போதும் மீட்டிங். நல்லா இருக்கீங்களா? எப்படி இருக்கீங்கன்னெல்லாம் கொஞ்சம் கலகலன்னு பேசக் கூடாதா?" என்றார் மிஸஸ் ரத்தன் தாஸ்.

வெற்றிவேல் வேறு வழியில்லாமல் சிரித்தான். "அதான் உங்களுக்கு எல்லாமே தெரிஞ்சிருக்கு. பேமிலி லைஃப்ல வேற ஹாப்பியா இருக்கேன். வேற என்ன வேணும்?" என்றான்.

"அதான் தம்பி வேணும். ஓகே! நான் கிளம்பட்டுமா!" என்று கிளம்பினார் மிஸஸ் ரத்தன் தாஸ்

வழக்கமாக நடுத்தர வயதுக்கு மேற்பட்ட பெண்கள் வந்தால் அவன் அறைக்கதவு வரை சென்று வழியனுப்புவது வழக்கம்.

கடந்த ஆறு மாதத்துக்குள்ளாக வெற்றிவேலைப் பற்றி பல விஷயங்களை கணித்திருந்தாள் சாருசித்ரா. அவன் மதித்து ஒரு பெண்ணை வழியனுப்பச் சென்றான் என்றால் அவர்கள் எல்லா விதத்திலும் கட்டுப்பாடுடையவர்களாக தகுதி வாய்ந்தவர்களாக இருந்தார்கள். ஏனோ தானோ என்று நடத்தினான் என்றால் பின்பு அவர்களைப் பற்றி ஏதாவது ஒரு செய்தி அவளுக்கு தெரிய வரும்.

அவமானப் படுத்துவதையும் செய்ய மாட்டான். ஆனால் பெரிதாக மதிப்பதில்லை என்பது அவளுக்குப் புரிந்தது.

இந்த மிஸஸ்.ரத்தன்தாஸ் போனதற்கு பிறகு அவள் திரும்பி அவனைப் பார்த்து "ஏங்க, நல்ல டிரெஸ்ஸிங் சென்ஸ்!" என்றாள்.

அவன் ஒரு கேலிப் புன்னகையை எடுத்து விட்டான். "நீங்க ரெண்டு பேரும் தானே பேசிட்டு இருந்தீங்க. என்னை எதுக்கு வரச் சொன்னீங்க?" என்றாள் சாரு சித்ரா.

"இல்லை. இனிமேல் இந்த அம்மா கன்சர்னுக்கு உன்னைத்தான் அனுப்பப் போறேன். ஸ்டடி பண்ணிக்கோ" என்றான் வெற்றிவேல்.

"ஏங்க!" என்றாள் அவள் ஆச்சரியமாக.

"ஆமா ஐ கேன் நாட் டாலரேட் திஸ் லேடி. இவங்களை சகிச்சிக்க எனக்கு முடியறது இல்லை!" என்றான்.



"ஏன்" என்று கேட்ட பொழுது சுருக்கமாகச் சொன்னான். காரில் வீட்டிற்கு செல்லும் பொழுது சொன்னான்.

"அந்த அம்மா ரத்தன் தாஸைக் கல்யாணம் பண்ணினாங்க. ரத்தன்தாஸுக்கு முன்னாடியே ஏற்கனவே அந்த அம்மாவுக்கு கல்யாணம் ஆகியிருந்தது. அப்புறம் அந்த ஹஸ்பெண்ட் டைவர்ஸ் வாங்கிட்டாங்க போல இருக்கு. ஒரு மூணு நாலு வருஷம் சும்மா இருந்தாங்க. கொஞ்சம் வசதி உள்ளவங்கதான். ஆனால் ரத்தன்தாஸ் பார்த்த வுடனே இந்த அம்மாவை பிடிச்சுப் போய் கல்யாணம் பண்ணினாரு. ரத்தன்தாஸ் கோடீஸ்வரன் தெரியுமா?" என்றான். அவள் மௌனமாகக் கேட்டுக் கொண்டு வந்தாள்.

"என்ன ஆச்சுன்னு தெரியலை? ரத்தன்தாஸை இந்தம்மா கல்யாணம் பண்ணி ஒரு ஆறு ஏழுவருஷம்மேக்ஸிமம் இருக்கும். ஹெல்த்தியாதான் இருந்தாரு. ஆனா திடீர்னு உடம்பு சரியில்லாம போய் ஆள் மேல போயிட்டாரு." என்றான்.

சொல்லி விட்டு "இந்த மாதிரி விஷயமெல்லாம் தேவையா?" என்றான்.

"நீங்க தானே ஆரம்பிச்சீங்க? சொல்லுங்க!" என்றாள் அவள்.

"அதற்குப் பிறகு எல்லாருக்குமே டவுட் இருக்கு இந்த அம்மா மேல. இப்பவும் அந்த அம்மா பணவசதியோட இருக்காங்க. ஆனா குணத்தைப் பொறுத்த வரைக்கும் ஒரு மாதிரி பேசறாங்க" என்றான்.

அவள் ஆச்சரியமாக அவனைப் பார்த்தாள். "நீங்க கூடவா இப்படியான லூஸ் டாக்கையெல்லாம் நம்பறீங்க?" என்றாள்.

அவன் தோளைக் குலுக்கினான்.

"லூஸ் டாக்ன்னு எப்படிச் சொல்ல முடியும்? நமக்கு எப்படித் தெரியும்?"

"ஏங்க, அந்த அம்மா ரொம்ப இன்டலிஜண்டா தெரியறாங்க?"

"இண்டலிஜண்டா இருக்கறவங்க எல்லாரும் ஒழுக்கமா இருப்பாங்கன்னு யாரு சொல்ல முடியும். எங்க அப்பா கூடத்தான்..." என்று ஆரம்பித்தவன் சட்டென்று நிறுத்தி விட்டான்.

அவள் திரும்பி அவனைப் பார்த்தாள்.

இதுவரைக்கும் ஒருதடவை கூட அவன் தந்தையைப் பற்றி பேசியதில்லை. திருமணப் பத்திரிகையில் கூட தாத்தா பாட்டி பெயர் தான் போடப்பட்டது என்பதை அவள் அறிவாள். அது ஏன் எப்படி என்பதையெல்லாம் அவளும் துருவித் துருவி கேட்டதில்லை. இன்றைக்கு ஆனால் ஒரு விஷயம் புரிந்தது.

பெண்களின் மேல் அவனுக்கு இன்னமும் முழுமையான நம்பிக்கை வரவில்லை. அது மட்டும் இல்லாமல் மிஸஸ், ரத்தன்தாஸ் எழுந்து போன பொழுது இன்னொரு நிகழ்ச்சி நடந்தது.

அவன் அப்படியே அமர்ந்திருக்கவும் அவள் மரியாதைக்காக எழுந்து கதவு வரைக்கும் சென்று அந்த அம்மாவை வழியனுப்பி விட்டு மெல்லத் திரும்பினாள்.

திரும்பிய பொழுது அவன் பார்வையைப் பார்த்தாள். அவன் இவளைப் பார்க்காமல் ரத்தன் தாஸினுடைய முதுகை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.



அவளுக்கு சட்டென்று நெஞ்சிலே ஏதோ அடைக்கிறாற் போல இருந்தது. இதே வெறுப்பான பார்வையைப் பார்த்திருக்கிறாள். பல நாட்களுக்கு முன்பே பார்த்திருக்கிறாள்.

அந்த மாலில் வைத்து அவளை வெறுப்பாகப் பார்த்தானே? அந்தப் பார்வைதான் இந்தப் பார்வை. அப்படியானால் அந்த வெறுப்பு இன்னமும் அப்படியே இருக்கிறது.

என்ன? இப்பொழுது வெளியே தெரியவில்லை. ஆனால் நீறு பூத்த நெருப்பாக உள்ளே இருக்கிறது என்றவுடன் ஒரு அச்சம் தோன்றியது. இப்பொழுது காரில் அவனாக ரத்தன் தாஸ் பற்றி விஷயத்தை சொல்லிவிட்டு சற்று நேரம் அமைதியாக இருந்தான்.

அவள் மெல்ல அவனைத் திரும்பிப் பார்த்தாள். கார் டிரைவிங்கிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருந்தாலும் இப்பொழுதும் அந்த முகத்தில் அளவற்ற வெறுப்பு மண்டிக் கிடந்தது அவளுக்குத் தெரிந்தது.

ஒரு நிமிடம் திடுக்கிட்டுப் போனாள். பிறகு சாலையைப் பார்த்தபடி சொன்னாள். "நீங்க ஏதோ சில விஷயங்கள்லே தப்புக் கணக்குப் போடறீங்களோன்னு எனக்குத் தோணுது!" என்றான்.

"எங்க அப்பாவைப் பத்தி உனக்கென்ன தெரியும்?" என்றான்.

"உங்க அப்பாவை நான் சொல்லலை. பொதுவா பெண்கள்னா உங்களுக்கு சின்னதாவோ பெரிதாகவோ ஏதோ ஒரு வெறுப்பு இருக்கிற மாதிரி எனக்குத் தோணுது" என்றாள்.

அவன் திடுக்கிட்டுப் போனவனாக அவன் திரும்பிப் பார்த்தான்.

தன்னுடைய உள் மனசு ரகசியத்தை, அந்தரங்கத்தை அறிந்து கொண்டாளோ என்பது போல வெறித்துப் பார்த்தான்.

"ஏய்! நிறைய கதை புத்தகம் படிக்கறியே? அதான்! உனக்கு இப்படியெல்லாம் தோணுது" அவன் முகபாவத்தை மாற்றிக் கொள்வதை பார்த்து அவளுக்கும் வியப்பாகத்தான் இருந்தது.

வேறு பேச்சு மாற்ற வேண்டும் என்பதற்காக "சரிங்க, இப்பெல்லாம் பாப்பா வயித்துல இருக்கும் போது நல்ல விஷயங்கள்தான் கேட்கணுமாம். அதனால நான் இனிமே நல்ல விஷயங்களைத் தான் கேட்கப் போறேன். அதனால இனிமே ரத்தன்தாஸ் மாதிரி மேட்டர் எல்லாம் என் காதுக்கு கொண்டு வராதீங்க!" என்றாள்.

அவன் ஒரு பெருமூச்சு விட்டான்.

பிறகு சொன்னான் "சாரு! யாரைப் பத்தியும் இப்படிப் பேசற வழக்கம் எல்லாம் எனக்கு இல்லை. ஆனா இவங்களைப் பத்தியும் கொஞ்சம் எச்சரிக்கையா இருக்கணும். ஏன்னா இனிமேல் நீ டீல் பண்ணப் போறதுனாலதான் சொன்னேன்" என்று

"சாரி!" என்றாள் அவள்.

"பரவாயில்லை, பரவாயில்லை, என்று சொல்லிவிட்டு சரி இப்பொழுது உனக்கு உடம்பு எப்படி இருக்கு?" என்று பேச்சை மாற்றினான் அவன்.

வரப் போகிற குழந்தையைப் பற்றி அவன் பேச ஆரம்பித்த உடனே அந்தக் கனவுகளில் மூழ்கிக் கொண்டு



அவளும் அதைப் பற்றி எல்லாம் சொல்ல ஆரம்பித்தாள். அவனும் கலகலவென்று பேசவில்லையென்றாலும் மௌனமாகப் பகிர்ந்து கொண்டான்.

## அத்தியாயம் - 18

குடும்பமே அங்கே பிரசவ வார்டில் நின்று கொண்டிருந்தது.

சாருசித்ரா உள்ளே இருந்தாள். ஸ்ரீநாத் நான்கு நாட்களுக்கு முன்பாகவே அமெரிக்காவில் இருந்து வந்து சேர்ந்து விட்டான். அம்ச்சி, அப்பச்சி எல்லோரும் அமர்ந்து கொண்டிருந்தார்கள். சோமநாதனும் கண்ணனும் கூட அங்கே காத்துக் கொண்டிருந்தார்கள்.

இப்பொழுதெல்லாம் ஏனோ தாத்தா அவர்களை அதிகமாக ஒன்றும் சொல்வதில்லை அதனால் தாத்தாவின் முன்னால் கூட நடமாடினார்கள்.

ஏதாவது வேண்டியிருக்குமோ மருந்து வேண்டியிருக்குமோ என்று அவர்கள் அம்ச்சியின் பின்னாலே நின்று கொண்டிருந்தார்கள். ஆனால், வெற்றிவேல் மட்டும்தான் அங்கே வந்து சேர வில்லை. அலுவலகத்தில் முக்கியமான ஏதோ ஒரு பணி இருக்கிறது முடித்து விட்டு வந்து விடுகிறேன் என்று ஸ்ரீநாத்துக்கு ஃபோன் செய்து சொல்லியிருந்தான்.

"ஒண்ணும் கவலைப்படாதீங்க மச்சான்! நாங்கள்ளாம் இங்க இருக்கோமில்லே! பார்த்துக்கறோம். நான் இருக்கேன். அதான் சின்னவங்க ரெண்டு பேர் இருக்காங்களே நீங்க வேலையை முடிச்சுட்டே வாங்க" என்றான்.

உண்மையில் அலுவலக அறையில் வெகு நேரம் சிந்தனையுடன் அமர்ந்து கொண்டிருந்தான் வெற்றி வேல். அவன் மனத்திலும் முகத்திலும் ஏதோ ஒரு குழப்பம் இருந்து கொண்டிருந்தது. அந்த நேரத்தில் தான் ஸ்ரீநாத்திடம் இருந்து போன் வந்தது.

''மச்சான் ஏதோ கையெழுத்து கேட்கறாங்க! நீங்க உடனே வாங்க!'' என்றான்.

''இப்ப வந்துடறேன்!'' என்று கிளம்பி ஐந்தே நிமிடத்தில் அந்த ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்து விட்டான் வெற்றிவேல்.

''எதுக்குக் கையெழுத்து?'' என்றான்.

''சிஸேரியன் பண்ணனும் போல இருக்கு.'' என்றார்கள் மருத்துவர்கள். சிஸேரியன் ஆபரேஷனுக்கு சம்மதம் என்பது போல அவன் கையெழுத்துப் போடும் பொழுது வலது கை லேசாக நடுங்கியது.

தன் முகத்து உணர்வுகளைக் காட்டாமல் சட்டென்று அந்த வராண்டாவின் வெளிப்புறத்தைப் பார்த்து நின்று விட்டான். ஸ்ரீநாத் அவன் நிலையைப் பார்த்து அவன் அருகிலே போய் ''மச்சான் ஒண்ணும் பயப்படாதீங்க மச்சான். முடிந்த வரைக்கும் நார்மல் டெலிவரி பார்க் கறோம். எதுக்கும் கையெழுத்து வாங்கிக்கறோம். அந்த நேரத்துல இந்த ஃபார்மலிட்டியெல்லாம் பண்ணிட்டு இருக்க முடியாது அப்படின்னுதான் வாங்கியிருக்காங்க. டாக்டர் கிட்ட பேசியிருக்கேன். நார்மல் டெலிவரியே டிரை பண்றோம்னு சொல்லியிருக்காங்க'' என்று தேற்றினான் ஸ்ரீநாத்.

இறுக்கமாகவே முகத்தை வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தான் வெற்றிவேல்.



அரை மணி நேரம் போயிருக்கும். உள்ளே இருந்து ஒரு நர்ஸ் வேகமாக வந்து ''குழந்தை பிறந்தாச்சு. நார்மல் டெலிவரி!'' என்று சொன்னாள்.

அம்ச்சி அப்பச்சி கைலாசம், புஷ்பலதா, ஸ்ரீநாத் எல்லோருடைய முகத்திலும் மகிழ்ச்சி பிரவாகமாக பொங்கியது.

வெற்றிவேலினுடைய முகத்தில் இதுவரை இருந்த இறுக்கம் தளர்ந்தது. ஆனாலும் அவர்களைப் போல் பெரிய அளவில் மகிழ்ச்சி அவன் காட்டவில்லை. அம்ச்சி விளக்கம் சொல்லுவது போல ஸ்ரீ நாத்திடம் சொன்னாள்.

''என்ன கஷ்டம் நஷ்டம்னாலும் சரி! என்ன சந்தோஷம் னாலும் சரி காட்ட மாட்டான். இப்படியேதான் இருப் பான்!'' என்று ஸ்ரீநாத்திடம் முனகினாள்.

ஸ்ரீநாத் அவரைப் பார்த்து சிரித்தான். ''இருக்கறதுதான் அம்ச்சி, ஒவ்வொருத்தர் ஒவ்வொரு மாதிரி. அவரு ஆபீஸ்ல இருந்து இருந்து பழகிட்டாரு. ஆஃபீஸ்ல இப்படி உணர்ச்சியெல்லாம் காண்பிச்சோம்னா சரி வராது. அந்தப் பழக்கம் இங்கேயும்!'' என்றான்.

சொல்லிவிட்டு மீண்டும் அம்ச்சியிடம் ''வெளிநாட்ல யெல்லாம் அப்படித்தான் அம்ச்சி. ஒரு ஃபீலிங்கையும் காட்டிக்க மாட்டாங்க. இப்படி பெரிய படிப்பு படிச்சவங்க ளெல்லாம் இப்படித்தான் இருப்பாங்க'' என்று அவர் களுக்குப் புரிவது போல சொன்னான்.

அவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையிலே திரும்பிப் பார்த்தான். சோமநாதனும் கண்ணனும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு சிரித்துக் கொண்டிருந் தார்கள்.

"இதே நம்ம வீடா இருந்தா கத்தி ரகளை பண்ணிடுவோம்!" என்றான் சோமநாதன். அவர்கள் இருவருடைய மகிழ்ச்சியையும் பார்த்தவுடன் தாத்தாவுக்கே மனசு இளகிப் போயிட்டது.

"டேய் சோமு!" என்று அழைத்தார்.

முதல் முறையாக தாத்தா தன்னை அப்படி அழைப்பதைப் பார்த்தவுடன் திணறிப் போய் "என்னையா அப்பச்சி? என்னையா அப்பச்சி?" என்றான்.

"ஆமாடா, இங்க வாடா!" என்றார்.

"சொல்லுங்க அப்பச்சி!" என்று ஓடிப்போனான்.

"கடைக்குப் போய் ஸ்வீட் வாங்கிட்டு ஓடிவா!" என்றார்.

"ஸ்வீட்டெல்லாம் வாங்கிட்டு வந்தாச்சுங்க. கார்ல இருக்குது. எடுத்துட்டு வரேன்!" என்று ஓடினான் சோமநாதன்.

"பிரசவம் பார்த்தவங்களுக்கெல்லாம் காஃபி டீ வாங்கிக் கொடுக்கறதெல்லாம் இருக்குமே. அதெல்லாம் ஏற்பாடு பண்ணு" என்றார் தாத்தா.

"அதெல்லாம் ஏற்பாடு பண்ணியாச்சுங்க!" என்றாள் அம்ச்சி.

எள் என்பதற்கு முன்பு அவர்கள் எல்லோரும் எண்ணெயாக நிற்பதை பார்த்துவிட்டு கைலாசத்துக்கும், புஷ்பலதாவுக்கும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

அந்த மகிழ்ச்சி நிறைந்த அந்தக் கணத்தில் தன்னையும் மீறி ஒரு நெகிழ்ச்சியோடு நின்று கொண்டிருந்தான் வெற்றிவேல்.



"இன்னும் கொஞ்சம் நேரத்துல பெட்டுக்கு கொண்டு வந்துடுவாங்க. நீங்க கூட போய் பார்க்கலாம்" என்று சொல்லி விட்டுப் போனார் இன்னொரு நர்ஸ்.

"அப்பா யாரு!" என்று கேட்டுவிட்டு 'கங்கிராட்ஸ்" என்றார்கள்.

பதினைந்து நிமிடத்தில் குழந்தையை எடுத்துக் கொண்டு வந்து படுக்கையில் கிடத்தினார்கள்.

ஒரு பெரிய தனி சூட் புக் செய்திருந்தான் வெற்றிவேல்.

எல்லோரும் அந்த அறைக்குப் போனார்கள். எல்லோரும் சற்று வெளியே நிற்க முதலிலே வெற்றிவேலை அனுப்பினார்கள். "நீ முதல்ல போய்ப் பார்த்துட்டு வா!" என்றார் அம்ச்சி. "அம்ச்சி, நீ வந்து மொதல்ல ஆசீர்வாதம் பண்ணு!" என்றான்.

"அதெதுக்கு? எல்லாரும் ஒண்ணாவே போவாங்களாமே? வாங்க!" என்றார் கைலாசம். எல்லோரும் கும்பலாக உள்ளே போனார்கள்.

சற்றே களைப்போடு படுத்துக் கொண்டிருந்தாள் சாரு சித்ரா.

முதலில் அவள் கணவனைத்தான் தேடினாள்.

எல்லோருமாக அவர்கள் இருவருக்கும் தனிமை கொடுத்து முன் அறைக்கு வந்து விட்டார்கள்.

அப்புறம் வெளியே வரும் பொழுது புஷ்பலதா மிகவும் லாவகமாக அறைக் கதவை சாத்தி விட்டு வந்தாள்.

அவன் மெல்ல அவள் அருகில் போய் அவள் தலையைக் கோதிக் கொடுத்தான்.

இத்தனை நாட்களில் இயல்பாக அந்த நெகிழ்வு வெளிப்பட்டதே அன்றைக்குத்தான்!

அவளும் கொஞ்சம் நெகிழ்ந்து தான் போனான்.

"ரொம்ப கஷ்டப் பட்டியா?" என்றான்.

அவள் "ஆமா, கொஞ்சம் கஷ்டம்தான். ஆனா இவனைப் பாருங்களேன். எப்படிச் சிரிக்கிறான் பாருங்க!" என்று மகனைக் காட்டினாள்.

"இந்த சிரிப்புக்கு முன்னாடி இந்தக் கஷ்டம் எல்லாம் என்னங்க? ஒண்ணும் இல்லைங்க" அவனும் மெல்லப் புன்னகைத்தான்.

அதற்குள் வந்த நர்ஸ் கதவை தட்டி விட்டு உள்ளே வந்தாள்

"என்ன சார்! குழந்தையை எடுக்கத் தெரியுமா? குழந்தையை எடுத்துத் தரேன் வச்சுக்கறீங்களா?" என்று சொல்லி விட்டு எடுத்து அவன் கையிலே கொடுத்தாள்.

அவன் குழந்தையை வாங்கத் திணறும் போது எப்படிக் குழந்தையை வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொடுத்து விட்டு சென்றாள்.

"உனக்கு எடுக்கத் தெரிஞ்சிருச்சா?" என்று கேட்டான். 'ம்...' என்று அவள் சிரித்தாள்.

அவன் என்ன பேசுவது என்று தெரியாமல் எதை எதையோ பேசிக் கொண்டிருக்கிறான் என்பது அவளுக்கு புரிந்தது.

தன் கைகளில் ஏந்திக் கொண்டு மகனைப் பார்த்த அந்தக் கணத்தில் அவன் இதுவரை அணிந்து கொண்டிருந்த கவசம் எல்லாம் விலகி ஒரு பெருமிதமும் மகிழ்ச்சியும் கம்பீரமும் போட்டி போட்டது போல் அவளுக்குத் தோன்றியது.



அவள் கட்டிலில் படுத்தபடியே அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். மெல்லக் குனிந்து குழந்தையின் நெற்றியில் முத்தம் வைத்தான்.

அவளைப் பார்த்து வாய் மலரச் சிரித்தான். அந்தச் சிரிப்பும் இதுவரை அவள் பார்த்திராத சிரிப்பு.!

அவள் ஆச்சரியமாக அவனைப் பார்த்துக் கொண்டு "யாரு மாதிரி இருக்கா!" என்று கேட்டாள்.

"உன்னோட மூக்கு என்னோட கண்ணுன்னு நினைக்கிறேன்!" என்று இயல்பாக அவன் பேசுகையில் "குழந்தையை படுக்க வச்சுடலாமா?" என்று குரல் கொடுத்துக் கொண்டே நர்ஸ் வந்தாள்.

அவன் கையிலிருந்து குழந்தையை வாங்கிப் படுக்க வைத்தாள். அவன் தன் பாக்கெட்டில் கை விட்டு ஒரு செயினை எடுத்து குழந்தைக்குப் போட்டான்.

"ஆசைக்குப் போட்டுக்கோங்க! ரொம்ப நேரமெல்லாம் போட்டுக்கக் கூடாது. திரும்பிப் படுத்தா உறுத்தும்!" என்று சொல்லி விட்டுப் போனாள் நர்ஸ்.

மெல்ல எழுந்து அவள் அருகிலே வந்து அவள் நெற்றியிலும் குனிந்து முத்தமிட்டு விட்டு "தாங்க்ஸ், தாங்க்ஸ் எ லாட்!" என்றான்.

"என்னங்க இது!" என்றாள் வெட்கத்துடன்.

முறுவலித்து விட்டு "யாருக்கு யாரு தாங்க்ஸ் சொல்றது? ஒரு கண்ணதாசன் பாட்டு கேட்டிருக்கீங்களா?" என்று கண்ணதாசன் பாட்டு ஒன்றை அவள் கோட் செய்தாள்.

"காதலுக்குப் பரிசு தந்தேன் கட்டிலின் மேலே! அந்தக் கருணைக்கு நான் பரிசு தந்தேன் தொட்டிலின் மேலேன்னு

ஒரு பாட்டு இருக்கு தெரியுமா? அப்படித்தான் நானும் பரிசு கொடுத்துட்டேன்?'' என்றாள்.

''குழந்தை பிறந்த உடனே ஒவ்வொருத்தருமே ஏன் இப்படி தலைகால் தெரியாம நடந்துக்கறானுங்கன்னு இப்பதான் புரியுது சாரு!'' என்றான்.

''என்னமோ ஒரு பெரிய கோட்டையையே பிடிச்சுட்ட மாதிரி இருக்கு!''

''பின்னே? எத்தனை பேர் குழந்தைங்க இல்லைன்னு எங்கெங்கே போய் பிரார்த்தனை பண்றாங்க. அலைஞ் சுட்டிருக்காங்க. உங்களுக்கு உங்களை மாதிரியே கம்பீரமா ஒரு குழந்தை'' என்று சிரித்தாள்.

''இப்படித்தான் தூங்குவானா?'' என்று அவன் கன்னத்தை தடவிக் கொடுத்து விட்டு ''பேசினால் டிஸ்டர்ப் ஆகுமா?'' என்றான்.

அவள் சிரித்தாள்.

சற்று நேரம் குழந்தையினுடைய கையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தான். பிறகு எழுந்து வந்து அவள் கட்டிலின் மேல் அமர்ந்து அவள் கையைப் பிடித்துக் கொண்டான்.

அதற்குள்ளாக எல்லோரும் மறுபடியும் உள்ளே வந்தார்கள்.

கலகலப்பும் மகிழ்ச்சியுமாக சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு முன்னறைக்கு வந்தார்கள் .

செய்தி போக வரிசையாக உறவினர்கள் வர ஆரம்பித்து விட்டார்கள்.



சாரு அவனைப் பார்த்து ''உங்களுக்கு ஆஃபீஸ் போகணும்னா போங்க? இங்கே யாராவது ஒருத்தர் தான் நைட்ல இருந்துக்கணும். அம்மா இருந்துப்பாங்க''என்றாள்.

சோமநாதனும் கண்ணனும் வந்து குழந்தையின் கன்னத்தை தடவிக் கொடுத்து விட்டு விதவிதமாக தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

''அண்ணி, உங்களுக்கு கஷ்டமா இருக்கா? என்ன வேணும்னாலும் ஃபோன் பண்ணுங்க ''அண்ணி. எந்த நிமிஷம்னாலும் நாங்க வந்துடுவோம். செல் இருக்கில்லே? கூப்பிடுங்க. இப்ப நைட், பத்து மணி வரைக்கும் இருந்துட்டுப் போறோம்!'' என்றார்கள்.

உடனே அம்ச்சி ''நீங்க இங்க இருந்துட்டு என்னடா பண்றீங்க? டிஃபனெல்லாம் பண்ணி வச்சிருக்கில்லே, அதையெல்லாம் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்துட்டு அப்புறம் இருப்பீங்களாமா?'' என்றாள் அம்ச்சி.

''அம்ச்சி. நாங்க டர்ன் போட்டுக்கறோம் அம்ச்சி. கண்ணன் இங்க இருக்கையில நான் அங்கே'' என்று இருவரும் திட்டம் போட்டுக் கொண்டார்கள்.

குடும்பமே இந்தக் குழந்தையின் வருகையால் பூரித்துப் போவதை அவளும் ஒரு மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

புஷ்பலதா குழந்தையின் இரண்டு கைகளிலும் காப்புப் போட்டு விட்டு கழுத்திலே ஒரு செயினை மாட்டி விட்டாள்.

ஸ்ரீநாத் தனியாக குழந்தைக்கு அரணாக்கொடி செய்திருந் தான்.

அம்ச்சி சிரித்து விட்டு ''எல்லாம் அப்படியே எடுத்து வைங்க. பிறகு பேரு வைக்கிற அன்னைக்கு போடுவீங் களாம்'' என்று எல்லாவற்றையும் எடுத்து பத்திரப் படுத்தினார்.

''இது என்ன, வெற்றி வேல் போட்ட செயினா, எப்ப வாங்கினான்? சொல்லவேயில்லையே'' என்றாள் அம்ச்சி.

''தெரியலை, நேத்தே வாங்கிட்டாராமா?'' என்றாள் சாருசித்ரா.

''இந்த வேலையெல்லாம் பண்றானா?'' என்று அம்ச்சியும் அப்ச்சியும் சந்தோஷமாகத்தான் பேசிக் கொண்டார்கள்.

எல்லோரும் வந்து பார்த்து விட்டுப் போய்க் கொண்டே இருக்க அவளுக்கும் களைப்பாக இருந்தது.

சற்று நேரம் உறங்கி விட்டாள். ஒன்பது மணி இருக்கும். அவள் மெல்ல கண் விழித்த போது எதிரிலே இருந்து வந்து நின்றான் வெற்றிவேல்.

''டிஃபன் கொடுத்து அனுப்பிச்சாங்களான்னு பார்த் துட்டுப் போகலாம்னு வந்தேன்'' என்றான்.

''எப்படி உள்ளே வந்தீங்க? ஒருத்தருக்கு மட்டும்தானே பாஸ்!'' என்றாள் புஷ்பலதா.

''சோமு நின்னுட்டு இருந்தான். அவன்கிட்டே பாஸ் வாங்கிட்டு உள்ளே வந்துட்டேன். இப்ப நான் எதுக்கு வந்திருக்கேன்னா காலி பண்ணி வச்சிருக்கிற டிஃபன் பாக்ஸையெல்லாம் எடுத்துட்டுப் போக வந்திருக்கேனாம்'' என்றான்.

இங்கிதம் அறிந்த புஷ்பலதா அறையை விட்டு வெளியே போனாள்.



அவன் மெல்ல சாருசித்ராவின் அருகில் அமர்ந்து ''இருப்பே கொள்ளலை சாரு. இந்தப் பையனைத் தூக்கிட்டுப் போய் இருபத்து நாலு மணி நேரமும் வச்சுக்கணும்னு தோணுது. நீ என்ன அம்மா வீட்டுக்குப் போய் மூணு மாசம் இருக்கணுமா?'' என்றான்.

சாரு கலகலவென்று சிரித்தாள். ''உங்க பையன் வந்தவுடனே தான் இப்படியெல்லாம் தோணுதா? அதுக்கு முன்னாடி அம்மா வீட்டுக்குப் போனா எப்ப வரேன்னாவது கேட்டிருக்கீங்களா?'' என்றாள்.

அவன் வெட்கத்துடன் சிரித்தான். ''அது... கேட்கறதுக்குக் கூச்சம்னு வச்சுக்கோயன். ஆனா இந்தப் பயலை விட்டுட்டு இருக்க முடியாது போல இருக்கு!'' என்று பரிதவித்துப் போனான். அவள் அன்புடன் சிரித்து விட்டு எழுந்து அமர்ந்து அவன் தலையை கலைத்து விட்டாள்.

''ஐய்யோ, ஐய்யோ, இதோ பாருங்க வெற்றி, சாயங்காலம் ஆனா வந்திருங்க. நைட் கொஞ்ச நேரம் இருந்துட்டு அப்புறம் போயிடலாம்''

''அங்க போனா எம்ட்டியா இருக்கும்'' அவன் ஆதுரத்துடன் பார்த்து விட்டுத்தான் புறப்பட்டான்.

ஆசை ஆசையாக மகனைப் பார்த்துக் கொண்டு நின்ற விதம் பார்த்து அவளுக்கும் அன்றைக்கெல்லாம் ஒரு வகையில் மகிழ்ச்சி பொங்கி வந்தது.

## அத்தியாயம் - 14

குழந்தையை கையில் ஏந்திக் கொண்டு கொஞ்சிக் கொண்டிருந்தான் வெற்றிவேல். அப்பொழுது அவனது

முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியை உள்வாங்கி ரசித்துக் கொண்டு அமர்ந்து கொண்டிருந்தாள் சாருசித்ரா.

''ஏய், சாரு! இங்க பாரேன். சிரிக்கும் போது உன்னை மாதிரியே இருக்கு.'' என்றான் வெற்றிவேல்.

''ஆனா, மூக்கும் கண்ணும் உங்களை மாதிரியே இருக்குன்னு எல்லாரும் சொல்றாங்க''

''எப்படி இப்படி? இல்லை, இப்படி ஒரு கலவையா ஒரு குழந்தை வரும் பொழுது எவ்வளவு பெருமையா இருக்கு'' என்றான் அவன்.

அவளும் அதை ஒத்துக் கொண்டாள்.

அம்மா வீட்டுக்கு வந்து விட்டாள். போன வாரத்தில் தான் ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டுக்கு வந்திருந்தார்கள்.

தினமும் மாலை ஆறு மணிக்கு மேல் அதிக பட்சம் ஏழு மணிக்குள் வீட்டுக்கு வந்து விடுகிறான் வெற்றிவேல். வந்து இரவு உணவை இங்கே முடித்துக் கொண்டு எட்டு மணி அல்லது ஒன்பது மணி வரை இருந்து விட்டுத்தான் தன்னுடைய வீட்டுக்குச் செல்கிறான்.

குழந்தை அவனை ஈர்க்கிறது என்பதில் சாரு சித்ராவுக்கு கொஞ்சம் மகிழ்ச்சிதான். என்னதான் காதல் நேசம் என்றெல்லாம் பேசுவதில்லை என்றாலும் கூட தன் கடமைகளை சரியாகத் தான் செய்கிறான் என்று எண்ணிக் கொண்டாள்.

நாளடைவில் அந்த மென்மையான உணர்வுகளை இவனுக்கு புரிய வைக்க முடியும் என்று இவளுக்குத் தோன்றியது. யோசனையுடன் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.



ஏதோ பேசிக் கொண்டு திரும்பியவன், ஏதோ யோசனையில் இருந்த அவளிடம் ''ஏய்! நான் பேசிட்டே இருக்கேன்'' என்றான்.

''ஓ, என்ன சொன்னீங்க?'' என்றாள் அவள்.

''இல்லை, பய பெருசாகும் போது கொஞ்சம் அழகாத்தான் வருவான் போலிருக்கு!'' என்றான் அவன்.

''ரொம்பப் பெருமைதான்!'' என்றாள் அவள்.

''எங்க வீட்ல யாரு லட்சணம் குறைவு? சொல்லு பார்க்கலாம்!'' என்று காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான்.

அம்ச்சியும் அப்ச்சியும் பார்க்கறதுக்கு இப்பவே ஜே ஜேன்னு எப்படி இருக்காங்க? பார்வதி பரமேஸ்வரன் மாதிரி வராங்கள்ல'' என்றான்.

அவன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே தாத்தாவின் குரல் கேட்டது. ''பாருடா! அப்ச்சி வர்றாரு போல இருக்கு!'' என்றான் அவன்.

அவளும் ''ஆமாங்க!'' என்று உற்சாகமானாள்.

''வாங்க! வாங்க!'' என்று கைலாசமும் புஷ்பலதாவும் வரவேற்கும் குரல் கேட்டது. ''வந்துட்டேன், வந்துட்டேன்!'' முக்கியமான இரண்டு விருந்தாளிகளைக் கூட்டிட்டு வந்திருக்கேன். நம்ம லாயர் வந்திருக்காரு.. இவருதான் ஜெயராஜ். இது அவங்க பொண்ணு சம்யுக்தா. குழந்தையைப் பார்க்கணும்னு வந்திருக்காங்க!'' என்றார் அவர்.

''நல்லாப் பார்க்கலாம். வாங்க! வாங்க!'' என்று கைலாசமும் புஷ்பலதாவும் வரவேற்பதைக் கேட்டபடியே அறையை விட்டு வெளியேவந்தான் வெற்றிவேல்.

"சார், வாங்க, வாங்க!" என்று வரவேற்றான். "ஹாய், சம்யுக்தா!" என்று அவளையும் வரவேற்றான்.

சம்யுக்தா "ஹலோ!" என்றாள்.

அதற்குள்ளாக அறையைவிட்டு வெளியே வந்தாள் சாருசித்ரா.

"சாரு, இவரு நம்ம லாயர் ஜெயராஜ். இது அவங்க பொண்ணு சம்யுக்தா!" என்று அறிமுகப்படுத்தினார்.

"வாங்க!" என்று சாரு சம்யுக்தாவின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு அறைக்குப் போனாள்.

"குழந்தை எங்கே?" என்று கேட்டாள் அவள்.

"உள்ளே இருக்கான், வாங்க!" என்று நேராகத் தங்களுடைய அறைக்கு அழைத்துப் போனாள்.

அந்த அறையே பெரிய அறையாக இருந்தது. அங்கேயும் வருகிறவர்கள் வசதிக்காக நீள சோஃபா ஒன்று போட்டு வைத்திருந்தார்கள். அது போல பிளாஸ்டிக் சேர்களும் போட்டு வைத்திருந்தார்கள். மள மளவென்று ஒரு சேரை எடுத்துப் போட்டாள் சாருசித்ரா.

"நோ, டோன்ட் பாதர் யுவர் செஃல்ப். எதுக்கு கஷ்டப்படறீங்க? நானே எடுத்துப் போட்டுக்கறேன்!" என்று அவள் தானே அந்த சேரை இழுத்துக் குழந்தையின் தொட்டில் அருகே போட்டாள்.

"தூங்கறானோ?" என்றாள்.

"இல்லை. இப்பத்தான் படுக்க வைக்கலாம்னு ட்ரை பண்ணினேன். அதுக்குள்ளே உங்க குரல் கேட்டது. இன்னும் தூங்கலை" என்று சாரு சித்ரா குழந்தையை எடுத்தாள். எடுத்து சம்யுக்தாவிடம் கொடுப்பதற்காக நீட்டிய பொழுது



"ம்ஹூம், எனக்குக் குழந்தையெல்லாம் தூக்கத் தெரியாது. நீங்க இப்படி கட்டில் மேல் படுக்க வைங்க. நான் பார்த்துக்கறேன்" என்றாள்.

சாருசித்ராவும் சிரித்துக் கொண்டு "எனக்கே இப்ப தாங்க தைரியம் வருது. மொதல்ல இரண்டு மூன்று நாள் தூக்கறதுக்கு பயந்துட்டேன். அம்மாவோ அம்ச்சியோ யாரோ கூட இருந்துதான் ஹெல்ப் பண்ணுவாங்க" என்றாள்.

"அப்படிங்களா?" என்று சிரித்துக் கொண்டே குழந்தையைப் பார்த்தாள்.

"இருங்க, உங்களுக்கு காஃபி டீ என்ன வேணும்?" என்று சொல்லிக் கொண்டே நகர்ந்தாள்.

"இல்லைங்க. நான் காஃபி டீ சாப்பிடறதில்லை"

"ஓகே, பூஸ்ட் போடச் சொல்றேன்" என்று வெளியே போய் அம்மாவிடம் கண்ணைக் காட்டினாள்.

அம்மா உடனே சமையல்காரப் பெண்மணியிடம் கொஞ்சம் ஸ்வீட் காரம், அதோடு கூட பூஸ்ட்டும் கொடுத்து அனுப்பினாள்.

"எப்படி இருக்கான் என்பையன்?" என்று சிரித்துக் கொண்டே உள்ளேவந்தான் வெற்றிவேல்.

"சூப்பரா இருக்கான். அப்படியே உங்க முகம், கண்ணு. அவங்க சிரிப்பு போல இருக்கே" என்றாள் அவள்.

விநாடி நேரத்திற்குள்ளாக குழந்தையை எடை போட்டு விட்டதோடு தான் கொண்டு வந்திருந்த ஹேண்ட் பேக்கில் இருந்து ஒரு சின்ன நகைப் பெட்டியை எடுத்து குழந்தையின் கையிலே மோதிரத்தைப் போட்டு விட்டாள்.

''ஹலோ, இதெல்லாம் எதுக்குங்க?'' என்றான் வெற்றிவேல்.

''இருக்கட்டுங்க. குழந்தையைப் பார்க்கும் பொழுது சும்மா பார்க்கக் கூடாதுன்னு சொல்லுவாங்க'' என்று துணிமணிகள் அடங்கிய ஒரு அட்டைப் பெட்டியையும் கட்டிலின் மேலே வைத்தாள்.

சாருசித்ரா ''ரொம்பப் பண்பான பெண்ணாக இருக்கிறாளே!'' என்று எண்ணிக் கொண்டு திரும்பி கணவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

அவனும் அவளைப் பார்த்து புன்னகைத்தான்.

புன்னகைத்து விட்டுத் திரும்பிய பொழுதுதான் சம்யுக்தாவின் அந்தப் பார்வையைக் கண்டாள். கணவன் மனைவி இருவரையும் பார்த்த பார்வையில் ஏதோ ஒன்று கலந்திருந்தாற் போலத் தோன்றியது.

சட்டென்று சுதாரித்துக் கொண்டாள். ''இதே வேலையாப் போச்சு!'' என்று தனக்குத்தானே எச்சரிக்கை கொடுத்துக் கொண்டாள்.

''சரி, நீங்க பேசிட்டிருங்க. நான் சார்கிட்ட பேசிட்டிருக்கேன்'' என்று வெற்றிவேல் ஜெயராஜிடம் பேசுவதற்காக சென்று விட்டான்.

''ரொம்ப அழகா இருக்குங்க மோதிரம். உங்க செலெக்ஷனா?'' என்றாள் சாரு.

''ஆமாங்க, என் செலெக்ஷன்தான். வெற்றிவேல் சாருடைய பையனுக்குப் பார்த்து பார்த்து வாங்கினேன்'' என்றாள்.



அந்தக் குரலில் ஏதோ ஒன்று இருந்தது. 'இந்தப் பெண் நல்லதுக்கு வரவில்லை' என்று சாருசித்ராவுக்கு தோன்றியது.

அதற்குள்ளாக சமையற்காரப் பெண்மணி இனிப்பு, காரம் அடங்கிய தட்டையும் இன்னொரு கப்பிலே பூஸ்டையும் வைத்து விட்டுப் போனாள்.

''சாப்பிடுங்க'' என்றாள் சாரு சித்ரா.

''இருக்கட்டும். பரவாயில்லை!'' என்று ஒற்றை விரலில் பெருவிரலை சேர்த்துக் கொண்டு நாகரிகமாக பாதுஷாவில் இருந்து விள்ளலை எடுத்து அவள் வாயில் போட்டாள்.

கொண்டு வந்து வைத்திருந்த அந்த காராசேவில் இருந்து இரண்டே இரண்டை மட்டும் பொறுக்கி எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள்.

அவளுடைய செய்கையெல்லாம் பார்க்க சாருவுக்கு சிரிப்பாக வந்தது. நாகரீகம் என்ற பெயரில் இப்படியெல்லாம் செய்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டாள்.

அவள் பேசுகிற பண்பான பேச்சுக்கும் அவளுடைய இந்த மாதிரி செய்கைகளுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிற மாதிரி தெரியுது.

''சரிங்க, நீங்க எப்படியோ ஒரு குழந்தைக்கு தாயாயிட்டீங்க? நல்லவேளை வெற்றிவேல் தப்பிச்சாரு'' என்றாள்.

சாரு சித்ராவுக்கு புரியவில்லை.

''இல்லைங்க. நான் எதுக்கு சொல்ல வந்தேன்னா கல்யாணம் ஆகி ரெண்டு வருஷம் குழந்தை இல்லைன்னு வச்சுக்கோங்க. மாத்தி மாத்தி இதையே கேட்டு பாவம்

கல்யாணமானவங்களை ஒரு வழி பண்ணிடறாங்க! நம்ம சொசைட்டி என்றாள்.

"அது வேண்ணா நிஜங்க!" என்றாள் சாரு.

"ஒண்ணும் இல்லை. எங்களுக்கே கல்யாணமாயி மூணு மாசம் ஆன போது கூட ஜாடை ஜடையா கேட்க ஆரம்பிச் சுட்டாங்க"

"ஆமாங்க, எல்லாரும் என்னமோ கல்யாணம் பண்றதே குழந்தை பொறக்கறதுக்குத்தான் அப்படின்னு நினைச்சுக் கறாங்க" என்றாள் வந்தவள்.

சாரு சித்ரா மையமாக புன்னகைத்து வைத்தாள்.

"ஆனா ஒண்ணுங்க. எல்லோருக்கும் குழந்தை பெர்றதுங் கறது திருமணத்துக்கு அப்புறம் ஒரு அச்சீவ்மெண்ட் மாதிரி இருந்தாக் கூட உங்க ஹஸ்பெண்டுக்கு அது ரொம்ப முக்கியமான விஷயங்க" என்றாள்.

இவள் என்ன சொல்கிறாள் என்று புரியாமல் சாரு சித்ரா அவளைப் பார்த்தாள்.

"ஆமாங்க. உங்களுக்கு தெரியாதா? என்றாள்.

"என்னது?" என்றாள் சாரு சித்ரா.

"போச்சுடா! வெற்றிவேல் உங்ககிட்டேயும் வேலையைக் காட்டிட்டாரா. விஷயத்தை சொல்லாமே கல்யாணம் பண்ணிட்டாரா?" என்றாள்.

'இவள் ஏன் இப்படியெல்லாம் பேசுகிறாள்?' என்று சாருசித்ராவுக்கு கலக்கமாக இருந்தது.

"அவ்வளவு ஏங்க? உங்க கல்யாணத்துக்கு முன்னாடி வெற்றிவேல் ஒரு பெரிய எலிஜிபில் பேச்சுலர் தெரியுமா? எத்தனை பெரிய பெரிய பணக்கார ஃபேமிலியெல்லாம்



அவரை குறி வச்சுட்டு இருந்தாங்கன்னு தெரியுமா. மனுஷன் கடைசியில உங்க கிட்ட வந்து மாட்டிக்கிட்டாரு" என்றாள்.

அவள் விளையாட்டாகச் சொல்கிறாளா? கிண்டலாகச் சொல்கிறாளா என்பது புரியாத சாரு சித்ரா மையமாக அவளைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

"ஆமாங்க, எல்லாமே இந்தக் கலைஞானம் தாத்தா பண்ணின வேலை!" என்றாள்.

"புரியலைங்க!" என்றாள் சாருசித்ரா.

"ஹலோ! நான் வேறே உங்களைக் குழப்பி விட்டுட்டேனா?"

"இல்லை, நீங்க ஏதோ சொல்ல வர்ற மாதிரி இருக்கு. சொல்லலாம்" என்றாள் சாருசித்ரா நேரடியாக.

அவளை ஒரு நிமிடம் கூர்ந்து பார்த்த சம்யுக்தா பிறகு சொன்னாள். "கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்னு இருந்தாருங்க உங்க வீட்டுக்காரரு. பொண்ணுங்களையே பிடிக்காதுன்னு சொல்லிட்டு இருந்தாரு.பார்த்தாரு, கலை ஞானம் தாத்தா ஒரு கொக்கி போட்டாரு.கல்யாணம் பண்ணி குழந்தைப் பெத்துக்கிட்டாதான் சொத்து கிடைக்கும். இல்லைன்னா எல்லாத்தையும் தூக்கி டிரஸ்ட்டுல போட்டுருவேன்னு சொல்லிட்டாரு"

சொல்லிவிட்டு யதார்த்தமாக சிரிப்பது போல் கலகலவென்று சிரித்தாள்.

சாருசித்ரா தன்னுடைய உணர்ச்சிகளை மறைத்துக் கொள்வதற்காகப் பெரும்பாடு பட்டாள்.

அவளுடைய போராட்டம் வந்தவளுக்குப் புரிந்தாற் போலவும் கொஞ்சம் ரசிக்கிறாற்போலவும் தோன்றியது.

இந்தப் பெண்ணிடம் தான் எக்காரணத்தைக் கொண்டும் தோல்வியை ஒத்துக் கொள்ளக் கூடாது என்பது போல் சாருசித்ரா நிமிர்ந்து நின்றாள்.

''அது அவருக்கு ஒரு காரணமா இருக்கலாம். கல்யாணம்னா எத்தனையோ காரணத்துக்கு நடக்குது. கலைஞானம் தாத்தா எங்க வீட்ல பொண்ணு கேட்டாங்க. எங்க வீட்ல பொண்ணு கொடுத்தாங்க. அவ்வளவுதான்'' என்றாள் சாருசித்ரா.

''ஓஹோ, அப்ப சொத்துக்காகத்தான் உங்களை கல்யாணம் பண்ணிக்கிட்டாருன்னு சொன்னா உங்களுக்குக் கோபம் வராதா,'' என்றாள் சம்யுக்தா கேலி பேசுவது போல

''ஏங்க, நேருக்கு நேர் பார்க்காம எத்தனையோ கல்யாணம் நடக்குது. அது மாதிரி இதுவும் ஒரு கல்யாணம்'' என்றாள் அவள்.

''வெரி குட், வெரி குட் ஆட்டிட்யூட்'' என்றாள்.

மேலும் சற்று நேரம் பேசிக் கொண்டிருப்பது போல பேசிவிட்டு ''நான் அப்படியே கிளம்பறேங்க'' என்றாள்

''சரிங்க!'' என்றாள் சாருசித்ரா. இவள் எதற்காக வந்தாள் என்று உள்ளூர நொந்து கொண்டாள். அவள் கதவை நோக்கிப் போகும் பொழுது ''ஒரு நிமிஷங்க!'' என்று எழுந்து குழந்தையை தொட்டிலில் போட்டு விட்டு அவளோடு நடந்தாள்.

இரண்டு எட்டு வைத்து கதவை நெருங்கி போனவுடன் இவளைத் திரும்பிப் பார்த்தாள் ''நீங்க ரொம்ப கெட்டிக் காரங்க!'' என்றாள் சம்யுக்தா.

''தெரியும்!'' என்றாள் சாருசித்ரா.



''ஏங்க, வந்த கொஞ்ச நேரத்துல நான் புரிஞ்சுட்டேன் நீங்க அவரை ரொம்ப நேசிக்கிறீங்க. ஆனால் பாவம், அவர் உங்களை நேசிச்சுக் கல்யாணம் பண்ணிக்கலை. ஏன் ஒரு பொண்ணுங்கறதுக்காகக் கூட கல்யாணம் பண்ணிக்கலை, உங்களை பிடிச்சிருக்குன்னு கூட கல்யாணம் பண்ணிக் கலை. கல்யாணம், தாத்தா உங்களை பண்ணனும்னு சொல்லிட்டாரு. சொத்துக்காகப் பண்ணிகிட்டாரு'' என்றாள்.

''இதெல்லாம் அனலைஸ் பண்ணக்கூடாதுங்க. அனலைஸ் பண்ணினா நல்லா இருக்காது. வாழ்க்கையை அது போக்கிலே ஒட்டிப் போக வேண்டியதுதான். இப்பப் பாருங்க குழந்தைகிட்டே எவ்வளவு பிரியமா இருக் காருன்னு ஆறு மணி ஆனா ஓடி வந்துடுவாரு!'' என்றாள் சாரு சித்ரா.

''பின்னே? அப்படியெல்லாம் பாவ்லா பண்ணினாத் தானே உங்களுக்கு சந்தேகம் வராது?'' என்றாள்.

சாரு சித்ரா ஒன்றும் பேசவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு நின்றாள்.

''ஐ ஆம் சாரி, இஃப் ஐ ஹவ் ஹர்ட் யூ'' என்று சொல்லி விட்டு 'வரேங்க!' என்று சம்யுக்தா நகர்ந்தாள். அதற்குப் பிறகு சாருசித்ரா அவளைத் தொடரவில்லை.

தான் வந்த காரியம் நிறைவேறிய நிறைவோடு ''அப்பா கிளம்பலாமா?'' என்று அப்பாவை அழைத்துக் கொண்டு கிளம்பினாள் மகள்.

வாசல் வரை சென்று வழியனுப்பிவிட்டுவந்தான் வெற்றிவேல்.

"ஏன் சாரு, நீ வாசல்வரைக்கும் வந்திருக்கலாமே? நமக்கு முக்கியமானவங்க" என்றான்.

"இல்லைங்க, இவ்வளவு நேரம் அழுதான்" என்றாள்.

ஆனால் ஏனோ அப்போது அவன் முகத்தை பார்க்கவே அவளுக்கு பிடிக்கவில்லை.

"என்ன சாரு? என்ன ஆச்சு?" என்றான்.

"ஒண்ணும் இல்லைங்க!" என்றாள் அவள் முகத்தை திருப்பிக் கொண்டு.

அந்த நிமிடத்திலே இருந்து அவன் புறம்படும் வரை தன்னுடைய முகத்தை அவள் நேரடியாக பார்க்கவில்லை என்பதை புரிந்து கொண்டவனாக அவன் அவளை யோசனையுடன் பார்த்தான்.

"சாரு!" என்றான்.

"என்னங்க!" என்றாள்.

"நிமிர்ந்து என்னைப் பாரு!" என்றான்.

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"என்ன மனசுல இருக்கு? கேளு!" என்றான்.

"இல்லை, சம்யுக்தா ஏதேதோ சொல்லிட்டுப் போனாங்க" என்றாள்.

"சம்யுக்தாவா?" என்றான் அவன் கிண்டலாக.

"சம்யுக்தாவுக்கு இதேதான் வேலை. அவ எதைச் சொல்லியிருந்தாலும் விட்ரு"

"இல்லைங்க. இது எனக்கு தெரிஞ்சாகணும். நான் உங்ககிட்ட ஒரு கேள்வி கேட்கறேன். நீங்க அதுக்கு மறைக்காம பதில் சொல்லணும்" என்றாள் அவள்.



"அடடடா! இந்த அழகான மனைவிக்கு என்ன இப்படியெல்லாம் சந்தேகம்!" என்று அவன் விளையாட்டாகக் கேட்க முயன்ற பொழுது கூட அவள் உறுதியோடு நின்றாள்.

"கேட்ரு" என்றான் அவனும் சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டு.

அவளும் அந்தக் கேள்வியைக் கேட்டாள்.

ஒரு கணம் அவன் முகம் சிறுத்துப் போனது. பிறகு பழைய நிலைக்கு வந்து கடகடவென்று வாய்விட்டு சிரிக்க ஆரம்பித்தான் வெற்றிவேல். அந்த சிரிப்புக்கு என்ன அர்த்தம் என்று தெரியாமல் மலைத்துப் போய் நின்றாள் சாருசித்ரா.

## அத்தியாயம் - 15

"அப்ச்சி. என்னை வந்து நாளைக்கு பார்க்கணும். கண்டிப்பா வரணும். உங்களைப் பார்க்கணும்" என்று நேற்றே சொல்லியிருந்தாள் சாருசித்ரா. அதற்கேற்ப அன்று பிற்பகல் நான்கு மணி அளவில் கலைஞானம் வந்தார்.

"ஏன் அம்மணி? என்னாச்சு உனக்கு? திடீரென்று மூட் அவுட் மாதிரி இருக்கிறே? காலையிலேயிருந்து ரெண்டு தடவை போன் பண்ணிடுவே? இன்னைக்கு ஃபோனையும் காணோம். உடம்பு கிடம்பு சரியில்லையா?" என்றபடி பேரனின் மனைவியைப் பார்ப்பதற்கு உள்ளே வந்தார்

அருடைய குரலைக் கேட்டவுடனே ஒய்ந்து படுத்துக் கொண்டிருந்த சாருசித்ரா எழுந்து தயாராகிக்கொண்டாள். "உங்ககிட்ட பேசணுங்க அப்ச்சி!" என்றாள்.

"அதான் நேத்தே சொல்லிட்டியே? சரி வழக்கமா பேசற மாதிரி இன்னிக்குக் கூப்பிடுவேன்னு பார்த்தேன். கூப்பிடக் காணோம். ஏன் அம்மணி?" என்றார்.

"இல்லைங்க தாத்தா. எனக்குக் கொஞ்சம் மனசு சரியில்லை" என்றாள்.

அவள் முகத்தில் இருந்த வேதனையைப் பார்த்தவுடன் அவருமே கொஞ்சம் விளையாட்டுப் பேச்சை விட்டுவிட்டு சீரியஸான மூடுக்கு மாறினார்.

"என்ன அம்மணி ஆச்சு? இந்த முரடன் ஏதாவது சொன்னானா? உன்னை ஏதாவது பேசினான்னா எங்கிட்ட சொல்லு" என்றார்

அவள் அவரை வேதனையுடன் பார்த்தாள். "அப்ச்சி, நான் ஒரு விஷயம் உங்ககிட்ட கேக்கோணும்" என்றாள்.

"சொல்லு சாமி, இனிமே எல்லாத்தையும் பார்த்துக்கப் போறது நீயும் அவனும் தானே? உங்ககிட்ட சொல்லாம வேற யாரு கிட்ட சொல்லப் போறேன். நீ கேட்கற கேள்விக்கு நான் பதில் சொல்லத்தானே காத்துகிட்டு இருக்கேன். கேளு அம்மணி"

உடனே அவள் "நான் இப்படி கேட்கறனேன்னு தப்பா நினைச்சுக்காதீங்க அப்ச்சி" என்றாள்.

"கேளும்மா" என்றார்.

"நீங்க ஏதாவது உயில் எழுதி வச்சிருக்கீங்களா?" என்றாள்.

"ஆமா, உயில் எழுதித்தான் வச்சிருக்கேன்"

"என்னன்னு எழுதி வச்சிருக்கீங்க?" என்றாள்.

"என்னடா இது விசாரணையா போச்சு? உனக்கு என்ன கேட்கணும்? நேரடியா கேளு!" என்றாள்.



"இல்லைங்க அப்ச்சி. கல்யாணம் பண்ணி குழந்தை வந்தாத்தான் உங்க பேரனுக்கு சொத்து. இல்லைன்னா அந்த சொத்தெல்லாம் டிரஸ்டுக்கு போயிடும்னு எழுதி வச்சிருக்கீங்களா?" என்று கேட்டாள்.

ஒரு நிமிடம் அவளை உற்றுப் பார்த்த தாத்தா பேரனைப் போலவே கடகடவென சிரித்தார். "அதை யாரு அம்மணி உங்களுக்குச் சொன்னாங்க?" என்றார்.

"அந்த சம்யுக்தா வந்தாங்கள்ல. அவங்க தான் சொன்னாங்க?" என்றாள்.

"ஓ! அந்தப் புள்ளையா? அது ஏதாவது கிருத்திரியம் பண்ணுமே! என்னன்னு சொல்லுச்சு?"

"இல்லை. எனக்காக அவரு கல்யாணம் பண்ணிக்கலை. சொத்துக்காகத் தான் கல்யாணம் பண்ணினாரு அப்படின்னு சொன்னாங்க"

"அது கிடக்குது அம்மணி. அந்தப் புள்ளைக்கு உன்ற வீட்டுக்காரரைக் கல்யாணம் பண்ணனும்னு எண்ணம் இருந்தது. இந்தப் பய மடங்க மாட்டேன்னுட்டான். அந்தக் கோவத்துல தான் சொல்லியிருப்பா"

"அப்ச்சி பேச்சையெல்லாம் மாத்தாதீங்க. அப்படி ஒரு உயில் இருக்குதா இல்லையா? என்று கேட்டாள் பேரனின் மனைவி.

தாத்தா அமைதியாக ஒரு நிமிடம் நின்று விட்டு பெருமூச்சு விட்டுவிட்டுப் பிறகு சொன்னார். "ஆமா அம்மணி, அப்படி நான் ஒண்ணு எழுதித்தான் இருக்கேன்" என்றார்.

"ஏனுங்க அப்ச்சி?" என்றாள் இவள் வேதனையுடன்.

"அப்படியில்லை அம்மணி. இதுல என்ன தப்பு இருக்குது? எங்களுக்குப் பேரனுக்கு கல்யாணம் பண்ணிப் பார்க்கணும்னு ஆசை இருக்காதா? அதுக்கு நான் இப்படி ஒரு வழி வச்சேன். அவன் சொத்து பணம் இதுக்கெல்லாம் எவ்வளவு முக்கியத்துவம் இருக்குன்னு தெரிஞ்சவன் அம்மணி. நாலு தலைமுறை சொத்து! அப்படி விடுவானா விடமாட்டானில்லே?"

........................?!

அதுக்காக பணத்தாசை பிடிச்சவனில்லை அம்மணி. இப்பவும் அவன் டிரஸ்ட்டுக்கு செய்யறவன் தான். இப்ப நம்மதுல இருந்து 25% டிரஸ்ட்டுக்கு பண்ணிட்டுத்தான் இருக்குது. மீதி 75% நாம ரொட்டேஷன் பண்ணிட்டு இருக்கோம்.அதெல்லாம் அவனுக்கும் தெரியும். அதனால தான் ஒரு கொக்கி வச்சேன் அம்மணி!" என்றார்.

அவள் மறுபடியும் வேதனையுடன் தாத்தாவைப் பார்த்தாள். "அப்ச்சி, இது உங்களுக்கே நியாயமா படுதா? அவருக்குப் புடிச்சு என்னை தேர்ந்தெடுத்தீங்களா. இல்லை நீங்க சொன்னதுனால அவரு என்னை கல்யாணம் பண்ணிட்டாரரா?" என்று கேட்டாள்.

"அடடடா, என்ன அம்மணி உன்னோட பெரிய வம்பாப் போச்சு. எப்படி இருந்தா என்ன அம்மணி. இப்பக் கல்யாணம் பண்ணியாச்சு. குழந்தை பெத்துக்கிட்டாச்சு" என்றார்.

இவளிடம் இருந்து காலையில் இரண்டு முறை ஃபோன் வரவில்லை என்றவுடனேயே கலைஞானம் தாத்தாவுடன் கூடவே பாட்டியும் வந்திருந்தாள்.



அருள்நாயகி "என்ன தாத்தனும் பேத்தியும் பேசிட்டு கிடக்கறீங்க?" என்றபடி உள்ளே நுழைந்தாள்.

தாத்தா "அருளு, இந்தப் பொண்ணு என்ன சொல்லுதுன்னு கேளு!" என்றார்.

"எ...என்ன...அம்மணி!" என்று அவளும் ஒரு சேரை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள்

"நேத்து அந்த சம்யுக்தா பொண்ணு வந்துது. அது என்னமோ போட்டு இது மனசை குழப்பி விட்டுட்டு போயிருக்கு போல இருக்குது!" என்றார்.

பாட்டியின் முகத்தில் கவலை தெரிந்தது. "சம்யுக்தாவா? ஐய்யோ! அது விஷக் கொடுக்காச்சே?" என்றாள்.

"அது தான் ஏதோ கொட்டிட்டுப் போயிருக்குது. இது நேத்துல இருந்து போட்டு மனசை குழப்பிட்டு இருக்கு. என்னன்னு கேளு அம்மணி?" என்றாள்.

உடனே பாட்டியிடம் அவள் அதே கேள்வியை கேட்டாள். "அம்ச்சி, உங்க பேரனுக்குப் புடிச்சு என்னைக் கல்யாணம் பண்ணினாரா? இல்லை இவரு ஏதோ உயில் எழுதி வச்சதுக்காக அந்த உயிலுக்காக கல்யாணம் பண்ணினாரா?" என்றாள்.

பாட்டி ஒரு நிமிடம் திகைத்துப் போனாள். பிறகு கணவனைப் பார்த்து "இதான் பிரச்சினையாக்கும்? நான் பார்த்துக்கறேன். நீங்க போய் உங்க ஆம்பளைங்க சமாச்சாரத்தைப் பாருங்க" என்றாள்.

"ஆமா, அம்மணி நான் கைலாசத்துக்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்னுட்டு இருந்தேன். அது தொழில் சம்பந்தமானது!" என்று சொல்லிவிட்டு எழுந்து போனார்.

"என்ன அம்மணி இது!" என்றார் அம்ச்சி.

"இல்லைங்க அம்ச்சி. எனக்கு அந்தப் பொண்ணு சொன்ன விதம் என்னமோ நாம ஏமாந்து போயிட்ட மாதிரி இருந்தது. சொத்துக்காகவும் ஒரு குழந்தையை உருவாக்கு வதற்காகவும் தான் இவரு என்னை கல்யாணம் பண்ணிக் கிட்டாரு. அப்படிங்கற மாதிரி அந்தப் பொண்ணு சொல்லுச்சு" என்றாள்.

அருள்நாயகி சற்று நேரம் அமைதியாக அமர்ந்தார். சாருவின் உதடுகள் துடிக்க கண்ணீர் பெருகியது அவளுக்குத் தெரிந்தது. "உங்க அம்மா எங்கே?" என்றாள் அவசரமாக.

"அம்மா ஒரு சொந்தக்காரங்க வீட்டுக்குப் போயிருக் காங்க. சாயங்காலம் வருவாங்க. அதனால தான் தாத்தாவை இந்த நேரத்துக்கு வரச் சொன்னேன்" என்றாள்.

"நல்ல வேளை அம்மணி!" என்று எழுந்து சாருசித்ராவை இழுத்துத் தன் மடியில் முகத்தை புதைத்துக் கொள்ளச் செய்தாள்.

"அழுதுடு. அம்மணி அழுதுடு!" என்றாள்.

சாருசித்ராவை சற்று நேரம் அழு விட்டாள். "பிறகு, இங்க பாரு கண்ணு, பச்சை உடம்பு. மனசைப் போட்டு உழப்பிக்கக் கூடாது. உங்க தாத்தனுக்கும் எனக்கும் நம்ம வூட்டுக்குன்னு ஒரு பொண்ணு வந்தா அது நீயாத்தான் இருக்கணும்னு மனசுல ஒரு தீர்மானம் இருந்தது. அது இன்னிக்கு நேத்துக்கு இல்லை அம்மணி.மூணு நாலு வருஷத்துக்கு முன்னாடியே நாங்க முடிவு பண்ணினதுதான். வெற்றிவேல் பயலுக்கு கல்யாணம்னா இன்னுமே



என்னன்னு புரியலைடி ராஜா. தாத்தா உன்னைப் பத்தி ஒண்ணொண்ணும் சொல்வதைக் கேட்டு எனக்கு இவனைத் திருத்தணும்னா இப்படி ஒரு பொண்ணுதான் வரணும்னு எண்ணம் படிஞ்சு போச்சு அம்மணி.அதனால தான் நாங்க நீயே வேணும்னு அடம் பண்ணினோம்"

அவள் ஆழ்ந்த வருத்தத்துடன் அம்ச்சியைப் பார்த்தாள். "அம்ச்சி, உங்க விளையாட்டுக்கு நான்தான் பலிகடாவா கிடைச்சேனா?" என்று கேட்டாள்.

அருள்நாயகி அவளை ஆழமாகப் பார்த்தாள். "ஏன் அம்மணி, இப்படி ஒரு கேள்வி கேட்கறது உனக்கே சரியாப் படுதா?" என்றாள்.

"ஏன்?" என்று அவளை நிமிர்ந்து பார்த்தாள்.

"அம்மணி, எனக்கு தெரியும் அம்மணி, நீ வெற்றிவேல் மேல் உசிரையே வச்சிருக்கிறே. உனக்கு அவன் மேலே என்னமோ சொல்லிக்குவீங்களே லவ்வோ கிவ்வோ அது இருக்குதுன்னு தெரியுது.அதனாலதான் நாங்க பிரியமா பண்ணி வச்சோம்" என்றாள்.

அவள் கண்களைத் தாழ்த்திப் புதைத்துக் கொண்டு வேதனையுடன் புன்னகைத்தாள். "அதுதானே விஷயம்.என்னை எனக்காகப் பண்ணிக்காம இப்படி ஒரு காரணத்துக்காக ஒருத்தர் பண்ணிக்கிட்டார்னா அதை நான் எப்படி ஜீரணிச்சுக்கறது. அவருக்கு நான் ஒரு பிள்ளையும் பெத்துக் கொடுத்திருக்கேன்" என்றாள்.

பாட்டி வேதனையுடன் அவள் கன்னத்தை தடவிக் கொடுத்தாள். பிறகு சொன்னாள். "அம்மணி பொம் பளைங்க வாழ்க்கையில எத்தனையோ போராட்டம்

இருக்குது அம்மணி. இது ஒரு சின்னப் போராட்டம் அம்மணி. இப்ப உங்கிட்ட பெரிய ஆயுதம் இருக்குது தெரியுமா? உன் கழுத்துல கிடக்கிற தாலி. அவன் ஒழுக்கமானவன் அம்மணி. அவன் இதுக்குக் கட்டுப் படுவான். எனக்கு ஒண்ணு மட்டும் தெரியுது அம்மணி. அவன் உன்னைத் தவிர வேறு ஒரு பொண்ணையும் நிமிர்ந்து பார்த்ததில்லை. இனிமேலும் பார்க்க மாட்டான். அதுக்கு மேல அவனை ஜெயிக்கறது உன்னோட சாமர்த்தியம் அம்மணி!'' என்றாள்.

சாருசித்ரா ஒன்றும் பேசவில்லை. ''உங்கிட்ட பெரிய படை இருக்குது அம்மணி. உன்ற மகன். அவனை வச்சுப் பெரிய சாம்ராஜ்யத்தையே ஜெயிக்கலாம் அம்மணி. உனக்கு சொத்து வேண்டாம்னா விடு. அவனுக்கு சொத்து வேணுமில்லே. நாலு தலைமுறை சொத்தை ரோட்ல போக விட்ற முடியுமா? விட மாட்டான். அதுக்காகவே அவன் கல்யாணம் பண்ணியிருந்தாலும் ஏதோ ஒரு விதத்துல உன்னைப் பிடிச்சுத்தானே கல்யாணம் பண்ணியிருக்கான். அவனுக்குப் பிடிக்கலைன்னா மட்டும் அவனை மடங்க வைக்க முடியாது'' என்றாள் அருள்நாயகி.

மெல்ல மனம் தேறிக் கொண்டாள் சாரு சித்ரா.

முதல் நாள் கடகடவென்று சிரித்து விட்டுப் போன கணவன் வரட்டும் என்று காத்துக் கொண்டிருந்தாள். அவனும் அன்று மாலை ஆறு மணிக்குள் எதுவுமே நடக்காதது போல வந்தான்.

''என்ன அம்ச்சி, அப்ச்சி எல்லாரையும் கூப்பிட்டு விசாரணையும் பண்ணியாச்சா?'' என்றான் அவர்கள் தனிமையின் போது.



அவள் திரும்பி அவனை வியப்பாக பார்த்தாள்.

''சாரு, நீ எதுக்கு இவ்வளவு பெரிய பில்டப் கொடுக்கறே? கோடிக்கணக்கான சொத்தை டிரஸ்டுக்கு விட முடியுமா? டிரஸ்டுக்கு வேண்டியது டிரஸ்ட்லே போட்டிருக்கோம்னு சொல்லியிருப்பாரே? என்றான்.

அவள் தலையாட்டினாள்.

''ஆனால், உங்களுக்கு சொத்து வேணுங்கறதுக்காக ஒரு கல்யாணம் பண்ணிட்டு அந்த நினைப்போட மட்டும் தானே நீங்க என்னை தொட்டிருக்கீங்க'' என்று சொல்லும் போது அவளுக்குக் கடகடவென்று கண்ணீர் வடிந்தது.

''எனக்குப் புரியவே இல்லை. எதுக்கு நீ இப்ப ஃபீல் பண்றே?'' என்றான் அவன்.

அவன் கண்களைப் பார்த்தாள் சாருசித்ரா. உண்மை யாகவே அவளுடைய தேவை என்ன என்பது அவனுக்கு புரியவில்லை என்பது அவளுக்கு புரிந்தது.

''இப்ப என்னங்கறே?'' என்றான்.

''ஏங்க. இது நாள் வரைக்கும் உங்களுக்கு பெண்களை பிடிக்காதுன்னு மட்டும்தான் நான் நினைச்சுட்டு இருந்தேன். ஆனா ஏதோ பணங்கற காரணத்துக்காக நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிருக்கீங்கறதை என்னால ஏத்துக்க முடியலை!''என்றாள்.

அவன் நீண்டதொரு பெருமூச்சு விட்டான். ''இப்ப என்ன செய்யணுங்கறே?'' என்றான்.

அவள் அமைதியாக தலையைக் குனிந்து கொண்டு அமர்ந்திருந்தாள்.

''நான் என்ன சொல்றேன்னே உங்களுக்குப் புரியலைங்க'' என்றாள்.

''சரி, எனக்கு இந்த விஷயங்கள் புரியறதில்லை. எனக்கு இதில் பெரிய ஆர்வமும் இல்லை. கல்யாணம் பண்ணினா குடும்பம் நடத்தணும். நடத்தினேன். அதுக்கு சம்மதிச்சுத் தான் நான் கல்யாணம் பண்ணினேன். குழந்தையைப் பெத்துக்கிட்டேன். சொத்துங்கறது வேற விஷயம்மா. அதை ஏன் நீ இதுல இழுக்கறே?'' என்றான்.

''ஆனா அதுக்கு அப்ச்சி என்னையும் பையனையும் தானே பணயமா வச்சிருக்காரு?''

அவன் மறுபடியும் சிரித்தான். ''இதோ பாரு, இது சுத்தமா எனக்குப் புரியலை. விட்ரு. இதுக்கு நான் என்ன செய்யணும். அதைச் சொல்லு!'' என்றான்.

அவள் அவனை நிம்ர்ந்து பார்தாள். ''நான் இங்கேயே இருந்துக்கறேங்க!''

''ஏய், என்ன விளையாடறியா?'' என்றான் அவன்.

''அப்ச்சி அம்ச்சியும் உசிரையே விட்டுடுவாங்க. அவங்க இப்பதான் கொஞ்சம் நிம்மதியா இருக்காங்க'' என்றான்.

''அதுக்காகத்தான் பார்க்கறேன்!'' என்று முணுமுணுத் தாள்.

தலையைக் குனிந்து கொண்டு முணுமுணுக்கிற மனைவியை அவன் விசித்திரமாகப் பார்த்தான். பிறகு புன்னகைத்துக் கொண்டான்.

''உனக்கு என்ன வேணும். நான் உன்னை தொடக் கூடாதா,'' என்றான்.

அவள் கீழே பார்த்துக் கொண்டு தலையை ஆட்டினாள்.



''ஓகே டன்!'' என்றான்.

அவள் ஆச்சரியமாக அவனைப் பார்த்தாள்.

''ஆமாம் சாரு, உனக்கா எப்ப சரின்னு தோணுது அது வரைக்கும் உன்னைத் தொட மாட்டேன். நீ தைரியமா வீட்டுக்கு வரலாம். எப்படி இருந்தாலும் டைவர்ஸ்ன்னு போய் ரெண்டு பேருக்கும் பிரிவுங்கறது எல்லாத்துக்கும் ஒரு கஷ்டத்தைத்தான் கொடுக்கும்.உனக்கு என்னை பிடிக்கலைன்னா பரவாயில்லை டாலரட் பண்ணிக்கோ!'' என்றான்.

அவன் இப்படிப் பேசவும் அவளுக்கு என்ன செய்வ தென்றே தெரியவில்லை.

''ஆமாம் சாரு. தயவு செய்து வீட்டுக்கு வந்துடு. இப்ப சொத்து ஒண்ணும் பெரிய பிரச்சினை இல்லை. அதை நான் தனியா சம்பாதிச்சுக்கறேன். தாத்தா உயிலை ரிஜிஸ்டர் பண்ணிட்டாரு. ரெண்டு நாளைக்கு முன்னாடி தான் அதை மாத்திக் கொடுத்தாரு. உனக்கு இப்படி ஒரு அப்ஜக்ஷன் இருக்குன்னு தெரிந்திருந்தா நான் வேற விதமா டீல் பண்ணியிருப்பேன்''

''வேற விதமான்னா? சொத்து வேண்டாம்னா சொல்லியிருப்பீங்க?''

''அது எப்படி முடியும்? அது முடியாது! ரெஜிஸ்ட்ரேஷன் வேண்ணா உனக்குப் புரியற வரைக்கும் தள்ளிப் போட்டிருக்கலாம்''

அப்போதும் அவன் செல்வத்தைத்தான் பெரிதாக மதிக்கிறான் என்பது அவளுக்கு வருத்தமாக இருந்தது.

''சொல்லு, உன்னோட கண்டிஷன் என்னன்னு சொல்லு!'' என்றான் மறுபடியும்.

"அதேதான்!" என்றாள் அவள்.

"மூணு மாசத்துல வீட்டுக்கு கூட்டிட்டு வருவாங்க. ஆனா எனக்கு மனசு சமாதானம் ஆகிற வரைக்கும்...!" என்று இழுத்தாள்.

"நீயா விருப்பப்படற வரைக்கும் உன்னை நான் தொட மாட்டேன்"

அவள் வெறுப்புடன் அவனைப் பார்த்து சிரித்தாள்.

"ஈஸியா ஒத்துக்குவீங்கன்னு எனக்குத் தெரியும்"

"இது என்னடா வம்பாப் போச்சு!" என்று அவன் பார்க்க.

"ஆமா, குழந்தை வந்தாச்சு. நீங்க விரும்பின சொத்து கைக்கு வந்தாச்சு. பெயருக்கு மனைவியும் வந்தாச்சு. அப்புறம் என்ன!" என்றாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை.

"சரி, அப்படித்தான் இருக்கட்டும்!" என்றான்.

இரண்டு பேரும் சற்று நேரம் முகத்தை திருப்பிக் கொண்டு அமர்ந்திருந்தார்கள்.

பிறகு எழுந்து "நான் கிளம்பறேன்" என்றான்.

"சரி!" என்று வழக்கம் போல வாயில் வரைக்கும் வந்து அவனை வழியனுப்பினாள். பெற்றோர்களுக்காக வழக்க மான நாடகத்தை நடத்தி விட்டுத் தன் அறைக்கு வந்தாள்.

நிர்மலமான முகத்தோடு உறங்குகிற குழந்தையைப் பார்த்துக் கொண்டு வெடித்து அழுதாள்.



## அத்தியாயம் - 16

புரண்டு படுத்தாள் சாரு!

மணி எவ்வளவு இருக்கும். இரண்டு இருக்குமா? என்று எண்ணிக் கொண்டே கண் விழித்து பார்த்தவள் திகைத்துப் போனாள். ஏனென்றால் திடீரென்று அறையில் மினுக் மினுக்கென்று விளக்குகள் மின்னின.

ஒவ்வொரு விளக்கின் ஒளியிலும் ஒரு அட்டை மின்னியது. அதிலே "ஹாப்பி பர்த் டே சாரு!" என்று எழுதி இருந்தது.

அவள் ஒரு கணம் ஆச்சரியப்பட்டுப்போய் திரும்பி பார்த்தாள்.

கணவன் எதிரிலே ஒரு சேரில் அமர்ந்து கொண்டிருந் தான். "ஹாப்பி பர்த் டே அன்ட் மெனி மோர் ரிட்டன்ஸ் ஆஃப் த டே!" என்றான்.

"தாங்க் யூ!" என்றாள் அவள்.

உவகை பொங்கியது. இப்படியெல்லாம் தானே அவள் திருமணத்திற்கு முன் கற்பனை செய்திருந்தாள்? ஆனால், இன்றைக்குக் குழந்தை பிறந்ததற்குப் பிறகு ஆறு மாதத் திற்குப் பிறகு கணவன் இப்படியெல்லாம் கொண்டாடு கிறானா? என்று மகிழ்ச்சி ஏற்பட்ட போதும் உடனேயே அது வடிந்து போனது.

குழந்தை என்ற நினைப்பு வந்தவுடனேயே அந்த குழந்தைக்கான காரணம், அதற்கு பின்னாலே இருக்கிற எதிர்பார்ப்பு என்று அவள் மனம் கசந்து போனது.

அவளுடைய முகமாற்றத்தைக் கண்டு கொண்ட வெற்றிவேல் "இன்னிக்கு உன் பர்த்டே. கண்டதையும்

போட்டு குழப்பிக்கக் கூடாது. உன்னுடைய உண்மையான கணவனா நான் விஷ் பண்றேன். இனி வரப் போற நாட்கள் எல்லாம் உனக்கு ஹாப்பியா இருக்கணும்னு விஷ் பண்றேன்!'' என்றான்.

அவள் அவன் முகத்தைப் பார்த்தாள்.

சற்று உற்று கவனித்தாள். உண்மையாகவே அதில் ஆர்வம் இருந்தது. அதில் உண்மையான பாவமும் இருந்தது அதனால் உடனே புன்னகைத்துக் கொண்டு ''தாங்க்யூ, தாங்க்யூ வெரி மச்!'' என்றாள்

அதற்குள்ளாக குழந்தை விழித்துக் கொண்டான்.

குழந்தையைத் தன்னுடைய தோளில் ஏந்திக் கொண்டான் வெற்றிவேல். அவன் அப்படி குழந்தையை ஏந்திக் கொள்ளும் பொழுது பார்க்க மிகவும் ஆனந்தமாக இருக்கும். அவன் காணாதவாறு அவளும் அந்தக் காட்சியை கண்டு ரசிப்பதுண்டு.

''தங்கப் பையா, அம்மாவுக்கு ஹாப்பி பர்த்டே சொல்லு!'' என்று அவளுடைய கையைப் பிடித்து குழந்தையின் கையிலே வைத்து குலுக்கினான் வெற்றிவேல்.

அவள் தன்னை மறந்து சிரித்தாள்.

குழந்தையும் தூக்கத்திலேயே சிரித்தான்.

அவன் சற்று நேரம் குழந்தையை கொஞ்சி உறங்கச் செய்து விட்டு படுக்கையில் படுக்க வைத்தாள். படுக்கையில் படுக்க வைத்து விட்டு திரும்பும் போது அந்த டேபிளின் மேல் இருந்த மேஜை விளக்கு ஒளிர்ந்தது.

அதற்கு கீழே அழகான ஒரு சுடிதார் செட்டும் ஒரு நகைப் பெட்டியும் இருந்தது. அவன் உற்சாகமாக சென்று



அந்த நகைப்பெட்டியை எடுத்து அவளிடம் நீட்டி ''இது என் பரிசு!'' என்றான்.

சுடிதாரையும் நீட்டினான்.

அவள் சற்று தயங்கி விட்டு வாங்கிக் கொண்டாள். ''எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள். ''போன வருஷம் தான் நீ சொல்லவே இல்லையே. நானும் இந்தக் குழந்தை கேரிங்னு அதுல ஏமாந்துட்டேன். நீ அந்த டைம்ல அங்கிருந்தே. அப்பவே சொல்லியிக்கலாமில்லே'' என்றான்.

''நீங்க அதிலயெல்லாம் ஆர்வம் இருக்கற மாதிரி நடந்துக்கிட்டதில்லை. அதனால சொல்லலை. இப்ப எப்படி உங்களுக்கு தெரியும்?'' என்று கேட்டாள்.

''பிரதர் ஸ்ரீ ஃபோன் பண்ணினார் நேத்து'' என்றான்.

சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே ஸ்ரீநாத்திடம் இருந்து போன் வந்தது.

''சாருக்குட்டி ஹாப்பி பர்த்டே கண்ணம்மா! பாப்பா என்ன பண்றான்?'' என்று அவன் விதவிதமாக அவளுக்கு வாழ்த்துச் சொல்லி விட்டு ஃபோனை வைத்தான்.

''கிஃப்ட் பார்சல் வாங்கிக் கொடுத்துட்டு வந்திருக்கேன். அம்மாவும் அப்பாவும் நாளைக்குக் கொண்டு வந்து தருவாங்க'' என்று வேறு சொல்லியிருந்தான்.

''எதற்கு இப்படி அமர்க்களப்படுத்தறீங்க?'' என்றாள் அவள்.

''பின்னே என் வைஃபோட பர்த்டே! நான் கொண்டாடாம யாரு கொண்டாடுவாங்களாம்?'' என்றான்.

அவள் அந்த நகைப் பெட்டியை கையில் வாங்கியதோடு சரி திறந்து கூட பார்க்கவில்லை என்பதை அவன் புரிந்து கொண்டு ''திறந்து பார்க்கறது?'' என்றான்.

அவள் மெல்லத் திறந்து பார்த்தாள்.

லேட்டஸ்ட் டிசைனில் ஒரு வைர நெக்லஸ் மின்னியது.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்து விட்டு "இந்தக் காஸ்ட்லியான பிரசன்ட் எல்லாம் எனக்கு வேண்டாம்" என்றாள்.

"போச்சுடா, ஆரம்பிச்சுட்டா!" என்றான்.

"இல்லை, எனக்கு வேண்டாம்!" என்றாள்.

"ப்ளீஸ் சாரு, நான் ஃபர்ஸ்ட் ஃபர்ஸ்ட் கொடுக்கறதை ஏன் வேண்டாங்கறே?!"

இவனுக்கு எப்படிச் சொல்லி புரியவைப்பது என்று அவளுக்குப் புரியவில்லை.

"எனக்காக ஒரே ஒரு தடவை காலையில் போட்டுக்கோ. கோயிலுக்கு போயிட்டு வந்துடலாம். அம்ச்சி, அப்ச்சி எல்லாத்துக்கும் நான் வாங்கினது தெரியும். நீ போடலைன்னா அவங்க என்னத் தப்பா நினைப்பாங்க!" என்றான் கெஞ்சுதலாக.

அவள் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு "ஒரே தடவை போட்டுட்டுத் திரும்பக் கொடுத்துடுவேன். லாக்கர்ல கொண்டு போய் வச்சுடுங்க. நான் இந்த மாதிரி காஸ்ட்லியானதெல்லாம் போடறது இல்லை"

"சரி, சுடிதார் செட் நான் வாங்கிக் கொடுத்ததுதான் போடணும்" என்றான்.

"இல்லை, அம்மா அப்பா வாங்கிக் கொடுத்ததே நிறைய இருக்கு. அதுல ஒண்ணு புதுசு போட்டுக்கறேன்" என்றாள்.

அவன் வேதனையுடன் அவளைப் பார்த்தான்.



"ஏன் சாரு? நான் உனக்கு என்ன குறை வச்சேன். உன்னை எந்த விதத்துல அகௌரவப்படுத்தினேன்? முறையா தாலி கட்டி மனைவியா ஏத்துட்டுத்தான் கூட்டிட்டு வந்திருக்கேன்.

அப்படி என்ன சொத்து கைக்கு வந்திட்டா நாம பிரிஞ்சுடற மாதிரி அக்ரிமெண்ட் போட்டா கூட்டிட்டு வந்திருக்கேன்? எதுவா இருந்தா என்ன? லைஃப் லாங்கா நீ தான் என் மனைவி. இவன் தான் என் வாரிசு!" என்றான்.

அதில் தெரிந்த வேதனை அவளையும் தான் கொஞ்சம் உலுக்கியது.

நீண்டதொரு பெருமூச்சு விட்டு விட்டு அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். "உண்மையாகவே எனக்கு என்ன வேணும்னு உங்களுக்குப் புரியலையா?" என்றாள்

அவனுக்கு சுத்தமாகப் புரியவில்லை என்பது அவளுக்கும் புரிந்தது. விஷயமே புரியாதவனைப் போட்டு வறுத்து எடுப்பதில் என்ன இருக்கிறது என்று எண்ணிக் கொண்டாளோ என்னவோ மெல்லப் புன்னகைத்து விட்டு "சரி, போட்டுக்கறேன். தாங்க்ஸ் ஃபார் ஆல் த கிஃப்ட்ஸ் யு ஹாவ் கிவ்வன்" என்றாள்.

"தாங்க்யூ. தாங்க்யூ." என்றான்.

அவள் எழுந்து நின்றாள். "சரி, குட் நைட்!" என்றாள்.

அவன் மட்டும் ஏதோ எதிர்பார்ப்பவன் போல நின்றான் ஒரு நிமிடம். ஆனால் அவள் பிடிவாதமாக புரியாதவள் போல் தலையைக் குனிந்து கொண்டு நிற்கவும் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு நகர்ந்து சென்று படுக்கையின் அந்தப் புறம் படுத்துக் கொண்டான்.

மறுநாள் காலை நேரத்திலேயே எழுந்து குளித்து விட்டு அவன் திருப்திக்காக அந்தச் சுடிதாரை அணிந்து கொண்டு வெளியே வந்தாள். கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தது தான் தாமதம் தன்னை மறந்து சிரித்து விட்டாள்.

நேர் எதிரே ஒரு பெரிய பேனரைப் பிடித்துக் கொண்டு சோமுவும், கண்ணனும் நின்றார்கள். "ஹாப்பி பர்த் டே!" என்று அதிலே எழுதியிருந்தது.

"எதுக்கு இப்படி அமர்க்களப் படுத்தறீங்க?" என்றாள் அவள் வெட்கத்துடன்.

"பின்னே எங்க வீட்டு மகாராணி! நீங்க இந்த வீட்ல முத முதல்ல பர்த்டே கொண்டாடறீங்க. அமர்க்களப் படுத்தலைன்னா இத்தனை தடிப்பசங்க இருந்தும் என்ன பிரயோஜனம்?" என்றான் சோமு.

திரைக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த வெற்றிவேல் கடகடவென்று சிரித்தான். "வாழ்க்கையில் ஒரு தடவை உண்மையைச் சொல்லியிருக்கடா" என்றான்.

"தடிப்பயலோட அண்ணன் யாராம்?" என்றான் அவன்.

"உதை வாங்குவடா!" என்றான்.

"ஓகே, ஓகே, மாப்பு!" என்று தோப்புக் கரணம் போடுவது போல நடித்தான்.

"சரி, சரி பேனரை விட்றாதடா?" என்றான் வெற்றி.

அவர்கள் அந்த பேனரை நீக்கியவுடன் அதற்கு நேர் பின்னால் தாத்தாவும் பாட்டியும் நின்று கொண்டிருந்தார்கள்.

உண்மையாகவே சாருசித்ரா நெகிழ்ந்து போனாள்.

சட்டென்று போய் அவர்கள் இருவரின் காலிலும் விழுந்தாள்.



பேரன் வாங்கிக் கொடுத்த சுடிதாரைத்தான் அணிந்து வந்திருக்கிறாளா என்று பாட்டி கூர்மையாக கவனிப்பதை அவளும் புரிந்து கொண்டாள். "அவர் எடுத்துக் கொடுத்தது. நல்லா இருக்கா?" என்றாள்.

"ரொம்ப நல்லா இருக்கு. நெக்லஸ் போடலையா? என்றாள் அம்ச்சி.

"இல்லை, கோயிலுக்குப் போகும் போது போட்டுக்கறேன்!" என்றாள்.

அதே போல தாத்தாவும் பாட்டியும் அவளுக்கு அளித்த பட்டுப் புடவையை அணிந்து கொண்டு கணவனோடு கோயிலுக்கு போய் விட்டு வந்தாள்.

போய் விட்டு வந்ததற்குப் பிறகுதான் அவள் மனத்திலே அந்த எண்ணம் ஓடிக் கொண்டே இருந்தது. இதுவே உண்மையாக நேசிக்கிற ஒரு கணவனாக இருந்தால் இந்த நாடகத்துக்கு பின்னால் எல்லாம் வேறு என்னென்ன விஷயங்கள் நடந்திருக்கும்.

நேற்றிரவு மட்டும் அவன் அப்படிப் போய் படுக்கையின் அந்தப் புறத்தில் படுக்கிற நிலைமையா இருக்கும்? எவ்வளவு மகிழ்ச்சியோடு கொண்டாடியிருப்போம் என்று எண்ணி நீண்டதொரு பெருமூச்சு விட்டுக் கொண்டாள்.

டைனிங் டேபிளில் வெற்றிவேல் அமர்ந்தவுடன் வழக்கம் போல அவள் பரிமாறப் போனாள்.

"அண்ணி, இன்னிக்கு நீங்க கெஸ்ட். உட்காருங்க!" என்று சொல்லிவிட்டு சோமுவும், கண்ணனும் பரிமாறினார்கள்.

தாத்தாவும் கூட எதிரிலே வந்து அமர்ந்து கொண்டு "டேய், பார்த்துடா பார்த்து! அவளைப் பயமுறுத்தாதீங்க!" என்றார்.

அண்ணி வந்ததற்குப் பிறகுதான் தாத்தா தங்களிடம் முகம் கொடுத்துப் பேசுகிறார் என்று அவர்கள் இருவரும் நம்பினார்கள். உண்மையில் ஒரு நாள் சாருசித்ரா தாத்தாவிடம் அமர்ந்து பேசியிருந்தாள்.

'அவர்கள் பாவம் நல்லவர்கள்!' என்பது போல திரும்பத் திரும்ப அவரிடத்திலே சொல்லியதாலோ என்னவோ அவரும் இப்பொழுது அவர்களிடத்திலே சுமுகமாகத்தான் இருந்தார். எல்லா மகிழ்ச்சியையும் அண்ணியிடத்தில் வெளிப்படுத்தினார்கள் சகோதரர்கள் இரண்டு பேரும்.

இத்தனை கலாட்டாக்கள் நடந்த பொழுதும் அண்ணனையும் அண்ணியையும் அவர்கள் அறியாமல் கவனித்துக் கொண்டு தான் இருந்தான் சோமநாதன்.

ஒரு நெருக்கமான தொடுகையோ ஒரு ரகசிய பரிமாறலோ கணவன் மனைவிக்கு இடையே பரிமாறப் படும் ஒரு சின்னப் புன்னகையோ எதுவுமே இல்லாமல் அவர்கள் இரண்டு பேரும் நடந்து கொள்ளுகிறாற்போல அவனுக்கு தோன்றியது. அதற்குச் சான்றாக ஒரு விஷயமும் நடந்தது.

கோவிலுக்குப் போய் விட்டு வந்தவுடனேயே அலுவலகத்துக்குக் கிளம்பினான் வெற்றிவேல். ''சாரு, சாயங்காலம் சீக்கிரம் வந்துடறேன். எங்காவது ஹோட்டலுக்குப் போவோம்'' என்றான்.

''ஒரு நிமிஷம் நில்லுங்க!'' என்றாள்.

அவன் நின்றான். ''இந்தாங்க நெக்லஸ். தயவு செய்து கொண்டு போய் லாக்கர்ல வச்சுடுங்க'' என்றாள்.

''ஏம்மா நீ போட்டுக்கக் கூடாதா?'' என்றான்.



உடனே அவள் இடது கையை உயர்த்தினாள். ''போதுங்க. ரொம்பவும் நடிச்சா நல்லாயில்லை!'' என்றாள்.

அவன் அடிபட்டாற் போல அவளைப் பார்த்தான். ''அப்போ இத்தனை நேரம் நடிச்சேன்னு சொல்றியா?'' என்றான்.

''இதுல என்னங்க சந்தேகம்? திடீர்னு என்னை நம்பி வைர நெக்லஸெல்லாம் வாங்கித் தர்றீங்க!'' என்றாள்.

சாரு ''ப்ளீஸ் யு டோன்ட் அன்டர் ஸ்டாண்ட் மீ!'' என்றான்.

''இல்லைங்க, நீங்க வாழ்க்கையையே புரிஞ்சுக்கலை. நீங்க எல்லாத்தையுமே விலை உயர்ந்த பொருட்களின் அடிப்படையில்தான் பார்க்கறீங்க. வாழ்க்கையையே நீங்க பணத்தின் அடிப்படையில் பார்த்தவர்தானே?'' என்றாள்

''ப்ளீஸ் சாரு, நாம ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் காயப்படுத்திக்க வேண்டாம். ஐ வான்ட் யு டு பி ஹாப்பி. சந்தோஷமா இரு!'' என்றவன் திரும்பிப் பார்க்காமல் வேகமாகப் போய்விட்டான்.

அவன் போனதை நின்று பார்த்து விட்டு சாருவும் திரும்பி உள்ளே போனாள்.

அவர்கள் இரண்டு பேருமே கவனிக்காத ஒரு விஷயம் அந்த நேரத்தில் ஏதோ சொல்வதற்காக வந்த சோமநாதன் முழுவதும் இவர்கள் பேச்சைக் கேட்டுவிட்டான் என்பதுதான்.

அப்படியே அதைக் கவனித்திருந்தாலும் அதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்கிற மனநிலையில் சாரு இருக்கவில்லை.

தன்னுடைய அறையில் போய் சேரில் அமர்ந்து கொண்டாள். ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாள்.

முகத்தில் சொல்லவொண்ணாத வேதனை தெரிந்தது. அப்போது ''அண்ணி உள்ளே வரலாமா,'' என்று சோமுவின் குரல் கேட்டது.

பின்னால் கண்ணனும் நின்று கொண்டிருந்தான். ''என்ன சோமு, என்ன கண்ணன்? வாங்க வாங்க என்ன இப்படி அமர்க்களப்படுத்தறீங்க,'' என்றாள் மகிழ்ச்சியுடன்.

அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு அண்ணியின் அருகிலே வந்து நின்றார்கள்.

''அண்ணி, நான் ஒண்ணு கேட்பேன். நீங்க தப்பா நினைக்கக்கூடாது. ஒருவேளை சொல்லக் கூடாத அந்தரங்கம்னா வேண்டாம். ஆனா, சொல்ற அளவுக்கு இருந்தா சொல்லுங்களேன்'' என்றான் சோமநாதன்.

''என்ன இவ்வளவு பெரிய பீடிகை?'' என்றாள் சாரு சித்ரா.

''இல்லை அண்ணி, எங்க அண்ணனுக்கும் உங்களுக்கும் ஏதாவது மனஸ்தாபமா?'' என்று கேட்டான் சோமநாதன்.

சாரு இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை.

''ஏன் கேட்கறே,'' என்றாள்?

''அண்ணி, நாங்க ரெண்டு பேரும் இளைஞர்கள் அண்ணி. ஒரு அன்பான கணவன் மனைவிக்குள்ள இருக்கக் கூடிய ஒரு வெளிப்படையான பரிமாறுதல் உங்ககிட்ட இல்லையோ அப்படின்னு எனக்கு தோணுது. நான் எல்லை மீர்றனான்னு தெரியலை. ஆனா இதையெல்லாம் நான் பேசறதுக்கு ஒரு காரணம் இருக்குங்க அண்ணி!'' என்றான்.



''ஏம்பா நீ வேறே,'' என்றாள் அவள் சலிப்புடன்.

''இல்லைங்க அண்ணி. நாங்க உங்க கிட்ட பேசணும்'' என்றார்கள்.

''என்ன பேசணும்?'' என்றாள் அவள்.

''பேசணுங்க அண்ணி. அண்ணனைப் பத்தி நிறைய விஷயங்கள் சொல்ல வேண்டியிருக்கு. அண்ணன் ரொம்ப நல்லவரு அண்ணி'' என்றான் சோமநாதன்.

அவள் சிந்தனையுடன் அவனைப் பார்த்தாள். "திடீர்னு எங்க வச்சு நான் உங்ககிட்ட தனியா பேசறது?'' என்றாள்.

அதற்கான வாய்ப்பு அவர்களுக்கு மாலை வந்தது.

வெற்றிவேல் ஃபோன் செய்து சோமநாதனிடம் சொன்னான். ''டேய் சோமு, நான் இங்க முக்கியமான மீட்டிங்கலே ஹெல்ட் அப்புடா. நீங்க அண்ணியை கோயிலுக்குக் கூட்டிட்டுப் போயிட்டு வந்துடறீங்களா ரெண்டு பேரும்?'' என்று கேட்டான்.

அவர்கள் உற்சாகமாகப் புறப்பட்டார்கள். கோயிலில் வைத்து அண்ணியிடம் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது பேசினார்கள். அவர்கள் சொன்ன கதையெல்லாம் கேட்டு சாருசித்ரா நெக்குருகிப் போனாள்.

## அத்தியாயம் -17

''அண்ணி அண்ணனுக்கும் எங்களுக்கும் அப்பாதான் ஒருத்தர். அம்மா வேற வேற உங்களுக்கு தெரியுமில்லே'' என்று ஆரம்பித்தான் சோமநாதன்.

தங்களுடைய வெட்கக் கேட்டை இப்படிச் சொல்ல வேண்டியிருக்கிறதே என்ற வெட்க உணர்வும் அவனுக்கு

இருந்தது. அதைப் பார்த்த உடனே சாரு சொன்னாள் "சோமு சொல்றதுக்கு கஷ்டமா இருந்தா விட்ரு".

"இல்லை அண்ணி, இதை நீங்க தெரிஞ்சுக்கிட்டே ஆகனும். ஏன்னா இந்தப் பிரச்சினையில அண்ணனோட வாழ்க்கையே பணயமா இருக்கு.அதனால நாங்க சொல்லித்தான் ஆகனும்" என்றான்.

"சரி என்னமோ சொல்லுங்க" என்பது போல அவள் அமர்ந்து கொண்டாள்.

கண்ணன் "குழந்தையைக் கொடுங்க அண்ணி. நான் வச்சுக்கறேன்" என்று குழந்தையை எடுத்துக் கொண்டு மேலும் கீழும் நடமாடினான்.

அந்தப் பெரிய கோயில். பேரூர் கோயில். அதனுடைய பெரிய பிரகாரத்தில் அவர்கள் ஓரமாக அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

சோமநாதன் கதை சொல்ல ஆரம்பித்தான். "அண்ணி, அண்ணனோட அம்மாவும், அப்பாவும் அதாவது பெரியம் மாவும் அப்பாவும் லவ் பண்ணி கல்யாணம் பண்ணிக்கிட்ட வங்க. அது தெரியுமா உங்களுக்கு?" என்றான்.

அவள் ஒரு பெருமூச்சு விட்டாள் "தெரியாது!" என்று தலையாட்டினாள்.

'இது மாதிரி எந்த விஷயங்களையும் பரிமாறிக் கொள்கிற நிலைமையில் கணவன் மனைவி இருக்க வில்லையே. அதை இந்தச் சின்னப் பையனிடம் எப்படிச் சொல்லுவது?' என்று எண்ணினாள்.

அவள் நினைத்தது அவனுக்கு தெரிந்தாற் போல "அண்ணி, நானும் ஒண்ணும் சின்னப் பையன் இல்லை



அண்ணி, இருபத்தைந்துக்குக் கிட்டக்க வந்தாச்சு. அந்தக் காலம் மாதிரி இருந்தா எனக்கும் இந்த நேரத்துக்கு கல்யாணம் ஆகியிருக்கணும். நம்ப வீட்ல கூட கேட்டாங்க நான் தான் படிப்பு படிப்புன்னு சொல்லிட்டேன்" என்றான்.

அவள் "ஓஹோ! இந்த ஆசை வேற வந்திருச்சாக்கும்!" என்று கேலி செய்தாள்.

அவன் அந்தக் கேலியை உள்வாங்கிக் கொள்ளவில்லை மாறாக கதையைத் தொடர்ந்தான். "அண்ணி, பெரியம்மா, அவங்க பார்க்கறதுக்கு அவ்வளவு அழகா இருப்பாங்களாம். சொல்லியிருக்காங்க அம்ச்சியும் அப்ச்சியும். எப்படியோ எங்க அப்பா மேல அவங்களுக்கு ஒரு ஈடுபாடு வந்திருச்சு. அது அம்ச்சி அப்ச்சிக்கு முதல்ல தெரியாது. எங்கேயோ கோயில்ல பண்ணிக்கிட்டாங்களாம். எங்க அப்பா ரொம்ப கெட்டிக்காரரு அண்ணி கெட்டிக்காரரு. எப்படியோ பெரியம்மாவை மேரேஜ் பண்ணிட்டாரு"

சாரு சித்ரா கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தாள்."அப்பா திட்டம் போட்டுதான் பெரியம்மாவை கரெக்ட் பண்ணியிருக்காரு. அது அம்ச்சிக்கும் அப்ச்சிக்கும் நல்லாத் தெரிஞ்சிருந்தது. ஆனா பெரியம்மாவுக்குப் புரியலை!" என்றான்.

அவள் ஆழ்ந்து கேட்க ஆரம்பித்தாள் "அம்ச்சியும் அப்ச்சியும் சொல்லிப் பார்த்திருக்காங்க 'இந்தப் பையன் வேண்டாம். சரி வராது' அப்படின்னு. ஆனா பெரியம்மா கேட்கற மாதிரி இல்லை. எவ்வளவுக்கெவ்வளவு அமைதி யானவங்களா இருந்தாங்களோ அவ்வளவுக் கவ்வளவு அழுத்தமும் உறுதியும் அவங்ககிட்ட இருந்தது. அண்ணனைப்

பார்த்தா தெரியுமே? அந்தக் குணம் அப்படியே இருக்குமே?" என்றான் சோமநாதன்.

"சரிப்பா சொல்லு!" என்றாள் சாரு சித்ரா.

"அப்புறம் என்ன ஆச்சு? ரெண்டு பேரும் ஒரு நாள் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டு வீட்டை விட்டுப் போயிட்டாங்க.அம்ச்சிக்கும் அப்ச்சிக்கும் ஒரே ஒரு பொண்ணுதானே வேறு வாரிசு இல்லை. எங்க அப்பா நல்லா கணக்குப் போட்டிருக்காரு. கோடிக்கணக்குல சொத்து தேறும். எப்படி இருந்தாலும் நமக்குத்தான் வந்து சேரும் அப்படின்னு. ஆனா அப்ச்சி தெளிவா சொல்லிட்டாரு சொத்தெல்லாம் கிடையாது. சொத்துகித்துன்னுகிட்டு இங்க வராதீங்க அப்படின்னு. ஆனா பெரியம்மா அதைப் பத்தி கவனிக்கவே இல்லை. ஏன்னா அவங்கதான் அப்ப காதல்ல முழுகியிருந்திருக்காங்களே.ஆஹா! கணவர் இருக்காரு. காப்பாத்துவாரு நமக்கு எதுக்கு சொத்து அப்படின்னு நினைச்சுட்டு இருந்திருக்காங்க. ஆனா, அப்ச்சி சீரீயஸாவே சொத்து கொடுக்கமாட்டாருன்னு தெரிஞ்சதுக்கப்புறம்தான் எங்க அப்பா அவரோட வேலையை காண்பிக்க ஆரம்பிச்சிருக்காரு."

"வேலை செஞ்சு சம்பாதிக்கறது இந்த மாதிரி ஆளுக்கெல்லாம் பிடிக்காது. ஹீரோக்களுக்குப் பிடிக்காதாச்சே, அதனால கொஞ்ச நாள் வேலைக்குப் போயிருக்காரு. அதுக்கப்புறம் நேரடியா சொத்து குடுத்து உதவலைன்னாலும் அப்ச்சி மகள் மூலமா செஞ்சிருக்காரு. எப்படின்னு கேட்கறீங்களா? அவருக்கு வேலை கிடைக்கற மாதிரி ஏற்பாடு பண்ணியிருக்காரு. அப்பா பேரு சொல்ல மறந்துட்டனே? அப்பா பேரு கார்வண்ணன், பெரியம்மா



பேரு ஜானகி. இரண்டு பேரும் பேர் பொருத்தத்துக்கு அவ்வளவு சந்தோஷப்பட்டுக்குவாங்களாம். அம்ச்சி எப்பவாவது சொல்லி அழுவாங்க. அப்புறம் ஒரு சாதாரண வீடு எடுத்து இருந்திருக்காங்க. கொஞ்ச நாள் ஒரு வருஷம் நடிச்சிட்டே இருந்திருக்காரு. சரி இன்னிக்கு சமாதானம் ஆகிடுவாங்க. நாளைக்கு சமாதானம் ஆகிடுவாங்க அப்படின்னு"

..................................!

"இதுக்கு நடுவுல வேறு ஒரு திட்டமும் போட்டிருக்காரு. குழந்தை ஆனா சமாதானம் ஆகி வருவாங்க அப்படின்னு ஐடியா பண்ணிதான் அண்ணன் பொறந்திருக்காங்க" என்றான்.

சொல்லி விட்டு சாரு சித்ராவின் முகத்தைப் பார்த்தான். சாரு சித்ரா உண்மையான ஈடுபாட்டுடன் கேட்டுக் கொண்டிருக்கிறாள் என்பது தெரிய தொடர்ந்தான்.

குழந்தை பிறந்து ஒரு ஆறு மாசம் ஓடியிருக்கும். மெதுவாக தன்னோட சுயரூபத்தைக் காட்ட ஆரம்பிச்சிருக்காரு. "ஏண்டி, குழந்தை பொறந்து ஆறு மாசம் ஆச்சு உங்க வீட்ல இருந்து யாரும் பார்க்க வரலை" என்றாராம்.

"நான் என்னங்க பண்ண முடியும், நாம உண்மையான அன்புன்னு வந்தாச்சு. இனி அவங்க சொத்தைப் பத்தி நாம ஏங்க நினைக்கணும்? நீங்க பத்து ரூபாய் கொண்டு வந்தாலும் அதுக்குள்ள நான் வாழ்க்கையை நடத்தறேங்க"ன்னு சொல்லியிருக்காங்க பெரியம்மா.

"உனக்குப் போதும்டி. நான் பத்து ரூபாய் சம்பாதிச்சுக் கொடுத்து உன்னை வாழ வைக்கணும்னு நினைக்கலையே. நான் உன்னை கவர் பண்ணினதுக்கு காரணமே பெரிய

சொத்துக்காரி, ஏக வாரிசு, பர்சனாலிட்டியும் சூப்பரா இருக்கு. கரும்பு தின்னக் கூலியான்னுதான் கவர் பண்ணினேன்'' என்று சொல்ல பெரியம்மாவுக்கு ரொம்ப அதிர்ச்சி.

''என்ன சொல்றீங்க?'' அப்படின்னு கேட்டிருக் காங்க.

''என்னத்தை சொல்றது? நீ என்ன உன் மேல உயிர்க் காதல்னால காதலிச்சேன்னு நினைச்சுட்டியா? அப்படின்னு கேட்டிருக்காரு'' என்று ஆரம்பித்தவன்.

நடந்த கதையைத் தனக்கு தெரிந்த வரை விவரித்தான்.

ஜானகி அதிர்ச்சியுற்றுப் போய் கார்வண்ணனைப் பார்த்தாள்.

''நீங்க என்ன சொல்றீங்க? நான் உங்களையே நம்பி வந்தவ!'' என்றாள்.

''உன்னை யாரு நம்பி வரச்சொன்னா அவ்வளவு பெரிய வீட்ல பொறந்திருக்கே? சொத்துக்காரியா இருந்திருக்கே? எவனை நம்பணும்னு தெரிய வேண்டாமா? எவன் கிடைச்சாலும் பின்னாடி வந்துடறதா?'' என்று கேட்க ஜானகி திகைத்துப் போய் அவனைப் பார்த்தாள்.

''இதோ பாரு, இதான் உண்மை. உன்னைக் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டெல்லாம் வரலை. ஏதோ அப்படியே ஒட்டிக்கிட்டா நம்ம வாழ்க்கை ஓடிடும். பெரிசா ஒண்ணும் உழைச்சு சம்பாதிக்க வேண்டியதில்லை. உங்க அப்பன் பார்த்து ஏதோ அம்பது லட்சம் கொடுத்தா பேங்க்ல போட்டு வட்டி வந்தாலே போதும். நமக்கு சாப்பிட குடிக்கன்னு சரியா போகும்னு நினைச்சேன்'' என்றான்.



அவள் இன்னும் அதிர்ச்சியாகப் பார்த்தாள். ''அந்தப் பழக்கம் வேற இருக்கா?'' என்றாள்.

''பின்னே ஒன்றரை வருஷம்டி. எல்லாத்தையும் கண்ட்ரோல் பண்ணிட்டு நடிச்சிட்டு இருக்கேன். ஒண்ணும் நடக்கலையே''

''அப்போ இத்தனை நாள் நடிச்சிங்களா?''

''இது என்னடி இது, பொழிப்புரை விளக்கவுரை எல்லாம் கேட்டுகிட்டிருக்கே. நான்தான் சொல்றேனே நடிச்சேன்னு. நீ அழகு தான் ஆனா அந்த அழகு என்ன சோறா போடும்?''

இந்த மாதிரி ஆரம்பித்தது. அதற்குப் பிறகு அடிக்கடி இந்த மாதிரி வாக்குவாதம் நடந்தது. ஜானகியும் ஒரு வருடம் வரை தாக்குப் பிடித்திருக்கிறாள். ஆனால் இதற்குள் அக்கம் பக்கத்தில் இருந்து செய்தி போனது.

அம்ச்சியும் அப்ச்சியும் ஒரு நாள் வீட்டுக்குள் வராமல் வெளியில் வைத்து அவளை சந்தித்தார்கள். ''பாரும்மா, இப்பக் கூட ஒண்ணும் இல்லை. அவன் சொத்துக்காகத் தான் வந்திருக்கான்னு எங்களுக்குத் தெரியும். நீ ஏமாந்து சொத்தெல்லாம் எதுவும் கொடுத்துடாதே. இப்பக் கூட வா நாங்க வச்சு காப்பாத்தறோம்'' என்றார்கள்.

''இல்லை. இன்னும் கொஞ்ச நாள் முயற்சி பண்றேன். முடியலைன்னா வந்துடறேன்'' என்று சொல்லி விட்டாள் ஜானகி.

அவளும் இனிமேலும் முடியாது என்று நினைக்கிற ஒரு கணம் வந்தது.

ஒரு நாள் பக்கத்தில் இருக்கும் கோயிலுக்குப் போயிட்டு குழந்தையை இடுப்பிலே வைத்த படி வந்து கொண்டிருந்தாள்.

அவள் உள்ளே நுழையும் பொழுது வீட்டிலே ஒரு பெண் குரல் கேட்டது.

யாராவது அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டு உள்ளே போனாள்.

கார்வண்ணனும் அந்தப் பெண்ணும் கலகலவென்று சிரித்தார்கள். அந்தப் பெண்ணைப் பார்த்தால் பெரிய இடத்துப் பெண்ணாக தெரியவில்லை. நடுத்தரக் குடும்பத்துப் பெண்ணாகவும் தெரியவில்லை.

பெரிய அளவில் மதிக்கிற மாதிரியும் அவள் இருக்க வில்லை. ''சரி, அறிமுகப்படுத்துவான்'' என்று நினைத்துக் கொண்டு உள்ளே போனாள்.

''வாடி அம்மா வா! சொத்தை வச்சக்கிட்டு ஒண்ணுமே பண்ணாம நீ உட்கார்ந்துட்டு இருக்கே இல்லே. உனக்கு அடி கொடுக்கறதுக்குத்தான் இந்த வேலை நடக்குது!'' என்றான்.

''எந்த வேலை?'' என்றாள் ஜானகி.

ஒன்றரை ஆண்டுகளாக அவனிடம் வாழ்ந்த வாழ்க்கையில் அடிபட்டு அடிபட்டு இப்பொழுது அவளுக்கும் ஒரு துணிவு ஏற்பட்டிருந்தது. எதற்கும் பார்த்து விடலாம் என்பது போல் இருந்தாள்.

''இது யார் தெரியுமா? நான் இனிமே கல்யாணம் பண்ணிக்கப் போற பொண்ணு. இவளை ஏன் பண்ணிக்கப் போறேன் தெரியுமா? அவ கவர்ன்மெண்ட் ஜாப்ல இருக்கா!''

ஜானகி கார்வண்ணனை வெறித்துப் பார்த்தாள். ''கல்யாணம்னா என்னன்னு நினைச்சீங்க.''

''கல்யாணம்னா என்ன, ஜஸ்ட் ஃபார் கன்வீயன்ஸ். எப்படி இருந்தாலும் நான் உன்னோட புருஷன் தான்.



சட்டப்படி விவாகரத்து வாங்காத வரைக்கும் உன்னோட பணத்து மேல எனக்கு உரிமை உண்டு. எங்கிருந்தா என்ன உங்கிட்ட இருந்து வர வேண்டிய வரவு வந்துட்டா போதும். நான் உன்னை தொந்தரவு பண்ண மாட்டேன். தெரியுண்டி. கொஞ்ச நாளாவே உனக்கு என்னைப் பிடிக்கறது இல்லைன்னு தெரியும். நீ வேண்ணா உங்க அப்பா அம்மாகிட்ட போ. ஆனா மாசம் ஒரு தொகையை அனுப்பிடு. பாரு இவளை நான் முதல்ல இருந்தே லவ் பண்ணிட்டு இருக்கேன். இல்லையில்லை, அவ என்னை லவ் பண்ணிட்டு இருக்கா. நீதான் இடையில வந்துட்டே!'' என்றான்.

ஜானகி வெறித்துப் பார்த்தவளாக நின்று கொண்டிருந்தாள்.

''என்னடி பார்க்கறே?'' என்றான்.

''போய் உங்க அப்பாகிட்டேயும் அம்மாகிட்டேயும் பேசு. பார்த்து பணம் கொடுக்கச் சொல்லு. அப்பதான் இங்கிருக்க முடியும்!'' என்றான்.

அவள் ஒன்றுமே பேசவில்லை. உள்ளே சென்றாள்.

ஒரு பையை எடுத்து குழந்தையினுடைய துணிமணி ஒன்றிரண்டை மட்டும் எடுத்துக் கொண்டாள். குழந்தை யினுடைய விளையாட்டு சாமான்களை மட்டும் ஒன்றிரண்டை எடுத்துப் போட்டுக் கொண்டாள்.

''என்னடி நான் கேட்டுட்டே இருக்கேன். நீ போயிட்டே இருக்கே?'' என்றான்.

''டைவர்ஸ் நோட்டீஸ் வரும். பார்த்துக்குங்க!'' என்றவள்தான், நிற்காமல் வீடு வந்து சேர்ந்தாள்.

முன்னாலே இருக்கிற சிட் அவுட்டிலே அமர்ந்திருந்த கலைஞானம் இவள் வருவதைப் பார்த்த உடனே உள்ளே குரல் கொடுத்தார். ''ஏய், அருளு, இங்க வா!'' என்று.

அருள் நாயகி அவர் குரலில் தெரிந்த கலவரத்தைப் பார்த்து விட்டு வேகமாக உள்ளே இருந்து வந்தாள். ''நம்ம புள்ளையாட்டம் இருக்குது, பாரு!'' என்றார்.

''புள்ளையாட்டம் என்னங்க, அவளேதான்!'' என்று வேக வேகமாகப் போய் குழந்தையை கையிலே வாங்கிக் கொண்டாள்.

அவள் தான் கொண்டு வந்திருந்த பையை தொப்பென்று வராண்டாவில் போட்டுவிட்டு தாயைக் கட்டிக் கொண்டு அழுதாள். தாயும் மகளைக் கட்டிக் கொண்டு அழுதாள். கலைஞானம் தாத்தா செயலற்றுப் போய் பார்த்துக் கொண்டிருந்தார்.

கோபம் ஜிவ்வென்று முகத்தில் ஏறியது!

அவள் அழுது ஓய்ந்தவுடன் ''இப்ப சொல்லு. அவனைக் கண்டதுண்டமா வெட்டிப் போடறேன்!'' என்றார்.

ஜானகி அப்பாவை இரக்கத்துடன் பார்த்தாள். ''நமக்கே ஆகாதுன்னு ஆச்சு. இனி எதுக்குப்பா? அந்த ஆளு என்னமோ பண்ணிட்டுப் போகட்டும். டைவர்ஸுக்கு ஏற்பாடு பண்ணுங்க'' என்றாள்.

அப்பா ''சரிம்மா'' என்று உள்ளே அழைத்துக் கொண்டு போனார். ஆனால் தீவிர ஆலோசனைக்குப் பிறகு ''டைவர்ஸ் வேண்டாங்க. எப்படியிருந்தாலும் ஏதோ ஒரு காலத்துல ஒண்ணு சேருவாங்க. இப்ப வந்திருக்கிற பொண்ணுங்களெல்லாம் எத்தனை நாளைக்கு குப்பை



கொட்டுவாங்க'' என்று விதவிதமாக பேசி டைவர்ஸ் வேண்டாம்'' என்றார் அம்ச்சி. அதற்குப் பிறகு ஒரு இரண்டு மூன்று ஆண்டுகள் தான் ஜானகி உயிரோடு இருந்தாள்.

உடல் சோர்வு, மனக்கலக்கம் எல்லாமாகச் சேர்ந்து உடல் நலியச் செய்து விட்டது.

படுத்த படுக்கையானாள். ஆறு அல்லது ஏழாவது வயதிலே வெற்றிவேல் தாயற்ற தனயனான். சோமநாதன் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது தன்னை அறியாமல் அழுது விட்டாள் சாரு சித்ரா. ''அண்ணி, நான் உங்களை கஷ்டப்படுத்திட்டேனா?'' என்று கேட்டான் சோமநாதன்.

''இல்லையில்லை. எனக்கு தெரிஞ்சுக்க வேண்டியது நிறைய இருக்கு அப்படின்னு புரியுது''

''அண்ணி போதும். கோயிலுக்குப் போனவங்களை காணோமேன்னு தேடு வாங்க. வாங்க வீட்டுக்குப் போய் மீதியை சொல்றேன்'' என்றான்.

இரண்டு பேரும் கிளம்பினார்கள்.

சாருசித்ராவின் மனமெல்லாம் கனத்துக் கிடந்தது.

## அத்தியாயம் - 18

காஞ்சன மாலாவுக்கு கார்வண்ணன் மீது முன்பு ஒரு காதல் இருக்கத்தான் செய்தது. அப்போது அவள் ஏதோ ஒரு தனியார் அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்தாள்.

கார் வண்ணன் அந்த வழியிலே போவதும் வருவதுமாக இருப்பதுண்டு. இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் பார்த்து

சிரித்துக் கொள்ளுவதும் பிறகு சந்தித்துப் பேசிக் கொள்வதும் எல்லாம் நடக்கத்தான் செய்தது.

திடீரென்று கார்வண்ணன் காணாமல் போய்விட்டான். சந்திக்க வரவும் இல்லை. கண்ணில் படவும் இல்லை. காஞ்சனா மாலாவுக்கு சற்று ஏமாற்றம் தான். அவள் ஒரு சாதாரண குடும்பத்தில் இருந்து வந்த பெண். கஷ்டப்பட்டு பட்டப் படிப்பு முடித்து ஒரு அலுவலகத்தில் எழுத்தர் வேலைக்குச் சேருவதற்கு என்னென்ன தகுதி வேண்டுமோ அதையெல்லாம் வளர்த்துக் கொண்டு தனியார் அலுவலகத்திலே வேலைக்குச் சேர்ந்து பணி செய்து கொண்டிருந்தாள். ஏழாயிரம் சம்பளம் கொடுத்தார்கள். அது அவளுக்குப் போதுமானதாக இருந்தது.

குடும்பத்திற்கு என்று ஒரு தொகை கொடுத்துவிட்டு தனக்கென்று ஒரு தொகை சேமித்துக் கொண்டே வந்தாள். ஜானகி அளவுக்கு பேரழகு என்று சொல்ல முடியா விட்டாலும் லட்சணமாகவே இருப்பாள்.

ஒரு நல்ல கண் நிறைந்த கணவனை கண்டுபிடித்துத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆவலில்தான் அவளும் கார்வண்ணனைப் பார்த்தாள். பிடித்தது. ஏனென்றால் அவளுடைய குடும்பத்தினர் ஒன்றும் மாப்பிள்ளை பார்த்து லட்சக்கணக்கில் செலவு செய்து அவளுக்குத் திருமணம் செய்து வைப்பார்கள் என்றெல்லாம் அவளுக்கு நம்பிக்கை இல்லை.

அவளுடைய அக்காவை கரை சேர்ப்பதற்குள்ளாகவே அந்த குடும்பத்திற்கு மூச்சு திணறி விட்டது. அந்தக் கடனை முடிப்பதற்கே திணறிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் பெற்றோரே கூட ஜாடை மாடையாக யாரை



யாவது லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணிட்டு போறது தான் நல்லது என்பார்கள். இந்த மாதிரி பேச்சுக்களெல்லாம் அவள் மனத்திலே ஏறிக் கிடந்ததால் கார்வண்ணனைப் பார்த்தவுடனே அவளுக்குப் பிடித்துப் போயிருந்தது.

அதற்குத் தகுந்தாற்போல் கார்வண்ணனும் தான் பெரிய பணக்காரன் என்று சரஞ்சரமாக பொய்களை அள்ளி விட்டுக் கொண்டிருந்தான். அவளும் அதை நம்பி விட்டாள். ஆனால் திடீரென்று காணாமல் போனவுடனே ஏமாற்றமாகப் போய் விட்டது. ஒரு கதவு மூடினால் இன்னொரு கதவு திறக்குமாமே அந்த மாதிரி அவளுக்கும் ஒரு கதவு திறந்தது.

அரசு வேலை கிடைத்தது. உள்ளே நுழைந்து கொண்டாள். இரண்டாண்டுகள் அந்த வேலையை நிரந்தரப்படுத்திக் கொண்டு அதிலே நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்ற எண்ணத்திலே ஓடிக் கொண்டிருந்தது. வேறு எதையும் நினைப்பதற்கு அவளுக்கு நேரம் இருக்கவில்லை.

மூன்று ஆண்டுகள் கழித்து கார்வண்ணனை மீண்டும் சந்தித்தாள்.

கார்வண்ணன் வழக்கம் போல ஒரு பெரிய நாடகம் நடத்தினான். வேறு வழியில்லாமல் ஒரு பணக்காரப் பெண்ணை திருமணம் செய்து கொண்டதாகவும் ஆனால் அந்தப் பணக்காரப் பெண் சொத்தோடு வருவாள் என்று எண்ணிக் கொண்டிருக்க வெறும் ஆளாக வந்து நின்று தன்னையும் கொடுமைப் படுத்திக் கொண்டிருப்பதாகவும் சோகமாக கதை விட்டான்.

ஏனென்றால் காஞ்சனா மாலாவுக்கு இப்பொழுது கவர்ன்மெண்ட் வேலை இருக்கிறது என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. அதனால் இயல்பாக அவளைப் பார்ப்பது போல வந்து இப்படி ஒரு கதையை எடுத்து விட்டான். காஞ்சனமாலாவின் மனம் உருகி விட்டது.

''என்ன பண்ணச் சொல்றீங்க. கல்யாணம் தான் ஆயிடுச்சில்லே?'' என்றாள்.

''இப்ப நீ சரின்னு சொல்லு. அப்ப நடந்தது ஒரு பெரிய கதை. எக்குத்தப்பா அந்தப் பொண்ணு கூட லிஃப்ட்ல மாட்டிகிட்டேன். உடனே நான் தான் அந்தப் பொண்ணை கெடுத்துட்டதா கதை கட்டிட்டாங்க. உண்மையிலே அவ வேற யாருக்கோ ஏற்கனவே இடம் கொடுத்திருப்பா போல இருக்கு. அந்தக் குழந்தையையும் என் தலையில கட்டிட்டாங்க. இப்ப சொத்து இல்லைன்னு வெளிய அனுப்பிச்சிட்டாங்க'' என்றெல்லாம் அவன் உருக உருகக் கதை சொன்னவுடனே காஞ்சனா மாலாவும் நம்பித் தொலைத்தாள்.

''இப்ப என்ன செய்யலாம்?'' என்றாள்.

''அவ ஒரு பக்கம் இருக்கட்டும். நீ ஒரு பக்கம் இரு, ஒரு நல்ல வீடா எடுத்து இருந்துக்கலாம். நானும் மனசுக்குப் பிடிச்ச வாழ்க்கை வாழ்ந்துக்கறேனே?'' என்றான்.

காஞ்சன மாலா யோசித்தாள். ஏனென்றால் இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னால் கார்வண்ணனும் அவளுமாக வெளிப்படையாக எல்லோருக்கும் தெரிகிற மாதிரியே பல இடங்களுக்கு போய் வந்ததுண்டு. அவர்களுடைய உறவுக்காரர்கள் கூட இந்தப் பையனைத்தான் இந்தப் பொண்ணு கல்யாணம் பண்ணிக்கப் போகுதாம் என்பதும் உண்டு. அப்படி ஒரு களங்கத்தைத் துடைத்துக்



கொள்வதற்கு தனக்கு ஒரு வாய்ப்பு என்பது போல எண்ணினாள். அது மட்டும் இல்லாமல் இப்பொழுது கார்வண்ணனை மட்டும் நம்பி போகப் போவது இல்லையே.

தன்னுடைய கவர்ன்மெண்ட் வேலை இருக்கிறது என்று மனதை தேற்றிக் கொண்டு முடிவு செய்தாள். அப்படி முடிவு செய்துதான் அன்றைக்கு அந்த வீட்டுக்கு சென்றாள். இவளை வைத்துக் கொண்டே ''இவள் என்னைக் காதலித்தாள். இவளைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்'' என்றதும் அவளுக்கு ஒரு மாதிரியாகத்தான் இருந்தது.

தவறோ சரியோ இந்த ஆள் கையால் ஒரு தாலி வாங்கிக் கொண்டு வாழ்க்கையை ஓட்டினால் தன்னுடைய கவுரவமும் பாதுகாக்கப்பட்டு விடும் என்று எண்ணினாள். இன்னும் கூட ஒரு படி மேலே போய் அவனிடத்திலே ''நீங்க வேண்ணா இடையில இடையில அவங்களையும் போய் பார்த்துட்டு வரதுன்னா பார்த்துட்டு வாங்க!'' என்று சொன்னாள்.

கார்வண்ணன் இப்படி ஏமாளிகளாக வந்து சிக்குகிறார்களே என்று எண்ணி உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான். ஆனால் அவன் எதிர்பாராதது என்னவென்றால் ஜானகியின் பிடிவாதம்.

ஜானகியை பார்ப்பதற்கு என்று அவன் பங்களாவிற்கு போனால் வாட்ச்மேனே விரட்டினான். ஒரு முறை காம்பவுண்டுக்கு வெளியே நின்று கொண்டு ஜானகியை அழைத்தான். அப்போது ஜன்னலோரமாக நின்ற ஜானகி திரும்பிப் பார்த்தாள். ''நான் குழந்தையைப் பார்க்கணும். கொண்டு வந்து காட்டு!'' என்றான்.

குழந்தையின் பெயரைச் சொல்லிக் கொண்டு மறுபடியும் உள்ளே நுழையலாம் என்பது அவனுடைய எண்ணமாக இருந்தது. ஜானகி அசராமல் நின்று ஜன்னலோரமாக நின்று அவனைப் பார்த்து விட்டு அலட்டிக் கொள்ளாமல் உள்ளே போய் விட்டாள்.

எதற்கும் முயற்சிக்கலாம் என்று மறுபடியும் அவன் கேட் பக்கமாக வந்தான். ஜானகி உள்ளே இருந்து வெளியே வந்து "வாட்ச் மேன் இந்த ஆளை நல்லா பார்த்துக்கங்க. நான் இருக்கும் போதும் சரி, இல்லாது இருக்கும் போதும் சரி, இந்த ஆளை உள்ளே விடக் கூடாது. அது மட்டுமில்லே. தப்பித் தவறி கூட பாப்பாவை இவன் கண்ணில் காட்டி விடக் கூடாது'' என்று சொல்லி விட்டு உள்ளே போய் விட்டாள்.

கார்வண்ணனுக்கு பத்துப் பேர் சேர்ந்து சாட்டையால் அடித்தது போல இருந்தது. இதற்குப் பின்னும் அங்கே போனால் கேவலம் என்று நொந்து போய் வீட்டுக்கு வந்தான். இப்பொழுதெல்லாம் காஞ்சனமாலாவின் கை சற்று ஓங்கியிருந்தது.

''நான் சம்பாதிக்கிறேன். சாப்பாடு போடறேன். சாப்பிட்டுக்கோங்க. கைச் செலவுக்கு ஏதோ காசு தரேன். அதை விட்டுட்டு என்னை அதிகாரம் பண்ற வேலையெல்லாம் வேண்டாம்'' என்று சொல்லி விட்டாள்.

அதனால் தினமும் அவள் கொடுக்கிற ஐம்பது ரூபாய்க்காக காத்துக் கொண்டிருந்து கிட்டத்தட்ட அங்கே காவல்காரன் போல இருந்தான். ஆனால், எதையும் வெளியே காட்டிக் கொள்ள முடியாத நிலைமை!

இருபத்தைந்து வயதில் அவனோடு வாழ்வதற்காக வந்த காஞ்சனமாலா ஏழெட்டு ஆண்டுகள் அவனோடு வாழத்



தான் செய்தாள். கார்வண்ணன் எப்படியோ அவளை சரி செய்து விடுவான். அப்படியும் இப்படியுமாக மூன்று குழந்தைகள் பிறந்து விட்டன.

காஞ்சனா மாலா முப்பத்திரண்டு முப்பத்து மூன்று வயதில் இருந்தாள். கார்வண்ணன் முப்பத்து ஏழு வயதில் இருந்தான். அப்பொழுதுதான் காஞ்சனமாலாவின் நடத்தையில் மாற்றம் தெரிந்தது. நினைத்த நேரத்திற்கு வர ஆரம்பித்தாள்.

இந்த இடைப்பட்ட காலத்திலே அவள் தன்னுடைய பி.எப்.விருந்து பணம் எடுத்து சின்னதாக ஒரு வீடு வாங்கியிருந்தாள். அந்த வீட்டிலே தான் இப்பொழுது அவர்கள் இருந்தார்கள். நாலே அறைகள் கொண்ட வீடு. வாங்கும் போது ஓட்டு வீடாக இருந்தது. பின்னர் அவள் செலவு செய்து அதை கல்லுக் கட்டடமாக மாற்றியிருந் தாள். சுற்றிலும் கொஞ்சம் இடம் இருந்தது.

கார் வண்ணன் பொழுது போகாமல் கொஞ்சம் செடி, கொடிகள் போட்டு வளர்த்துக் கொண்டிருந்தான். அது ஒன்று தான் அவன் உருப்படியாக செய்த வேலை.

இப்பொழுதெல்லாம் காலையில் நேரத்திலேயே கிளம்பிப் போனாள். மாலையில் நேரங்கழித்து வந்தாள். இடையிலே ஒரு நாள் "சும்மா தானே இருக்கீங்க. சமையல் செஞ்சு வைக்கலாமில்லே?" என்று கேட்டாள்.

கார்வண்ணன் அதையும் செய்ய ஆரம்பித்தான். குழந்தைகளுக்கு சாயங்காலம் ஏதாவது ஒரு டிஃபன் செய்து கொடுத்து விடுவான்.

திடீரென்று ஒரு நாள் காஞ்சன மாலா ஒரு காரில் வந்து இறங்கினாள். அந்தக் காரின் அந்தப் புறமாக இருந்து

வடநாட்டுக்காரர் ஒருவர் இறங்கி வந்தார். காஞ்சனமாலா இப்பொழுது ரெஜிஸ்ட்ரேஷன் ஆஃபீசில் வேலை செய்தாள். அங்கே நிலம் விற்பது வாங்குவது தொடர்பாக வருகிற பல பெரிய பணக்காரர்களை அவள் தெரிந்து கொண்டாள். அப்படித் தெரிந்தவர்தான் இந்தப் பணக்காரர் அவர் பெயர் லக்ஷ்மிகாந்தன் என்று இவனிடம் அறிமுகப்படுத்தினாள். "என்னோட வெல்விஷர். நமக்கு நிறைய உதவிகள் செய்வாரு!" என்றாள்.

கார்வண்ணன் அமைதியாகக் கேட்டுக் கொண்டு அவர் போனதற்குப் பிறகு "என்னடி இது புதுசு புதுசா," என்றான்.

காஞ்சனமாலா அவரை முறைத்துப் பார்த்து விட்டு கேட்டாள் "இப்படியெல்லாம் கேட்கறதுக்கு உங்களுக்கு யோக்கியதை இருக்கா?" என்று.

"நான் ஆம்பளைடி!" என்றான் அவன்.

"அதெல்லாம் அந்தக் காலம். இந்த மிரட்டல்கள் எல்லாம் அந்தக் காலம் இப்ப நாங்களும் சரி சமமா உரிமை உள்ளவர்களாத்தான் இருக்கோம். நீங்க என்ன என்னை முறையாவா கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க? ஏதோ கோயில்ல வச்சு தாலின்னு கட்டினீங்க. ரிஜிஸ்ட்ரேஷனா பண்ணியிருக்கோம்? முதல் கல்யாணத்திலே இருந்து டைவர்ஸும் வாங்கலே. எதை வச்சு நீங்க என்னைக் கேள்வி கேட்கறீங்க?" என்றாள்.

"என்னடி கவர்ன்மெண்ட் வேலை செய்யறேன்னு சட்டமெல்லாம் பேசறியா? பத்து வருஷமா ஒண்ணா இருக்கோம்டி. ஊருக்கே தெரியும்"

"தெரிஞ்சுட்டுப் போகட்டும். அதுக்கு இப்ப என்ன?" என்றாள்.



"இல்லை. நீங்க வேற ஏதோ ப்ளான் பண்ற மாதிரி தெரியுது!" என்றான் அவன் கோபமாக.

காஞ்சனமாலா கசப்பாக சிரித்தாள். "நான் கஷ்டப் பட்டு சம்பாதிச்சு கொண்டு வந்து கொடுத்து எனக்கு ஒரு புருஷன் வச்சுக்கணும்னு என்ன இருக்கு? உங்களுக்கு புருஷன் வேலை தான் கொடுத்திருக்கேன் நான். பேசாம அதை மட்டும் பார்த்துட்டிருங்க" என்றாள்.

என்னதான் ஓங்கிப் பேசுகிற தகுதி இல்லாத ஒருவனாக இருந்தாலும் கார்வண்ணனுக்கும் ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது.

"அடி பின்னிடுவேண்டி!" என்றான்.

"பின்னிப் பாருங்க. அடுத்த நாள் ரோட்ல போகும் போது ஆக்ஸிடெண்ட் ஆயிரும். லட்சுமிகாந்தை என்னன்னு நினைச்சீங்க? கையை காலை முடக்கி வீட்ல போட்ருவாரு. அப்புறம் லட்சுமிகாந்தைக் கூட்டிட்டு இங்கேயே வருவேன்" என்றாள் அவள்.

கார்வண்ணன் திகைத்துப் போய் "என்னடி பேசறே?" என்றான்.

"பின்னே? நீங்க அந்த ஜானகி அக்கா இருக்கும் போதே என்னைக் கூட்டிட்டு வரலையா? முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்றாள்.

கார்வண்ணன் சட்டென்று பாணியை மாற்றிக் கொண்டான். "ஏய், மூணு குழந்தைங்க இருக்காங்கடி. இது நல்லாயில்லை" என்றான்.

"மூணு குழந்தைகளுக்காகவும் நீ ஒரு நாளாவது உழைச்சு ஒரு பத்து பைசா கொண்டு வந்து கொடுத்திருக்கியா. உனக்கும் சோறாக்கிப் போட்டு இந்த மூணு

குழந்தைங்களையும் காப்பாத்திட்டு....! எப்ப எனக்குன்னு நான் வாழ்றது!'' என்றாள்.

கார்வண்ணன் வெறித்துப் பார்த்தான்.

''ஆமாய்யா. அந்த ஆளுக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகிப் பொண்டாட்டி செத்துப் போயிட்டா. இப்ப அவருக்கு முப்பத்தேழு வயசு ஆகுது. ஒரு பையன் பன்னிரண்டு வயசில் இருக்கான். ஒரு பொண்ணு பத்து வயசில் இருக்கா. இப்பப் போய் அவரு ரெண்டாவது கல்யாணம் பண்ணிக்க முடியாது. அவங்களெல்லாம் வடக்கே இருக்காங்க. மாசத்துல பாதி நாளு இங்க தான் இருக்காரு அந்த ஆளு. எல்லாத்தையும் ஒப்பனா எங்கிட்டே சொல்லிட்டாரு. நீயும் தெரிஞ்சுக்கோ. போன மாசம் எனக்கு ஒரு பங்களா வாங்கிக் கொடுத்துட்டாரு. ஆர்.எஸ்.புரத்துல பெரிய பங்களா. வாடகைக்கு எடுத்திருக்கறதா ஊருக்கு சொல்லியிருக்கேன். ஆனால் அது என் பேர்ல வாங்கியிருக்கிற பங்களா.பார்க்கறியா?'' என்று தன்னுடைய ஹேன்ட் பேக்கில் இருந்து ஒரு அட்டைப் பெட்டியை எடுத்தாள்.

''வைர நெக்லஸ்ய்யா? ஆயுசுக்கும் உன்னால வாங்கிக் கொடுக்க முடியுமா?'' என்று கேட்டாள்.

கார் வண்ணன் கையாலாகாதவனாக விழித்துப் பார்த்துக் கொண்டு நின்றான்.

''போதும். ஏழெட்டு வருஷமா உனக்கு சேவை செஞ்சு மூணு புள்ளை பெத்துப் போட்டு நாறடிச்சுட்டு இருக்கறது போதும். நான் கிளம்பலாம்னு இருக்கேன். என்னைத் தடுக்கறதுக்கு முயற்சி பண்ணாதே. ஏதாவது முயற்சி பண்ணினாலும் வேஸ்ட். உயிரோடவே இருக்க மாட்டே'' என்றாள்.



உண்மையிலே கார்வண்ணன் உடைந்து போனான்.

சட்டென்று உள்ளே போனாள். தன்னுடைய சூட்கேஸ்கள் இரண்டை எடுத்து தன்னுடைய விலையுயர்ந்த புடவைகளை மட்டும் எடுத்து அடுக்கிக் கொண்டாள்.

''ஏய், இங்க பாரு எட்டு வயசுல ஒண்ணு. அஞ்சு வயசுல ஒண்ணு. நாலு வயசுல ஒண்ணு நிக்குது. நான் எப்படி இதையெல்லாம் வளர்ப்பேன்?'' என்றான்.

''என்னமோ பண்ணிட்டு போ. நான் இதுநாள் வரைக்கும் ஏமாந்தது போதும். இப்படியான ஒரு கையாலாகாத அப்பனுக்குப் பொறந்தா கஷ்டப்பட வேண்டியதுதான். நல்ல வேளை மூணு குழந்தை பெத்ததுக்கு அப்புறமும் கடவுள் என்னை அப்படியே வச்சிருக்காரு. கொஞ்சம் இளமையா இருக்கிறேனா இப்படி ஒண்ணாவது எனக்கு கிடைச்சது!'' என்றாள்.

''ஏண்டி, கவர்ன்மெண்ட் வேலையிலே இருக்கே''என்று அவன் ஆரம்பிக்க

''கவர்ன்மெண்ட் வேலையா? அதெல்லாம் விட்டாச்சு, வி.ஆர். எஸ் வாங்கியாச்சு. எம்பேர்ல சேட்டு அம்பது லட்ச ரூபாய் ஃபிக்சட் போடறாரு. அப்கோர்ஸ் எடுக்க முடியாது இப்போதைக்கு. அஞ்சு வருஷம் கழிச்சுத்தான் எடுக்க முடியும். ஆனாலும் எனக்கு மாசம் ஒரு வருவாய் வரப் போகுதய்யா! கொஞ்ச நாள் என்னை நல்லா கவனி. உன்னை கோடீஸ்வரி ஆக்கிடறேன்னுட்டாரு.இனிமே இந்தாளை சந்தோஷப் படுத்தறது மட்டும்தான் முழு நேர வேலை'' என்றாள்.

கார்வண்ணன் இதே திட்டத்தோடு தானே நாம் ஜானகியை மணந்தோம் என்று எண்ணிக் கொண்டே திகைத்துப் போய் நின்றான்.

## அத்தியாயம் - 19

"ஏய், காஞ்சனா, உன் காலைப் பிடிச்சுக் கெஞ்சறேன். தயவு செய்து போகாதே!'' என்று கிட்டத்தட்ட கதறினான் கார்வண்ணன்.

மூன்றாவது குழந்தை மட்டும் வீட்டிலே இருந்தது. மற்ற இரண்டும் பள்ளிக் கூடத்துக்கு போயிருந்தன. "இவங்களை யெல்லாம் நான் எப்படிடி படிக்க வச்சு...? என்ன பண்ணுவேன்?'' என்று கதற அவள் வெறித்துப் பார்த்தாள்.

"அந்தக் கவலை வேற உனக்கு இருக்கா. அதுக்கெல்லாம் ஒண்ணும் நீ கவலைப்பட வேண்டாம். மாசமானா என் பங்களாவுக்கு வா. ஏதாவது பணம் தர்றேன். வாங்கிட்டு வந்துடு'' என்றாள்.

"ஏண்டி, நீ இன்னொருத்தன் கூட இருப்பே? நான் அங்க வந்து உங்கிட்ட பணம் வாங்கிட்டு வரணுமா?'' என்றான் அவன்.

"ஆமா, பெரிய பணக்காரி கிடைச்சான்னுதானே ஜானகியை நீ ஏமாத்தினே. இன்னைக்கு எனக்கு ஒரு பெரிய பணக்காரன் கிடைச்சுட்டான். நான் உன்னை ஏமாத்தறேன். தயவு செஞ்சு இந்த மூணு குழந்தைங் களையும் கூட்டிட்டு வந்துடாதே. அந்த ஆள் ஊர்லே இல்லாதப்ப ஃபோன் பண்றேன். நீ வேண்ணாலும் வந்துட்டுப் போ. உன்னையும் வேண்ணா கவனிச்சர்றேன்'' என்றாள் அவள்.



அதே நேரம் லட்சுமிகாந்தன் காரில் வந்து இறங்கினார்.

இறங்கியவர் நேராக உள்ளே வந்து "மிஸ்டர். கார் வண்ணன். ஒங்கட்க்கு இப்ப விஷயம் புரிஞ்சிருக்கும் இல்லை?'' என்றார்.

கார்வண்ணனுக்கு அவனைக் கொன்று விடலாமா என்று வந்தது.

"முறைச்செல்லாம் ஒண்ணுமே பண்ண முடியாது. ஆள் பலம் இருக்கு. பாவம். காஞ்சனமாலா இவ்வளவு பியூட்டி ஃபுல் லேடி. இந்த அம்மாவை நீ ரொம்ப கஷ்டப்படுத் திட்டே'' என்றான்.

கார்வண்ணன் கை முஷ்டிகளை இறுகப் பிடித்துக் கொண்டு நின்றான்.

"உன்னை ஒண்ணும் நான் சும்மா விட்டுப் போறது இல்லை. பத்து லட்ச ரூபாய் டெப்பாசிட் பண்ணி யிருக்கேன் உன் பேர்ல. குழந்தைங்க பேர்ல பத்து லட்ச ரூபாய் டெபாசிட் பண்றேன். நீதான் கார்டியன். அந்தப் பணத்தை எடுக்க முடியாது புரியுதா? எல்லா ஏற்பாடும் பண்ணியிருக்கேன். அதிலிருந்து மாசம் உனக்கு பணம் வந்துடும். நீ இருக்கற இடத்தைச் சொல்லு. காஞ்சனமாலா ரொம்ப சொல்லுச்சு. இந்த வீட்டை உங்களுக்கு விட்டுடலாம் அப்படின்னுச்சு. வீடு காஞ்சனா பேர்ல தான் இருக்கும். ஆனா நீங்க இதுல இருந்துக்கலாம்'' என்றான் லட்சுமிகாந்த் சேட்.

அவமானமாக இருந்தது கார்வண்ணனுக்கு. இரண்டு பேருமாகக் கூடி எவ்வளவு திட்டம் போட்டிருக்கிறார்கள். "ம்'' என்று நொந்து போனான்.

''டேக் கேர். குழந்தைங்களுக்காகவாவது நீங்க உங்களை நல்லா பார்த்துக்கங்க'' என்று சொல்லிவிட்டு ''வைர நெக்லஸை காட்டினேன் காந்த்'' என்றாள் அவள் அந்த லட்சுமி காந்த் சேட்டைப் பாத்து.

''பார்த்தியா மேன். இது விலை என்ன தெரியுமா? வேண்டாம். சொன்னா நீ மயக்கம் போட்டுருவே. நான் ஒண்ணும் காஞ்சனாவை சும்மா விட்ற மாட்டேன். காஞ்சனாவுக்கு வேணுங்கற பணம் இப்ப போட்டாச்சு. என்ன அவ என் ஓய்ஃப்பா இருக்க முடியாது'' என்றவன் திரும்பி காஞ்சனாவைப் பார்த்து ''காஞ்ச்சு! நான் சொல்றதை நல்லா ஞாபகம் வச்சுக்கோ. இன்னிக்கோட இவங்க தொடர்பு முடிஞ்சது. இந்த குழந்தைங்களை கூட்டிக்கிட்டு அங்க வந்து நிக்கறது. இதெல்லாம் நம்பள்க்குப் புடிக்காது. நான் எப்ப வேணாலும் பங்களாவுக்கு வரும். ஒரு குழந்தை அழும். இன்னொன்று வந்து இது யாருன்னு கேட்கும். நம்பளுக்கு அதெல்லாம் புடிக்காது''என்றான்.

''ஓகே, காந்த். இதெல்லாம் எத்தனை தடவை பேசியாச்சு. வாங்க டார்லிங். எதுக்கு இதெல்லாம் பேசிகிட்டு!'' என்று கிளம்பினாள் காஞ்சனா.

அப்போதுதான் கவனித்தான் கார்வண்ணன் காஞ்சன மாலா அன்றைக்கு ஒரு விலை உயர்ந்த புடவையை உடுத்திக் கொண்டிருந்தாள் என்பதையும் அந்தப் புடவை அவள் முழு வடிவ எழிலையும் எடுத்துக் காட்டுவதாக இருந்தது என்பதையும். ''இந்தத் தெருவிலே இருக்கப் பிடிச்சா இரும். இல்லை வீட்டை விட்டுப் போட்டு வேறு எங்காவது போம். வீட்டை வேண்ணா உன் பேருக்கு எழுதிக் கொடுக்கச் சொல்றேன்'' என்று சொல்லிவிட்டு



லட்சுமிகாந்த் அவளை அழைத்துக் கொண்டு வெளியேறினான்.

ஒரு வாரம் வரை கார்வண்ணன் வெளியே தலை காட்டவே இல்லை.

இரண்டு குழந்தைகளும் அவர்களாக பள்ளிக்கு சென்றார்கள் வந்தார்கள். மாதம் ஆனால் பத்து லட்ச ரூபாய்க்கு உள்ள வட்டி கிட்டத்தட்ட எட்டாயிரம் ரூபாயும் குழந்தைகளுக்காக போடப்பட்ட தொகையிலிருந்த வட்டி எட்டாயிரம் ரூபாயுமாக பதினைந்தாயிரம் அவனுடைய கணக்கில் வந்து சேரும்.

கார்வண்ணன் முதலிலே குழந்தைகளிடம் பாசமாகத் தான் இருந்தான். அப்படி ஒரு இரண்டு மூன்று வருடங்கள் ஓடின. திடீரென்று அவனுக்கும் ஒரு தொடர்பு ஏற்பட்டதோ என்னவோ பத்து வயதிலே இருந்த தன்னுடைய பெரிய மகனை அழைத்து "இங்க பாருடா கண்ணா. நான் வெளியூர் வேலைக்குப் போறேன். நான் வர்றதுக்கு இரண்டு வருஷம் ஆகும். அது வரைக்கும் நீங்களே சமாளிச்சுக்கணும்'' என்று சொன்ன பொழுது அந்தப் பையனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

"அப்பா! நான் எப்படிப்பா?" என்றான்.

''மாசமானா இந்த இடத்துக்குப் போ. அங்கே உங்களுக்குப் பணம் கொடுப்பாங்க'' என்று ஒரு விலாசத்தைக் கொடுத்து விட்டு கிளம்பி விட்டான். சோமநாதனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

கண்ணன் அவனுக்கும் கீழே இருந்த குழந்தை ரமேஷ். ஆனால், நடப்பதையெல்லாம் பார்த்து அவனுக்கு வயதுக்கு மீறி ஒரு பக்குவம் வந்திருந்தது. அக்கம் பக்கத்திலே இருந்தவர்களும் அவனைப் பார்த்து வருத்தப் பட்டு ஆதரவு

கொடுத்தார்கள். பக்கத்து வீட்டிலே இருந்த ஒரு ஜோடிக்கு குழந்தைகள் இல்லை. அதனால் அந்தப் பெண்மணி இவனுக்கு வருகிற தொகையில் மாதம் ஒரு தொகையை வாங்கிக் கொண்டு அவர்களுக்கு சாப்பாட்டுக்கு வேண்டியதையெல்லாம் செய்து கொடுத்தாள்.

இப்பொழுது சோமநாதன் பதினோராவது வயதிலே இருந்தான். கண்ணன் எட்டு வயதில் இருந்தான். ரமேஷ் ஏழு வயதில் இருந்தான். மூன்று பேருமாக அந்த வீட்டிலே குடியிருந்து கொண்டு இருந்தார்கள்.

திடீரென்று ஒரு நாள் ரமேஷுக்கு கடுமையான காய்ச்சல் வந்தது. அது ஒரு விதமான விஷக் காய்ச்சல் என்றார்கள். குழந்தையை தூக்கிக் கொண்டு அவன் ஆஸ்பத்திரிக்கு ஓடினான். பக்கத்து வீட்டுப் பெண்மணி ''கண்ணா, நான் சாப்பிடவெல்லாம் செஞ்சு கொடுக்கறேன். ஆனா விஷக் காய்ச்சல் இருக்கற குழந்தையை என்னால பார்த்துக்க முடியாது. நீதான் பார்த்துக்கணும்'' என்று சொல்லி விட்டாள்.

ஒரு மாத காலம் போராடியதற்குப் பிறகு அந்தக் குழந்தை இறந்த போது அந்தத் தெருவே அவர்கள் மீது பரிதாபப் பட்டது. வீட்டுக்கு வீடு ஆதரவு கொடுத்தார்கள். ஆனால், அந்த சின்னக் குழந்தைக்கு வீட்டை எப்படி பராமரிப்பது என்பது தெரியவில்லை.

அந்த நேரத்தில் வக்கீல் என்று ஒருவர் வந்தார். ரமேஷ் இறந்து இரண்டு மாதங்கள் கூட ஆகியிருக்காது வக்கீல் வந்து சொன்னார். ''தம்பி, உங்க அப்பா இந்த வீட்டை வித்துட்டாரு. நீங்க இனிமேல் இங்க இருக்க முடியாது'' என்று.



இரண்டு பேருக்கும் என்ன செய்வது என்றே தெரியவில்லை. இருக்கிற துணி மணிகளை யெல்லாம் எடுத்து சூட்கேஸிலே போட்டுக் கொண்டு வாசலில் நின்று கொண்டு அழுது கொண்டிருந்தார்கள்.

வக்கீலுக்கும் பாவமாக இருந்தது. ''சரிப்பா! ஒரு வாரம் டைம் தர்றேன். அது வரைக்கும் இங்க தங்கிக்கோங்க அதுக்குள்ளே நானே உங்களுக்கு ஏதாவது ஹாஸ்டல் பார்த்து ஏற்பாடு பண்றேன்'' என்று சொல்லி விட்டுப் போனார்.

அந்த ஒரு வாரமும் பக்கத்து வீட்டுப் பெண்மணி சாப்பாடு கொடுத்தார்.ஆனால், பக்கத்து வீட்டுப் பெண் மணி சரோஜா உண்மையில் நல்லவள். அவள் கணவனிடம் கூட கேட்டுப் பார்த்தாள். ''ஏங்க நாமளே இந்தக் குழந்தைங்களை வச்சுக்கலாமா?'' என்று.

''ஊரார் சுமையெல்லாம் நாம சுமக்க முடியாது சரோஜா. இத்தனை நாள் ஏதோ சாப்பாடு கொடுத்தே. அதை நான் வேண்டாம்னு சொல்லலை. அப்பாவும் பொறுப்பா இல்லை. அம்மாவும் பொறுப்பா இல்லை. நாளைக்கு திடீர்னு ஒரு பிரச்சினை வந்தா நாம என்னன்னு பதில் சொல்றது. இப்பப் பாரு இந்த ரமேஷ் இறந்து போனான். அதுக்கும் கூட அவங்க அப்பா வரலை. நாம சுத்தி இருக்கறவங்கதான் உதவி செஞ்சோம். இப்படி குழந்தைகளுக்கெல்லாம் நாம எப்படியம்மா பொறுப்பு எடுத்துக்க முடியும்?'' என்றார்.

சாப்பாட்டை வாங்கிக் கொள்வதற்காக வந்த சோம நாதன் காதுகளில் இந்த வார்த்தை விழுந்தது. அப்படியே திரும்பி வந்து தங்கள் வீட்டு வாசலில் நுழைந்தான்.

"என்னண்ணா?" என்று வந்து பக்கத்திலே அமர்ந்தான் கண்ணன்.

அந்த விவரம் புரியாத வயதில் இந்த பதினொரு வயதுப் பையன் வெடித்து அழுதான். "நமக்கு யாருமே இல்லைடா. நாம ஏண்டா இப்படி பொறந்தோம்? நம்ம அம்மா ஏண்டா இப்படி பண்ணினாங்க? அப்பா ஏண்டா இப்படி பண்ணினாங்க?" என்று கண்ணனிடம் கேட்டான். கண்ணனுக்கும் ஒன்றும் சொல்லத் தெரியவில்லை.

"என்னக் கேட்டா நான் என்ன பண்ணுவேன்?" என்பது போல அந்தக் குழந்தை அண்ணனை வெறித்துப் பார்த்தது.

"சரிடா, நாம ரெண்டு பேரும் எங்காவது விழுந்து செத்துப் போகலாம்" என்றான் சோமநாதன்.

"அய்யோ, ரமேஷ் செத்துப் போன மாதிரியா?" என்றான் கண்ணன்.

"ஆமாடா, நமக்குன்னு யாருமே இல்லை. நாம செத்துப் போலான்டா" என்று அவன் சொன்னான். "சரிண்ணா. எப்படி சாகறது?" என்று கேட்டான் கண்ணன்.

"பேசாம போய் ரயில்வே தண்டவாளத்துல தலை வச்சுடலாமா?" என்றான் சோமநாதன். "ஐய்யோ, அது கஷ்டம். தூக்கத்துலே போற மாதிரி ஏதாவது பண்ணுண்ணா" என்றான் கண்ணன்.

"சரிடா, தூக்க மாத்திரை வேண்ணா நான் எங்காவது வாங்க முடியுமான்னு பார்க்கறேன்" என்றான்.

ஒரு மெடிக்கல் ஷாப்பில்போய் நின்று கொண்டு "சார், எனக்குத் தூக்க மாத்திரை வேணும்" என்றான்.

"பிரஸ்கிரிப்ஷன் வச்சிருக்கியா தம்பி?" என்றான் அந்த மெடிக்கல் ஷாப் ஓனர்.



"இல்லை சார்?"

"எதுக்கு?" என்றான்.

"வேணும் சார்!" என்றான்.

"முதல்ல இடத்தை காலி பண்ணு. இந்த மாதிரி பசங்களெல்லாம் வந்து கேட்டா கொடுக்கறது இல்லை. பெரியவங்க கேட்டாலே தூக்க மாத்திரை கொடுக்கறது இல்லை. தூக்க மாத்திரை கேட்டுட்டு வந்துட்டானுங்க"

கண்ணனின் கையைப் பிடித்துக் கொண்டு அந்தப் பக்கம் வந்தவன். "ஏண்டா தூக்க மாத்திரை கொடுக்க மாட்டேங் கறாங்க? என்னடா பண்றது?" என்றான்.

இரண்டு பேரும் கவலையாக பேசிக் கொண்டே நடக்கும் பொழுது பின்னாலே வந்த ஒரு உருவத்தை அவர்கள் கவனிக்கவில்லை.

சற்று தூரம் பின்னாலே வந்த அந்த உருவம் யாருக்கோ ஃபோன் செய்தது.

பையன்கள் இரண்டு பேரும் மறுபடியும் வாசலில் போய் அமர்ந்து கொண்டார்கள். "ஏண்டா அந்த வக்கீல் ஐய்யா சொன்னது நாளைக்கு வரைக்கும்தான். நாளைக்கு இங்கிருந்து போகணும். சரோஜா ஆண்டி இன்னிக்கு சாயங்காலம் சப்பாத்தி தரேன்னு சொல்லியிருக்காங்க. சாப்பிட்டுட்டு நாம என்னவாவது பண்ணிக்கலாம்டா" என்று பேசிக் கொண்டார்கள்.

அப்பொழுது அந்தக் கட்டடத்தினுடைய கேட் திறந்தது. அவனைக் காட்டிலும் ஒரு ஏழெட்டு வயது பெரிய ஒரு இளைஞன் நின்று கொண்டிருந்தான்.

சோமநாதன் எழுந்து நின்று "நீங்க யாரு?" என்று கேட்டான்.

“நான் உன் அண்ணன்.” என்றான் அந்த இளைஞன்.

“எனக்கு அண்ணனே இல்லையே?” என்றான் இவன்.

“நீங்க என்னைப் பார்த்திருக்க மாட்டீங்க ஆனா, ஜானகி அம்மான்னு கேள்விப்பட்டிருக்கீங்களா?” என்றான் அவன்.

“ம். எங்கம்மா சொல்லுவாங்க. ஜானகி ஜானகின்னு யாரையோ திட்டிட்டு இருப்பாங்க” என்றார்கள்.

அந்த இளைஞனின் முகத்தில் கசப்பான ஒரு புன்னகை மலர்ந்தது.

“அந்த ஜானகி அம்மாவோட பையன் தான் நான். நீங்க ரெண்டு பேரும் என் கூட வர்றீங்களா?” என்று கேட்டான் அவன்.

கிட்டத்தட்ட இருபது வயதின் துவக்கத்தில் இருந்த அவன் அப்படிக் கேட்டவுடனே இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

“எங்களுக்கு எங்கே போறதுன்னே தெரியலை. நாங்க என்னமோ நாளைக்கே இந்த வீட்டை விட்டு போகணு மாம். அதான் நாங்க ரெண்டு பேரும் செத்துப் போக லாம்னு பேசிகிட்டு இருந்தோம்” என்றான் சோமநாதன்.

“இனிமே அப்படியெல்லாம் யோசிக்கக் கூடாது. நான் இருக்கேன் உங்களுக்கு. நீங்க என் கூட வந்துடணும் என்ன?” என்றான் அந்த இளைஞன்.

“சரி!” என்று இரண்டு பேரும் கிளம்பினார்கள்.

அவன் யாருக்கோ ஃபோன் செய்ய வக்கீல் அங்கே வந்தார். வீட்டைப் பூட்டி சாவியை அவரிடத்திலே கொடுத்தார்கள்.



புறப்படும் நேரம் சோமநாதன் “அண்ணா, இந்த பக்கத்து வீட்டு சரோஜா ஆண்ட்டி, அவங்க தான் எங்களுக்கு சாப்பாடு கொடுப்பாங்க. அவங்க கிட்ட சொல்லிட்டு வந்துடறோம்” என்றான்.

“சரி வா நானும் வர்றேன். வந்து தாங்க் பண்றேன்” என்று அழைத்துக் கொண்டு போனான் அந்த இளைஞன்.

சரோஜா ஆண்டியிடம் தான் யார் என்பதை சொல்லி அவர்களை அழைத்துப் போவதையும் சொல்ல கணவன் மனைவி இரண்டு பேரும் மகிழ்ந்து போனார்கள்.

“இந்தக் குழந்தைங்க ரெண்டு பேரு’ம் ரொம்ப பாவம்பா. இந்த வயசுக்கு எதெல்லாம் தெரிஞ்சுக்கக் கூடாதோ தெரிஞ்சுக்கிட்டாங்க. ரொம்ப அனுபவிச்சுட்டாங்க. நீங்க கொஞ்சம் நல்லா வச்சுக்கணும்.” என்று கேட்டாள் சரோஜா.

“கண்டிப்பா. ஐ’ல் டேக் கேர் ஆஃப் தெம். நீங்க பயப்பட வேண்டியதில்லை” என்று சொல்லி விட்டு இரண்டு பேரையும் காரில் ஏற்றிக் கொண்டான்.

காரில் ஏற்றிக் கொண்டு காரை கிளப்பும் போது சொன்னான். “டேய் பயலுகளா, இதுக்குத்தான்டா பொம்பளைங்களை நம்பவே கூடாதுன்னு சொல்றது. ம்! உங்க அம்மா எங்க அம்மா, இவங்களெல்லாம் வாழ்றதுக்கே லாயக்கில்லாதவங்கடா!” என்றான்.

அவர்கள் இரண்டு பேருக்கும் என்ன சொல்வது என்றே தெரியவில்லை.ஆனால், அன்றைக்குப் பிறகு அவர்களுக்கு உண்ண உணவுக்கோ இருக்க இடத்திற்கோ கையில் காசுக்கோ பஞ்சம் இல்லாமல் போனது. இதுவரையிலும் கிடைக்காத முழுமையான அன்பை அவனிடத்திலே

இருந்து அனுபவித்தார்கள். இப்படித்தான் நாங்க அண்ணன் வீட்ல வந்து சேர்ந்தோம் என்று சோமநாதன் சொல்லி முடித்த போது சாரு சித்ராவிடமிருந்து எந்த சத்தமும் வரவில்லை.

அவன் தலை குனிந்து சொல்லிக் கொண்டிருந்தவன் நிமிர்ந்து பார்த்தான்.

இரு கன்னங்களிலும் கண்ணீர் வழிய அவள் அவர்களுடைய கதையை கேட்டுக் கொண்டிருந்தாள்.

## அத்தியாயம் - 20

பதைபதைத்துப் போனான் சோமநாதன்.

"அய்யோ அண்ணி, உங்களை அழ வைக்கறதுக்காக இதெல்லாம் சொல்லலை!'' என்றான்.

"இல்லை. அந்தச் சின்ன வயசுல நீங்க எவ்வளவு கஷ்டப் பட்டிருக்கீங்க!'' என்று தன்னையும் மறந்து சோம நாதனுடைய இரு கன்னத்தையும் தடவினாள்.

"ஹை! அண்ணி எனக்கு?'' என்று பக்கத்திலே வந்து அமர்ந்தான் கண்ணன்.

சிரித்துக் கொண்டே அவனுடைய இரு கன்னங் களையும் தடவி விட்டு இரண்டு பேருக்கும் ஆசீர்வதிப்பது போல தலையிலே கை வைத்தாள்.

சோமநாதன் அண்ணியினுடைய இரு கரங்களையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு அவள் உள்ளங்கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதான்.

"சரி, இப்ப எதுக்கு அழறீங்க?'' என்றாள் அவள் தேற்றுவது போல.



"இல்லைங்க அண்ணி பிரச்சினையே அதில தான். எங்க லைஃப்ல நாங்க கஷ்டப் பட்டோம். ஆனா இப்ப அந்தக் கஷ்டமெல்லாம் எப்பவோ கண்ட கனவு மாதிரி இருக்கு. அண்ணன் எங்களைத் தன்னோட சிறகுல வச்சுக் காப்பாத்தறாங்க. ஆனா உங்க வாழ்க்கை பாதிச்சிடுச்சே!'' என்றான் சோமநாதன்.

சாரு சித்ரா அதிர்ச்சி அடைந்தாற்போல அவனைப் பார்த்தாள். "என்ன சொல்றே சோமு?'' என்றாள்.

"ஆமாங்க அண்ணி, எங்க அம்மா, எங்க பெரியம்மா எல்லாரும் நடந்துகிட்ட முறையில அண்ணனுக்கு பெண்கள்னாலே வெறுப்பாயிடுச்சு. இப்படி மூணு குழந்தையைத் தூக்கி விசிறியடிச்சுட்டு வைர நெக்லசுக்கும் பங்களாவுக்கும் ஒரு பொண்ணு போவாளா?. அப்ப பெண்கள்னா பணத்தைக் கண்டா மாறிடுவாங்களா? அப்படின்னு அண்ணனுக்குக் கோபம்'' என்றான்

உடனே சாருசித்ரா புரியாதவளாக பார்த்தாள்.

"அது சரி, உங்க பெரியம்மா மேல எதுக்குக் கோபமாம்?'' என்று கேட்டாள்.

பெரியம்மா மேல இன்னும் கோபம். "பைத்தியக் காரத்தனமா கவலைப்பட்டுக் கவலைப்பட்டு உயிரையே விட்டாங்க. ஒண்ணத்துக்கும் ஆகாத பொறுப்பே இல்லாத ஒரு ஹஸ்பெண்டுக்காக உருகி உருகி உசிரை விட்டாங்களே? என்னைப் பத்தி நினைச்சாங்களா? நான் ஒருத்தன் இருக்கேன். என்னை வளர்க்க வேண்டிய கடமை இருக்குன்னு தைரியப்படுத்திகிட்டு இருந்திருக்க வேண்டாமா. என்னையும் சேர்த்து அநாதையாக்கிட்டில்லே போனாங்க அப்படின்னு பெரியம்மா மேல கோபம்''

சாருசித்ரா லேசாகப் புன்னகைத்தாள். ''அவரு கோபத்துலேயும் நியாயம் இருக்கு. ஆமா, அத்தை மனசைத் தேத்திக்கிட்டு இவருக்காக வாழ்ந்திருக்கலாம். என்ன இல்லை அவங்களுக்கு? சொத்து இருக்கு. வசதி இருக்கு. கஷ்டப் பட்டு சம்பாதிச்சு வாழணுங்கற கவலை கூட இல்லை.பேரனைத் தங்கமா பார்த்துக்கறதுக்கு பாட்டியும், தாத்தாவும் இருந்திருக்காங்க. அவங்க இருந்திருக்கலாம்'' என்றாள்.

''அதனால பெண்கள்னாலே இப்படித்தான். பணத்துக்கும் பதவிக்காகவும்தான் எல்லா செய்வாங்க. அப்படிங்கற மாதிரி அண்ணனுக்கு எண்ணம் எழுந்து போச்சு. அதனாலே, அதனாலே...'' என்று இழுத்தான்.

சாரு சித்ரா அவனைக் கூர்மையாக பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். ''அதனாலதான் அண்ணன் தன்னோட மனசுல இருக்கற அன்பைக் கூட உங்க கிட்ட முழுமையா வெளிப்படுத்தத் தயங்கறாரு!'' என்றான்.

சாரு சித்ராவுக்குக் கொஞ்சம் அவமானமாகப் போய் விட்டது. இந்த இளைஞன் தங்களுடைய அந்தரங்கத்தைக் கண்டு பிடித்து விட்டானே என்று. ஆனால், உடனே கம்பீரத்தை வரவழைத்துக் கொண்டு சொன்னாள். ''பரவாயில்லை சோமு. அது என் பிரச்சினை. நான் பார்த்துக்கறேன். அவருக்கு என்ன அன்பை காட்டத் தெரியலை. அவ்வளவுதானே பார்த்துக்கலாம் விடு!'' என்றாள்.

பிறகு ''அது சரி, அதுக்கு அப்புறம் நீ உங்க அம்மாவை பார்க்கவே இல்லையா?'' என்று கேட்டாள்.

''பார்த்தோங்க அண்ணி. அது அதை விடக் கொடுமை!'' என்றான்.



''ஓ!''

''நாலைஞ்சு வருஷம் இருக்கும். ஒரு தடவை அண்ணன் எங்களை மாலுக்குக் கூட்டிட்டு வந்திருந்தாங்க. அந்த மால் காந்திபுரம் ரோட்டில் இருக்கே பெரிய மால், அதான். அப்பத்தான் கட்டின புதுசு. அண்ணன் எங்களைக் கூட்டிட்டு போனாங்க. அங்க வச்சு அவங்களைப் பார்த்தோம்'' என்றான்.

உடனே இவளுக்குத் தாங்கள் சந்தித்த நாளாக இருக்குமோ? என்ற எண்ணம் தோன்றியது.

''எந்தக் கிழமை வந்தீங்க?'' என்றாள்.

''ஒரு ஞாயித்துக்கிழமைதான் வந்தோம்'' என்றவன் அந்த தேதியையும் வாரத்தையும் கூட கரெக்டாக சொன்னான்.

அவளுக்கும் நினைவு இருந்தது. ஏனென்றால் அவர்கள் தேர்வுக்குப் பின்பு ஏதோ ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகத் தானே அங்கே போனார்கள். அதனால் ஓஹோ என்று தீவிரமாக கேட்கலானாள்.

''அப்ப நாங்க சுத்திப் பார்த்து வரும் பொழுது எதிரிலே காஞ்சனமாலா அம்மா வந்தாங்க!'' என்றான் சோமநாதன்.

''அம்மா!'' என்று சொல்வதற்குக் கூட அவனுக்கு வாய் வரவில்லை என்பது அவளுக்குப் புரிந்தது.

''எனக்குப் பார்த்த உடனே அம்மான்னு தெரிஞ்சுடுச்சு. கண்ணன்கிட்ட 'டேய் நம்ம அம்மா! நம்ம அம்மாடா! என்று சொல்லிக்கிட்டே ஓடறேன். எங்களைப் பார்த்த உடனே அந்த அம்மா பேய் அறைஞ்ச மாதிரி சட்டுன்னு கிராஸ் பண்ணிட்டுப் போய் கார்ல ஏறிட்டாங்க. அவங்களைப் பின்தொடர்ந்து சேட்டு மாதிரி ஒருத்தர்

வேகமா போனாரு. அவரு போய் என்னன்னு கேட்டாரு. அப்ப அவங்க வேற எதையோ கை காமிச்சுட்டு சடக்குன்னு காரை எடுத்துட்டு போயிட்டாங்க''

அந்த நேரத்துக்கு அண்ணன் உள்ளே கடையில இருந்தாங்க. அவங்க ஏதோ வாங்கிட்டு வெளியே வந்து என்னன்னு கேட்டாங்க. நான் சொன்னேன். ''காஞ்சன மாலா அம்மா அதோ அந்த கார்ல போறாங்க. எங்களைப் பார்த்தவுடனே ஏதோ பேயைக் கண்ட மாதிரி கார்ல ஏறிட்டுப் போறாங்க'' அப்படின்னு சொன்னேன். சொல்லிட்டு திரும்பிப் பார்க்கறேன் அண்ணி, அண்ணன் முகத்துல அத்தனை வெறுப்பு அத்தனை கோபம்.''

''அவர் உள்ளுக்குள் இருந்த கோபமெல்லாம் வெளியே வந்துடுச்சு. ஆனா இன்னிக்கு நான் வருத்தப்படறேன். நாங்க அண்ணனோட வாழ்க்கையில வராம இருந்திருந்தா அண்ணன் வாழ்க்கை இன்னும் கொஞ்சம் பெட்டரா இருந்திருக்குமோ அப்படின்னு''

சாரு சித்ரா ஒன்றும் பேசவில்லை ''ஆனாலும் கடவுள் கருணை வச்சாருங்க அண்ணி. உங்களை அவரோட வாழ்க்கையில கொண்டு வந்து இணைச்சாரு. எனக்குத் தெரியும் நீங்க எப்படியும் அவரை ஜெயிச்சுடுவீங்க அப்படின்னு!'' என்றான்.

''சரிங்க தாத்தா, உங்க ஆசீர்வாதம் கிடைச்சா போதும்!'' என்று சிரித்தாள் சாரு சித்ரா. ''இல்லைங்க அண்ணி. நீங்க கண்டிப்பா ஜெயிப்பீங்க. நான் எதற்காக இந்தக் கதையெல்லாம் சொன்னேன் தெரியுமா? அண்ணனோட உண்மையான மனநிலை என்னன்னு நீங்க புரிஞ்சுக்கணும். அவரு மேல கோபப்படாம அவரு மனசுல இருக்கக் கூடிய



இந்த அழுத்தமான கருத்தை நீங்க மாத்தறதுக்கு முயற்சி பண்ணணும்!'' என்றான்.

''அதானே? அவரு எதுக்கு தேவையில்லாம ஒரு சமுதாயத்தில இருக்கக் கூடிய நெகட்டிவிட்டியை மட்டும் பார்க்கறாரு?'' என்று வாய் விட்டுப் பேசிக் கொண்டு யோசனை செய்தாள்.

''அதாங்க அண்ணி. என்னென்ன பாய்ண்ட்டெல்லாம் சொல்லி அவருடைய மனசை நீங்க பழைய நிலைமைக்குக் கொண்டு வரணும். இயற்கையா இருக்கிற மாதிரி முயற்சி செய்ங்க. அண்ணி போராடிட்டு இருக்காரு அண்ணி!''

''போராடறாரா எதுக்கு?'' என்றாள்.

''அண்ணி சொன்னா நீங்க நம்புவீங்களோ இல்லையோ? உங்க மேல அவருக்கு பிரியம், காதல், நேசம் எல்லாமே இருக்கு அண்ணி. ஆனால் அதை வெளிப் படுத்தினா உங்ககிட்டே தோத்த மாதிரி ஆயிடுமோ? அப்படின்னு நினைச்சுட்டு தன்னைக் கட்டுப்படுத்திக் கிறாரு'' என்றான்.

சாரு சித்ரா முகம் மலர்ந்தது. ''கரெக்ட். நானும் அப்படித்தான் இருக்கும்னு நினைச்சேன்'' என்றாள்.

''ஆனா எனக்கு என்ன கோபம்னா...!'' என்று ஆரம்பித் தவள் நிறுத்தி விட்டாள்.

''இல்லை அண்ணி. என்கிட்டே எதை வேண்ணாலும் சொல்லலாம்!'' என்றான்.

''இந்த உயிலுக்காகத்தான் கல்யாணத்துக்கு ஒத்துக் கிட்டாரோ அப்படின்னு எனக்கு ஒரு வருத்தம்'' என்றாள் சாரு சித்ரா.

''அது ஒரு பாயிண்ட் அண்ணி.ஆனா, அவருக்கும் கொஞ்சமாவது உங்களைப் பிடிக்காம கல்யாணத்துக்கு சம்மதம் குடுத்திருக்க மாட்டாருங்கண்ணி. அதனால உங்களுக்கு இன்னும் நிறைய நிறைய வாய்ப்பு இருக்குது. நீங்க முயற்சி செஞ்சால் அவரை ஜெயிக்கலாம்னு எனக்குத் தோணுது'' என்றான்.

''ஓஹோ! காலேஜுக்குப் போய் நீங்க இதெல்லாம் தான் கத்துக்கிட்டு வந்தீங்களோ?'' என்று சிரித்தாள் சாரு சித்ரா.

''அப்புறம் என்ன பண்றது? இப்படி ஒண்ணும் புரியாத மாதிரி நடிக்கிற அண்ணன். ஒரு அருமையான அண்ணி. பூப் போல அண்ணி. புரிஞ்சுக்காம அவங்களைக் கஷ்டப் படுத்திட்டு இருந்தா எப்படிங்க அண்ணி சும்மா இருக்கறது?'' என்றான்.

''அப்ப சரி, நாம ஒண்ணு செய்வோம்'' என்றாள் சாரு சித்ரா.

''சொல்லுங்க அண்ணி. நீங்க சொன்னா நாங்க என்ன வேண்ணா செய்யத் தயாரா இருக்கோம்!'' என்றான் சோமநாதன்.

''இந்த வார்த்தை மாறக் கூடாது!'' என்றாள் சாரு சித்ரா.

''கண்டிப்பா!'' என்றான் சோமநாதன்.

''சரி, நான் ஒண்ணு சொல்றேன் கேளுங்க. நீங்க, நானு, கண்ணன் மூணு பேரும் ஒரு கூட்டுப் போட்டு அவருக்கு இனிமேல் எப்படி டார்ச்சர் கொடுக்கலாம்னு யோசிப்போம்'' என்றாள்.

''டார்ச்சரா?'' என்று அதிர்ந்தான் சோமநாதன்.



''ஐய்யோ, டார்ச்சர்னா இந்த மேட்டரை புரிய வைக்கறதுக்காக அவருக்கு கொடுக்கிற விஷயம்பா. நீங்க நினைக்கற மாதிரி டார்ச்சர் இல்லை!'' என்றாள்.

''சரிங்க அண்ணி. நீங்க ப்ளான் பண்ணுங்க. நாங்க கோ ஆப் ரேட் பண்றோம். நீங்க எக்ஸ்கியூட் பண்ணுங்க நாங்க கோ ஆப்ரேட் பண்றோம் எப்படின்னாலும் சரி''

சாருசித்ரா சிரித்தாள். அவளுக்கு சுவாரசியமாக இருந்தது.

''ஆமா சோமு, நீங்க சொல்றது கரெக்ட்தான். இந்தப் பையன் இருக்கானே, அவனை எடுத்துக்கும் போது அவரு முகத்துல பார்க்கணும். அவ்வளவு ஒரு சந்தோஷம் ஒரு வெற்றிப் பெருமிதம். மனசளவில அன்பில்லாத ஒருத்தரால அப்படி நடந்துக்க முடியாது''

''ஆமாங்க அண்ணி. அவருக்கு நிறைய நிறைய அன்பிருக்கு. ஆனால் அதை உங்ககிட்ட வெளிக் காட்டறதுலதான் கொஞ்சம் ஸ்டபனா நிக்கறாரு. அவருக்கு என்ன பயம்னா உடைஞ்சு வெளிய வந்தா டோட்டலா சரண்டர் ஆயிடுவோமோன்னு பயம்'' என்றான் சோம நாதன்.

சாருசித்ராவின் முகம் மலர்ந்தது. ''அப்படியா சொல்றே?'' என்றாள்.

''ஆமாங்க அண்ணி!'' என்றான் சோமநாதன்.

''சரி, இந்தப் பாயிண்ட்ல இருந்து நீங்க விலகிக்கங்க. நான் பார்த்துக்கறேன். நானாச்சு அவராச்சு'' என்றான்.

சோமு கலகலவென்று சிரித்தான்.

''அண்ணி என்ன இப்படி சக்கை போடு போடறீங்க?''

''ஆமாப்பா, எனக்கு எதனால இப்படி இருக்காருன்னு புரியவே இல்லை. பணம் தான் முக்கியம்னு நினைக்கறாரோ அப்படின்னு எனக்கு ஒரு வருத்தம் இருந்தது. எப்ப அப்படி இல்லைன்னு ஆயிடுச்சோ அதுக்கப்புறம் டாக்கிள் பண்றது ஈஸிப்பா. நான் பார்த்துக்கறேன்''என்றாள் உறுதியாக.

அதே சிந்தனையோடுதான் தன்னுடைய அறைக்கு வந்தாள்.

உண்மையிலேயே சோமநாதனுடைய வாழ்க்கையையும் கண்ணனுடைய வாழ்க்கையையும் பற்றிக் கேட்ட பொழுது அவளுடைய உள்ளத்தில் துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது.

''பாவம், இந்த இரண்டு பையன்களையும் பார்க்கும் பொழுது நாமெல்லாம் பெரிய சொர்க்கத்தில் இருக்கிறோம்'' என்று எண்ணிக் கொண்டாள்.

தன்னுடைய வாழ்க்கையில் அந்த மாதிரி எதுவும் சிக்கல் இல்லை. நேர் கோடாக வாழ்க்கை இருந்தது-ஆனால் இந்தப் பையன்கள் பத்து வயதிலும் எட்டு வயதிலும் எப்படிக் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். அதிலும் ஒரு சின்னக் குழந்தையைப் பறி கொடுத்துவிட்டு சாவைப் பார்த்து....! துக்கத்தைப் பார்த்து......! ஐயோ இது எவ்வளவு கொடுமை!'' என்று எண்ணிக் கொண்டாள்.

இதற்குப் பிறகு சோமுவிடமும், கண்ணனிடமும் நாம் ஒரு தாயைப் போல் நடந்து கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டாள். அதே சிந்தனையில் நடமாடிக் கொண்டிருந்தாள்.

அன்றிரவு ஏழு மணிக்கு மேல் தான் வெற்றிவேல் வந்தான். வந்தவன் வழக்கம் போல தன்னுடைய அறைக்கு



வந்து ஃபைலைத் திறந்து வைத்துக் கொண்டு அமர்ந்து கொண்டான். 'எப்பொழுதும் எட்டு மணிக்கு வருகிறவன் இன்றைக்கு ஏழு மணிக்கு வந்திருக்கிறானே பரவாயில்லையே!' என்று எண்ணிக் கொண்ட மனைவி அவன் அருகில் அமர்ந்தாள்.

''என்ன?'' என்றான் வெற்றிவேல்.

''ஃபைலை ஆபீஸ்ல இருந்து வீட்டுக்கு தூக்கிட்டு வந்துடுவீங்களா?'' என்றாள்.

அவன் ஆச்சரியமாக அவளைப் பார்த்தான். ''இதோ இங்கே ஒருத்தன் இருக்கான்ல. அவன் எப்படா அப்பா வருவாரு! அவரு கூட கொஞ்ச நேரம் இருக்கலாம்னு நினைப்பானில்லே? இருக்கற நேரத்துலயாவது அவன்கிட்ட பிரியம் காட்டணுமில்லே!'' என்றாள்.

''சாரு!'' என்றான் அவன் ஆச்சரியமாக.

''ஆமாங்க, குவான்ட்டிட்டி அவர், குவாலிட்டி அவர்ன்னு இருக்கு. இருபத்தி நாலு மணி நேரமும் அவனோட இருக்க முடியலைன்னா பரவாயில்லை. இருக்கற ரெண்டு மூணு மணி நேரத்துலயாவது அந்தக் குழந்தைக்கு அப்பான்னா யாருன்னு நீங்க காட்ட வேண்டாமா?'' என்றாள்.

அவன் ஃபைலை மூடி வைத்து விட்டு அவளைப் பார்த்தான்.

''இந்தாங்க பையனை வச்சுக்கோங்க. கொஞ்சுங்க. பேசுங்க, உங்க வாய்ஸ் அவனுக்கு கேட்கணும்'' என்று குழந்தையைக் கொண்டு வந்து பொத்தென்று அவன் மடியிலே வைத்து விட்டாள்.

அவன் மறுபடியும் ஒரு விதமாக அவளைப் பார்த்து விட்டு பையனை தன் வலக்கையால் சேர்த்து அணைத்து மடியிலே அமர்த்திக் கொண்டான்.

"என்ன, பையனுக்கு ஏழெட்டு மாசம் ஆச்சு. பேச வரலை. ஆனா நீங்க பேசறதெல்லாம் புரியும். கதை சொல்லுங்க. பாட்டு சொல்லுங்க, விளையாட வைங்க" என்றாள்.

"இப்ப நாம பேசறதெல்லாம் புரியும்னா சொல்றே?" என்றான் அவன்.

"ஆமாங்க. புரியும். நல்லா புரியும்." என்றாள் அவள்.

உடனே அவன் "என்ன பேசட்டும்?"என்றான்.

"என்னமோ பேசிகிட்டிருங்க. இந்த ஒரு மணி நேரமும் நீங்கதான் அவனைப் பார்த்துக்கறீங்க. எனக்கு அடுப்புக் கிட்ட வேலை இருக்கு!" என்று எழுந்து அடுக்களைக்குப் போனாள்.

அம்ச்சி ஆச்சரியமாகப் பார்த்தாள். "ஏம்புள்ளே! இப்ப இந்த நேரத்துல இங்கே என்ன வேலை?" என்றாள்.

அவள் திரும்பி அம்ச்சியைப் பார்த்துக் குறும்பாக சிரித்தாள்.

"அட! அவன் வந்திருக்கானே அவனைக் கவனி. நாங்க எல்லாம் பார்த்துக்கறோம்" என்றாள். "சும்மா இருங்க அம்ச்சி!" என்றாள் இவள்.

"என்ன புள்ளை சொல்றே?" என்றாள் அம்ச்சி.

"பையனை அவருகிட்ட ஒட்ட வச்சிருக்கேன். ஒரு மணி நேரம் பார்த்துகிட்டிருக்கட்டும். இங்க வந்தாலும்



ஃபைலைக் கட்டிட்டு அழறது. கொஞ்சமாவது பையன் அன்பு பாசம்னு பழக்கணுமில்லே?" என்றாள்.

அம்ச்சி தன் வலக்கரத்தை எடுத்துக் கன்னத்தில் வைத்துக் கொண்டு "அட புள்ளே"என்றார்.

"ஆமாங்க அம்ச்சி உங்க பேரனுக்கு அன்பைக் காட்டறதுனாலே பயம். எங்க நாம மடங்கிடுவோம்னு. முதல்ல குழந்தைகிட்ட அன்பைக் காட்டட்டும்!" என்றாள்.

அதற்குப் பிறகு மும்முரமாக சமையல் வேலையில் ஆழ்ந்தாள்.

அரை மணி நேரம் கழித்து அம்ச்சியும், அவளும் சத்தத்தையே காணோமே என்று பேசிக் கொண்டு வந்து மெல்ல எட்டிப் பார்த்தார்கள்.

மகன் அந்தப் பெரிய படுக்கையின் மேலே மண்டி போட்டுக் கொண்டு இங்கும் அங்குமாக தவழ்ந்து விளை யாடிக் கொண்டிருக்க அவனுக்கு ஈடு கொடுத்துக் கொண்டு அவனும் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தான்.

திருமணமாகி வந்த இத்தனை நாளும் பார்க்காத ஒரு அன்பு நிறைந்த முகத்தை இயற்கையான முகத்தைப் பார்த்துத் தன்னை மறந்து நின்றாள் சாருசித்ரா!

அம்ச்சியும் கூட ஆச்சரியமாகப் பார்த்தார்!

## அத்தியாயம் - 21

ஃபைல்களில் ஆழ்ந்திருந்தான் வெற்றிவேல். ஏதோ ஒரு பிரச்சினைக்கு தீர்வை யோசித்துக் கொண்டே தன்னுடைய சுழல்நாற்காலியை சுழற்றினான்.

பக்கத்துக் கேபின் காலியாக இருந்தது. வந்தது என்னமோ ஆறு மாதம் தான் என்றாலும் சாரு சித்ரா அந்த

கேபினில் இருக்கும் வரையிலும் ஏதோ அந்த அலுவலகமே நிறைந்திருந்தாற்போல இருந்தது. அப்போது அது புரியவில்லை.

இப்போது அவள் வராத நேரத்தில் அவள் இருந்திருந்தால் நன்றாக இருக்குமே என்ற எண்ணம் கூட தோன்றுகிறது.

சமீப காலமாக சில முக்கியமான ஃபைல்களைப் பற்றிய கருத்துக்கள் வேண்டும் என்றால் வீட்டுக்கே எடுத்துட்டுப் போய் அவளோடு டிஸ்கஸ் செய்தான். இரண்டு பேருக்கும் இந்த அலுவலக சம்பந்தமாக பேசுவதென்றால் ஒரு இணக்கம் ஏற்பட்டு விடுகிறது.

'சேம் வேவ் லென்த்' என்பார்களே, அது போல சில பிரச்சினைகளுக்கு அவள் சரியான தீர்வு கொடுப்பதைப் பார்த்து அவன் மனதுக்குள்ளே பாராட்டிக் கொண்டிருந்தான். ஆனால், வாய் விட்டு இதுவரையிலும் பாராட்டவில்லை.

செய்யலாமோ? செய்திருக்கலாமோ? பாராட்டியிருக்கலாமே? இதிலென்ன குறைந்தா போய் விடுவோம்? என்று இப்பொழுது எண்ணிக் கொண்டான்.

சமீப காலமாக அவளை ரொம்பவும் கவனிக்கிறோம் என்று தோன்றியது. அவளுடைய நடை, உடை, பாவனைகள் எல்லாவற்றிலுமே ஒரு கம்பீரம் ஒரு நளினம், ஒரு அழகு எல்லாமே கலந்து இருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

அவள் காணாத வண்ணம் இப்பொழுது அவளைக் கவனிக்கின்றான். இதனால்தான் பெண்ணைப் பற்றிச் சொல்லும் பொழுது காந்தம் என்கிறார்களோ? மாயை என்கிறார்களோ? கவர்ந்திழுக்கும் சக்தி என்கிறார்களோ? ஆனால், அவர்கள் இருந்தால் தானே காரியம் நடக்கிறது?



ஒரு இரண்டு மூன்று மணி நேரம் நேற்றுக் குழந்தையை வைத்துக் கொள்ளும்போதுதான் புரிந்தது ஒரு குழந்தையை சமாளிப்பது என்பது எவ்வளவு கஷ்டம் என்பது. அதிலும் தன் உணர்வையே ரத்தமாக்கி பாலாக்கிக் கொடுத்து குழந்தையே உயிராக தன்னுடைய வேலை சிந்தனை தனிப்பட்ட முன்னேற்றம் எல்லாவற்றையும் தியாகம் செய்து விட்டு ஒரு தாயாய் அமர்ந்து கொண்டிருக்கிறாளே அது எப்பேர்ப்பட்ட விஷயம் என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அதைக் காட்டிலும் அவ்வப்பொழுது மகனைப் பார்க்க வேண்டுமென்று தோன்றுகிறது . மகனுடைய தாயைக் கூட பிரிந்திருப்பது கொஞ்சம் கடினமாகி கொண்டிருப்பது போல் இருந்தது. செல்ஃபோனை எடுத்து சாருசித்ராவின் செல்போனுக்கு தொடர்பு கொண்டான்.

அந்தப் பக்கம் சாரு சித்ரா இவனுடைய எண்ணைப் பார்த்தவுடன் ஆச்சரியப்பட்டாள். ஏனென்றால் இந்த மாதிரி காலை பதினோரு மணிக்கெல்லாம் அவன் ஃபோன் செய்வது வழக்கமே இல்லை.

எப்போதாவது ஃபோன் செய்வான். அதுவும் முக்கியமான ஃபைல் ஏதாவது தேவை இருந்தால் அல்லது ஏதாவது ஒரு விஷயத்தில் கருத்துக் கேட்க வேண்டும் என்று இருந்தால் ஃபோன் செய்வான். இது என்ன ஆச்சரியமாக இருக்கிறது என்று எண்ணிக் கொண்டாள்.

மகனுக்கு கலைச்செல்வன் என்று பெயர் வைத்திருந்தார்கள். தாத்தாவினுடைய பெயரிலிருந்த கலை

வரவேண்டும் என்று யோசித்து அந்தப் பெயரைச் சொன்னான் வெற்றிவேல். ''கொஞ்சம் பழசா இருக்கில்லே?'' என்று விவாதம் செய்தார்கள்.

பாட்டியினுடைய பெயரும் கூட வந்தால் நன்றாகத்தான் இருக்கும். கலையருள், கலைநாயகன் இப்படியெல்லாம் தான் வைக்க வேண்டும். ''வேண்டாம், ரொம்பவும் பழசாக இருக்கு!'' என்று சிரித்துக் கொண்டார்கள்.

''அதுசரி, நீங்க பாட்டுக்கும் கலைச்செல்வன் என்று பெயர் வைத்து விடுவீர்கள். நான் கலை கலைன்னு கூப்பிட்டா நல்லாவா இருக்கும்?'' என்றாள் அவள்.

''சரி, வேறு ஏதாவது ஒரு பெயர் வைத்துக் கூப்பிடுவோம்'' என்று சந்துரு என்று அழைக்கலாம் எந்று முடிவு செய்தார்கள். அதனால் சாதாரணமாக சந்துரு என்று அழைப்பார்கள். இப்பொழுதெல்லாம் சந்துரு என்று அழைத்தால் சடக்கென்று திருப்பிப் பார்க்கிறான் தன்னுடைய பொக்கை வாயைத் திறந்து கொண்டு வாய் மலர சிரிக்கிறான்.

காச் மூச் என்று சத்தம் போட்டுப் புரளுகிறான். பெரிய அந்தப் படுக்கையில் படுத்திருந்தால் தவழ்ந்து அதகளம் செய்கிறான்.

கீழே தரையிலே விட்டாலோ சுற்றிலும் நான்கு பேர் பாதுகாப்புக்காக அமர வேண்டி இருக்கிறது. கொஞ்சம் அசந்தால் போதும் ஷோக்கேஸில், டீப்பாயில் அங்கங்கே வைத்திருக்கிற பொருட்களை எல்லாம் இழுத்துத் தள்ளி விடுகிறான். அதனால் அவன் கைக்கு கிடைக்காத வண்ணம் பொருட்களையெல்லாம் மேலே வைத்து விட்டார்கள்.



சோமநாதனும், கண்ணனும் ''அண்ணா உங்க பையன் சரியான குறும்புக்காரனா இருக்கான்!'' என்று ரசிக்கும் பொழுது அவனுக்கும் கூட இப்பொழுதெல்லாம் பெருமை யாக இருந்தது.

ஒரு முறை டாக்டரிடம் கூட அலுத்துக்கொண்டாள். ''ரொம்பக் குறும்பு பண்றான்!'' என்றாள்.

''ஏம்மா எட்டு மாதக் குழந்தை குறும்பு பண்றதை பத்தி என்னம்மா சொல்றீங்க? என்று சிரித்தார் டாக்டர்.''அப்படிச் சொல்லாதீங்க. குழந்தைங்க அசமந்தமா படுத்து இருக்கக் கூடாது அது தப்பு. துரு துருன்னு இருந்தாத்தான் நல்லா இருக்காங்க ஆரோக்கியமா இருக்காங்கன்னு அர்த்தம்'' என்றார் டாக்டர்.

அதெல்லாம் இப்பொழுது நினைவுக்கு வர ஃபோனை காதிலே வைத்துக் கொண்டு காத்துக் கொண்டிருந்தான். சாருசித்ரா போனை எடுத்து ''ஹலோ!'' என்றாள்.

''சாரு, சந்துரு என்ன பண்றான்?'' என்றான் இவன்.

சாரு சித்ராவுக்கு ஒரு நிமிடம் மூச்சே அடைத்து விடும் போல ஆகி விட்டது. ''ஆஹா! என்னடா இது ஆச்சரியமாக இருக்கிறது!'' என்று எண்ணியவள் வாய் விட்டு சொல்லி விட்டாள்.

அவன் அசரவில்லை. ''ஆச்சரியம்தான். இருக்கட்டுமே! இப்பப்ப பயலோட கொஞ்ச கொஞ்ச நேரம் இருக்கேனா அவன் நினைப்பாவே இருக்கு. நேத்து ஒரே ரகளை பண்ணிட்டு இருந்தானே அவன் சிரிக்கும் போது உலகத்தையே ஜெயிச்சுட்டமாதிரி போ எனக்கு. சரி இப்ப என்ன பண்றான்?'' என்று கேட்டான்.

''தூங்கிட்டிருக்கான்''

''இந்த நேரத்துல தூங்கறானா?''

''ஆமா குழந்தைங்கன்னா எந்த நேரத்துல வேண்ணா தூங்குவாங்க. இப்ப தான் கூழ் கொடுத்தேன். அதுக்கப்புறம் தூங்கறான்'' என்றாள்.

''ஓஹோ, என்ன கூழ்?'' என்றான்.

''ஆஹா, இப்பத்தான் அப்பா ரோலே ஞாபகத்துக்கு வருதா உங்களுக்கு?'' என்றாள் அவள்.

''சரி சாரு, கேலி பண்ணாம சொல்லு!'' என்றான்.

''ராகிக்கூழ் கொடுத்தேன். குடிச்சுட்டு தூங்கறான்''

''ஓஹோ! என்னென்ன கொடுப்பே?'' என்று கேட்டான்.

அவளுக்கு சிரிப்பாக வந்தது. ''ஏங்க ஆஃபீஸ் வேலையை விட்டுட்டு என்னங்க இதெல்லாம் கேள்வி?'' என்றாள்.

''இல்லை. நீ பாட்டுக்கும் வளர்த்துட்டு இருக்கே. நான் அதைப் பத்தி நினைக்கறதே இல்லை. இங்கே இருக்கேன். நான் பாட்டுக்கும் கவலை இல்லாம இருக்கேன். ஆனா நானும் தெரிஞ்சுக்கணுமில்லே?. அவனோட டெய்லி ரொட்டீன் என்ன? அவன் என்ன பண்றான். அவனை நீங்க எப்படி சமாளிக்கிறீங்க? இதெல்லாம் தெரிஞ்சுக்கணுமில்லே? என்றான்.

''ஹலோ! அதெல்லாம் தெரிஞ்சுக்கணும்னா இடையில இடையில கொஞ்ச நேரம் வரணும்!'' என்றாள்.

''சரி. வந்தாப் போச்சு. இன்னிக்கு ஒரு முக்கியமான மீட்டிங் இருக்கு. இல்லைன்னா மத்தியானம் கிளம்பி வந்துடுவேன்!''



அவள் சிரித்தாள்.

''ம்ஹூம், பையன் இந்த அளவுக்கு அட்ராக்ட் பண்ணிட்டானா?'' என்றாள்.

''பின்னே என்னோட வாரிசாச்சே!'' என்றான் அவன்.

''சரி, நான் மறுபடியும் ஒரு ஒன் அவர் கழிச்சுக் கூப்பிடறேன்!'' என்றான்.

''ஒன் அவர் கழிச்சா?'' என்றாள் அவள்.

''ஆமா, ஒன் அவர் கழிச்சு அவன் முழிச்சிட்டான்னா சொல்லு''

''ஏங்க அவங்கிட்ட போன்லயா பேச முடியும்?'' என்றாள்.

''இல்லை அவன் ஆய் உய்னு சத்தம் போடறதைக் கேட்டுக்குவேன்ல?'' என்றான்.

''சரிங்க!'' என்று புன்னகைத்தபடி ஃபோனை ஆஃப் செய்தாள் சாருசித்ரா.

''ஓஹோ, இப்பப் பையன் மேல பாசம் இழுக்கிறதா?'' என்றவள் அம்ச்சியிடம் வந்து சொன்னாள். ''அம்ச்சி அதிசயம் பார்த்தீங்களா? உங்க பேரன் ஃபோன் பண்ணினாரு''

''ஏன் இடையில பண்ண மாட்டானா?'' என்றாள் அம்ச்சி.

''என்னைக்குப் பண்ணியிருக்காரு, எப்பவுமே கிடையாது. இன்னிக்கு அதிசயம் நேத்து பையனோட விளையாடிட்டு இருந்தாரில்லே, அதனால இப்பப் பையன் ஞாபகம் வந்துடுச்சாம். ஃபோன் பண்ணி சந்துரு என்ன பண்றான்னு கேட்கறாரு''

அம்ச்சிக்கு சிரிப்பாக வந்தது. "இப்பத்தான் அப்பாங் கறதையே உணர்றான் போலிருக்கு"

அதே சமயத்தில் அப்ச்சி அங்கே வந்தவர் "என்ன மாநாடு இந்த நேரத்துல!?" என்றார். அவள் சொன்னாள்.

அப்ச்சி சிந்தனையோடு முகவாய்க்கட்டையை தடவிக் கொண்டிருந்தார்.

"ம்ஹூம்! ஒழுங்குக்கு வாராப்ல இருக்குது!" என்று சிரித்துக் கொண்டார்.

அன்று மாலை சோமநாதனிடம், கண்ணனிடம் இதைப் பகிர்ந்து கொண்டாள்.

"அண்ணி, இங்க இருக்குது அண்ணி துருப்புச் சீட்டு!" என்றான் சோமநாதன்.

அவள் புரியாமல் பார்த்தாள்.

"அண்ணி, எனக்கென்னமோ உங்ககிட்டேயும் பேசணும்னுதான் அண்ணன் கூப்பிட்டிருப்பாங்கன்னு தோணுது!" என்றான்.

"சும்மா இருங்க சோமு!" என்றாள்.

"இல்லைங்க அண்ணி, இப்பவெல்லாம் அண்ணன் உங்களைப் பார்க்கற பார்வையே சரியில்லை. பார்வையிலே உங்களை முழுங்கிடறாரு!" என்றான்.

அவள் முகம் சிவந்தது.

"நீங்க வேற! அப்படியெல்லாம் பாக்க வேற தெரியுமாக்கும்?" என்றாள்.

"இல்லைங்க அண்ணி, அண்ணன் என்னமோ உங்க கிட்ட கொஞ்சம் கொஞ்சமா சாய்கிற மாதிரி தெரிகிறது!" என்றான்.



அவள் தலையில் அடித்துக் கொண்டாள்.

"இதென்ன அநியாயமா இருக்கு? ஒரு கொழுந்தனார் வந்து இதெல்லாம் சொல்லிக்கிட்டு இருக்கீங்க" என்றாள்.

அவன் நாக்கைக் கடித்து கொண்டு "இல்லைங்க அண்ணி, அண்ணனுக்கு அன்பு இருக்கு. அதை வெளியில சொல்லத் தெரியலை. அதை எப்படியாவது வெளியில கொண்டு வரணுமே!" என்றான்.

அவள் கடுப்பாக அவனைப் பார்த்து முறைத்து விட்டு "இதுக்கு ஒரு மாநாடு போட்டு ஐந்தாண்டு திட்டம் போடறாங்களே அது மாதிரி உட்கார்ந்து ப்ளான் பண்ணுங்க!" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

உண்மையில் வெட்கத்தினால்தான் அவள் அங்கிருந்து நகர்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட சோமநாதன் சிரித்துக் கொண்டான்.

சிரித்தவன் சும்மா இருக்கவில்லை. அண்ணனுக்கு ஃபோன் செய்தான். "அண்ணா என்னண்ணா பிஸியா இருக்கீங்களா?" என்றான்.

"ஆமாடா, உனக்கு என்ன வேலை இங்கே. நீ ஆபீஸ் போகலையா?" என்றான்.

"இல்லைண்ணா இன்னிக்கு நாலு மணிக்கு வந்துட்டேன்!" என்றான்.

"சரி அப்படின்னா மில்லுக்கு போய் அங்க என்ன நடக்குதுன்னு பார்த்துட்டு வா!" என்று ஒரு வேலை கொடுத்தான்.

"உங்கிட்டே பேசியே இருக்கக் கூடாது அண்ணா!" என்றான் இவன்.

"ஆமாடா இப்ப என்ன வீட்ல உனக்கு வேலை? இந்த வயசுல அலைஞ்சு அலைஞ்சு தொழில் கத்துக்கணும்டா. மில்லுல சரக்கு வந்துடுச்சான்னு பார்த்துட்டு வா. அந்த ஸ்டோர் கீப்பர் சரியா சொல்றதே இல்லை. அந்த மேனஜர் அதுக்கு மேல. போடா சடன் விசிட் அடிச்சாத் தான் சரியா இருக்கும்" என்றான்.

"சரிண்ணா. போறேண்ணா!" என்றான்.

"சரி. எதுக்குக் கூப்பிட்டே சொல்லு!" என்றான்.

"அண்ணா இன்னிக்கு அண்ணி தலைக்கு குளிச்சுட்டு சூப்பரா அப்படியே... என்ன சொல்றது... ஒரு அம்மன் மாதிரி இருக்காங்க. பார்க்கறதுக்கே கையெடுத்துக் கும்பிடணும் போல அப்படி இருக்காங்க. நீ என்னண்ணா? அவங்களை வெளியில கூட்டிட்டுப் போகாம ஆஃபீஸ்ல போய் உட்கார்ந்திட்டிருக்கே?" என்றான்.

"டேய் ஃபோனை வைடா! ஆகற வேலையைப் பாரு!" என்று அவன் ஃபோனை வைக்கச் சொல்லி விட்டான்.

ஃபோனை வைக்கச் சொன்னாலும் அதற்குப் பிறகு வெற்றிவேலுக்கு வேலை ஓடவேயில்லை.

'உண்மைதான். தன் மனைவி அப்படித் தலைக்குக் குளித்து விட்டு நீளமாக முடியை விட்டு நுனியிலே ஒரு முடிச்சை போட்டுக் கொண்டு அந்தக் கைத்தறி புடவையைக் கட்டிக் கொண்டு வந்தாலும் தேவதை மாதிரித்தான் இருக்கிறாள்"

இரண்டு நாட்களுக்கு முன் சோமநாதன் பேச்சு வாக்கிலே ஒரு தாக்குதல் நடத்தியிருந்தான்.



பிட்டைப் போடுவது என்று இப்பொழுதெல்லாம் சொல்லிக் கொள்ளுகிற மாதிரி அவன் ஒரு பிட்டைப் போட்டு விட்டிருந்தான்.

"அண்ணா, அவலை நினைச்சுகிட்டு உரலை இடிக்கறதுன்னு கேள்விப்பட்டிருக்கியா?" என்று கேட்டான்.

"ஏண்டா, அப்படிக் கேட்கறே?" என்றான் இவன்.

எப்போதாவது சகோதரர்களுடன் உட்கார்ந்து ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரம் அளவளாவுவது உண்டு. அந்த மாதிரி நேற்று முன்தினம் வீட்டுக்கு முன்னால் இருந்த தோட்டத்திலே சேரைப் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தார்கள். சில வேளைகளில் சீட்டு விளையாடுவது உண்டு. அப்படித்தான் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

"எதுக்குடா கேட்கறே?" என்றான்.

"இல்லைண்ணா, எனக்கென்னமோ நீங்க நம்ம பெரியம்மாவையும் எங்கம்மாவையும் நினைச்சுட்டு அதே அளவு கோல்ல அண்ணியைப் பார்க்கறீங்களோன்னு எனக்கு தோணுது" என்றான்.

"சீட்டை போடப்போறேன்"என்ற வெற்றிவேல் நிறுத்தி விட்டு அவனை சிந்தனையுடன் பார்த்தான். "இப்ப எதுக்குடா இந்த டாப்பிக்?" என்றான்.

"இல்லைண்ணா நீங்க அண்ணிக்கு சரியான ஜஸ்டிஸ் பண்ணலைன்னு எனக்குத் தோணுது!" என்றான்.

"எதை வச்சுச் சொல்றே?"

"நீங்க கேர் எடுக்கணும்ண்ணா. அவங்களை ஏதாவது கோவிலுக்கு கூட்டிட்டுப் போகலாம். ஏதாவது சினிமாவுக்கு கூட்டிட்டுப் போகலாம். எண்டர் டெய்ன்

மெண்ட்டே இல்லைண்ணா. அவங்க குழந்தையோடவே இருக்காங்க''

''குழந்தையை விட என்னடா பெரிய எண்டர் டெய்ன்மெண்ட்?'' என்றான் அவன்.

''ரெண்டு மணி நேரம் இருந்து பாருங்க!'' என்றான் இவன்.

அப்படி அவன் வைத்த சவால் தான் நேற்று அவன் குழந்தையுடன் இருப்பதற்கு ஒரு காரணமாகவும் இருந்தது.

''அதாண்ணா. நீங்க அம்மா பெரியம்மா இவங்களை அளவு கோலா வச்சுட்டு அண்ணியை பார்க்காதீங்க அண்ணி அறிவு ஜீவின்னா. அதுமட்டும் இல்லை அதே அளவுக்கு அன்பானவங்களும் கூட. ஒரு நாள் இரண்டு பேரும் எங்க கதையை சொன்னோம் அழுதுட்டாங்க தெரியுமா?'' என்றான்.

அவன் முறைத்தான். ''எதுக்குடா இதையெல்லாம் போய் அவகிட்ட சொல்லிகிட்டு இருக்கீங்க?'' என்றான்.

''நிஜமாண்ணா. நீங்க என்ன நினைச்சாலும் சரி. அண்ணி வந்ததுக்கு அப்புறம் எங்களுக்கு அம்மா இல்லாத குறையே தீர்ந்துடுச்சு!'' என்றான்.

''டேய், டேய் ஏண்டா அவ சின்ன வயசுக்காரி. அவளைப் போய் இப்படிப் பெரிய பாட்டி மாதிரி பண்றீங்க?''

''இல்லைண்ணா. மனசுல அவங்களுக்கு அவ்வளவு மெச்சூரிட்டி. சில நேரங்கள்ல உங்களையே கூட ஒரு தாய் மாதிரிதான் டீல் பண்றாங்கன்னு தோணுது!'' என்றான்.

''ஏண்டா, இன்னிக்கு ஏதாவது நல்ல ஸ்வீட் செஞ்சு தரேன்னு சொல்லியிருக்காளா? வேற ஏதாவது வாங்கித்



தரேன்னு சொல்லியிருக்காளா. தீபாவளிக்கு ஜீன்ஸ் கேட்டீங்கள்ல அவகிட்டே. அதுக்காக இந்த வேலை பண்றீங்களா?'' என்று கேட்டான்.

''போங்கண்ணா. நீங்க கம்பெனியில கொடுக்கற சம்பளமே எங்க ரெண்டு பேத்துக்கும் தேவைக்கு மேல இருக்கு. அதுவே அப்படியே பேங்க்ல இருக்குது. இருந் தாலும் அண்ணிகிட்ட கேட்போம். அண்ணி வாங்கிக் கொடுத்தா சந்தோஷம்தான். அது வேற. ஆனாலும் என்னமோ அண்ணியை பெட்டரா நடத்தணும்னு தோணுது''

''சரிடா, உங்க ரெக்கமண்டேஷனை எல்லாம் மனசுல வாங்கி வச்சுக்கிட்டேன். சரி இப்ப சீட்டைப் போடு!'' என்று இவன் பேச்சை மாற்றி விட்டான்.

இருந்தாலும் சகோதரன் சொன்னது அவன் மனசுக் குள்ளே இருந்து கொண்டேதான்இருந்தது. இப்பொழுது நினைவுக்கு வர அந்த நிமிடம் அவனுக்கு இனி கொஞ்ச நேரம் கூட ஆபீஸில் இருக்க முடியாது என்று தோன்றியது. மகனும் அவனுடைய தாயும் அவனை இழுக்கிறார்கள் என்று தோன்றியது.

செல்ஃபோனை மறுபடியும் எடுத்து ''ஏய், சாருசித்ரா எங்காவது வெளியில போகலாமா?'' என்றான்.

அவள் ஆச்சரியமாக 'ம்' என்றாள்.

''எங்கே போகலாம்,'' என்றான்.

''எங்கே வேண்ணாலும் போகலாம். நீங்க எங்க கூட்டிட்டுப் போறீங்களோ அங்கே போகலாம்!'' என்றாள்.

''சரி, இவனை வச்சுகிட்டு சினிமாவுக்குப் போக முடியாதுன்னு நினைக்கிறேன். வேறே எங்கே

போகலாம்னு நீ ப்ளான் பண்ணி வை. இன்னும் ஆஃப் அன் அவர்ல வரேன்'' என்று ஃபோனை வைத்தான்.

சாருசித்ரா செல்ஃபோனை கையிலே வைத்துக் கொண்டு ஆச்சரியம் தாளாதவளாக மயக்கம் போட்டு விடாத குறையாக நின்று கொண்டிருந்தாள்.

## அத்தியாயம்- 22

சுத்தமாக கோபம் வருத்தம் எல்லாம் சாருசித்ராவுக்கு வடிந்து போயிருந்தது.

'பெண்களை என்ன இப்படி நடத்துகிறீர்கள்?' என்று அவளுக்கு எழுந்த கோபமெல்லாம் சோமநாதன் சொன்ன கதையைக் கேட்டதற்குப் பிறகு மாறி விட்டது.

இப்படிப்பட்ட எண்ணங்கள் அவனுக்கு வருவதற்குக் காரணம் இருந்தது என்பது அவளுக்குப் புரிந்தது. மனம் ஏற்றுக் கொள்ளவும் செய்தது.

''இதுதான் அவனுடைய பிரச்சினை!'' என்பது அவளுக்கு புரிந்தது. இதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைத்தான் அடுத்து தான் யோசிக்க வேண்டும் என்று அவள் முடிவு செய்தாள். நேரடியான அறிவுரைகளோ நேரடியான கேள்விகளோ பலன் தராது என்பதை அவள் புரிந்து கொண்டிருந்தாள்.

அப்படியான வழிமுறைகளை மேற்கொண்டால் இன்னும் அவன் சுருங்கித் தான் போவான் என்பதும் அவளுக்குத் தெரிந்தது. எனவே வேறு விதமான வழிமுறைகளைத்தான் கையாள வேண்டும் என்று தெளிவாகிக் கொண்டாள்.



கணவன் வருகைக்காக ஆவலுடன் காத்திருந்தாள். சொன்ன நேரத்திற்கு வந்து சேர்ந்தான் வெற்றிவேல். ''அப்புறம்? எங்கே போகலாம்?'' என்று கேட்டான்.

''நீங்க எங்கே சொல்றீங்களோ அங்கே போகலாம்'' என்றாள் அவள்.

'குழந்தையை வைத்துக் கொண்டு சினிமாவுக்கும் போக முடியாது. சினிமா மூன்று மணி நேரம் அமர்ந்து பார்க்கிற வகையில் குழந்தையை வைத்துக் கொண்டு பார்க்க சௌகரியப்படாது.பார்க்குக்குப் போகலாமா, அங்கே போகலாமா? இங்கே போகலாமா?' என்று பலதும் யோசித்து விட்டு சாருசித்ரா சொன்னாள்.

''பேசாம அந்த மாலுக்குப் போயிட்டு வரலாம்!'' என்றாள்.

''மாலுக்கா?'' என்று அவன் யோசித்தான்.

''ஆமாங்க. மாலுன்னா க்ளோஸ்ட் குவாட்டர்ஸ்ல இருக்கலாம். இவனுக்கும் வேடிக்கை பார்க்கறதுக்கு நிறைய இருக்கும். ரொம்ப நேரம் குழந்தையை வெளியே வச்சுட்டு இருக்கறது அட்வைஸபிள் இல்லை. அதனால சும்மா ஒரு இரண்டு மணி நேரம் அங்க ஃபிரீயா போயிட்டு வரலாங்க?'' என்றாள்.

''ஷாப்பிங் கீப்பிங்னு எதுவும் செலவு வச்சுடுவியோ?'' என்றான்.

''ஏன் அப்படி வச்சா வாங்கித் தரமாட்டீங்களா?'' என்றாள் அவள் செல்லம் கொஞ்சுவது போல்.

அவன் வியப்பாக அவளைப் பார்த்து விட்டு ''வைர நெக்லஸ் வேண்டாம்னே? வேற என்ன கேட்பே?'' என்றான்.

''வாங்களேன். அங்கே வந்ததுக்கு அப்புறம் கேட்பேன். அப்பத் தருவீங்களாம்!'' என்றாள்.

அவன் சிரித்துக் கொண்டான்!

அந்தப் பெரிய மாலில் இந்தக் கடைசிக்கும் முதல் மாடிக்கும் கீழ் மாடிக்குமாக சுற்றி வந்தார்கள். விஷ்ணுவுக்கும் அங்கே வேடிக்கை பார்ப்பதற்கு நிறைய இருந்தது.

வேண்டுமென்றேதான் சாருசித்ரா அந்த மாலுக்கு அழைத்துக் கொண்டு வந்தாள். முதன் முதலில் அவனை அங்கே வைத்துத்தானே பார்த்தோம் என்பது அவளுக்கு ஒரு எண்ணம். இன்னொன்று எப்படியாவது பேச்சு வாக்கில் சோமநாதன், கண்ணன் இருவருடைய தாயை அங்கே வைத்து சந்தித்தோம் என்பதை சொல்லுவானா? சொன்னால் அதை வைத்துக் கொண்டு பேசலாமே என்ற எதிர்பார்ப்பு இன்னொரு காரணம்.

எதிர்பார்த்தாற்போலவே அவன் அவளிடம் ''அடிக்கடி இந்த மாலுக்கெல்லாம் வருவியா?'' என்று கேட்டான்.

அவள் ''மொதல்ல வருவேன். ஃப்ரெண்டஸோட வந்திருக்கேன். ரெண்டு மூணு தடவை அப்புறம் காலேஜ் படிப்புக்காக சென்னை போனதுக்கப்புறம் வரலை!'' என்றாள்.

''நீங்க?'' என்றாள்.

''நானும் வந்து நாலு வருஷம் இருக்கும்!'' என்றான்.

அவள் ஆச்சரியமாக அவனைப் பார்த்தாள். ''நாலு வருஷமா? உள்ளூர்ல இருந்துட்டு இந்த மாலுக்கு வர்றது இல்லையா? இங்கே நிறைய பிசினஸ் மீட்டிங்கெல்லாம் நடக்குமே அந்த பெரிய ஸ்டார் ஹோட்டல் வச்சு பிசினஸ்



பர்சன்ஸ் எல்லாம் மீட் பண்ணுவாங்களே?'' என்று கேட்டாள்.

''கோயம்புத்தூர்ல மால்ல அந்த மாதிரி பிசினஸ் மீட்டிங் நடக்கற மாதிரி இடமெல்லாம் இல்லை. அதுக்கு கிளப்ஸ் இருக்கு. அங்கே போயிடுவோம். இல்லைன்னா நம்ம கெஸ்ட் ஹவுஸ் இருக்கு. அங்க வச்சுப் பேசிப்பேன். இந்த மாலுக்கு நான் பர்டிகுலரா வர்றது இல்லை'' என்றான்.

''ஏன்?'' என்று அவள் கேட்டாள்.

அவன் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு சொன்னான். ''சோமுதான் எல்லாக் கதையும் உனக்கு சொன்னானாமே.''

''ஒஹோ! எங்கிட்டே சொல்லிட்டு அதை உங்ககிட்டேயும் சொல்லிட்டாரா அவரு?!'' என்று கேட்டாள்.

''ஆமா! அவனுக்கு எதையுமே மனசுல வச்சுக்கத் தெரியாது. போட்டு உளறிடுவான்!'' என்றான்.

அவள் அவனை 'ஒரு விதமாக பார்த்துக் கொண்டே ''அது ரொம்ப நல்ல குணம் தெரியுமா? மனசுல போட்டு அழுத்திட்டு தானும் கஷ்டப்படறது, மத்தவங்களையும் கஷ்டப்படுத்தறதுன்னு சில பேர் இருக்காங்க. அதுக்கு இது பரவாயில்லை''

அவன் ஓரக் கண்ணால் தன்னைத் தான் தாக்குகிறாளோ என்பது போல அவளைப் பார்த்தான்.

அவள் ஒன்றுமே தெரியாதவள் போல முகபாவத்தை வைத்துக் கொண்டாள்.

தோளைக் குலுக்கி விட்டு மேலே தொடர்ந்தான். ''இங்கே வச்சுத் தான் அவங்க அம்மாவைப் பார்த்தோம்!'' என்றான்.

"சோமு சொன்னாப்ல!" என்றாள் அவள்.

திடீரென்று நினைவு வந்தவன் போல "ஏன் சாரு, நம்ம கல்யாணத்துக்கு முன்னாடி எங்காவது சந்திச்சிருக்கோமா?" என்றான்.

அவள் திரும்பி அவனை வியப்பாகப் பார்த்தாள். "ஏன் அப்படி கேட்கறீங்க?" என்றாள்.

"இல்லை சாரு, உன் முகம் எனக்கு ரொம்ப பரிச்சயமான முகமாக இருந்தது. பொண்ணு பார்க்க வந்தப்பவே எனக்கு அப்படித்தான் இருந்தது. உன்னை எங்கேயோ பார்த்திருக்கேன் சாரு!" என்றான்.

"இங்கேதான் பாத்தீங்க" என்றாள்.

அவன் திகைத்துப் போய் அவளைப் பார்த்தான்.

அப்போது தான் அவள் அதைச் சொன்னாள். "ஆமா, இந்த மால்லதான் வச்சுப் பார்த்தீங்களே!" என்றாள்.

அவன் திடுக்கிட்டுப் போனவன் போல நின்றான்.

"ஏய், என்ன சொல்றே?" என்றான்.

"ஆமாங்க. உங்க மேல வந்து நான் மோதிட்டேன். நாங்க ஃப்ரெண்ட்ஸ் மூணு நாலு பேர் வந்திருந்தோம். செயற்கை மாலை ஒண்ணு வாங்கிட்டு வந்திட்டிருந்தேன். ஆர்ட்டிபிசியல் செட். தெரியாம உங்க மேல மோதிட்டேன். நீங்க அதுக்கு என்னமோ ரொம்ப டெரரகேட்ரியா ஒரு வார்த்தை சொன்னீங்க"

அவன் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டு "என்ன சொன்னேன்?" என்றான்.

அவள் சொன்னாள் "அப்படிச் சொன்னேனா?" என்றான்.



"ஆமாங்க. அது மட்டும் இல்லை. திரும்பக் கார்ல ஏறும் பொழுது என்னை ஒரு விதமா வெறுப்பா பார்த்துட்டுப் போனீங்க. அப்ப உங்களுக்கு ஒரு நினைப்பு நான் என்னமோ வேணும்னே இந்த சினிமாவுலயெல்லாம் நடக்கிற மாதிரி உங்க மேல வந்து மோதுகிற மாதிரி நினைப்பு!" என்றாள்.

"சரி, இங்க உட்காரலாம் வா!" என்று ஒரு ஹோட்டலுக்குள்ளே அழைத்துக் கொண்டு போனான்.

அந்த மாலில் இருந்த ஹோட்டலில் தனியாகப் பேசுகிறவர்களுக்கேன்று வசதியாக டிம் லைட்டுடன் காபின்கள் இருந்தது. ஒரு பக்கமாக அமர்ந்தார்கள்.

"சாரு, நிஜமா நீ சொல்றது?" என்றான்.

"ஆமா!" என்றாள்.

"அதான் உன் முகம் எனக்கு பரிச்சயமான மாதிரியே இருந்தது. அதனாலதான் கல்யாணத்துக்கே நான் சரின்னு சொன்னேன். எப்படிச் சொன்னேன்னு அப்புறமா நான் யோசிச்சு யோசிச்சுப் பார்த்தேன். உன் முகம் ரொம்பத் தெரிஞ்ச முகம் மாதிரி இருந்தது" என்றான்.

"ஆனா எனக்கு ஞாபகம் வந்தது!" என்றாள்.

"சாரு?!" என்றான்.

"ஆமா, அந்த சமயத்துல நீங்க சொன்ன வார்த்தைகளுக்காக நான் உட்கார்ந்து அழு அழுன்னு அழுதேன்!" என்றாள்.

"ஓஹோ! ஐ ஆம் சாரி!" என்றான் அவன்.

"பரவாயில்லை, பரவாயில்லை. அப்ப எனக்கு பக்குவம் இல்லாத வயசு. என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் கூட கேலி செஞ்சுட்டு இருந்தாங்க"

அவன் சுவாரசியமாக அவளை பார்த்தான். ''ஆமாங்க!'' என்றவள் சட்டென்று முகம் சிவக்க ''அதுக்கப்புறம் எம்பிஏ வுக்காக சென்னை போனேன். நிறைய பேர் வெளி மனிதர்கள் கூட பழகினேன்'' என்றாள்.

''என்னது?!'' என்றான் அவன்.

''ஹலோ! நீங்க நினைக்கற மாதிரி இல்லை. கிளாஸ்மேட்ஸ்ங்கற முறையில பழகினேன். பெரிய பெரிய பிசினஸ் பீப்பிள் எல்லாம் வந்து செமினார் எடுத்தாங்க, சந்திச்சேன். ஆனாலும் உங்க முகம் மட்டும் நினைப்புல இருந்துட்டே இருந்தது!'' என்றாள்.

அவன் முகத்தில் மலர்ச்சி பொங்கியது. சிரிப்பு தோன்றியது.

'ரியலி?'' என்றான்.

''ஆமாங்க. அடிக்கடி ஞாபகத்துக்கு வரும். ஏன் அந்த முகம் எனக்கு ஞாபகத்துக்கு வருது அப்படின்னு கூட நான் நினைச்சுப்பேன். ஆனா அந்த முகமே வந்து...! அந்த முகமே வந்து...!'' என்று இழுத்தாள்.

''வந்து...?'' என்றான் அவன்.

''அந்த முகமே வந்து என்னை பொண்ணு பார்க்கறேன்னு வந்து நின்னப்பதான் எனக்கே விஷயம் புரிஞ்சது!''

''சாரு!'' என்றான் அவன்.

அவள் சட்டென்று தன்னை சுதாரித்துக் கொண்டு அவனைப் பார்த்தாள்.

''என்ன விஷயம்?'' என்றான் அவன் ஆழமான குரலில்.

''என்ன விஷயம் புரிந்தது,? விதி வலியதுன்னு புரிஞ்சது. அப்ப என்ன வச்சு திட்டினீங்க இல்லையா அது என் மனசுல



இருந்திட்டிருக்கு. அதனாலதான் உங்க முகம் என் மனசுல ஞாபகம் இருந்திருக்கு!'' என்றாள்.

அவனுக்கு பொசுக்கென்று போன மாதிரி ஆகி விட்டது. ''உண்மையாச் சொல்றியா?'' என்றான்.

'நான் உண்மையைச் சொல்லலைங்க நான் உங்களை நேசித்துத்தான் கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டேன் அப்படின்னு சொன்னா. இந்தப் பாயிண்ட்ல அது உங்களுக்கு கேவலமா இருந்தாலும் இருக்கும். மதிப்பீங்களோ என்னவோ தெரியலை' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டு 'உண்மையைத்தான் சொல்றேன்!' என்றாள்.

அவன் சற்று நேரம் அமைதியாக இருந்தான்.

அதற்குள்ளாக குழந்தை இங்கும் அங்கும் வேடிக்கை பார்த்துக் கொண்டு அவனிடம் தாவினான்.

குழந்தையை வாங்கிக் கொண்டான். பிறகு மெல்லிய குரலில் ''சாரு, நான் நினைக்கிறேன் அன்னிக்குப் பார்த்ததில் இருந்து நான் உன்னை மறக்கவே இல்லைன்னு நினைக்கிறேன்!'' என்றான்.

அவள் வியப்பாக அவனைப் பார்த்தாள். பிறகு அவளும் தன்னை மறந்தவளாக ''நானும் அப்படித்தான்னு நினைக்கிறேன்!'' என்றாள்.

''ஆமா, சாரு, உன் முகம் அடிக்கடி ஞாபகத்துல வரும் தெரியுமா?நீ அதிர்ச்சி அடைந்து போய் பார்த்துட்டு நின்னியே? எதுக்குடா இந்த ஆள் நம்மளை திட்டறாங்கற மாதிரி? அதுக்கப்புறம் நிறைய தடவை நினைச்சிருக்கேன் எங்கேயோ போற கோபத்தை எடுத்து அந்தப் பொண்ணு மேல காமிச்சிட்டோம் அப்படின்னு''

"ஓ! ஏன் கோபமா இருந்தீங்க?" என்றாள்.

"அப்பத்தான் அந்தக் காஞ்சனமாலா அம்மா இந்த ரெண்டு பயலுகளையும் பார்த்தும் பார்க்காத மாதிரி காரில் போய் ஏறினார்கள். அந்தக் கோபம் பொங்கிட்டு வந்தது. அதெல்லாம் சேத்து உன்மேல காமிச்சிட்டேன் போல இருக்கு!" என்றான்.

"ஓஹோ!" என்றாள் அவள்.

"அது சரி. ஏன் உன் முகத்தை என்னால மறக்கவே முடியலை. ஏன் நான் நினைச்சிட்டே இருந்தேன்?" என்றான்.

அவள் மௌனம் காத்தாள். மறுபடியும்

"ஏன் சாரு, உனக்கு புரியுதா," என்றான்.

"எனக்குத் தெரியலை. நீங்கதான் அதை திங்க் பண்ணி சொல்லணும்" என்றாள் அவள்.

"நீயேன் மறக்காம வச்சிட்டிருந்தே. அதைச் சொல்லு?" என்றான் அவன்.

"நீங்க ஏன் மறக்காம வச்சுட்டிருந்தீங்க? அதைச் சொல்லுங்க!" என்றாள் அவள்.

அவன் வாய் விட்டு சிரித்தான். "சரியான ஆள் நீ!" என்றான்.

"பின்னே சரியான ஆளா இல்லைன்னா உங்ககிட்ட குப்பை கொட்ட முடியுமா?" என்றாள்.

"நீ கொட்டின குப்பை பாரு. எவ்வளவு அழகா இருக்குன்னு. பிடுங்கி எடுக்கறான் பாரு. டேய் ஒரு இடத்தில உட்காரு!" என்று குழந்தையை செல்லமாக மிரட்டினான்.



உங்க மிரட்டலுக்கெல்லாம் அவன் பயப்படமாட்டான் என்று சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே குழந்தை அவன் வயிற்றிலே காலை வைத்து மடமடவென்று ஏறினான்.

"குறும்புக்கார பயலே!" என்று இழுத்துக் கீழே இறக்கி அவனை அணைத்துக் கொண்டு முகத்தோடு முகம் வைத்து அழுந்த ஒரு முத்தம் கொடுத்தான்.

அவன் அப்படி செய்வதை அவள் ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் சுற்றும் முற்றும் பார்த்தான். பக்கத்தில் இரண்டு டேபிள்களும் காலியாக இருந்தன.

"டேய் பயலே! அம்மாவுக்கும் இப்படி வேணுமான்னு கேளு. அவளும் என்னை மறக்காம இருந்தாளாமே!" என்றான்.

அவள் முகம் சிவக்க "என்ன பேசறீங்க ஹோட்டல்ல வச்சு?" என்றாள்.

"பக்கத்துல யாரும் இல்லையே? சரி அப்ப வீட்ல வச்சுப் பேசலாமான்னு கேளுடா?!" என்றான்.

"காஃபி வருது. குடிச்சுட்டு ஒழுங்கா எழுந்து நடக்கணும்!" என்றாள் அவள்.

"தேவியார் எப்படிச் சொல்றீங்களோ அப்படி!" என்று... கலாட்டாவாகச் சிரித்தான் வெற்றிவேல்.

"வாக்குறுதி கொடுத்திருக்கீங்க!" என்றாள் அவள்.

"வாக்குறுதியில் என்ன கொடுத்திருக்கோம். நல்லா யோசிச்சுப் பாரு. உனக்கே புரியும்!" என்றான்.

அவள் யோசித்துப் பார்த்தாள்.

வாக்குறுதி முழுமையாக நினைவுக்கு வரவும் முகம் சிவக்க வெட்கத்துடன் பார்த்தாள்.

இனிமேல் எல்லாம் சரியாகி விடும் என்று அவள் மகிழ்ச்சியானாள்.

அடுத்த நாள் ஒரு பேரிடி காத்திருக்கிறது என்பது அவளுக்கு அப்போது புரியவில்லை.

## அத்தியாயம் - 23

குழந்தையைத் தொட்டிலில் உறங்கச் செய்து விட்டு அவள் வழக்கம் போல இரவுக் குளியலைப் போடப் போனாள். குளித்து விட்டு நைட்டியோடு அவள் வெளியே வரும்போது அவள் கணவன் அவர்கள் படுக்கையறையிலே இருந்த சோஃபாவிலே அமர்ந்து கொண்டிருந்தான்.

வழக்கமாக இந்த நேரத்துக்கு முன்னறைக்கு சென்று விடுவான். அங்கே வைத்து ஏதாவது ஃபைலைப் புரட்டிக் கொண்டிருப்பான். ஆனால் இன்றைக்கு ஏனோ எல்லா ஃபைலையும் எடுத்து ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி ஒரு கயிறை எடுத்து கட்டி வைத்து விட்டு வேறு எதற்கோ ஆயத்தமாக இருப்பது போல் அமர்ந்தான்.

சாரு சித்ராவுக்கும் அன்றைக்கு மனம் ஒரு நிலையில் இருக்க வில்லை. ஹோட்டலில் வைத்து அவன் சிரித்த சிரிப்பும் பார்த்த பார்வையும் அவளையும் தான் படுத்திக் கொண்டிருந்தது. இன்றைக்கு ஏதோ நடக்கப் போகிறது என்பது அவளுக்கு தெரிந்திருந்தது.

அதற்கு ஏற்ப அவனும் அங்கேயே அமர்ந்து கொண்டிருக்கவும் அவள் என்ன செய்வதென்று தெரியாமல் படுக்கையில் அமர்ந்தாள்.



''என்ன ஆச்சு உங்களுக்கு இன்னைக்கு? ஃபைல் பார்க்கிற வேலை இல்லையா'' என்று கேட்டாள்.

''பார்க்கற வேலை இருக்கு. ஆனா அது ஃபைல் இல்லை. திருப்பிப் போடு. லைஃப்'' என்றான் அவன்.

அவள் ''வெற்றி'' என்றாள் குழைந்து போன ஒரு குரலில்.

''இல்லை சாரு. இன்னிக்கு உன் பர்த்டே. எனக்கு கிஃப்ட் எதுவும் இல்லையா?'' என்றான். ''என் பர்த் டேவுக்கு நீங்கதானே கிஃப்ட் கொடுக்கணும்?'' என்றாள் அவள்.

''நான் உனக்கு பெரிய கிஃப்ட் கொடுத்திருக்கேன்'' என்றான் அவன்.

''வைர நெக்லஸா...ஐ கேர் எ டேம்'' என்றாள் அவள்.

''அது எனக்குப் புரிஞ்சது. நீ வைரத்தை மதிக்க மாட்டேன்னு தெரிஞ்சிருச்சு காலையிலேயே. ஆனா வேற ஒண்ணு சொன்னேன். நினைவு இருக்கா?'' என்றான்.

''என்ன?'' என்பது போல அவள் அவனைப் பார்க்க ''அந்த மால்ல உன்னைப் பார்த்த நாள்ல இருந்து இன்ன வரைக்கும் நான் உன்னை மறக்கலைன்னு சொன்னேனே?'' என்றான்.

அவள் சற்றே வெறுமையாக அவனைப் பார்த்தாள். ''அது மட்டும்தானே சொன்னீங்க?'' என்று.

''வேற என்ன சொல்லணும்?'' என்றான்.

''அதை நான் சொல்லணுமாக்கும்?'' என்றாள் அவள்.

அவன் தன் முழு உயரத்துக்குமாக எழுந்து நின்று அவள் முன்பாக நெருங்கி நின்றான். ''இத பாரு, சாரு. எனக்கு இந்தக் காதல்லே எல்லாம் நம்பிக்கை இல்லை. உன்னுடைய

நினைவு எனக்கு இருந்தது. ஆனா அதுக்குப் பெயர் காதல் தானான்னு தெரியாது. ஆன்ா ஐ வாஸ் திங்கிங் அபவுட் யூ. இப்போ ஐ ஆம் அட்ராக்டட் டு யு. மேற்கொண்டு நீ முடிவு செஞ்சுக்கோ'' என்றான்..

அவன் அருகாமையை அவளால் தடுக்க முடியவில்லை. வேண்டும் என்றே அவன் சீண்டுகிறான் என்பது அவளுக்குப் புரிந்தது. ஆனால் அதைக் காட்டிலும் அதிர்ச்சியான விஷயம் என்னவென்றால் அவனுடைய அந்த சீண்டல் அவளுக்குப் பிடித்திருந்தது என்பதுதான்.

இந்த கணத்தில் அவன் லேசாகத் தொட்டாலும் கூட தான் குழைந்து போய் விடுவோம் என்பது அவளுக்குப் புரிந்திருந்தது.

அவள் மெல்லக் கட்டில் விளிம்பை நீவியபடி சொன்னாள் ''இது வெறும் அட்ராக்ஷன்கறீங்களா?'' என்றாள்.

''இப்போதைக்கு அப்படியே வச்சுப்போமே. நீ யாரு என் வைஃப். தாலி கட்டின மனைவி. நான் யாரு?'' என்றவுடன் அவள் களுக்கென்று சிரித்து விட்டுத் ''தாலி கட்டின கணவன்'' என்றாள். அவனும் சிரித்தான்.

அடித்தொண்டையில் இருந்து வந்த சிரிப்பு. இதுநாள் வரை சிரித்த சிரிப்பில் இருந்து வேறு விதமாக இருந்தது. மெல்ல வலக் கையால் அவள் தோளைப் பிடித்து தூக்கினான். அவளும் எழுந்து நின்றாள்.

''ஓகே! இது அட்ராக்ஷனாவே வச்சுப்போம் அதுக்கு எதிரா ஏன் நாம போராடணும்? முறையாக் கல்யாணம் பண்ணிட்டவங்க எல்லாரையும் போல இல்லற லைஃப் நடத்தறதுல என்ன கஷ்டம்?'' என்றாள்.



அவள் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள்.

''சாரு, நீ வேற என்னமோ எதிர்பார்க்கிறே! அது எனக்குப் புரியுது. மே பி காதலோ?'' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. ''நான் உண்மையா இருக்கட்டுமா? இல்லை பொய் சொல்லி உன்னை திருப்திப் படுத்தட்டுமா?'' என்றான்.

அவனுடைய இந்தக் கேள்வி நேர்மையாக இருக்கவே ''உண்மையே சொல்லுங்க!'' என்றாள்.

''இதோ பார் சாரு! இப்போதைக்கு நீ எனக்கு வேணும். உன் கூட இருக்கறதுக்கு நான் பிரியப் படறேன். இந்தப் பையன் எனக்கு வேணும். உங்க ரெண்டு பேரோட அருகாமையும் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. இந்த உறவும் கூட. இவ்வளவு தான் நான் இப்ப சொல்ல முடியும். அதுக்கு மேல எங்கிட்ட எதிர்பார்த்தேன்னா? எனக்குத் தெரியலை! இதுக்குப் பேர் காதலா இல்லையான்னு தெரியலை'' என்றான்.

ஆனால் அவள் சட்டென்று அவன் மார்பில் சாய்ந்து விட்டாள். ''ஆனால் நான்... நான்....!'' என்றாள்.

கண்கள் கலங்கின உதடுகள் துடித்தன. ''நீ?'' என்றான் அவன் ஆசையாக...

ஒ'ரு விரலால் அவள் முகவாய்க்கட்டையைத் தொட்டு நிமிர்த்தினான்.

''நீ?'' என்று இழுக்க ''ஒன்றும் இல்லை'' என்று சொல்லிவிட்டாள்.

''சரி விடு, இப்போதைக்கு நாம இப்படியே புரொசீட் பண்ணக் கூடாதா?'' என்று கேட்டான்.

உணர்வுப்பூர்வமாக கேட்கப்பட்ட அந்தக் கேள்வி அவளுடைய இளமையின் கதவுகளை திறந்து விட்டது.

அவளும் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

ஒன்றுமே இல்லாமல் விலகி விலகி ஒருவருக்கொருவர் முறைத்து முறைத்துப் பார்த்திருப்பதை விட இது எவ்வளவோ மேல் என்று தோன்றியது.

''ம்!'' என்றாள் அவன் மார்பில் சாய்ந்து கொண்டவாறு.

மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

அவன் சற்று நேரம் அவள் தலையைக் கோதிக் கொண்டிருந்தான்.

கைகள் மெதுவாக முதுகுப் பக்கம் இறங்கி தடவிக் கொடுத்தது. அதற்குப் பிறகு அவர்கள் இரண்டு பேருமே உலகம் மறந்து போனார்கள்.

* * *

கணவன் அலுவலகம் போனதற்குப் பிறகும் அதையே நினைத்துக் கொண்டிருந்தாள் சாரு சித்ரா. ஒரு விதத்தில் தன்னைத் தானே கேவலப்படுத்திக் கொண்டோமோ என்று தோன்றியது.

''இல்லையே! கணவன் நேர்மையாகத்தானே பேசுகிறான். அவன் நினைத்திருந்தால் பொய்யான வாக்குறுதிகளை அள்ளி விட்டுக் காரியத்தை சாதித்துக் கொண்டிருக்கலாமே. இப்போதைக்கு இதுதான். இதைத்தான் நான் எதிர் பார்க்கிறேன்'' என்று வெளிப்படையாக சொல்லுகிறானே! அதிலும் உரிமைக்காரக் கணவன்! எப்படிக் குறை சொல்ல முடியும். அவனுக்கு அவள் எதையுமே இல்லை என்று மறுக்க முடியாதே. சட்டப்படியும் மறுக்க முடியாது.



அவள் மனமும் உடலும் அவன் தொடுகைக்காக ஏங்கிப் போய் குழைந்து போனதே. அதனால் அவன் வலுக் கட்டாயமாக நடந்து கொண்டான் என்று சொல்ல முடியாதே? என்று அவள் எதை எதையோ நினைத்துக் கொண்டு மறுகிப் போனாள்.

முடிவாக அவளுக்கு ஒரு விஷயம் புரிந்தது. தான் அவனைக் காதலிக்கிறோம் என்பதை சொல்லுவதற்குத் தனக்கு துணிவு வரவில்லை. ஏனென்றால் அவன் நான் உன்னை மனைவியாக ஏற்றுக் கொண்டிருக்கிறேன். ஆனால் காதலிக்கிறேனா என்பது தெரியாது என்கிறான். அடிப்படையில் பெண்களை வெறுக்கிறவனாக இருக் கிறான். அவன் ஏதோ உன்னை மனைவியாக ஏற்றுக் கொண்டேன் என்று சொல்லுவதை பெரிய விஷயமாகத் தான் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இப்போது தான் இயல்பாகப் பேச ஆரம்பித்திருக்கிறான்.

அதிலும் இந்தக் குழந்தையின் சிரித்த முகத்தையும் குறும்புத்தனத்தையும் பார்த்துக் குழைந்து போய் இளகியிருக்கிறான். இந்த நேரத்தில் ''நீ காதலிக்கிறேன் என்று சொல்லு. நீ இப்படித்தான் நடத்த வேண்டும். அப்படித்தான் நடத்த வேண்டும்'' என்று சொன்னால் அது சரியாகாது.

அவள் காத்திருக்கத்தான் வேண்டும்!

ஏதோ ஒரு கட்டத்தில் அவன் மனம் மலரும்!

அப்படி மலருகின்ற பொழுது அவளுடைய எல்லையற்ற அன்பை அவன் உணர்ந்து கொள்ளுவான். ஒரு வெறுப்பிலும் வேதனையிலும் அடிபட்டுக் கிடக்கிற ஒரு

மனது, காயப்பட்டுக் கிடக்கிற ஒரு மனதை மெல்ல மெல்ல குணப்படுத்த வேண்டும்.

மயிலிறகு கொண்டு புண்ணுக்கு மருந்து போடுவது போல அவன் மனதில் ஏற்பட்டிருக்கிற புண்ணுக்கு மெது மெதுவாகத்தான் தன்னுடைய அன்பால் தன்னுடைய நடத்தையால் மருந்து போட வேண்டும் என்று யோசித்து முடிவு செய்தாள்.

இனிமேல் அவன் எது கேட்டாலும் மறுக்காமல் கொடுக்க வேண்டும். இவள் நம்பிக்கைக்குரியவள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். எதற்கானாலும் அலுவலகம் பொறுத்த விஷயங்களில் ''ஏன் சாரு, இப்படிச் செய்யலாமா?'' என்று கேட்டுக் கொண்டு வருகிறவன்.. வாழ்க்கையிலும் விஷயங்களை முடிவெடுக்கும் பொழுது அப்படிக் கேட்கிற ஒரு சூழ்நிலையை வெளிப்படையாக உருவாக்க வேண்டும்.இத்தனை அன்பும் அவனுடைய சொத்துக்காக அல்ல என்பதையும் அவனுக்குப் புரிய வைக்க வேண்டும் என்று தோன்றியது.

அதற்குப் பிறகு அவளுடைய மனம் தெளிவாகியது. ''ஆமா வெற்றி, நீங்க எப்படி இருந்தாலும் சரி நான் அன்பைக் கொடுத்துகிட்டேதான் இருப்பேன். என்னுடைய நேசத்தைக் கொடுத்துட்டே இருப்பேன். நீங்க என்ன கேட்டாலும் கொடுத்துட்டே தான் இருப்பேன். ஒரு நாள் இல்லாட்டி ஒரு நாள் நீங்க கண்டிப்பா என்னோட நேசத்தோட வீரியம் என்னன்னு புரிஞ்சுப்பீங்க. அதுல கண்டிப்பா ஜெயிச்சே தீருவேன்!'' என்று சொல்லிக் கொண்டாள்.

அந்த நேரம் மாலை நேரம் நாலரை மணி இருக்கும்.



குழந்தை தூங்கிக் கொண்டிருந்தவன் விழித்துக் கொண்டு எழுந்தான். அவள் ஆசையோடு போய் குழந்தையை எடுத்துக் கொண்டு முத்தமிட்டாள். அப்பாவைப் போலவே மூக்கு, அப்பாவைப் போல குறும்பு என்று சொல்லிக் கொண்டு இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி முத்த மிட்டாள். அதே நேரத்தில் செல்ஃபோன் ஒலித்தது. எடுத்து காதுக்குக் கொடுத்தாள்.

''சாரு, நான் வெற்றி பேசறேன்!'' என்றான்.

''ம் சொல்லுங்க!'' என்றாள்.

''சாரு, உண்மையா சொல்லட்டுமா?'' என்றான்.

''உண்மையைத் தவிர வேறு எதுவும் சொல்லியிருக்கீங்களோ?'' என்றாள் இவள்.

''உன்கிட்டேபேசி ஜெயிக்க முடியுமா? நான் சொல்றதை வாங்கிக்கோ!'' என்றான்.

அவள் ''ம், சொல்லுங்க!'' என்றாள்.

''சாரு, நிஜமாவே இன்னிக்கு காலையில இருந்து வேலையே ஓடலை சாரு. உன் நினைப்பாவே இருக்கு. நேத்து நீ...!'' என்று அவன் ஆரம்பிக்க.

''ஹலோ, ஆஃபீஸ்ல இருந்து இதெல்லாம் பேசாதிங்க!'' என்றாள் அவள்.

அவன் ஒரு விதமாக சிரித்தான்.

''இனிமேத் தாங்காது. அஞ்சு மணிக்குக் கிளம்பி நான் வரேன் அம்மணி! முழுசா என்னை கவனிக்க தயராயிருக்கணும்'' என்றான்.

''அஞ்சு மணிக்கா? ஹலோ! அம்ச்சி, அப்ச்சி, சோமு, கண்ணன், இத்தனை பேரும் அப்பத்தான் ஹால்ல குழுமியிருப்பாங்க தெரியுமா?''

''குழுமியிருந்தா என்ன? ஆளுக்கு ஒரு வேலை கொடுத்து அனுப்பிடுவோம்!'' என்றான்.

அவள் சிரித்தாள்.

''ஐயோ போதுமே! நேத்துத்தான் கல்யாணம் ஆகியிருக்கு'' என்றாள்.

''ஆமா, கல்யாணம் ஆகி நாம தேனிலவு கீனிலவு எங்காவது போனோமா என்ன? எங்கேயும் போகலை. ஏதோ அதெல்லாம் அப்படியே நடந்தது. ஆனா இப்பத்தான் மூட் வேற எப்படியோ போற மாதிரி தெரியுது?'' என்றான்.

''இருங்க. ஒரு நிமிஷம். ஒரு பெரியவர் இருக்காரு. நீங்க செய்யறதெல்லாம் சரியான்னு அவருகிட்ட கேட்டர்றேன்''

''யாரு?'' என்றான் அவன் ஆச்சரியமாக.

''அதான் மகா கனம் பொருந்திய கலைச்செல்வன் இருக்காரில்லே. அவருகிட்ட கேட்டுருவோம்'' என்றாள்.

''அவரு என்ன புள்ளே சொல்றது? யாருமே இந்த என்னுடைய சாம்ராஜ்யத்துக்குள்ள நுழைய முடியாது. அவரு மட்டும் இல்லை அம்ச்சி, சோமு, கண்ணன் யாரும் நுழைய முடியாது'' என்றான்.

அவள் கலகலவென்று சிரித்தாள்.

''வரேன் அம்மணி. அஞ்சு மணிக்கு வந்திடறேன்.'' என்று கலகலவென்று சிரித்துக் கொண்டே ஃபோனை வைத்தான்.

ஐந்து மணிக்கு வருவான் என்று காத்துக் கொண்டிருந்தாள் அவள். அவன் வந்தான் சாதாரணமாக வரவில்லை.

ஒரு பேரிடியும் சுமந்து கொண்டு வந்து சேர்ந்தான்.



## அத்தியாயம் - 24

''அஞ்சு மணிக்கே வருகிறேன் என்று சொன்னாரே வரக்காணோமே?'' என்று நிலைகொள்ளாமல் எதிர்பார்ப்புடன் காத்துக் கொண்டிருந்தாள் சாரு சித்ரா.

மணி ஐந்து ஆகியது. ஐந்தரை ஆகியது. ஏன் ஆறரை ஆகி விட்டது.

அப்பொழுது செல்ஃபோன் ஒலித்தது. கணவன் தான் அழைக்கிறான் என்று ஆவலோடு போய் செல்போனை எடுத்தாள். ஆனால் அந்தப் பக்கம் இருந்து சோமநாதன் அழைத்தான்.

''சோமு! என்ன இந்த நேரத்துல?'' என்று நினைத்துக் கொண்டு செல்ஃபோனை காதுக்குக் கொடுத்தாள்.

அவன் பேச்சின் ஆரம்பமே திகில் கதையைப் போல இருந்தது.

''அண்ணி, நான் சொல்லப் போறதை கேட்டு ஷாக் ஆயிடாதீங்க!'' என்று ஆரம்பித்தான்.

''என்ன சோமு?'' என்றாள் அவள் நெஞ்சில் கலவரம் ஏற.

''அண்ணனுக்கு அடிபட்டுடுச்சு!'' என்றான் அவன்.

''ஐய்யோ, என்ன சொல்றே?'' என்று இவள் தன்னை மறந்து கதறிவிட்டாள்.

''அண்ணி, அண்ணி, பயப்படறதுக்கு ஒண்ணும் இல்லை. நாங்க போய் டாக்டரை பார்த்தாச்சு. இப்ப வீட்டுக்குப் பக்கத்துல வந்துட்டிருக்கோம். அண்ணா உள்ள வரப் போறாங்க. பார்த்துட்டு நீங்க ஷாக் ஆயிடக் கூடாதுன்னு தான் உங்களை எச்சரிக்கை பண்றேன்'' என்றான்.

"என்ன ஆச்சு?" என்றாள் கலக்கத்துடன்.

"ஒன்னும் இல்லை"

"ஏதோ நினைப்புல வண்டி ஓட்டிட்டு வந்திருக்காங்க. அதுவும் டு விலர்ல வந்திருக்காங்க. அது....குறுக்கே ஒரு ஸ்கூல் பொண்ணு சைக்கிளை ஓட்டிட்டு வந்து விட்டுடுச்சு போல! சடனா வரவும் அவருக்கு என்ன பண்றதுன்னு தெரியலை. வண்டி விழுந்துடுச்சு"

"ஃப்ராக்சர் ஏதாவது?" என்றாள்.

"ஃப்ராக்சர் எதுவும் இல்லை. மொக்கை அடிதான். வலது கால்லயும் வலது கைலயும் மொக்கை அடிதான். இதோ நாங்க வந்தாச்சு. கார் விட்டுக்குள்ளே நுழைஞ்சுகிட்டு இருக்கு. நீங்க டென்ஷன் ஆகாம இருங்க" என்றான் சோமநாதன்.

அவள் பதைபதைத்துப் போய் "அம்ச்சி! அப்ச்சி!" என்று குரல் கொடுத்துக் கொண்டே அறையை விட்டு ஓடி வந்தாள்.

"என்னம்மா?" என்று வந்தார் அம்ச்சி.

"அவருக்கு.... அவருக்கு...." என்று அவள் குரல் நடுங்கியது.

"அவனுக்கு....? அவனுக்கு....? என்று அம்ச்சி அதற்கு மேல் நடுங்கினார்.

அதற்குள்ளாகவே சோமநாதன், கண்ணன் இருவரும் இரண்டு பக்கமும் பிடித்துக் கொள்ள வெற்றிவேல் காரை விட்டு இறங்கி உள்ளே வந்து கொண்டிருந்தான்.

கட்டு ஏதாவது போடப்பட்டிருக்கிறதா என்று கவனித்தாள் சாரு சித்ரா.



நல்ல வேளையாக கட்டு போடப்படவில்லை. ஆனால் அவன் ஏதோ வேதனையுடன் நடப்பது போல தெரிந்தது. காலை எட்டி வைப்பதற்குள்ளாக பல்லைக் கடித்துக் கொண்டு வைத்தான்.

இரண்டு பேருடைய தோளின் மேலும் கையைப் போட்டுக் கொண்டு வந்தான்.

"என்ன சாமி ஆச்சு? என்ன ஆச்சு? என்ற அம்ச்சி பதறினாள்.

"ஒன்னும் இல்லை. அம்ச்சி ஒரு பொண்ணு குறுக்கே வந்துடுச்சு. ஸ்கூல் பொண்ணு. நான் வண்டியை ஒடிச்சுத் திருப்பினேன். நான் இந்தப் பக்கம் மரத்துல மோதி கீழே விழுந்துட்டேன். வண்டி மேல விழுந்துடுச்சு. நல்ல வேளை காலை இழுத்துட்டேன். அப்படி இருந்தும் கொஞ்சம் கால் விக்கமா போச்சு. மொக்கை அடிதான் அம்ச்சி!" என்றான் அவன் வலியை உள்ளே விழுங்கிக் கொண்டு.

சகோதர்கள் இரண்டு பேரும் கொண்டு வந்து அவனைப் படுக்கையிலே படுக்க வைத்தார்கள். "அண்ணி பயப்படறதுக்கெல்லாம் ஒன்னும் இல்லை. ஃப்ராக்சரா இருந்தா டாக்டர் அங்கே இருந்து அனுப்பியிருக்க மாட்டாரு. இது ஒன்னும் பிரச்சினை இல்லை. மொக்கை அடி தான். ரெண்டு மூனு நாள் ரெஸ்ட் எடுக்கச் சொல்லுங்க போதும்னு சொல்லி மெடிஸின் கொடுத்திருக் காரு. பெயின் கில்லர் கொடுத்திருக்காரு. ஸ்லீப்பிங் டோஸ் கொடுத்திருக்காரு. இன்ஃபெக்ஷன் ஆகாம இருக்கறதுக்கு இன்ஜக்ஷன் போட்டாரு!" என்றான்.

இதையெல்லாம் அவள் கவனிக்கிற நிலைமையிலே இல்லை.

''என்னங்க வலிக்குதா? வலிக்குதா?'' என்று அவனுக்கு மேலாக துடித்துப் போனாள்.

அவள் முகத்தில் தெரிந்த தவிப்பையும் கலக்கத்தையும் துடிப்பையும் பார்த்து அவனே ஒரு கணம் இளகிப் போனான்.

சட்டென்று அவளைத் தன் பக்கத்திலே இழுத்து நிறுத்திக் கொண்டு ''ஏய்! ஒண்ணும் இல்லை. நான் காலேஜ்ல ஸ்டேட் ப்ளேயர். எத்தனையோ தடவை அடிபட்டிருக்கு. எனக்கு இதெல்லாம் ஒண்ணுமே இல்லை. ஐ கேன் மேனேஜ். என்ன கொஞ்சம் வலியைப் பொறுத்துக்கணும். இன்னும் பெய்ன் கில்லர் வேலை செய்ய ஆரம்பிக்கலை. கொஞ்சம் நல்லா ரெஸ்ட் எடுத்துக்கணும். அவ்வளவுதான். மூணு நாள் வேலை கெட்டுச்சு!'' என்றான் அவன்.

''என்னது வேலை கெட்டுச்சா? அதானா இப்ப முக்கியம்!'' என்று அவள் கோபித்துக் கொண்டாள்.

இதுநாள் வரை அப்படி உரிமையாக அவள் கோபித்துக் கொண்டதெல்லாம் இல்லை.

''சரி இருங்க. நான் ஏதாவது சூடா குடிக்கக் கொண்டு வரேன்!'' என்று ஓடிப் போனாள். கொண்டு வந்தாள்.

அவள் எடுத்துக் கொண்டு வரும் பொழுது சகோதரர்கள் இருவரிடமும் சொல்லிக் கொண்டிருந்தான். ''அவ பயந்து போய் கிடக்கறா. நீங்க பாட்டுக்கும் அது இதுன்னு சொல்லி வைக்காதீங்கடா!'' என்று.

''ஒண்ணும் சொல்றதுக்கு இல்லையேண்ணா. நிஜமாவே சும்மா மொக்கையடிதாண்ணே!'' என்றான்.



''இல்லடா! வலது காலும் வலது கையும் வலி பயங்கரமா இருக்கு!'' என்றான்.

சற்று நேரத்திலேயே பெய்ன் கில்லர் வேலை செய்ய ஆரம்பிக்கவும் கொஞ்சம் வலி குறையவும் மெல்ல படுத்துக் கொண்டான்.

''நல்ல வேளையாக வலது பக்கம் காலு வலது பக்கம் கைன்னு அடிபட்டுச்சுடா. இல்லாட்டி இந்த மாறு கால் மாறு கை மாதிரி அடிபட்டு இருந்ததுன்னா எந்தப் பக்கமும் படுக்க முடியாது!'' என்றபடி அவன் சிரித்தான்.

''உங்களுக்கு சிரிக்க வேற தோணுதா? அப்படி என்ன யோசனை?'' என்றாள் அவள்.

அவன் குறும்பாக அவளைப் பார்த்தான். சகோதரர்கள் இருவரும் இங்கிதம் தெரிந்து நகர்ந்தார்கள்.

அம்ச்சியும் கூட ''கண்ணு ஏதாவது சாப்பிடறதுக்குக் கொண்டு வரட்டுமா கண்ணு? இப்படியே சாய்ந்து உட்காரு!'' என்றாள்.

''இல்லை அம்ச்சி. இப்ப ஒண்ணும் சாப்பிடறதுக்கு வேண்டாம். இரண்டு பிஸ்கட் வேண்ணா சாப்பிட்டுட்டு ரெஸ்ட் எடுக்கறேன்!'' என்றான் அவன்.

அவர்களும் மெதுவாக நகர்ந்தார்கள். ''சரி சாமி, ரெஸ்ட் எடு!'' என்று.

''சரி, சோமா இந்தக் குழந்தையை எடுத்துக்கடா!'' என்றாள் அம்மாச்சி.

''ஆமாங்க. அம்ச்சி. அவனைக் கொடுங்க!'' என்று தூக்கிக் கொண்டான் சோமநாதன்.

மனைவி இது நேரம் வரை மகனைத் திரும்பிக் கூட பார்க்கவில்லை என்பதைக் கவனித்த கணவனின் முகம் கனிந்து போனது.

''ஏய்! ஒண்ணும் பயப்படறதுக்கு இல்லை. நீ ஏன் இப்படிப் போட்டு அலட்டிக்கறே?!'' என்று அவன் பேச ஆரம்பிக்கவும் அவர்கள் மெதுவாக தனிமை கொடுத்து நகர்ந்தார்கள்.

அவர்கள் நகரவும் அவள் கண்களில் கண்ணீர் வழியவும் சரியாக இருந்தது.

''ஏய்! என்ன இப்படி எம்பேரஸ் பண்றே? எதுக்கு இப்படி அழறே?'' அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு ''ரொம்ப வலிக்குதா?அப்படி என்ன நினைப்புலே...?!'' என்று தேம்பினாள்.

அந்தக் கணம் அவன் மெய் மறந்தான். ''இப்ப கை ஒண்ணும் இந்தப் பக்கம் வலிக்கலே''என்று சிரித்துக் கொண்டே மெல்ல அவளை இழுத்து தன் அருகில் அமர்த்திக் கொண்டான்.

''என்ன அப்படி நினைப்புன்னு கேட்டீல்ல. எல்லாம் உன் நினைப்புத்தான். இருப்பே கொள்ளலை எனக்கு. சீக்கிரம் பார்க்கலாம்னு ஏதோ நினைப்புல வந்துட்டேன். இல்லைன்னா எப்பவும் நூறடி தூரத்தைக் கவனிச்சுட்டே வருவேன். சட்டுன்னு அந்தப் பொண்ணு சின்ன ஒத்தையடிப் பாதையில புகுந்து வந்தா பாரு. அதுலதான் ஏமாந்துட்டேன்!'' என்றான்.

அவள் அவன் கன்னத்தைத் தடவிக் கொண்டு ''நல்ல வேளை பெரிய அடியா படலையே!'' என்றாள்.



''எப்படியும் அடிபட்டதனாலதான் நல்ல விஷயம் தெரிந்தது!'' என்றான்.

''என்ன விஷயம்?'' என்றாள் அவள்.

''என்ன விஷயம்னா...!'' என்று சொல்லி விட்டு வெளியே பார்த்து விட்டு ''உன் மனசுக்குள்ளே என்ன இருக்குதுன்னு தெரிஞ்சது!'' என்றான்.

அவள் கலவரமாக அவனைப் பார்த்து ''என்ன விளையாடற நேரமா இது?'' என்றாள்.

''இல்லை பொண்ணே. உன் மனசுக்குள்ளே என்ன இருக்குதுன்னு தெரிஞ்சது?''

''என் மனசுக்குள்ளே என்ன இருந்ததுன்னு தெரிஞ்சது?'' என்றாள்.

அவள் புரியாதவளாக அவனைப் பார்த்தாள்.

''இதெல்லாம் அப்புறம் பார்க்கலாம். இப்ப நான் கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கறேன்!'' என்றான்.

''சரி படுத்துக்கங்க!'' என்றவள் அவன் ஒரு பக்கம் சாயும் பொழுது லேசாக வலிக்கிற பகுதியில் பட்டு விட ''உஷ்!'' என்றபடி உதட்டைச் சுளித்தான்,

''வலிக்குதா? வலிக்குதா?'' என்றாள் அவள் பதறிப் போய்.

''கொஞ்சம் வலி இருக்கும். இண்ணைக்கெல்லாம் இருக்கும். நாளைக்குத் தான் கொஞ்சம் சரியாகும்மா. ஐ கேன் மேன்ஜ்மா. ஏம்மா நீ இப்படி அலட்டிக்கறே?. நான் என்ன சின்னக் குழந்தையா?!'' என்று அவன் அவளைத் தேற்ற.

''சரிங்க, சரிங்க!'' என்றாள்.

''நீயும் காலேஜ்ல ப்ளேயர்னு கேள்விப் பட்டிருக்கேன்.''

''இருந்தாலும் உங்களுக்கு அடிபட்டவுடனே எனக்குத் தாங்கலை!'' என்றாள்.

அவன் மெல்லப் புன்னகைத்தான். வாஞ்சையாகப் புன்னகைத்தான்.

''சரி, நீங்க தூங்கறீங்களா? நான் வேண்ணா இப்படி உட்கார்ந்துக்கறேன்!'' என்றாள்.

''இல்லையில்லை, நீ இங்கேயே உட்காரு!'' என்று அவளை அருகிலே அமர்த்திக் கொண்டு கையைப் பிடித்துக் கொண்டு உறங்கிப் போனான்.

எட்டு மணி வரை அவள் அவன் அருகிலே அமர்ந்திருந்தாள்.

சற்று நேரம் கழித்து எட்டிப் பார்த்த சோமநாதனும் கண்ணனும் ''அண்ணி!'' என்று கிசுகிசுத்தார்கள்.

அவள் உடனே வாயில் ஒற்றை விரலை வைத்து ''ம்! பேசாதீங்க. தூங்கறாரு!'' என்று சைகையிலே சொன்னாள்.

சோமநாதனுக்கு சிரிப்பாக வந்தது. ''அண்ணி, சமாளிச்சுப்பாரு அண்ணி. அவரு பயங்கரமான ஆளு!'' என்றான்.

''ம். உங்களுக்கு என்ன விளையாட்டா இருக்கா? அவரு எங்கிட்ட காட்டக்கூடாதுன்னு வலியை அடக்கிட்டிருக்காரு தெரியுமா?'' என்றாள்.

''அண்ணி, டாக்டர் தூங்கறதுக்கு மருந்து கொடுத்துட்டாரு. இனி ஒன்பது மணிக்கு எழுப்பி ஏதாவது சாப்பிடக் கொடுத்து தூங்க வச்சுடுங்க!'' என்றான்.



''சரி!'' என்று தலையாட்டினாள்.

''அதெல்லாம் இருக்கட்டும். நீங்க போய் முதல்ல சாப்பிட்டுட்டு வாங்க!'' என்றான் சோமநாதன்.

''எனக்கு சாப்பிடவே பிடிக்கலை!'' என்றாள் அவள்.

''இது நல்லா இருக்கே. எப்பவும் பேஷண்டோட கூட இருக்கவங்க கோர்ஃபுல்லா இருக்கணும் தெரியுமா? சரி, நான் இங்கேயே உங்களுக்கு டிஃபன் கொண்டு வரட்டுமா?'' என்றான்.

''வேண்டாம். இங்க வச்சு சாப்பிட்டு அவரு முழிச்சுகிட்டாருன்னா?''

''உங்களுக்கு மகன் மகன்னு ஒருத்தன் இருக்கான். அவன் உங்களை எதிர்பார்த்து அழறான்!'' என்று கேலி போல பேசி அவளை ஹாலுக்கு அழைத்துக் கொண்டு வந்தான் சோமநாதன்.

அங்கே மகன் விளையாடிக் கொண்டிருக்க கண்ணன் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தான்.

அப்ச்சி கூட ஒரு பக்கமாக சேரிலே அமர்ந்து கொண்டு அவனுக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தார்.

''அண்ணி! டு அவர்ஸ்! இன்னிக்கு ஐ ஆம் எக்ஸாஸ்ட்டட். பேசாம அவனை பொறுப்புல எடுத்துக்குங்க அண்ணி''

''அவனுக்கு ஏதாவது சாப்பிட...?'' என்று அவள் இழுக்க.

''அதெல்லாம் இட்லி ஊட்டியாச்சு!'' என்றார் அம்ச்சி.

இரண்டு மணி நேரம் குழந்தையைக் கூட கவனிக்காமல் கணவன் அருகிலே அமர்ந்து விட்டோமே என்று வெட்கமாகப் போய் விட்டது.

குழந்தையை அள்ளிக் கொண்டாள். அவனும் அவளிடம் தாவிக் கொண்டான். சற்று நேரம் அவனை மடியிலே வைத்துக் கொண்டு கட்டிலுக்கு எதிராக இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டிருந்தாள்.

அவனுக்கும் தூக்கம் வருகிறது என்று தெரிந்தவுடனே தொட்டிலில் போட்டாள். அம்ச்சி அங்கிருந்து வந்து "நான் தொட்டிலை ஆட்டறேன். நீ போய் சாப்பிட்டுட்டு வா!" என்றார்.

"அவரு...!" என்று இழுத்தாள்.

"இதோ பாரு! பெரியவங்க சொல்றோம். அவனை நாங்க பார்த்துக்க மாட்டோமா? இத்தனை நாள் இருபத்து ஏழு வயசு வரைக்கும் வளர்க்கலையா அவனை? போ புள்ளே! போய் சாப்பிடு!" என்றாள்.

அம்ச்சி விளையாட்டாக கோபப் பட அவள் லேசாக சிவந்த முகத்துடன் சாப்பிடுவதற்கு டைனிங் ஹாலுக்குப் போனாள்.

அங்கே இருந்த வேலைக்காரப் பெண் அன்னம்மாள் சிரித்தாள். "அம்மா, ஆனாலும் வூட்டுக்காரரு மேல இப்படிப் பாசம் ஆகாது!" என்றாள்.

"சும்மா இரு! அன்னம்மா எனக்கு அப்படியே உடம்பே பதறிப் போச்சு. அவரு எப்பவுமே ராஜா மாதிரி வருவாரு. இன்னிக்கு அப்படியே நொண்டிட்டு வந்தவுடனே...! உனக்கு என்ன தெரியும்?" என்றாள் அவள் கோபமாக.

அதே நேரத்தில் அங்கே வந்த கண்ணனும் சோமநாதனும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.



"நீங்க ரெண்டு பேரும் வந்துட்டீங்களா? யாராவது ஒருத்தர் அங்க இருக்கலாமில்லே?" என்றாள்.

"சரிங்க அண்ணி! நான் போய் இருக்கிறேன்!" என்றான் கண்ணன்.

பணிவாக அவன் சொல்லி விட்டுப் போவதைக் கவனித்த சோமநாதன் சிரிப்பை அடக்கிக் கொண்டு அண்ணியை திரும்பிப் பார்த்தான்.

"அண்ணி, இப்பத் தெரியுதுங்க அண்ணி அண்ணன் ஏன் அப்படி வந்து விழுந்தாருன்னு!"

"ஏன்?" என்றாள் அவள்.

"என்ன உங்க நினைப்புல தான் வந்திருக்காரு. அஞ்சு மணிக்கே கிளம்பறேன்னு சொல்லிட்டிருந்தாராமா? வைஃப் கூட எங்கோ வெளியில போகணும் அப்படின்னு பி.ஏ.கிட்ட சொல்லிட்டிருந்தாராம்"

அவள் முகம் சிவந்து போனது.

"அண்ணி, பத்திக்கிச்சு போல இருக்கு!" என்றான்.

"சும்மா இருங்க சோமு!" என்றாள் அவள்.

"அவரு அடிபட்டுக் கிடக்கும் போது இதை எல்லாம் பேசிகிட்டு!" என்றாள்.

"அடிபட்டுக் கிடந்தா என்னங்க அண்ணி? நாளைக்கு ஜம்முன்னு எழுந்து உட்கார்ந்துருவாரு பாருங்க"

"நான் ஒரு ஐடியா சொல்றேன். பேசாம மூணு நாள் நாலு நாள் ரெஸ்ட் எடுக்கணும்னு போட்டு ஆளை அமுக்கிடுங்க. இல்லாட்டி இவரை இருபத்தி நாலு மணி நேரம் வீட்ல வைக்க முடியாது" என்றான் மறுபடியும்.

''பேசாம சாப்பிடறீங்களா?'' என்றாள் அவள்.

''ஆமாங்க அண்ணி. இந்த நாலு நாள்ல நீங்க கொடுக்கற ட்ரீட்மெண்ட்ல அண்ணன் கவுந்துடணும்!'' என்றான்.

''சோமு, நான் சாப்பிடாம எழுந்திருச்சு போயிடுவேன்!'' என்றாள் அவள் கோபமாக.

''சரிங்க அண்ணி, சரிங்க அண்ணி'' என்றவன் திரும்பி. ''என்ன டிஃபன்?'' என்றான்.

''எது எப்படிப் போனா என்ன? தம்பிக்கு டிபன் வேணும்?'' என்றாள் அன்னம்மா.

''அம்மா அன்னம்மா. சம்மன் இல்லாம ஆஜர் ஆகாதீங்க. இது நாங்க, எங்க அண்ணன், அண்ணி சமாச்சாரம்!'' என்றான்.

''சரிங்க தம்பி!'' என்று சொல்லி விட்டு அவள் சிரித்துக் கொண்டே தோசையை எடுத்துக் கொண்டு வந்து பரிமாறினாள்.

''நான் இன்னிக்கு பூரி செய்யலாம்னுட்டு இருந்தேன் தம்பி. இந்த சின்னையா பண்ணின கலாட்டாவுல கையும் ஓடலை. காலும் ஓடலை. நல்ல வேளை மாவு இருந்தது. அவசரமா சட்னி அரைச்சேன். இன்னிக்கு அட்ஜஸ்ட் பண்ணிக்கோங்க. நாளைக்கு பூரி பண்ணிப் போடறேன்.''

''ஆமா! அண்ணன் நாலு நாள் வீட்ல இருக்கப் போறாங்க. வகை வகையா செஞ்சு அமுக்கிடுங்க!'' என்றான்.

''ம். சரி! நீயே மெனு போட்டுக் கொடுத்துடு தம்பி என்ன செய்யணும்னு!'' என்று அவர்கள் அதுபற்றிப் பேச



ஆரம்பிக்க. அவசரம் அவசரமாக சாப்பிட்டு விட்டு எழுந்து மீண்டும் அறைக்கு வந்தாள் சாரு சித்ரா.

அவன் மெல்ல அப்பொழுதுதான் கண் விழித்தான்.

''சாரு எங்கே போயிருந்தே?''

''இப்பதாங்க இவங்களெல்லாம் சாப்பிட்டுட்டு வந்திடுன்னாங்க. அதனால போனேன்''

''ஒரு தூக்கம் தூங்கிட்டேன் சாரு. ஐ ஆம் ஃபீலிங் பெட்டர் நவ். சரி சாப்பிடறதுக்கு டிஃபன் கொடுங்க !'' என்றான்.

அவனுக்கு உடனே அங்கேயே கட்டிலில் வைத்துக் கொள்ளுகிற மாதிரி ஒரு சின்ன டெஸ்க்கைக் கொண்டு வந்து வைத்து அதன் மேல் அவனுக்கு பரிமாறினார்கள்.

அவன் அப்படியே எழுந்து அமர்ந்து சாப்பிட முயற்சித் தான். வலது கையிலும் அடிபட்டு இருந்ததால் வலியில் முகத்தை சுளிக்க ''இருங்க, இருங்க. நான் ஊட்டி விடறேன்!'' என்று அவள் ஓடிப் போய் கையைக் கழுவிக் கொண்டு வந்து அவனுக்கு ஊட்ட ஆரம்பித்தாள்.

அம்ச்சி மெல்ல ஒரு சிரிப்போடு அறையை விட்டு வெளியே போனாள். குழந்தை அதற்குள்ளாக உறங்கி இருந்தான்.

சோமநாதனும், கண்ணனும் ஏதோ சொல்லிக் கொண்டே வர அம்ச்சி ''போதும்டா! விடுங்க. இனிமே அவ பார்த்துக்குவா!'' என்று அவர்களைத் தள்ளிக் கொண்டு போனாள்.

அவள் அவனுக்கு ஊட்ட ஊட்ட அவன் அவள் முகத்தை ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

''இத்தனை வலியை வச்சுகிட்டு இது என்ன பார்வை?'' என்றாள்.

''இதுதான் நான் பார்க்க வேண்டிய பார்வை. இத்தனை நாளா பார்க்க மறந்த பார்வை?'' என்றான்.

அவள் புரியாமல் அவனை விழித்துப் பார்த்தாள்.

அடுத்ததாக அவன் சொன்ன வார்த்தைகள் அவளுக்குள் ஜில்லென்று இறங்கியது.

பூ மழை ஒன்று பெய்தாற்போல இருந்தது.

## அத்தியாயம் - 25

அவள் ஏதோ அதிசயப் பிராணியைப் பார்ப்பது போல அவனைப் பார்த்தாள்.

''ஏய்! என்ன அப்படிப் பார்க்கறே?'' என்றான் அவன்.

''இல்லை. சொன்னது நீதானா அப்படின்னு பாடணும் போல இருக்கு'' என்று சிரித்தாள் அவள்.

''அது ரொம்பப் பழைய பாட்டாச்சே. லேட்டஸ்டா அது மாதிரி ஏதாவது இருந்தா பாடு!'' என்று அவனும் சிரித்தான்.

''பாட்டு எப்படி இருந்தா என்னங்க? சொன்ன விஷயம் ரொம்ப ஆச்சரியமா இருக்கு. நீங்களா சொன்னீங்க?'' என்றாள்.

''இன்னொரு தடவை கேட்கணும்தானே இப்படிப் பண்றே?'' என்றவன் அவளை மெல்லத் தன் அருகிலே இழுத்துக் கொண்டு காதோரத்திலே சொன்னான்.

''நான் உன்னை நேசிக்கிறேன்னு நினைக்கிறேன்.'' என்றான் அவன்.



''இப்பவும் நினைக்கிறீங்களா?'' என்றாள் அவள் கோபமாக.

''இல்லைடா இல்லை. ஐயா அம்மா மேல பைத்தியமா இருக்கேன். போதுமா?'' என்றான் அவன்.

அவள் அவன் பார்வையை தாங்க மாட்டாதவளாக அவன் மார்பிலே முகத்தைப் புதைத்துக் கொண்டாள். ஆனால் கவனமாக அவனது வலது கையில் இடித்து விடாமல் மெல்லச் சாய்ந்து கொள்வதை அவன் ஒரு வித சிரிப்புடன் ரசித்துக் கொண்டான்.

கொஞ்ச நேர ஓய்வுக்குப் பிறகு அந்த மாத்திரையின் காரணமாக வலி இப்பொழுது குறைந்திருந்தது.

கொஞ்சம் அசைக்கவும் முடிந்தது.அதனால் எழுந்து ஒரு பக்கமாக சாய்ந்து அமர்ந்து கொண்டான். அவளை மார்பிலே சாய்த்துக் கொண்டான்.

''பார்த்துங்க. வலிக்கப் போகுது!'' என்றாள் அவள்.

''எல்லா வலியும் பறந்து போச்சு. இப்ப அம்மணி கிட்ட மனசுல இருக்கறதைக் கொட்டிட்ட உடனே எல்லா வலியும் பறந்து போச்சு!'' என்றான் அவன்.

அவள் வாஞ்சையுடன் புன்னகைத்தாள்.

''அது சரி, இந்தப் பக்கம் இருந்து ஐயா சரண்டர் ஆயிட்டேன். ஆனால் அந்தப் பக்கம் இருந்து ஒரு ஒப்புதலோ, ஒரு விளக்கமோ எதுவும் வரலையே?'' என்றான் அவன்.

அவள் அவனை ஆழ்ந்து பார்த்தாள்.

''நீங்க எத்தனை நாள் டைம் எடுத்துட்டு சொல்லியிருக்கீங்க. அது மாதிரி எனக்கும் டைம் வேணும்.''

''அப்படியா! ஆனா அப்பப்பக் கொடுக்கற ஒத்துழைப்பெல்லாம் பார்த்தா அப்படித் தெரியலையே?'' என்றான் அவன்.

''அது வேறே! இது வேறே!'' என்றாள் அவள்.

''இல்லையே. நேத்து ஹோட்டல்ல வச்சு என்னமோ சொல்ல வந்த மாதிரி இருந்ததே'' என்றான் அவன் ராகமாக.

''இல்லையே! அப்படியெல்லாம் நான் ஒண்ணும் சொல்ல வரலையே!'' என்றாள் அவனைப் போல அவளும் ராகம் போட்டு.

அவன் சிரித்துக் கொண்டான். ''சரி விடு, உன்னை எப்படி சொல்ல வைக்கறதுன்னு தெரியும்!'' என்றான்.

''அது மட்டும் முடியாது. நான் எப்ப எதை சொல்லணுமோ அப்பத்தான் சொல்லுவேன்'' என்றாள் அவள்.

அவன் சிந்தனையுடன் அவளைப் பார்த்தான். ''இன்னும் ஏதோ இருக்கோ?'' என்றான்.

''இருக்கு!'' என்றாள் அவள்.

''இங்க பாரு. எல்லாத்தையும் பேசித் தீர்த்துக்கலாம். என்னென்ன மனசுல இருக்கோ அதையெல்லாம் கேட்டுடு!'' என்றான் அவன்.

''இல்லைங்க. இந்த ரெண்டு நாள் நல்லா ஓய்வு எடுத்துக்குங்க. அப்புறம் பேசிக்கலாம்!'' என்றாள் அவள்.

''கொஞ்சம் உடம்பு சரியானா ஆஃபீஸ் கிளம்பிடுவேன். தெரியுமில்லே!'' என்றான் அவன்.

''அப்படியெல்லாம் இல்லை. உங்களை கட்டிப் போடறதுக்கு இப்ப எங்களுக்குத் தெரியும்'' என்றாள்.



அவன் ஒருவிதமாக சிரித்துக் கொண்டு ''தெரியுங்கிறே?'' என்றான்.

''ம்!'' என்றாள் அவள் அழுத்தமாக தலையை ஆட்டிக் கொண்டு.

அவன் மெல்ல அவள் காதைப் பிடித்துத் திருகி விட்டு ''இதுதான், இதுதான் இடம் கொடுத்தா மடம் பிடுங்கறது'' என்றான் அவன்.

அவள் ''அதுக்கு அப்படி அர்த்தம் இல்லை!'' என்றாள்.

''வேறே என்ன அர்த்தமாம்?''

''இடம்ன்னா இதயம். இடபாகத்தைக் கொடுத்துட்டா... அதாவது... ஒரு பொண்ணுக்கு இடது பாகத்தை அதாவது இதயத்தைக் கொடுத்துட்டா உங்க மடத்தனத்தையெல்லாம் போக்கிடுவான்னு அர்த்தம்!'' என்றாள்.

''அப்படிப் போடு அருவாளை!'' என்றான்.ரசித்துச் சிரித்தான். ''இது என்ன புது விளக்கமா இருக்கு?'' என்றான்.

''இது பெண்களுக்கு மட்டும்தான் பொருந்தும்!'' என்றாள் அவள்.

அவன் மறுபடியும் கலகலவென்று சிரித்தான். ''ரொம்ப சத்தமா சிரிக்காதிங்க. கேட்கப் போகுது!'' என்றாள்.

இப்பொழுது அவனுக்குக் காலில் அடிபட்டதனால் மாடியில் இருக்கும் படுக்கை அறைக்கு அவர்கள் செல்லவில்லை. கீழேயும் பகல் நேரத்தில் தங்கிக் கொள்வதற்கு அதே போல் ஒரு படுக்கை அறை இருந்ததால் அங்கேதான் தங்கி இருந்தார்கள்.

''சிரிச்சா என்னடா? இந்த வலியையும் மீறி சிரிக்க வச்சுட்டாளே இந்தப் புள்ளைன்னு உன்னைப் பாராட்டிக்குவாங்க அம்ச்சியும் அப்ச்சியும்'' என்றான்.

அவளுக்குக் கூச்சமாக இருந்தது. ''இல்லைங்க சோமு, கண்ணன் எல்லாம் இருக்காங்க.'' என்றாள் அவள்.

''அவனுங்க அந்தக் கடைசியில இருக்கானுங்க. நீ ஏதாவது கால் பண்ணிக் கூப்பிட்டாத்தான் வருவாங்க''

அதே சமயத்தில் சோமநாதனுடைய ஃபோன் ஒலித்தது. ''இவன் வேறே!'' என்று சலித்துக் கொண்டான் வெற்றி வேல்.

அவள் சிரித்தாள். சிரித்துக் கொண்டே ஃபோனைக் காதுக்கு கொடுத்தாள். ''அ்ண்ணி, எந்த அவசரம்னாலும் கூப்பிடுங்க அண்ணி. ஏன்னா ஏதாவது திரும்பிக் கிரும்பி படுக்கணும்னா எழுந்து உட்காரக் கஷ்டப்பட்டாருன்னா உங்களால் முடியாது...! கூப்பிடுங்க!'' என்றான் அவன் அந்தப் பக்கம் இருந்து.

''சரிங்க சோமு. என்ன அவசரம்னாலும் கூப்பிடறேன்!'' என்று சொல்லிவிட்டு அவள் ஃபோனை வைத்தாள்.

''என்னமோ அந்தத் தம்பிகளைப் பார்த்தாலே அப்படியே முகம் கனிஞ்சிடும். இப்ப அவங்க கூப்பிட்டாலே இடைஞ்சல்ங்கறீங்க!'' என்றாள்.

''இங்கே பார். அது வேறே. இது வேறே!'' என்றான் அவளைப் போலவே.

''எது வேறே?'' என்றாள் அவள்.

''அது அண்ணன் தம்பி... பாசம்... அது இருக்கத்தான் செய்யுது. ஆனா இப்பத்தான் முதல் முதலா மனைவிகிட்ட



ரொமாண்டிக்கா பேசிட்டிருக்கேன். அதுக்குள்ளே அவ இடைஞ்சல் பண்ணினா என்ன பண்றது? சகோதர களோட பெரிய தொல்லையாப் போச்சு!'' என்று அவ சொல்லிக் கொண்டிருக்கையிலேயே ஸ்ரீ நாத்திடம் இருந் ஃபோன் வந்தது.

அவள் களுக்கென்று சிரித்தாள்.

''என்ன?'' என்றான்.

''எங்க அண்ணன்!'' என்றாள்.

''சரி சரி. பேசு. சீக்கிரம் பேசி முடி!'' என்றான் அவன்.

அவள் மறுபடியும் களுக்கென்று சிரித்து விட்டு ஃபோனை ஆன் செய்தாள்.

''என்னம்மா மாப்பிள்ளைக்கு ஏதோ அடிபட்டுடுச்சாம்,'' என்றான் அவன்.

''யாரும்மா உங்களுக்கு சொன்னாங்க?'' என்று கேட்டாள் அவள்.

''இப்பத் தான் சோமு ஃபோன் பண்ணி சொன்னான். நான் ஏதாவது கிளம்பி வரணுமா அம்மா?''என்று கேட்டான்.

''ஐய்யய்யோ! இல்லைண்ணா லேசான அடிதான்!'' என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது அவன் போனை பிடுங்கி ''மச்சான், அதெல்லாம் ஒண்ணும் இல்லைங்க. லேசான சரிவு காயம் மாதிரிதான்! வேற ஒண்ணும் இல்லை. சரியாயிடும். நாளைக்கு நாளண்ணைக்கு சரியாயிடும்.ஒரு ரெண்டு நாளைக்கு ரெஸ்ட் கொடுத்தா போதும். நீங்க பாட்டுக்கும் வொரி பண்ணிக்காதீங்க. உடனே மாமாவுக்கும் அத்தைக்கும் ஃபோன் பண்ணி

கிளம்பி வரவேண்டாம்னு சொல்லுங்க. அடிச்சு புடிச்சுட்டு பதறிட்டு கிளம்பி வருவாங்க. இந்த சோமு பய வேற உங்களையெல்லாம் பயமுறுத்திட்டானா?'' என்றான்.

''சரிங்க மாப்பிள்ளை. சரிங்க மாப்பிள்ளை. எனக்குமே கொஞ்சம் உதறலாப் போச்சு!'' என்றான் ஸ்ரீ நாத்.

''அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லைங்க மச்சான். நாங்க அந்தக் காலத்துப் ப்ளேயரு. ரெண்டு நாள்ல எழுந்து நடமாட ஆரம்பிச்சிடுவோம்'' என்று இவன் தேற்றினான்.

''சரிங்க மச்சான். டேக் கேர்!'' என்று சொல்லி விட்டு அவன் போனை ஆப் செய்தான்.

''ஐய்யய்யே! இந்த சகோதரர்கள் தொல்லை பெரிய தொல்லையாப் போச்சே!'' என்று அவன் சிரிக்கையிலேயே அவளுடைய தாய் தந்தையரிடம் இருந்து ஃபோன் வந்தது.

''ஏம்மா, மாப்பிளை வரவேண்டாம்னு சொல்லிட்டா ராம். நாங்க ஏதாவது வரணுமா? குழந்தையைப் பார்த்துக் குவியா?'' என்று பரிதவித்தார் புஷ்பலதா.

''அம்மா. அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்மா. இங்க சோமு இருக்காப்ல. கண்ணன் இருக்காப்ல. இவருக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லை. லைட்டா கால் வீங்கி இருக்கு. அது. ரெஸ்ட் எடுத்தா சரியாப் போயிடும். நீங்க காலையில நிம்மதியா புறப்பட்டு வாங்க. வரவேண்டாம்னு சொன்னாலும் உங்களுக்கு கஷ்டமா இருக்கும். அதனால இன்னைக்கு நைட் நல்லா ரெஸ்ட் எடுத்துட்டு காலையில வாங்க!'' என்றாள் இவள்.

அவன் குறும்பாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் ஃபோனை வைத்தவுடன் இப்பொழுது அவன் களுக்கென்று சிரித்தான். ''தட்ஸ் எ குட் கர்ள். நேரம்



பார்த்து வந்து எங்கே தொல்லை பண்ணிடப் போறாங்களோன்னு நினைச்சேன்!'' என்றான்.

அவள் முறைத்தாள். ''ஓஹோ! எங்க அம்மா அப்பா உங்களுக்கு தொல்லையா?'' என்றாள்.

''ஐய்யய்யோ! உங்க அப்பா அம்மாவைத் தொல்லைன்னு சொல்லுவேனா? அவங்க பார்த்து கருணை வச்சு இவ்வளவு அழகான ஒரு பூவை எனக்கு கொடுத்திருக்காங்க. தங்கப் பதுமை மாதிரி ஒரு பொண்ணை எங்கிட்ட ஒப்படைச்சிருக் காங்க. அவங்களைப் போய் தப்பு சொல்லுவேனா?'' என்றான்.

''ரொம்பத் தான் வழியறீங்க!'' என்று அவள் சிரித்தாள்.

''அதானே! இத்தனை நாள் தெரியலைன்னு என்னை முழிச்சு முழிச்சு பார்த்திட்டிருந்தே. ஏதோ பத்தலை. ஏதோ சரியில்லைங்கற மாதிரியே பார்ப்பியே? இப்ப சரியாயிடுச்சு புள்ளே. இனிமேல் நீ பார்க்கப் போற வெற்றிவேல் வேற ஆள் தெரியுமா? இப்போ இந்தக் கையும் காலும் கொஞ்சம் வலிக்குது. இருந்தாலும் கொஞ்சம் சாம்பிள் காட்டறேன் பாரு!'' என்று அவன் அருகிலே இழுத்துக் கொண்டு சற்று விளையாட அவள் வெட்கத்துடன் இடம் கொடுத்தாள்.

இடம் கொடுத்து விட்டு காதளவோடிய அந்தக் கண்களில் இருந்து நேசம் நிறைய அவனைப் பார்க்க ''அப்பா கிறுகிறுக்குது!'' என்று சிரித்தான்.

''எல்லாம் பார்வையில தான் வருது. வார்த்தையில வரலையே!'' என்றான் அவன்.

''இப்போதைக்கு வராது...!'' என்றாள் சாரு சித்ரா.

''ஏன் அப்படி?'' என்றான்.

“இன்னொரு விஷயம் பாக்கியிருக்கு!” என்றாள் அவள்.

“போச்சுடா. ரொமான்ஸ் ஆரம்பிக்கறதுக்கே இத்தனை காலம் ஆகியிருக்கு. அதுவும் பையன் பொறந்து ஏழெட்டு மாசத்துக்கு அப்புறம். இதுல இன்னும் என்ன இருக்கு?” என்றான்.

“நாளைக்கு சில விஷயங்களெல்லாம் சில பேர்கிட்ட பேசுவேன். நீங்க எதுலேயும் தலையிடக் கூடாது!” என்றாள் அவள்.

“என்னடி இப்படிக் கண்டிஷனெல்லாம் போடறே?” என்றான் அவன் கடுப்பாக.

“என்னது? டியா?” என்றாள் அவள்.

அவன் குறும்பாகச் சிரித்தபடி காதருகிலே பாரதியார் பாடல் ஒன்றைப் பாடினான்.

“இதிலே எத்தனை டி வருது பார்த்தியா?” என்றான்.

“பாட்டுக் கூட நல்லா பாடறீங்க!” என்று அவள் சொக்கிப் போனாள்.

“பாட்டுப் பாடுவோம். இன்னும் நிறைய கலைகள் கைவசம் இருக்கு. டென்னிஸ் ப்ளேயர் தெரியுமா நானு? அது மாதிரி... இந்த மாதிரி விளையாட்டுக்குன்னு நிறைய புது வழிகளெல்லாம் அறிமுகப்படுத்தணும்”

“சே! கை, காலெல்லாம் அடிவாங்கிட்டு வீங்கிக் கிடக்கறப்ப பேசுற பேச்சா இது?” என்றாள் அவள்.

அவன் சிரித்தான். “அதான் ஒத்தடம் கொடுக்கறதுக்கு அம்மணி இருக்கீங்கள்ளே?” என்றான்.

அவள் உடனே முகத்தை சீரியஸாக்கிக் கொண்டு “ஆமாங்க! இன்னைக்கு வேண்டாம். நாளைக்கெல்லாம்



கொஞ்சம் உங்களுக்கு ஒத்தடம் கொடுக்கறேன். ஒத்தடம் கொடுத்தா வீக்கம் சரியாப் போயிடும். ஹாட் வாட்டர் பேக் வாங்கிட்டு வரச் சொல்லியிருக்கேன் சோமுகிட்டே”

அவன் குறும்பாகச் சிரித்தான். “அப்படி ஒத்தடமெல்லாம் வேண்டியதில்லை. நீங்க நினைச்சா வேற மாதிரி ஒத்தடம் கொடுக்கலாம்!” என்றான்.

“சே! அசிங்கமா பேசாதீங்க!” என்றாள் அவள்.

“ஏய் நான் நியாயமாத்தான் ஒரு ஹஸ்பண்டாதான் பேசினேன்!” என்றான் அவன். இப்படியே அவளை சீண்டிக் கொண்டிருந்தாலும் அவள் முகத்தில் இன்னும் ஏதோ சில கேள்விகள் இருந்தது அவனுக்கு தெரிந்தது.

“வெறும் பேச்சோட நிறுத்திக்குங்க. இதுக்கு மேல போனா நல்லாயில்லை!” என்றாள் அவள்.

“சரி, சரி, இதோட நிறுத்திக்கறோம். அப்புறம் எல்லாத்தையும் நாங்க செயல்ல காட்டிப்போம்” என்றான். ஆனால் விளையாட்டாகப் பேசினாலும் அன்றைக்கு அவனுக்கு ஓய்வு தேவை என்தை அவள் புரிந்து கொண்டாள். அவனும் உணர்ந்திருந்தான்.

தன் கைப்பிடியிலே அவளை அருகிலே வைத்துக் கொண்டு ஆழ்ந்து உறங்கினான்.

இடையிலே அவள் எழுந்து குழந்தையையும் பார்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. இவனையும் மாற்றி மாற்றி கவனித்துக் கொண்டு சாரு சித்ரா கொஞ்சம் உறக்கம் இன்றி தவித்துத்தான் போனாள். ஆனால் மருந்தின் விளைவோ என்னவோ அவன் ஆழ்ந்து உறங்கி விட்டான்.

அடுத்த நாள் காலை அதிகாலையிலே எழுந்து குளித்து விட்டுப் போய் அவனுக்கு காஃபி தயாரித்து எடுத்துக் கொண்டு வந்தாள்.

அவன் பார்வை அவள் செல்லுமிடமெல்லாம் பின்னால் செல்வதையும் ஆழ்ந்த நேசம் அதிலே தெரிவதையும் கண்டு அவள் புளகாங்கிதம் அடையத்தான் செய்தாள்.

எப்படியும் இரண்டு நாட்கள் வீட்டில் இருக்கத்தானே போகிறான். பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று எண்ணிக் கொண்டாள்.

எட்டு மணிக்கெல்லாம் புஷ்பலதாவும் கைலாசமும் வந்து விட்டார்கள். அவர்களுக்கு அங்கேயே காலை டிஃபன் கொடுத்து அவர்களிடம் ''பெருசா ஒண்ணும் இல்லை. பயப்படாதீங்க!'' என்று திருப்பித் திருப்பி சொல்லி தைரியப்படுத்தி அனுப்பி வைத்தாள் சாரு சித்ரா.

புறப்படும் முன்பு ''ஏம்மா, நாங்க இங்கேயே இருக்கட்டுமா?'' என்றாள் புஷ்பலதா.

''வேண்டாம்மா. நீங்க பாட்டுக்கும் போய் ரெஸ்ட் எடுங்க. தேவைன்னா நான் கூப்பிடறேன்'' என்று சொல்லி அனுப்பி விட்டாள்.

அவன் கூட ''ஏம்மா? அவங்கதான் இருந்தா இருக்கட்டுமே?'' என்றான்.

''அவங்களை வச்சுகிட்டு நான் சில விஷயங்களெல்லாம் பேச முடியாது!'' என்றாள்.

அவன் அவளை உற்றுப் பார்த்தான். ''தெளிவா... முடிவில இருக்கறே?''

''ஆமா! ஏன்னா இது என் வாழ்க்கைப் பிரச்சினை!'' என்றாள்.



''என்னது? நான் வேற ஏதோ தொடர்பு வச்சிருக்கற மாதிரி வாழ்க்கைப் பிரச்சினை வாழ்க்கைப் பிரச்சனைன்னு சொல்லிட்டிருக்கறே?'' என்றான்.

''ஓய்! வெற்றிவேல் இப்படி வேற நினைப்பு இருக்கிறதா உமக்கு?!'' என்றாள்.

முதல் முதலாக அவன் பெயரை முழுமையாக அழைத்து செல்லமாக மிரட்ட அவன் தலையைப் பின்னே சாய்த்துக் கொண்டு கடகடவென்று சிரித்தான்.

''ஏய், இன்னொரு தடவை கூப்பிடு!'' என்றான்.

''கூப்பிடலாம். கூப்பிடலாம். அதெல்லாம் நைட் தனியா இருக்கும் போது!'' என்றாள் அவள். அவள் அப்படி அலட்சியமாக சொல்லுவதை அவன் ரசித்து சிரித்துக் கொண்டிருக்கும் பொழுது அம்ச்சியும் அப்ச்சியும் உள்ளே வந்தார்கள்.

அப்போது அவள் அப்ச்சியிடம் ஒரு கேள்வி கேட்டாள். அப்ச்சியும் அதை எதிர் பார்க்க வில்லை. வெற்றி வேலும் அதை எதிர்பார்க்கவில்லை. ''இப்ப என்னத்துக்கும்மா அது?'' என்றார் அப்ச்சி.

''இல்லைங்க அப்ச்சி. இப்பத்தான் எனக்குத் தெரிஞ் சாகணும்!'' என்றாள் அடம் பிடிக்கும் குழந்தை போல.

## அத்தியாயம் - 26

''என்னடா வெற்றிவேலு? இதென்ன இந்தப் புள்ளை இப்படிக் கேட்குது?'' என்றார் அப்ச்சி. அவன் அலட்டிக் கொள்ளாமல் படுக்கையில் சாய்ந்து கொண்டான்.

நிறையப் பத்திரிகைகளை வாங்கிக் கொண்டு வந்து போட்டிருந்தான் சோமநாதன். அதிலே அந்த வாரப்

பத்திரிகை ஒன்றை எடுத்து பிரித்தபடியே அப்ச்சியின் முகத்தை பார்க்காமலே சொன்னான். "அப்ச்சி. நீங்களாச்சு உங்க பேத்தியாச்சு. அவ ஒண்ணும் சின்னக் குழந்தை இல்லை. எம்.பி.ஏ. முடிச்சிருக்கா. அவ பார்த்து ஒண்ணு கேட்டா அதுல ஏதாவது அர்த்தம் இருக்கும். அவளையே கேளுங்க?!" என்றான்.

அவனிடம் இருந்து இப்படி ஒரு கருத்து வரவும் சாரு சித்ரா கூட கொஞ்சம் வியப்படைந்துதான் போனாள்.

"எதுக்கும்மா இப்ப அதைக் கிளறிட்டு இருக்கறே?" என்றார் அப்ச்சி.

"அப்ச்சி எனக்கு அது வேணும். ஏன் அவங்க வைஃபா நான் படிக்கக் கூடாதா?" என்றாள்.

"ஐய்யோ அம்மணி! எல்லா உரிமையும் உனக்கு இருக்குது. நான் ஒரு மடையன். நீ கேட்கறதுக்கு முன்னாடியே கொண்டு வந்து கொடுத்திருக்கணும். நீ எதுக்காக கவனிக்கப் போறேன்னு நினைச்சேன்."

"இல்லைங்க அப்ச்சி. ஒரு விஷயத்துக்காக நான் பார்க்கணும்" என்றாள்.

அப்பச்சி அதை ஒன்றும் தவறாக நினைக்க வில்லை. "பொறு அம்மணி! எடுத்துட்டு வரேன்!" என்று எடுக்கப் போனார்.

"ஏன் சாரு, அதெல்லாம் மத்தியானமா பார்த்துக்கக் கூடாதா?" என்றான் அவன்.

அவள் சற்றே வருத்தத்துடன் அவனைப் பார்க்க "சரிங்க அப்ச்சி. எடுத்துட்டு வந்து கொடுத்துடுங்க!" என்றான்.

அப்ச்சி போய் தன்னுடைய அறையில் தேடி அந்த உயிலைக் கொண்டு வந்து நீட்டினார்.



வெற்றிவேல் திருமணம் செய்து கொண்டு குழந்தை உண்டானால் சொத்து அவனுக்கு அளிக்கப்படும் என்பது போல ஒரு உயில் இருப்பதாக சொல்லப்பட்டதே. அந்த உயில்தான் அது.

அவள் அதை படித்துப் பார்த்தாள். உண்மைதான். அப்பச்சி வெற்றிவேலுக்கு திருமணமாகி குழந்தை பிறந்ததுக்கு பின்புதான் சொத்துக்களின் மேல் உரிமை ஏற்படும் என்று சொல்லியிருந்தார். அது மட்டும் அல்லாமல் அந்த சொத்தில் பாதி அவனுடைய மனைவிக்கும், ஒரு குறிப்பிட்ட ப்ங்கை பேரனுக்கும் என்றெல்லாம் ஒதுக்கி எழுதியிருந்தார்.

"நான் படிச்சுப் பார்த்துட்டு தரேங்க அப்ச்சி!" என்று சொன்னதனால் அப்ச்சியும் அம்ச்சியும் அவரவர்கள் வேலையைப் பார்க்கப் போனார்கள்.

சோமநாதன் அன்றைக்கு அலுவலகத்துக்கு சென்று விட்டான் அவனுக்கு சில வேலைகளை கொடுத்து அனுப்பியிருந்தான் வெற்றி வேல்.

சாரு சித்ரா உட்கார்ந்து முழுமையாக அந்த உயிலைப் படிப்பதை அவன் எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

படித்து முடித்ததற்குப் பின்பு அப்ச்சியை அவள் சந்திக்கப் போனாள். "இரு, இரு அப்பச்சியை இங்கேயே வரச் சொல்லி பேசுங்க!" என்றான் அவன்.

"அது எதுக்கு உங்களுக்கு தெரியணும்?" என்றாள்.

"நான் தலையிட மாட்டேன். ஆனா என் முன்னாடி தான் பேச்சு வார்த்தை நடக்கணும்" என்றான் அவன்.

அவள் தோளை குலுக்கிக் கொண்டு போய் அப்ச்சியை அழைத்துக் கொண்டு வந்தாள். ''அப்ச்சி, நீங்க இப்படி ஒரு உயிலைத் தயாரிச்சுட்டீங்க. ஆனா எனக்கு என்னன்னா இந்த சொத்தெல்லாம் எனக்கு வேண்டாம் அப்படிங்கறது தான் எண்ணம்''

''அம்மணி!'' என்று அவர் பார்த்தார்.

''அப்ச்சி, நீங்க உங்க பேரன் மேல நம்பிக்கை வைங்க. ஏதோ ஒரு திட்டம் போட்டு கல்யாணம் பண்ணி வச்சுட்டீங்க. குழந்தை பிறந்தா தான் குடுப்பேன்னீங்க ஒகே. இப்பவாவது பேரனை நம்புங்க. நான் அவரை நம்பறேன். இனிமே இந்த உயிலை மாத்தி எல்லா சொத்தும் பேரன் பொறுப்புன்னு சொல்லிடுங்க. நான் அவரோட வைஃப். இது எங்க குழந்தை. எங்களுக்குக் கொடுக்காம அவரு யாருக்கு கொடுக்கப் போறாரு? அதனால இப்படி ஒரு உயிலே வேண்டாம் அப்ச்சி!'' என்றாள்.

''சரி, அம்மணி குழந்தையெல்லாம் பொறந்தாச்சு! நமக்கென்ன உன்னையாட்டம் ஒரு நல்ல பிள்ளை வரோணும். அதுக்காக எழுதின உயில்தான் இது. உங்க ரெண்டு பேருக்கும் எப்படிப் பிரியமோ அப்படி செஞ்சிடலாம். ஏன்டா வெற்றி வேலு?'' என்று வெற்றி வேல் பக்கம் திரும்பினார்.

''என்னைக் கேட்டா இந்த உயிலை கிழிச்சுப் போடுங்க அப்படிம்பேன்.'' என்றான் வெற்றிவேல்.

அவர் இன்னும் அதிர்ச்சி அடைந்து பார்த்தார். ''ஆமாங்க அப்ச்சி. உங்களுக்குப் பிறகு ஆட்டோமெட்டிக்கா எனக்கு வரப் போகுது. அதுக்கு என்ன பெரிய உயிலு? மலையைக் கிள்ளி எலியைப் பிடிக்கிற மாதிரி எனக்கு இப்படி ஒரு



உயில் எழுதி வச்சாத்தான் கல்யாணம் பண்ணுவேன் அப்படின்னு நினைச்சு பண்ணீங்க. சரி உங்களை எதுக்கு ஏமாத்தணும்னுட்டு நானும் பண்ணிட்டேன்.நான் எதிர்பார்த்த பொண்ணு எனக்கு கிடைச்சது. அதனால பண்ணிகிட்டேன்!'' என்றான்.

சாரு சித்ரா எந்த உணர்ச்சியும் காட்டிக் கொள்ளாமல் அமைதியாக அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்னமோ ரெண்டு பேரும் சேர்ந்து நம்ம தலையை கொழப்பறீங்கப்பா? சரி பார்க்கலாம்!'' என்று எழுந்து போய் விட்டார் அப்ச்சி.

அதற்கு பிறகு சாரு சித்ரா ஏதோ சொல்ல வந்தாள். ''இதோ பார் சாரு! ஒழுங்கா இப்ப சாப்பிடலாம். பாரு பையன் அழறான் பாரு. அவனுக்கு போய் ஃபீட் பண்ணு!'' என்றான். அவள் குழந்தையை கவனிப்பதற்குப் போய் விட்டாள். சற்று நேரம் அதிலே கழிந்து விட்ட பிறகு பகல் உணவு உண்டார்கள்.

அங்கேயே அவனுக்குக் கொண்டு வந்து கொடுத்தாள். அவளும் அங்கேயே உணவை கொண்டு வந்து இரண்டு பேருமாக சாப்பிட்டு முடித்தார்கள்.

அதற்குப் பிறகு ''வெற்றி!'' என்று அவள் ஏதோ பேச ஆரம்பிக்க ''இதோ பாரு. அடி பல்லைக் கழட்டிடுவேன்!'' என்றான்.

அவள் அதிர்ச்சியாகப் பார்க்க ''என்ன பெருசா நேத்துல இருந்து ஒரே அலட்டலாக இருக்கு. பேசாம படுத்து கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு. நைட் பூரா சரியா தூங்கலைன்னு எனக்கு தெரியும். மாத்தி மாத்தி எழுந்

திருச்சு பார்த்துட்டு அவனும் இடையிடையில அழுதுட்டு நீ ரெஸ்ட் எடுக்கலை. படுத்து தூங்கு'' என்றான் சற்று கோபமாக.

''இவ்வளவுதானா?'' என்று அவள் நிம்மதியானாள்.

''பெரிய பாலிசி. படு போய்!'' என்றான் அவன். அவனுடைய கோபம் அவளுக்கு ரசிக்கத் தக்கதாகத்தான் இருந்தது. ''ஐய, பெரிய சண்டியரு!'' என்று பழிப்புக் காட்டினாள்.

''ஏய், படு!'' என்று அவன் சிரித்து விட்டான். ஆனால் இப்படியே கலாட்டாவாக பேசி அவளை வலுக்கட்டாய மாக தூங்கச் செய்து விட்டான் வெற்றிவேல்.

பிற்பகல் இரண்டு மணி நேரம் அவள் உறங்கினாள். கண்ணனை துணைக்கு வைத்துக் கொண்டு இரண்டு மணி நேரம் குழந்தையை அம்ச்சி பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் அம்ச்சியிடத்தில் சொல்லியிருந்தான். ''அம்ச்சி நைட்டு ஃபுல்லா என்னவோ பச்சைக் குழந்தையை பார்க்கற மாதிரி முழிச்சு முழிச்சு பார்த்துட்டிருந்தா. இடையில எல்லாம் நான் அரை தூக்கத்துல முழிச்சுப் பார்க்கறேன். இவ உட்கார்ந்துட்டிருக்கா. குழந்தை வேற, அதனால அவளை ரெஸ்ட் எடுக்க சொல்லியிருக்கேன். ஒரு இரண்டு மணி நேரம் குழந்தையை பார்த்துக்கங்க'' என்று சொல்லி விட்டு அவனும் ஒரு பக்கமாக படுத்து உறங்கினான்.

சந்துருவும் ஒரு மணி நேரத்துக்கு மேல் உறங்கி விட்டான். மீதி ஒரு மணி நேரத்துக்கு மட்டும்தான் அவனை அம்ச்சி பார்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. இடையிலே வேறு உணவுகளும் கொடுப்பதால் அவனுக்கு



என்று ஆப்பிள் அரைத்துக் கூழ் செய்து ஊட்டி விட்டார்கள். அவன் வேலையாட்களோடும் கண்ண னோடும் விளையாடிக் கொண்டிருந்தான்.

மீண்டும் தூங்கி குழந்தைக்கு வேண்டியதையெல்லாம் செய்வதும் அவனுக்கு உடனே உதவுவதும் ஆக அவள் நேரம் வேகமாக ஓடியது.

இடையில் ''வெற்றி!'' என்று ஆரம்பிக்க ''நைட் பேசிக்கலாம்!'' என்று சொல்லி விட்டான் அவன். அதற்கு மேல் அவனை வற்புறுத்திப் பேசுவதற்கு எதுவும் இருக்க வில்லை.

ஆனால், அவன் வேண்டும் என்றே கால் வலிப்பது போல நடிக்கிறான் என்பது அவளுக்கு புரியவில்லை. இன்றைக்கெல்லாம் கால் வலி சரியாகி இருந்தது. கால் வலி சரியாகி விட்டது என்றாலும் கூட இன்னமும் அவளுடைய உதவியை முழுமையாக நாடினான்.

அவள் தோள் மேல் சாய்ந்து கொண்டு அல்லது அவளது இடுப்பைப் பிடித்துக் கொண்டு எழுந்து அவன் ரெஸ்ட் ரூமுக்கு போகும் போது அவள் முழுமையாக அவனை தாங்கிக் கொள்ள அவன் அதையெல்லாம் ரசிக்கிறான் என்பது மெல்ல மெல்ல அவளுக்கு புரிந்தது.

''இதான் சாக்குன்னு விளையாடறீங்க!'' என்றாள் அவள்.

''பின்னே நாலு நாள் முழுமையா வீட்ல இருக்கேன். முழுமையா என்ஜாய் பண்றதுன்னு முடிவு பண்ணிட்டேன்!'' என்றான் அவன். அவள் வெட்கத்துடன் அவனைப் பார்த்து சிரித்தாள்.

''நிஜமா சாரு, ஃபோர் டேஸ் கண்டினியூஸா ஆஃபீஸ் பத்தி கவலைப்படாம இருக்கறது இப்பத்தான் முதல் முறை என் லைஃப்ல!'' என்றான்.

''பரவாயில்லை. தேறிட்டீங்க!'' என்று அவள் கேலி செய்தாள். அவன் சிரித்தான்.

''ஆமா, ரெண்டு நாள் கால் வலிக்கும். ரெண்டு நாள் முழுசா என் வைஃப் கூட ஸ்பெண்ட் பண்ணப் போறேன்!'' என்றான்.

வழக்கம் போல அன்றைக்கும் இரவு முடித்ததற்குப் பிறகு அவள் குழந்தையை உறங்க வைத்து விட்டு இந்தப் பக்கம் வந்தவுடனேயே அவன் மெல்ல அவள் கையைப் பிடித்து இழுத்து அருகிலே அமர்த்திக் கொண்டான். ''ம் இப்ப சொல்லு. எதுக்கு என்னமோ உயில் எல்லாம் மாத்தி எழுதச் சொன்னே?'' என்று கேட்டான்.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்து விட்டு ''புரியலையா?'' என்று கேட்டாள்.

''எனக்கு ஓரளவுக்குப் புரிந்தது. இருந்தாலும் உன் வாயில இருந்து கேட்டா அது ஒரு சுகமில்லே?'' என்றான்.

அவள் பழித்துக் காட்டி விட்டு ''எனக்கு இந்த சொத்தெல்லாம் வேண்டாம். நீங்களே போதும்!'' என்றாள்.

''நாங்களே போதும்னா? என்னமோ பார்ப்போம்கற மாதிரி சொல்றே?'' என்றான் அவன் கிண்டலாக.

''நீங்க போதும். நீங்க அப்படிங்கறதை ரொம்ப சத்தமாக சொல்லவா?''

அவன் புன்னகைத்த படி ''உருக்கமா மனப் பூர்வமா சொல்லணும்!'' என்றான்.



அவள் சொன்னாள். அடுத்த நிமிடம் அவன் உலகம் மறந்தான். ''சாரு, என்ன இருந்தாலும் உன்னோட உயரத்துக்கு நான் வரமாட்டேன் சாரு'' என்றான்.

''நீங்க இதைச் சொன்னதை விட நேத்துல இருந்து சொல்லாம இழுத்தடிச்சிட்டு இருக்கீங்களே அதைச் சொல்லலாமில்லே!'' என்றாள்.

''இதை முடிச்சுட்டுத்தான் அதை சொல்லணுங்கறதுக்காக அதை நான் சொல்லலை'' என்றான்.

''ஏன்?''

''அப்ப சொத்துக்காகத்தான் நீ என்னை லைக் பண்ணினேன்னு நினைச்சுக்குவேன்னா?'' என்றான் அவனஅ சற்றே கோபமாக.

''இல்லை, அப்படி ஒரு வாய்ப்பு இருக்கில்லே. நீங்க சொத்துக்காகத்தானே கல்யாணத்துக்கு ஒத்துக்கிட்டீங்க?'' என்றாள் அவள்.

''நீ மொதல்ல நான் எதிர்பார்க்கறதை சொல்லு. அதுக்கு அப்புறம் நான் விளக்கம் சொல்றேன்!'' என்றான் அவன்.

அவள் வெட்கத்துடன் ''என்ன சொல்லணும்?''

''ஐய்யய்யே! ஒரு எம்.பி.ஏ. முதுகலைப் பட்டதாரி. முழிக்கறாங்க பாரு!'' என்றான் அவன்.

''அது வேறே. இது வேறே.''

''என்ன டீன் ஏஜ் பொண்ணு மாதிரி சொல்லச் சொல்றீங்களா?'' என்றாள்.

''சரி அது மாதிரி வேண்டாம். வேறமாதிரி சொல்லு.'' என்றான்.

அவள் மெல்ல அவன் மார்பிலே சாய்ந்து கொண்டு தன் வலக்கரத்தை அவள் கழுத்தைச் சுற்றிப் போட்டுக் கொண்டு அவனை அருகிலே இழுத்து அவன் காதருகில் சொன்னாள்.

''நீங்க தான் என் உயிரு. நீங்க என் கூட இருந்தா போதும். அதுக்கு மேல இந்த சொத்தெல்லாம் எம்மாத்திரம்!'' என்றாள்.

அவன் உணர்ச்சி வயப்பட்டு போனான். சற்று நேரம் அன்பை விதவிதமாக வெளிப்படுத்தினான்.

பிறகு அந்த எல்லையற்ற நிம்மதியோடு அவன் அருகிலே அவள் சாய்ந்து கிடக்கையிலே அவன் சொன்னான். ''சாரு, உண்மை என்ன தெரியுமா? நானும் கூட சொத்துக்காக கல்யாணம் பண்ணிட்டதாத்தான் நினைச்சேன். ஆனா உன்னை வந்து பார்த்தவுடனே ஒகே சொன்னேன். பார்த்தியா.? அது ஏன்கறது இன்னைக்கு வரைக்கும் எனக்குப் பிடிபடாத விஷயம். ஆனா இன்னைக்குப் புரிஞ்சது. அது என்ன தெரியுமா?'' என்றான்.

''எங்கே சொல்லுங்க. அதைக் காது குளிர கேட்கத்தான் காத்துகிட்டிருக்கேன்!'' என்று அவள் வெளிப்படையாக சொல்லாவிட்டாலும் அவன் வாயிலிருந்து வருகிற வார்த்தைக்காக காத்துக் கொண்டிருந்தாள்.

''முதமுதல்லே உன்னை அந்த மால்ல பார்த்திருக்கேன் பார்த்தியா? அப்போலேயிருந்தே என் மனசுல இருந்திருக்கே சாரு. அதனாலதான் பட்டுன்னு உன்னைப் பார்த்த வுடனேயே உடனே எனக்கு தெளிவா தெரியலைன்னா கூட சட்டுன்னு நான் ஒத்துக்கிட்டேன்''

''நானும் அதே மாதிரிதான்''



''ஆனால் அந்த மால்ல உங்கிட்டே கோச்சுக்கிட்டதுக்கு அப்புறம் நான் என்னைப் பத்தியே நினைச்சு வருத்தப்பட்டிருக்கேன். ஏதோ பாவம் மாலுக்கு வந்த புள்ளையைப் பிடிச்சு கேவலமா பேசி அது என்னன்னு தெரியாம நீ மலங்க மலங்க பார்த்துட்டு நின்னே பாரு! அந்த உருவம்...! அந்தப் பார்வை....! என்னை ரொம்ப நாளா போட்டு குதறி எடுத்துடுச்சு!'' என்றான்.

''அதெல்லாம் ஞாபகம் வச்சுட்டு இருந்தீங்களா?'' என்றாள்.

அவன் ''ஆமா! மறக்க முடியலை!'' என்றான்.

''நானும் கூட அழுதேன். ஆமா ரெஜினா மேரியும் அஞ்சுவும் கலாட்டா பண்ணிட்டு இருந்தாங்க. 'சார், உங்க வைஃப் என்னன்னு சொல்லிட்டிருந்தாங்க தெரியுமா? அந்த வெறுப்பு அவருக்கே நல்லது இல்லை. ஏன் அப்படி வெறுக்கறாரு? அந்த வெறுப்பை நாம எப்படி மாத்த முடியும். அப்படின்னு முறைச்சதை விட்டுட்டு ஏன் என்னை முறைச்சிங்கன்னு நினைச்சு கவலைப்பட்டாங்க சார்' அப்படின்னு சொன்னாங்க''

''இதெல்லாம் உங்ககிட்டே சொல்லிட்டாங்களா?'' என்று அவள் முணுமுணுத்தாள்.

''ஆமா, அவங்க பேசிட்டு இருந்தாங்க பாரு ஒரு நாள்! அப்ப சொன்னாங்க. அப்பவே எனக்கு சுருக்குன்னு பட்டுச்சு ஏதோ வித்தியாசமானவள்னு பட்டுச்சு''

''ஆனா அப்பப்ப சந்தேகமும் வந்துருச்சு இல்லே!'' என்றான் அவன்.

அவன் பிடிபட்டவன் போல சிரித்தான்.

''ஆமா! அப்பப்ப. அதுக்கு காரணம் காஞ்சனா தேவியாரும் எங்க அம்மாவும் தான்''

''என்னதிது? காஞ்சனா மாலா அம்மாவை கோவிச் சுட்டா கூட ஒரு அர்த்தம் இருக்கு. உங்க அம்மா மேல என்னங்க கோபம்?'' என்றாள்.

''அதான் சொல்றேன் இல்லே? என்னை நினைச்சுப் பார்த்திருக்கணுமில்லே? எனக்காக வாழ்ந்திருக்கணுமில்லே? அதை விட்டுட்டு அதுவும் ஒழுக்கமா வச்சுக்காத ஒரு கையாலாகாத ஹஸ்பெண்டை பிரிஞ்ச சோகத்துல செத்துப் போனாங்க. நான் அம்மா இல்லாம இல்லே வளர்ந்தேன்'' என்றான்.

அவனுடைய கோபம் அவளுக்கு புரிந்தது. அவன் தலையை தன் மார்பிலே அழுத்திக் கொண்டாள். ''இனிமே அம்மா அப்பா எல்லாம் உறவும்மா செய்யறதுக்கு நான் இருக்கேன்'' என்றாள்.

அவன் நெகிழ்ந்து போய் மறுபடியும் அவளை நிமிர்ந்து பார்த்தான். ''என் பையனுக்கும் அம்மா ரோல்! எனக்கும் அம்மா ரோலா!'' என்றான்.

''ஆமா, உங்களுக்குத் தெரியாதா? ஒரு பாட்டு இருக்கு. ஒரு மனைவி தாயா இருக்கற இடத்துல தாயா இருக்கணும். மந்திரியா இருக்கற இடத்துல மந்திரியா இருக்கணும்''

''அப்புறம்!'' என்று இழுத்தவன் ''இன்னொண்ணும் அதிலே இருக்கு!'' என்றான்.

''ம்' இதெல்லாம் நல்லாத் தெரிஞ்சு வச்சிருக்கீங்க!'' என்று அவள் சிரிக்க

''இன்னமும் எனக்கு நிறைய சந்தேகங்கள் இருக்கு!'' என்றான் அவன்.



''இதெல்லாம் நாளைக்குப் பேசிக்கலாம்!'' என்று அவளைத் தன் கையணைப்பிலே கொண்டு வந்தான்.

## அத்தியாயம் - 27

அன்றைக்கு நான்காவது நாள்!

வெற்றிவேல் வீட்டிலிருந்த நான்காவது நாள்!

அந்த முற்பகல் முழுவதும் வீட்டிலிருந்தபடியே செல்ஃபோனிலேயே தனக்குக் கீழே இருக்கக் கூடிய முக்கிய அதிகாரிகளிடம் பேசி வேலைகளை நடத்திக் கொண்டான் வெற்றி வேல்.

சாருவும் தலையிட வில்லை. ஒரு நாணம் கலந்த புன்னகையுடன் அவள் நடமாடிக் கொண்டிருப்பதைப் பார்த்த அப்ச்சியும் அம்ச்சியும் தனியாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''அம்மணி, புள்ளையை கரெக்ட் பண்ணிப் போட்டா!'' என்று சிரித்தார் அப்ச்சி.

அவருடைய அந்த உல்லாசச் சிரிப்பை பார்த்த அம்ச்சி ''ம்க்கும்! வயசான காலத்துல இப்படிச் சிரிப்பாக்கும்?'' என்று தோள் பட்டையில் இடித்துக் கொண்டாள்.

''பார்த்து! பார்த்து!''

''எலும்பு கிலும்பு உடைஞ்சுடப் போகுது?'' என்றவர்.

''நான் அண்ணைக்கே சொன்னேன் இல்லே! இந்தப் பொண்ணு நான் அன்னைக்கு அவங்க வீட்டுக்குப் போயிருக்கையிலே எதிர்த்த வீட்டுக் குழந்தை வந்து விழுந்துச்சு பாரு. அப்ப இந்தப் புள்ளை அந்தக் குழந்தையை கையாண்ட விதம் பார்த்தவுடனே எனக்குத் தோணுச்சு.

இந்தப் புள்ளைக்கு மனோ வசியம் தெரிஞ்சிருக்கு. இந்தப் புள்ளைகிட்ட நம்ம பையனை ஒப்படைச்சோம்னா தட்டிக் கொட்டி சரி பண்ணிடுவான்னு தெரியும். அப்படின்னு நான் சொன்னேன் இல்லே?'' என்றார் அப்ச்சி.

''ஆமாமா! அது புத்திசாலிதான்!'' என்றார் அம்ச்சி.

இவர்கள் பேசிக் கொள்வது காதில் விழுந்தது வெற்றி வேலுக்கு. அவன் ஏதோ வேலையாக அந்தப் பக்கம் வந்தவன் இது காதில் விழவும் புன்னகைத்துக் கொண்டு அவன் தன்னுடைய அறைக்குப் போய்விட்டான்.

''தாத்தா ஏதோ தான் தேடிக் கண்டு பிடிச்ச மாதிரி நினைச்சுட்டிருக்காரு. இருக்கட்டும்'' என்று எண்ணிக் கொண்டான்.

எண்ணிக் கொண்டதோடு மட்டும் அல்லாமல் சாரு சித்ராவிடம் அதை பகிர்ந்து கொண்டான். அவள் அவனை காதலுடன் பார்த்தாள்.

''ஏங்க, இதிலேயெல்லாம் ஏதோ ஒரு லிங்க் இருக்குன்னு தோணலையா?'' என்றாள்.

''என்ன லிங்க்?'' என்றான்.

''உங்க தாத்தாவுக்குப் பிடிச்ச பொண்ணு நானாவே இருந்திருக்கணுமா? எப்படி இது நடந்தது. உங்களுக்கு நான் எனக்கு நீங்கன்னு முடிச்சு போட்டிருந்திருக்கு இல்லை!'' என்றாள்.

''அந்த தலையெழுத்தை ஏன் கேட்கறே?'' என்றான் அவன்.

அவள் சட்டென்று அவன் இடுப்பிலே இடித்தாள்.

''இன்னொரு தடவை!'' என்றான் அவன்.



அவள் சிரித்துக் கொண்டே மறுபடியும் விளையாடினாள்.

அவனும் திரும்ப விளையாட சற்று நேரம் சந்தோஷமாக கழிந்தது.

அந்தப் பக்கமாகப் போன அம்ச்சி இதை கவனித்தாளோ என்னவோ அன்று பிற்பகல் பெரியவர்கள் எல்லாம் திட்டம் போட்டுக் கொண்டாற்போல வெளியே கிளம்பினார்கள். ''அம்ச்சி சாருவிடம் வந்து 'இதோ பாரு அம்மணி! உங்க அம்மா அப்பாவைப் போய் பார்த்துட்டு வரோம். பார்த்து ரொம்ப நாளாச்சு. பையனையும் எடுத்துட்டுப் போறோம்!'' என்றார்கள்.

''அம்ச்சி! அவனை சமாளிச்சிடுவீங்களா?'' என்றாள்.

''இதோ சோமு வரான், கண்ணன் வரான். உங்க அம்மா இருக்காங்க. அதெல்லாம் சமாளிச்சிடுவாங்க. நீ பாலைக் கொடு. நாங்க எடுத்துட்டுப் போறோம். அங்க வச்சு அழுதான்னா கூழ் காய்ச்சி கொடுத்தா தீர்ந்து போகுது!'' என்று குழந்தையையும் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

வேலையாட்களுக்கும் என்ன சொன்னார்களோ தெரியவில்லை. அன்னம்மா வந்து சாரு சித்ராவிடம் 'சின்னம்மா நாங்க பின்னாடி இருக்கற நம்ம தோட்டத்துப் பக்கம் இருக்கோம். ஏதாவது வேண்ணா கூப்பிடுங்க ஓடியாறோம்' என்றுசொல்லிவிட்டுப் போனார்கள். இதையெல்லாம் ஒரு வித ரசனையுடன் கவனித்துக் கொண்டிருந்தான் வெற்றிவேல்.

யாரையும் தடுக்கவில்லை. லேசான ஒரு சிரிப்புடன் போய் விட்டு வாருங்கள் என்பது போல அனுப்பி வைத்தான்.

அவள்தான் "ஏங்க, குழந்தையை சமாளிப்பாங்களா?" என்று பரிதவித்தாள்.

"ஏய், காரை எடுத்தா பதினைந்து இருபது நிமிஷம். அதுவும் உன் பையன் கார்ல உட்கார்ந்தா வேடிக்கை பார்க்க ஆரம்பிச்சுடுவான். அதெல்லாம் அத்தனை பேர் இருக்காங்கள்ல சமாளிச்சுக்குவாங்க!" என்றான்.

"ஏங்க? உங்களுக்குக் கொஞ்சம் கூட வருத்தம் இல்லையா?" என்றாள்.

"என்ன வருத்தம்? அவங்களே திட்டம் போட்டு நீயும் நானும் தனியா இருக்கணும்னு விட்டுட்டுப் போறாங்க. அது புரியலையா உனக்கு?" என்றான் அவன்.

"ஓஹோ!" என்று அவள் முகம் சிவந்தது.

"எல்லாத்தையும் சொல்லி.... சொல்லி.... புரிய வைக்கணும்!" என்று அவளை அருகிலே இழுத்தான். இப்பொழுது கொஞ்சம் நன்றாகவே நடக்க ஆரம்பித்திருந்தான்.

மெல்ல அவளை இழுத்துக் கொண்டு போய் ஜன்னல் பக்கமாக ஒரு காட்சியை காண்பித்தான். "அங்கே பார்!" என்றான்.

அடுத்த வீட்டுக் காம்பவுண்டிலே ஒரு சந்தன மரம் இருந்தது. அந்த சந்தன மரத்திலே ஒரு குயில் அமர்ந்து கொண்டிருந்தது.

"குயில் கூவுது பார்!" என்றான்.



அவள் அதை நின்று பார்த்தாள். குயில் அழகாக கூவியது. "சந்தன மரத்தில் இருக்கிற பழம்னா குயிலுக்கு ரொம்ப பிடிக்கும் தெரியுமா?" என்றான்.

உடனே அவள் "ஆமா! வவ்வாலுக்குக் கூடத்தான் ரொம்பப் பிடிக்கும்னு கேள்விப்பட்டிருக்கேன்!" என்றாள்.

அவன் மெல்ல செல்லமாக அவள் தலையில் குட்டு வைத்து விட்டு "நான் குயிலைப் பத்தி பேசிட்டிருக்கேன். நீ வவ்வாலைப்பத்தி பேசிட்டிருக்கிறே?" என்றான்.

அப்பொழுது அந்தக் குயில் மறுபடியும் கூவியது. "கேட்கறதுக்கே எவ்வளவு ரம்மியமாக இருக்கிறதில்லே?" என்றான்.

அவள் அவனை ஆச்சரியமாகப் பார்த்து "இப்படி ரசனையெல்லாம் இருக்குதா உங்களுக்கு?" என்றாள்.

"ஏய், அடி வாங்குவே!" என்றவன் "அந்த சந்தன மரத்துக் குயில் மாதிரி நீ என் வீட்டுக்கு வந்தவ"

"ஓஹோ! அப்ப நீங்க சந்தன மரம். நாங்க குயிலா? என்றாள்.

"ஆமா! குயில் குரல் பிடிக்காதவங்க இருக்காங்களா?"

"அப்ப நாங்க குயிலோட நிறமா?" என்றாள்.

"ஏய் நிறத்துல என்ன இருக்கு? நீ ஒண்ணும் கறுப்பெல்லாம் கிடையாது. அப்படியே இருந்தாலும் நீ கறுப்பழகியாத்தான் இருப்பே. அப்பவும் எனக்கு உன்னை பிடிச்சிருக்கும்" என்றான்.

அவள் அவனைப் பார்த்து கலகலவென்று சிரித்தாள்.

"நல்லா ஐஸ் வக்கறீங்க?" என்றாள்.

"ஆமா! இப்படி சான்ஸ் கிடைக்கும் போது ஐஸ் வைக் கலைன்னு வச்சுக்கோ. அப்புறம் காரியம் நடக்காதில்லே?" என்றான்.

அவள் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். அவன் டீ ஷர்ட்டும் கைலியுமாக இருந்தான். தனிமையில் கூட அவன் நாகரீகமாக உடை அணிவதை அவள் மனதுக்குள் எத்தனையோ முறை பாராட்டிக் கொள்வது உண்டு.

"சரி, இப்ப முழுசா நம்பிக்கை வந்துச்சா?" என்று கேட்டாள்.

அவன் சிரித்தான். "சந்தேகங்கள் இருந்தது!" என்றான்.

"ஏங்க, உங்களோட வெறுப்பான பார்வையை என்னால மறக்கவே முடியலைங்க. கல்யாணத்துக்கு அப்புறம் கூட அந்த வெறுப்பான பார்வையைப் பார்த்திருக்கேன்!" என்றாள்.

அவன் 'எங்கே' என்பது போலப் பார்க்க "அண்ணைக்கு மிஸஸ். ரத்தன் தாஸ் வந்தாங்க பாருங்க. அவங்களை நீங்க அப்படி ஒரு தடவை பார்த்தீங்க. எனக்கு சில்லிட்டுப் போச்சு வயிறு!" என்றாள்.

அவன் முகம் இப்பொழுதும் கூட மாறியது.

"நம்ம நல்ல நேரத்துல எதுக்கு அவங்களைப் பத்தி யெல்லாம் பேசறே?" என்றான்.

உடனே இன்னொன்றும் சொன்னான். "அண்ணைக்கு எனக்கு இன்னொரு கோபம் தெரியுமா?" என்றான்.

"என்ன கோபம்?"

"இல்லை. நீ அவங்களோட நகையெல்லாம் அழகா இருக்கு. வைரம் சூப்பரா இருக்குன்னு வேற சொன்னியா



அப்ப எனக்கு கொஞ்சம் ஏமாத்தமா போச்சு. இவளுக்கும் நகைன்னா பிடிக்கும் போல இருக்கும்னு நினைச்சேன்?"

"தெரியும். அதுக்குத்தானே வைர நெக்லஸ் வாங்கிக் கொடுத்து டெஸ்ட் பண்ணிப் பார்த்தீங்க" என்றாள்.

அவன் சிரித்தான். "கண்டுபிடிச்சுட்டியா?" என்றான்.

"ஏங்க, உங்களைப் பத்தி எனக்குத் தெரியாதா?" என்றாள்.

அவன் முகம் மாறியது. "சாரு, நான் ஒண்ணு சொல்லட்டா?"

"சொல்லுங்க!"

"எனக்கென்னவோ என்னை நான் புரிஞ்சுக்கறதை விட நீ நல்லா புரிஞ்சுக்கறேன்னு தோணுது!"

"ஆமாங்க, நீங்க ஒரு சின்னக் குழந்தை மாதிரி.நான் ஒரு கேள்வி கேட்கறேன். காஞ்சனமாலா அம்மா மேல உங்களுக்குக் கோபம் வந்தது. உங்க அம்மா மேல உங்களுக்குக் கோபம் வந்தது. ஆண் வர்க்கத்துல அப்படி இல்லையா. அப்படிப் பார்த்தா உங்க அப்பா? அவரு செஞ்சது மட்டும் நியாயமா? அப்புறம் அந்த லட்சுமி காந்த் சேட், அந்த ஆள் செஞ்சது மட்டும் நியாயமா? ஒரு சபலம் உள்ள லேடி அவங்களுக்கு ஏதோ நகை, பணம், சொத்து மேல எல்லாம் ஆசை இருக்கு அப்படிங்கறதுனாலே அவங்களை பயன்படுத்திகிட்டாரே! அது எந்த வகையில நியாயம்?" என்று கேட்டாள்.

அவன் பெருமூச்சு விட்டான்.

"கரெக்ட்தான்." என்றான்.

"அப்போ நாங்க அதுக்காக எல்லா ஆம்பளைகளையும் வெறுத்துடலாமா? இன்னமும் எத்தனையோ பேர் ரெண்டு கல்யாணம் மூணு கல்யாணம்னு ஏமாத்தறவங்க இருக்கத் தானே செய்யறாங்க! கீழ்த்தட்டு மக்களைப் போய்ப் பாருங்க. அந்தப் பெண்கள் எப்படி கொடுமைப் படுத்தப் படறாங்க தெரியுமா?" என்றாள்.

அவன் மறுபடியும் ஒரு பெருமூச்சுடன் ஒத்துக் கொண்டான்.

"உண்மைதான்!"

அவளுக்குப் பெருத்த ஆச்சரியமாகப் போனது.

"என்னங்க இப்படி சரண்டர் ஆகி ஒத்துக்கறீங்க?" என்றாள்.

"ஆமா! இன்னைக்கு சரண்டர் ஆனாத்தானே வேலை ஆகும்?" என்றான்.

"ஓஹோ, அதுக்காகத்தான் இதுக்கெல்லாம் சரிங்கறீங் களா?" என்றாள்.

அவன் அவள் காதைப் பிடித்துத் திருகி விட்டு "அசடு, நீ சொல்றதுல நியாயம் இருக்கு. நான் ஒத்துக்கறேன். அதற்குப் பிறகு இன்னொரு விஷயம் சொல்றேன் தெரிஞ்சுக்கோ. உனக்கு என்னமோ நினைப்பு தாத்தா சொத்து மேல ஆசை பட்டேன் அப்படின்னு. அந்த காலகட்டத்துல சொத்து முக்கியம்னு நான் நினைச்சேன் தான். ஆனா தனியா ஒரு கன்சர்ன் நம்ம எக்ஸ்போர்ட் இம்போர்ட் கன்சர்ன் உருவாக்கினேனே, அது எதுக்காக? அது என்னோட சொந்த சம்பாத்தியத்துல இருந்து உருவாக்கினது. அது எதுக்காக தெரியுமா? எண்ணைக் கானாலும் தாத்தாவோட சொத்து வேண்டாம்னு



சொல்லக் கூடிய தைரியம் எனக்கு இருக்கணும் அப்படிங் கறதுக்காகத்தான். உனக்கு வாங்கிட்டு வந்த வைர நெக்லஸ் உனக்கு வாங்கிட்டு வந்த பொருள் எல்லாமே என்னோட சொந்த சம்பாத்தியத்துல இருந்து வாங்கினது, தெரிஞ் சுக்கோ"

அவள் முகம் மலர்ந்தது. "நிஜமாங்களா?"

"ஆமா! என் கண்ணே!" என்றான்.

அவள் அவனுடைய அந்த செய்திக்கான பரிசுகளை வாரி இறைத்தாள்.

அவன் உண்மையாகவே கிறங்கிப் போனான். "ஏன் சாரு, இப்படிப் பாலிசியெல்லாம் வச்சுட்டா இப்படி பரிசெல்லாம் கிடைக்குமா?" என்றான்.

"பின்னே, என் கணவர் சொத்துக்காக மட்டும் கல்யாணம் பண்ணிட்டாரோ அப்படின்னு நான் எவ்வளவு மனசுல கவலைப்பட்டேன் தெரியுமா?"

"ஐய்யோ, நீ என் சந்தன மரத்துக் குயில் தங்கம். நீ என் வீட்ல கூவ வந்த குயில். நான் உன்னை கஷ்டப்படுத்து வேனா? நான் தான் சொல்றேனே. என் மனசு முதல்லே உங்கிட்ட போயிட்டிருந்திருக்கு. கல்யாணத்துக்கு அப்புறம் நிறைய தடவை யோசிச்சிருக்கேன். எப்படி உடனே ஓகே சொன்னேன் அப்படின்னு. கொஞ்சம் கூட யோசிக்காம தான் ஓகே சொல்லிட்டு வந்தேன்"

அவள் பெருமையாக அவனைப் பார்த்துக் கொண்டிருந் தாள். "உனக்குத் தெரியாது சாரு. உங்கிட்ட ஒரு கம்பீரம் இருக்கு. சும்மா ஏனோ தானோன்னு யாரும் உன்னிடம் நெருங்கிட முடியாது. ஒரு நெருப்பு மாதிரி இருக்கறவ நீ.

இதெல்லாம் எனக்கு முதல் தடவையே மனசுல பட்ருச்சு. அதனாலதான் நீ என்னை கிட்ட வராதீங்கன்னு சொன்ன உடனே நெருங்காம இருந்தேன். எதுக்காகன்னா உன் சொல்லுக்கு மதிப்புக் கொடுக்கணும். நீ மதிக்கப் பட வேண்டியவள். என் மனைவி!''.

அவள் வெட்கத்துடன் புன்னகைத்தாள். ''சொல் லிட்டேன். ஆனா, எப்ப மேல கை வச்சுடுவீங்களோ குழைஞ்சு போயிடுவனோன்னு எனக்கும் பயமாத்தான் இருந்தது''

அவன் கலகலவென்று சிரித்தான். ''இப்ப சொன்ன ஸ்டேட் மெண்ட்ல ஐயாவோட கௌரவமே நிமிர்ந்துடுச்சு போ!''

''ஏங்க, இதில என்ன சந்தேகம்? ஆனா, அப்பல்லாம் சாயங்காலம் ஆனா குழந்தையை பார்க்க வருவீங்கள்ல. எனக்குக் கோபம் கோபமா வரும். நான் என்ன நினைச் சேன்னா சொத்து குழந்தை பிறந்ததுக்கு அப்புறம்தான் கிடைக்கும்னு தாத்தா உயில் எழுதி வச்சதுனால தான் இந்த குழந்தை மேல அவ்வளவு பிரியம் காட்டறீங்க அப்படின்னு எனக்குத் தோணும்''

''மக்கு மக்கு!'' என்றான். பிறகு ''எனக்கே அப்பப் புரியலையே. குழந்தையை மட்டும் இல்லை. குழந்தையோட அம்மாவை பார்க்கறதுக்கும்தான் ஓடி வர்றேன் அப்படின்னு. சொல்லப்போனா சாரு நானே போராடிட்டு இருந்திருக் கேன். எனக்கே தெரியலை? எங்கே உங்கிட்ட முழுமையா சரண்டர் ஆகிடுவோமோ என்று பயம் எனக்கும் இருந் திருக்கு. அதை வெளிக்காட்டிக்காம இருக்கறதுக்கு நானும் போராடியிருக்கேன். ஆனா, சோமு ஒரு நாளைக்கு



என்கிட்ட பேசினான். நீ எவ்வளவு பெரிய பொக்கிஷம். கையில கிடைச்ச பொக்கிஷத்தை பாதுக்காக்க தெரியாம நான் நடந்துக்கிட்டு இருக்கேன்கற மாதிரி சொன்னான். அப்பத்தான் எனக்கு புரிஞ்சது. என்னை நானே ஏமாத்திக்கறேனோன்னு. ஆனா எந்த பாய்ண்ட்ல நாம இப்படி வெளிப்படையா பேசி சரண்டர் ஆகறதுன்னு தெரியலை. அதுக்குத்தான் யோசிச்சேன். ஆனா நான் ரெண்டு நாளைக்கு முன்னால அடிபட்டுக் கிடந்தப்ப நீ துடிச்சுப் போனே பாரு. அப்பப் புரிஞ்சது எனக்கு. எனக்காகத் துடிச்ச இந்த உயிர்கிட்டே சரண்டர் ஆகறதுல எந்த ஒரு கௌரவமும் பார்க்க வேண்டியதில்லைன்னு'' என்றான்.

அவள் நெகிழ்ச்சியுடன் அவன் பேசுவதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான். ''இப்படியெல்லாம் உணர்வுப் பூர்வமா உன்னை உயர்த்தியே பேசறேன்கறதுனால கொடுக்க வேண்டியதையெல்லாம் கொடுக்காம விட்டுடாதே அம்மணி''என்று முத்தாய்ப்பு வேறு வைத்தான்.

அவள் வெட்கத்துடன் புன்னகைத்து விட்டு ''நீங்க பெரிய ஆளு. வாங்கறதையெல்லாம் வாங்காம விட்டுடுவீங் களாக்கும்''

அவன் டீஷர்ட் காலரை உயர்த்திப் பிடித்துக் கொண்டு ''நம்ம திறமை எப்படி?''என்றான்.

''தெரியும். தெரியும்.'' என்றாள் அவள்.

''ஆனா இன்னமும் அந்தப் பக்கம் இருந்து பதில் வரதுல கொஞ்சம் தயக்கம் இருக்குது!'' என்று அவன் சிரிக்க

''அதெல்லாம் உங்க சாமர்த்தியம். எப்படி பதில் வாங்குவீங்களோ அப்படி வாங்கிக்கங்க''

''சாரு! இந்தப் பச்சைக் கொடிக்காகத்தான் ஐயா காத்துட்டிருந்தாரு. இனிமே எப்படி பதில் வாங்கறேன்னு பாரு''என்றான்.

அவள் கலகலவென்று சிரித்தாள். சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்து ''ஏங்க, பையன் எழுந்திருச்சிருப்பானா?'' என்றாள்.

''ஏய், இனி ஒரு தடவை பையன் பையன்னே. பேசாம ஃபோனைப் பண்ணி அவனை எடுத்துட்டு வரச் சொல்லிடுவேன்''என்றான்.

அந்த சமயத்தில் அவளது வீட்டிலிருந்து ஃபோன் வந்தது. புஷ்பலதா பேசினார்.

''பையன் நல்லாத் தூங்கறான். இன்னும் ரெண்டு மணி நேரத்துக்கு மேல தூங்குவான். அதுக்கு அப்புறம் நாங்களே கொண்டு வரோம். நீ ஒண்ணும் ஒர்ரி பண்ணிக்காதே!'' என்று தாயிடம் இருந்து வந்த ஃபோனை கேட்டதற்கு பிறகு தான் அவள் முகம் மலர்ந்தது.

''சரி, ஐயா ரெஸ்ட் எடுக்கப் போயிட்டாராம். ரெண்டு மணி நேரம் ரெஸ்ட் எடுக்கப் போறாராம்.அப்புறம் என்ன? இந்தத் தங்கச் சிலை, சந்தன மரத்துக் குயில் இப்படி பக்கத்துல வந்து பையனோட அப்பாவை கவனிப்பீங் களாம்'' என்றான்.

அவள் வெட்கத்துடன் அவனை நெருங்கினாள். ''ஏங்க பகல் நேரம்!''என்றாள்.

''பகல் நேரத்துல பேசிட்டிருக்கலாம் பொண்ணே!. இப்படிப் பக்கத்துல வா. இப்படி உட்காரு!'' என்று அவன் அணைக்க அவன் கைகளுக்குள் சிக்கினாள்.



''நிறைய பட்டியல் போடணும். பகல் நேரத்துல பட்டியல் மட்டும் போட்டுடறேன். அப்புறம் கவனிச்சுடு வியாம்!'' என்றான்.

அவள் அதற்கும் சிரித்தாள்.

''இத்தனை நாளா இப்படியெல்லாம் பேசறதுக்குக் கூட பயம் சாரு எனக்கு. எங்கே மட்டமா நினைச்சுடுவியோ அப்படின்னு''என்றான்.

அவள் அவனை நிமிர்ந்து பார்த்து விட்டு வெட்கத்துடன் சொன்னாள். ''இந்த உலகமே வேறங்க. இங்க எது சரி எது தப்புன்னு சம்மந்தப்பட்டவங்கதான் தீர்மானிக்கணும்''

''அது என்னமோ நிஜம்தான். எம்.பி.ஏ. படிச்சாலும் படிச்சே. நிறைய விஷயங்களைப் பத்தின மேனேஜ்மண்ட் தியரி யெல்லாம் நல்லா தெரிஞ்சு வச்சிருக்கிறே!'' என்றான்.

''உங்களுக்கும் கொஞ்சம் சொல்லித் தரட்டுமா?'' என்றாள்.

''இந்த வேலை எல்லாம் இங்க வேண்டாம். சொல்லித் தர்றதுக்கு நாங்க தயாரா இருக்கோம்'' என்று அவன் சிரிக்க ''படிச்சுக்கறதுக்கும் கேட்டுக்கறதுக்கும் நாங்களும் தயாரா இருக்கோம்'' என்றாள்.

''அப்படித்தான் இருந்தாகணும். வேற வழி இல்லை. புரியுதா?'' என்றான்.

''இதோ பாருங்க. நீங்க தானே சொன்னீங்க சந்தன மரம் அப்படின்னு. இப்படி ஒரு உயர்வான இடத்துல வந்து உட்கார்ந்த குயிலாவே இருக்கும்பொழுது எனக்கு நீங்க எது சொல்லிக் கொடுத்தாலும் சம்மதம் தான்.''

எல்லா சந்தேகங்களும் தீர்ந்தவர்களாக இரண்டு பேரும் சிரித்து மகிழ்ந்தார்கள்.

"இங்கே பார். இனி வரப் போற வாழ்நாளைக்கெல்லாம் வாழ்க்கையை எப்படி மேனேஜ் பண்ணனும்னு நீ சொல்லித் தரப் போறே. என்னை எப்படி மேனேஜ் பண்ணனும்னு நான் சொல்லித் தரப் போறேன்"

அவள் கலகலவென்று சிரித்தாள். அந்தச் சிரிப்பை அவன் ஆசையுடன் ரசித்துக் கொண்டிருந்தான்.

அவன் சொன்ன அந்த சந்தன மரத்துக் குயில் உதாரணம் அவள் நெஞ்சை நிறைத்தது. அவள் சிரிப்பு அவன் மனத்தில் அன்பை நிறைத்தது. அவர்கள் எதிர்கால வாழ்வில் இனிமைதான் நிறைந்திருக்கப் போகிறது என்பதற்கான அடையாளமாக அவர்கள் இருவர் முகத்திலும் மகிழ்வே நிறைந்திருந்தது.

★ ★ ★